# சலாமத் போ

## சிறுகதைகள்

ஜுனைதா ஷெரீப்

# சலாமத் போ

## சிறுகதைகள்

ஜுனைதா ஷெரீப்

Title : Salamath Poa

Subject : Collection of Short Stories

Author : KMM Sheriff (Junaitha Sheriff)

All rights reserved : 2007 by (c) KMM Sheriff

இலங்கை தேசிய நூலகம் - வெளியீட்டில் உள்ள பட்டியற் தரவு

ஷெரீப், ஜுனைதா

சலாமத் போ / ஜுனைதா ஷெரீப்,காத்தான்குடி: நூலாசிரியர், 2007.
ப. vii, 157; ச.மீ.21

ISBN 978-955-95096-8-0 விலை: ரூ.250.00

i. 891.48113 டிடிசி 21 ii. தலைப்பு
1. சிறுகதை

# சமர்ப்பணம்

தந்தையாக, தோழனாக, வழிகாட்டியாக எனது சகல இன்பதுன்பங்களிலும் சம பங்கெடுத்த பாசமிகு மாமனார் மர்ஹூம் அல்-ஹாஜ் ஏ.எம்.ஏ. காதர் (அதிபர்) அவர்களுக்கு

# ஜுனைதா ஷெரீபின் பிற ஆக்கங்கள்

## நாவல்கள்:

அவன் ஒன்று நினைக்க....
சாணைக்கூறை
அவளுக்கும் ஓர் இதயம்
மூன்றாம் முறை
காட்டில் எறித்த நிலா
ஒவ்வாமுனைக் காந்தங்கள்
ஒரு கிராமத்தின் துயில் கலைகிறது
இது நம்ம சொத்து
சிதைவுகள்
ஜனநாயகர்கள் (வட கிழக்கு மாகாண சபையின் சாகித்திய விருது பெற்றது)
பெரிய மரைக்கார் சின்ன மரைக்கார் (தேசிய மற்றும் வட கிழக்கு மாகாண சபையின் சாகித்திய விருதுகளைப் பெற்றது)
பெட்டிசம் (சிங்கள நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு)

## சிறுகதைத் தொகுப்புகள்:

இளநரை

இவளுக்காகவா?

## வானொலி நாடகத் தொகுப்பு:

பொன்னாடை ( இலங்கை அரசின் சாகித்திய விருது பெற்றது)

# முகவுரை

இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்து அரசின் பல உயர் பதவிகளை அலங்கரித்த ஜுனைதா ஷெரீப் என்ற புனைப்பெயரைக் கொண்ட ஜனாப் மொகமட் ஷெரீப் அவர்கள் ஒரு. தலை சிறந்த நிருவாகியாக விளங்கியவர். ஆனாலும் மானுட நேயமிக்க ஒரு மனிதனாக, தலைசிறந்த எழுத்தாளனாக மகுடம் சூட்டப்பட வேண்டியவர்.

பூக்கடைக்கு விளம்பரம் வேண்டியதில்லை. கதைகளுக்குக் கருவாக காதலே அமைதல் வேண்டும், அதுதான் வாசகர்களைக் கவர ஒரே வழி என்று எண்ணுவோர் பலர். ஆனால் சமூகத்தின் நெளிவுசுளிவுகளை பூதக்கண்ணாடி கொண்டு நோக்கிப் புட்டுவைக்கும் புதுமை எழுத்தாளர் ஜுனைதா ஷெரீப். வெறும் கற்பனையுலகில் சஞ்சரித்து வாசகனைக் கனவுலகில் வாழவைப்பது இவரின் நோக்கமல்ல. தன் அன்றாட வாழ்வில் சந்தித்த மனிதர்களை, அவர் தம் இயல்புகளை, பிரச்சினைகளை ஆரவாரமின்றி மிகவும் இலாவகமாக முன்நிறுத்தி எம்மை வியக்கவைக்கிறார். யதார்த்த உலகில் நாம் சந்திக்கும் மாந்தர்களையே கதாமாந்தர்களாக உலாவவிடுவதுதான் ஜுனைதா ஷெரீபின் உள்ளார்ந்த நோக்கம்.

கதாபாத்திரங்கள் அவரது கற்பனையில் உதித்தவர்களாக இருக்கலாம். எனினும் யதார்த்தத்தின் பிரதிபலிப்பே அவரது கதைகள்.

ஓர் எழுத்தாளன் சமூகத்திற்குத் தன் கதைகள் மூலம் சொல்லவரும் செய்தியைக் கனகச்சிதமாக எடுத்தாண்டுள்ளார். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல சில கதைகள் கூறும் செய்திகளைக் குறிப்பிடலாம்.

'ஆற்றங்கரை அப்பா' இந்து முஸ்லிம் சமூகங்களின் ஒற்றுமையின் இறுக்கத்தைக் கட்டியம் கூறுவதுடன் தேவைதானா இந்த இனமுறுகல் என்று எம்மை அலறவைக்கிறது. 'சலாமத் போ' அந்நிய மண்ணிலாகட்டும், சொந்த மண்ணிலாகட்டும் வாழும் எம்மவர்க்கு ஓர் எச்சரிக்கையைச் சொல்வதுடன் நமது கலாச்சாரக் கட்டுக்கோப்பின் மகத்துவத்தையும் பறைசாற்றுகிறது. 'முள்ளை முள்ளால்....' கற்பனையே இல்லை. அத்தனையும் யதார்த்தம். அரசியல்வாதிகளின் பித்தலாட்டங்களையும், அவர்களைத் தெய்வங்களாகக் கருதி பின்னாலலையும் கூட்டத்தினரையும் தமக்கே உரிய

நேர்மைத் திறன் கொண்டு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார். 'சீட்டுக்காசி' மிக யதார்த்தமானதொரு கரு.

ஜுனைதா ஷெரீப் அவர்கள் சிறுகதை புனைய மரீனா பீச்சையோ, தேம்ஸ் நதி ஓரத்தையோ களமாகக் கொள்ளவில்லை. தான் பிறந்து, தவழ்ந்து, நடைபயின்று, நிமிர்ந்து நின்ற சமூகப் பின்னணியையே களமாகக் கொள்கிறார்.

எழுத்தாளரின் இதயம் வாசகர்களின் இதயங்களோடு பேசுகிறது. எமது கலாசாரப் பெறுமானம், அந்தரங்கசுத்தியான நேர்மை, சமாதான சகவாழ்வு, யுத்தக்கொடுமையற்ற தேசம் ஆகியவைதான் ஜுனைதா ஷெரீபின் ஆன்மாவின் இராகங்கள். சமூகம் என்ற பந்தரிலே அவர் பொழியும் செய்திகளும் அவைதான்.

இந்த சிறுகதைத் தொகுப்பு காலத்தைக் கடந்து இலக்கிய உலகில் சாசுவாதமானதோர் இலக்கியப் பெட்டகமாக விளங்கும் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமே இல்லை.

இறுதியாக ஜுனைதா ஷெரீப் அவர்களைப் பற்றிச் சில வார்த்தைகள். எனது துணைவரும் அவரும் சமகாலத்தில் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்துகொண்டவர்கள். இருவரும் இனிய நண்பர்கள். எங்களது குடும்ப நண்பராக ஆகிவிட்ட ஷெரீப் சத்திய தரிசனத்தைத் தன் இலட்சியமாக வரித்துக்கொண்டவர்.

இலங்கை முஸ்லீம் எழுத்தாளர்களில் மிகக்கூடுகலான நாவல்களை எழுதியுள்ள ஷெரீப் தனது படைப்புகளுக்காக இதுவரை நான்கு சாகித்திய விருதுகளைப் பெற்றவர். பல வைபவங்களில் பொன்னாடை போற்றிக் கௌரவிக்கப்பட்டவர். அவரால் வெளியிடப்படும் இந்தச் சிறுகதைத் தொகுப்பு பெருவெள்ளத்தின் ஒரு சிறு துளி என்றுதான் முத்தாய்ப்பு வைக்கலாம்.

செல்வ்ராணி வேதநாயகம் (B.A-Dip.in Ed.)
தமிழ்துறை வளவாளர்
தேசிய கல்விக் கல்லூரி
தர்காநகர்

**இந்நூலை வெளியிடுவதில் பின்வருபவர்கள் எனக்கு உதவியும் ஒத்தாசையும் செய்தனர்:**

கையெழுத்துப் பிரதிகள் தயாரித்துத் தந்த எனது அருமை மருமகள் மர்கூமா சுபைதா மீரான்சாஹிப்,

கணனியில் பொறித்த அஷ்-ஷேய்க் (அல்-ஹாஜ்) ஏ.எல்.எம். சபீல், செல்வி கே.எம். கரீமா மற்றும் செல்வி சிரானி சொய்ஸா,

அட்டைப்படம் ஆக்கிய திரு. ஜி.டி. சஷி நிரங்க,

முகவுரை எழுதிய கல்வித்துறையில் பிரபல வளவாளரும் எனது மரியாதைக்குரியவருமான திருமதி. செல்வராணி வேதநாயகம் (B.A, Dip.in Ed.)

அழகுற அச்சிட்ட தெஹிவளை ஏஜே அச்சகத்தினர்

*ஆகிய சகலருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக.*

ஜுனைதா ஷெரீப்
காத்தான்குடி
நொவம்பர் 20, 2007

# இதனுள்:


| | பக்கம் |
|---|---|
| ஆற்றங்கரை அப்பா | 01 |
| எறிந்ததை எடுத்தவர்கள் | 10 |
| சலாமத் போ | 18 |
| முள்ளை முள்ளால்..... | 30 |
| வெள்ளைக் கொடிகள் | 40 |
| வாக்களிக்க வாரீகளா? | 49 |
| சீட்டுக்காசி | 61 |
| வாரிசு | 71 |
| தேவை ஒரு மாப்பிள்ளை | 83 |
| நசிந்து மடியும் புற்கள் | 95 |
| விருது அல்ல விழல் | 104 |
| காகமூளை | 113 |
| வேதியல் மாற்றம் | 120 |
| கண்கள் திறந்தன | 126 |
| தெரு நாய் | 131 |
| காட்டுத் தேங்கா | 140 |
| அவர்கள் மனிதர்கள் | 148 |

# ஆற்றங்கரை அப்பா

ஆற்றங்கரை அப்பா கபுறடியைப் பற்றி எங்களது பகுதியிலுள்ள அனைத்து முஸ்லிம் கிராமங்களில் வசிப்பவர்களுக்கும் தெரிந்திருந்தது.

எனது கிராமத்திலிருந்து சுமார் பதினைந்து கிலோ மீட்டர்கள் அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கும் தார் பாதையில் பிரயாணம் செய்து, நாற்தெருக்கள் சங்கமிக்கும் சந்தியை அடைந்து, அங்கிருந்து வலது புறமாகத் திரும்பி செம்மண் புழுதி வீசும் வழியூடாக சரியாக இரண்டு கிலோ மீட்டர் தூரம் சென்றால் கபுறடியை அடைந்து விடலாம்.

ஐம்பது மீட்டருக்கும் குறைந்த அகலமான வம்மி ஆறு மழை நாட்களில் நுங்கு நுரைகளுடன் ஓடிக்கொண்டிருக்கும். அதன் ஓரத்தில் அடி அகன்று, உயர்ந்து, பரப்பிய கிளைகளில் தொங்கும் விழுதுகளுடன் கூடிய ஆல மரமொன்றின் நிழலில் அமைதியே உருவாக அந்த சியாரமும், அதையொட்டியதான ஓர் அறை மட்டும் கொண்ட பள்ளிவாசலும் காட்சி தரும். இவைகளுக்குப் பின்புறமாக இரண்டு வேப்ப மரங்களும், இடப்பக்கமாக புளிய மரமொன்றும் நிழல் பரப்பியவாறு நின்றன. ஆற்றங்கரை ஓரத்தில் உச்சி வெய்யிலின்போது கூட தண்ணீர் சுடுவதில்லை. கணுக்கால் அளவு நீருக்குள் நின்றுகொண்டிருக்கும் வேளையில் மேற்குப்புறமிருந்து ஆற்றில் எறியப்பட்டு தவழ்ந்து வரும் தென்றல் முகத்தையும், மார்பையும் முத்தமிடும்போது கிடைக்கும் சுகானந்தத்துக்கு ஒப்புவமையே கூற இயலாது.

கபுறடி பதின்மூன்றுக்குப் பத்து நீள அகலம் கொண்ட சிறியதொரு கட்டிடம். அதனுள் யார் என அடையாளம் தெரியாத ஒருவரின் கல்லறை. சில நூறு வருடங்களுக்கு முன்னர் வம்மி ஆற்றில் தோணியொன்றில் பயணம் செய்துகொண்டிருந்த முஸ்லிம் பெரியாரொருவர் கடுமையாக சுகயீனமுற்றதன் காரணமாக தொடர்ந்து செல்ல இயலாமல் அந்த இடத்தில் கரை தட்டி, அங்கேயே காலஞ்சென்றதாகவும், அவரின் ஜனாசா அடக்கப்பட்டதாக பின்னாட்களில் அடையாளம் காணப்பட்ட இடத்தில் கட்டிடமொன்றைக் கட்டியதாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் கூறும். ஆரம்பத்தில் கபுறடி மட்டும்தான் இருந்ததாகவும், பல வருடங்களுக்குப் பின்னர் தொழுவதற்கான அறையொன்றும் அங்கு அமைக்கப்பட்டதாக பேசிக்கொள்வார்கள்.

கபுறடியுடன் கூடிய பள்ளிவாசல் அமையப்பெற்ற இடம் முழுக்கவே தமிழ் மக்கள் அடர்த்தியாகக் குடியிருக்கும் பகுதியாகும். மதப் பெரியார் காலஞ்சென்ற, அவருக்காக கபுறடி கட்டிய காலத்தில் அந்தப் பகுதி மனிதர்கள் வசிக்காத பொட்டைக் காடாக இருந்திருக்கலாம். இப்போது நிலைமை முழுதாக மாறிவிட்டது.

எனது கிராமத்திலிருந்து மட்டுமல்ல, வேறு எந்த முஸ்லிம் ஊர்களிலிருந்தும் கபுறடிக்குப் போகவேண்டுமெனில் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் வதியும் கிராமங்கள் பலதைக் கடந்துதான் ஆகவேண்டும்.

கபுறடி கட்டப்பட்ட ஆரம்ப காலங்களில் ஆற்றங்கரை அப்பாவின் அருளால் அங்கு பல அற்புதங்கள் நடைபெற்றதாக கிராமங்களில் பேசிக்கொண்டார்கள். பிள்ளையில்லாதவர்கள் அப்பாவின் அடக்கஸ்தலத்துக்கு அருகே பரவிக் கிடக்கும் வெண் மணலைக் கழுவிய நீரைக் குடித்தால் கருத்தரிக்குமென்றும், வைத்தியர்களால் கைவிடப்பட்ட நோயாளிகள் ஆல மர நிழலைக்கொண்ட ஆற்றின் கரையில் முழுக்காடி, கபுறடி மணலில் படுத்தெழும்பினால் நோய் பஞ்சாகப் பறக்குமென்றும், களவு போன பொருட்களைக் கண்டுபிடிக்க அடக்கஸ்தலத்துக்கு அருகில் இரவு வேளைகளில் எரிக்கப்படும் தேங்காய் எண்ணெய் விளக்கினுள்ளிருந்து சொட்டு எடுத்து உள்ளங்கையில் தடவி விட்டுப் பார்த்தால் களவெடுத்தவனின் முகம் தெரியுமென்றும்.... பகுத்தறிவுக்கு ஒவ்வாத கதைகளின் பட்டியல் நீளும்.

ஆற்றங்கரை அப்பாவின் கபுறடிக்குச் சென்று அற்புதம் பெற்று வந்தவர்களில் ஒருவரைத்தானும் எனது கிராமத்தில் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. காலங்கள் செல்லச்செல்ல மக்களின் அறிவு பெருகி இவைகளெல்லாம் யாரோ சிலரின் வருமானத்துக்காகக் கட்டிவிடப்பட்ட கதைகள் என்ற எண்ணம் வலுப்பெற்றது.

அப்பாவின் கபுறடிக்கும், பள்ளிவாசலுக்கும் செல்பவர்கள் பொதுவாக முஸ்லீம்களாக இருந்தாலும், வருடா வருடம் முஹர்ரம் மாதம் பன்னிரெண்டாம் பிறையன்று இரவு நடைபெறும் கந்தூரி வைபவத்தில் கலந்துகொள்ள வருபவர்களில் கணிசமானோர் தமிழ் மக்களாவர்.

முஹர்ரம் மாதம் முதல் பிறை தினத்தில் பிற்பகல் வேளையில் பிடரி மறைய முடி வளர்த்து, பச்சைக் குப்பாயம் அணிந்து, அதே பச்சை நிறத் துணியால் பின் குஞ்சத்துடன் கூடிய தலைப்பாகை தரித்து, கழுத்து நிறைய குண்டு குண்டான முத்து மாலைகள் ஜொலிக்க, கைகளில் றபான்களுடன் பல ஊர்களிலிருந்தும் பக்கீர்கள் ஆஜராகி, கபுறடியின் முன்னால் நிமிர்ந்து நிற்கும் கம்பத்தின் உச்சியில் அகன்ற

கொடியொன்றை ஏற்றுவர், அன்று இரவு தொடக்கம் தினசரி அவர்களின் றாத்தீபு நடைபெறும்.

றாத்தீபு நிகழ்ச்சியைப் பார்ப்பதென்றால் என்னைப்போன்ற இளைஞர்களுக்கு ஏகப்பட்ட ஆனந்தம். பிறை பன்னிரெண்டாம் இரவு இறுதி நிகழ்ச்சியில் கலந்துகொள்ள பல கிராமங்களிலிருந்தும் தமிழ், முஸ்லீம்களாக ஆயிரக்கணக்கானோர் வருகை தருவர். நிகழ்ச்சியின் இறுதியில் வழங்குவதற்காக விசாலமான கடாரங்களில் பாற்சோறு சமைப்பதற்கான தாளிப்பு வாசம் வம்மி ஆற்றின் மறு கரையில் நிற்பவர்களுக்குக் கூட வயிற்றில் கடமுடா சப்தங்களை உண்டாக்கும் எனப் பேசிக்கொள்வார்கள்.

அந்த வருட கொடியேற்றத்தின் இறுதி நாள் நிகழ்ச்சி ஒரு சனிக்கிழமை இரவு நடைபெறவுள்ளதாக அறிந்தோம். அடுத்த நாள் விடுமுறையாகையால் மம்மத்தம்பி, கனிபா, நூர்தீன், இஸ்மாயில் என நாங்கள் நண்பர்கள் சிலர் அதிகாலையிலேயே சைக்கிள்களில் புறப்பட்டோம். போகும் வழியில் ஏற்கனவேயே பேசி வைத்திருந்தவாறு வெவ்வேறு கிராமங்களில் வசிக்கும் எங்களது பாடசாலை நண்பர்களான இராசையா, கந்தசாமி, கணபதி, முத்துலிங்கம் ஆகியோர்களின் வீடுகளுக்கும் சென்று அவர்களுடைய பெற்றோரால் தரப்பட்ட இளநீரையும், மோரையும் குடித்து தாகம் போக்கி.... அவர்களையும் எங்களோடு சேர்த்துக்கொண்டோம்.

பத்து மணி சுமாருக்கு கபுறடியை அடைந்தோம். எங்களைப்போன்று வேறு கிராமங்களிலிருந்தும் வந்திருந்த பலர் அங்கு நின்றனர். காற்சட்டைகளிலிருந்தும் சாறன்களுக்கு மாறி, தற்காலிக ஹோட்டலில் தேனீர் குடித்து, ஆல மர விழுதுகளில் ஊஞ்சலாடி, சுட்டெரிக்கும் வெய்யிலிலும் கால்கள் பட்டவுடன் குளிர் தாக்கிய ஆற்று நீரில் முழுகி, தவழ்ந்து வந்த குளிர் தென்றலை வெற்றுடம்புகளில் பூசி, நீரினுள்ளால் நீந்திச்சென்று ஆளையாள் தெரியாமல் கால்களைப் பிடித்து வாரி விட்டு....

பள்ளிவாசலில் கேட்ட பாங்கொலியைத் தொடர்ந்து முஸ்லிம்களாகிய நாங்கள் ஆற்று நீரில் வுளு செய்து, தொழுது, வீடுகளிலிருந்து எடுத்துச் சென்றிருந்த சோற்றுப் பொதிகளை ஒன்றாக சீலையொன்றில் கொட்டி, வெட்டிய வாழை இலைகளில் அள்ளி வைத்துச் சாப்பிட்டு, தென்றல் வீசியதால் கண்ணயர்ந்து புளிய மர நிழலில் உறங்கி....

இரவு கந்தூரிக்குப் பின்னர்தான் பக்கீர்மார்களின் றாத்தீபு எனப் பேசிக்கொண்டார்கள். பொழுது படும் வேளையில் முஸ்லீம்களும், தமிழர்களுமாக சனக்கூட்டம் தத்தளிக்கத் தொடங்கியது.

கந்தூரி முடிந்த சற்று நேரத்தின் பின் பக்கீர்மார்களின் நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு அறிகுறியாக தஹறாக்கள் தட்டப்பட்டன. அவர்களின் கலீபா நீண்ட வெண் தாடியுடன் நடுநாயகமாக வீற்றிருந்தார். ஊதுபத்திகளின் புகைப் படலம் மேலெழுந்து காற்றோடு கலந்து பக்திமயமானதொரு சூழ்நிலையை ஏற்படுத்தியது. கலீபா சப்தமிட்டு எதையெதையெல்லாமோ ஓதினார். சொல்லிவைத்தாற்போல் சுற்றிவர வீற்றிருந்த சகல பக்கீர்களும் ஏக நேரத்தில் தங்களுடைய இடது கைகளில் தூக்கிப் பிடித்திருந்த தஹறாக்களை வலது கைகளினால் தட்டத் தொடங்கினர்.

நீண்ட நேரமாக தஹறா தட்டுவதும், பாடல்களைப் பாடுவதுமாக பக்தி சன்னதமான நிலையில் சபையை வைத்துக்கொண்டிருக்கும்போது, பக்கீர்களில் ஒருவர் எழுந்து மத்தியில் குவிந்து கிடந்த கூரிய ஆயுதங்களில் ஒன்றை எடுத்து, கலிபாவின் எதிரில் பவ்யமாக நீட்டி, அவர் தனது நாக்கில் வடிந்த உமிழ்நீரை வலது கை பெரு விரலால் நீவி ஆயுத முனையில் தடவி ஆசீர்வதிக்க, இவர் யாரும் எதிர்பாராத வேளையில் அதை வாயினுள் செலுத்தி கன்னச்சதையினூடாக முனையை வெளியே தள்ளினார். நான் சடுதியாக கண்களை மூடித் திறந்தேன். முன்னங்கை தோலினுள்ளால் சொருகுவதும், உச்சந்தலையில் வைத்து அறைந்து தலைக்குள் ஏற்றுவதும், நாக்கை வெளியே இழுத்து அதனுள் ஆயுதத்தை ஏற்றுவதுமாக.... அப்போதெல்லாம் ஒரு சொட்டு இரத்தம் கூட வெளிவராதது இன்னும் எனக்கு ஆச்சரியம்தான்.

ஆற்றங்கரை அப்பா கபுறடியுடன் கூடிய பள்ளிவாசலுக்கு ஐங்காலத் தொழுகைகளை நிறைவேற்றுவதற்காக எனது கிராம பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தினர்களால் முத்துக்காக்கா என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். சியாரம், பள்ளிவாசல் ஆகியவற்றையும், அவைகளைச் சுற்றிவர ஆற்றங்கரை வரையுமுள்ள பகுதியையும் சுத்தமாக வைத்திருத்தல், ஐவேளையும் பாங்கு சொல்லுதல், தொழுவித்தல், மாலைவேளைகளில் விளக்கேற்றுதல் போன்றவை இவருக்காகச் சாட்டப்பட்டிருந்த பணிகளாகும். இவர் எனது தகப்பனாருக்கு தூரத்து சொந்தக்காரனும் கூட. வயது ஐம்பதுக்கு மேல் இருக்கலாம்.

முத்துக்காக்கா ஒருநாள் பிற்பகல் எங்களது வீட்டுக்கு வந்தார். வாப்பாவுடன் அவர் கதைத்துக்கொண்டிருக்கும்போது நான் அருகே நின்றேன்.

"முத்து. பள்ளிக்கு தொழ ஆக்கள் வாராங்களா?" வாப்பா கேட்டார்.

"எங்க வாராக. சுற்றி வர இருக்கிற எல்லாருமே தமிழ் ஆக்கள். மருந்துக்குக்கூட நம்ம ஆக்கள் அந்தப் பகுதியில இல்ல."

"அப்போ நீ மட்டும்தான் தனியே தொழுதுகொள்றே?"

"சே.சே. அப்பிடியும் சொல்லக்கூடா. அந்தப் பகுதிக்கு வியாபார நோக்கமா வாரவங்க அங்கதான் பகல் தொழுகைக்கு வருவாங்க. ஆத்தில தோணியிலே போரவங்க எப்போதாவது இருந்திருந்துட்டு தோணியை தரை தட்டி தொழுதுட்டுப் போவாக."

"அங்கெல்லாம் என்ன யாவாரத்துக்கு வாராக?"

"முட்ட வாங்க, பழைய வெள்ளி தங்கம் வாங்க, அலுமினிய பாத்திரங்கள் துணிமணிகள் விக்க, மாடாடு வாங்க.... நீங்க வந்து பாக்கணுமே ஒரு நாளைக்கு எத்தனை பேர் நம்ம ஆக்கள் அந்தப் பகுதிக்கு வாராங்கன்னு."

வாப்பா என்ன நினைத்தாரோ சடுதியாகக் கேட்டார்.

"ஏன் முத்து, உங்கட சாப்பாடெல்லாம் எப்படி?"

"அதைச் சொன்னா ஆச்சரியப்படுவீங்க."

"ஏன்?"

"கிழமையிலே ரெண்டு மூணு நாள்தான் நான் சமைப்பேன். மற்ற நாட்களிலே இலவசம்தான்." முத்துக்காக்கா கூறிவிட்டுச் சிரித்தார்.

"அங்கதான் நம்ம ஆக்கள் இல்லியே. இலவசமா எப்படி?"

"நான் பள்ளிவாசல்ல தனியா இருக்கிறேன்னு அக்கம் பக்கத்திலே இருக்கிற ஊட்டுக்காரங்க வேளாவேளைக்கு சாப்பாடு அனுப்புவாங்க."

"ஆரு.. தமிழ் ஆக்களா?"

"பின்னே? "

அவர் கூறியது எனது வாப்பாவை விட அந்த இளம் வயதில் என்னை மலைக்க வைத்தது.

நாட்கள் வாரங்களாக, மாதங்களாக, வருடங்களாகக் கழிந்தன. கல்வி, பொருளாதார, சமூக மாற்றங்கள் வேக வேகமாக இடம் பெற்றுக்கொண்டிருந்தன. அரசியல் சிந்தனைகள், இனங்களுக்கிடையிலான வித்தியாசங்கள், வியாபார அரசியல்வாதிகளின் உள்நுளைவுகள், பேரின ஆதிக்கங்கள்.. ஆகியனவெல்லாம் போட்டிபோட்டு மக்களின் அமைதியான வாழ்க்கையுடன் விளையாடத் தொடங்கின. பேச்சுவார்த்தைகளும், ஏமாற்றங்களுமான சங்கதிகள் பங்கு பிரித்துக் கேட்கக்கூடிய அளவுக்கு ஓர் இனத்தை ஆக்கின. நாளாக ஆக பிரச்சினைகளின் தாக்கமும், வேகமும் கூடி, இறுகி, வக்ரமடைந்த மனங்களையுடையவர்களாக மக்களை மாற்றி....

நாட்டில் இன வன்செயல்கள் நடைபெறத் தொடங்கின. கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவை நாளாந்த நிகழ்வுகளாகி.... முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்குமிடையிலான இனப் பகை ஆரம்பமாகியது. ஆளையாள் வெட்டுதல், கொத்துதல், கூட்டத்தோடு கும்பலாகக் கொலைசெய்தல், வாகனங்கள் சொத்துக்கள் போன்றவற்றின் சேதங்கள், ஆட்கடத்தல், கட்டிட உடைப்புகள்..

ஓர் இனத்தினர் பரவலாக வாழும் கிராமங்களுக்குள்ளால் மற்ற இனத்தினர் பிரயாணம் செய்யத் தயங்கும் நிலை. எல்லைகளைக் கடக்குமட்டும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடவேண்டிய இக்கட்டு. முஸ்லிம் கிராமங்களுக்குள் தொழில்செய்து பிழைப்பவர்களின் அடிவயிறுகளில் வீழ்ந்த அடிகள் அவர்களின் வீட்டு அடுப்புகளுக்குள் பூனைகள் சுருண்டு படுக்க வேண்டிய நிலைக்கு ஆக்கின. தமிழ் மக்கள் பரவலாக வாழும் பகுதிகளுக்குள் வியாபாரம் செய்து பிழைத்தவர்கள் பழைய துவாய்த் துண்டுகளை தோள்களில் போட்டவாறு ஏக்கப் பெருமூச்சுகளுடன் தெருச்சுற்றினர்.

நல்லவர்களின் மனங்கள் குமுறி அழுதன.

நான் படித்து, பட்டதாரியாகி ஆசிரிய தொழிலில் சேர்ந்து கிராமத்திலுள்ள எனது சொந்தக்காரப் பெண்ணொருவரைத் திருமணம் செய்து, வேறு பல பரீட்சைகளில் சித்தியெய்தி தூரத்திலுள்ள பட்டிணமொன்றில் கல்விக் காரியாலயத்தில் கடமையாற்றிக்கொண்டிருக்கிறேன்.

பெருநாள் விடுமுறையொன்றின்போது மனைவி, பிள்ளைகளுடன் கிராமத்துக்குச் சென்றிருந்தேன். பெரிய ஜும்ஆ பள்ளிவாசலுக்கு அஸர் தொழுகைக்காகச் சென்ற சமயத்தில் அகஸ்மாத்தாக முத்துக்காக்காவைச் சந்திக்க நேர்ந்தது. சுருங்கிய தோலும், வழுக்கைத் தலையும், நீண்ட

வெண்தாடியுமாக கையில் பிடித்த கோலொன்றுடன் தொழ வந்திருந்தார். என்னை அறிமுகப்படுத்தியதும் இனங்கண்டுகொண்டார். ஆற்றங்கரை அப்பா சியாரம், பள்ளிவாசல் ஆகியவைகளைப் பற்றி தெரிந்துகொள்ளவேண்டுமென அவாவுற்றேன்.

"அதை ஏன் கேக்கீங்க மகன். நம்ம பகுதியிலே நடந்த கூத்துக்களையெல்லாம் நீங்க அறிந்துதானே இருப்பீங்க. இத்தனை சம்பவங்களும் நடைபெற்ற பின்னாடியும் அந்தக் கட்டிடங்களை அப்படியே வைச்சிருப்பாங்கன்னு நினைக்கிறீங்களா? " அவர் என்னைப் பார்த்துக் கேட்டார்.

"நான் நினைக்கிறது இருக்கட்டும். கட்டிடங்களை இடித்துப்போட்டாங்கன்னு தகவல் கிடைச்சிருக்கா?"

"அப்படி ஒன்றும் இல்ல. ஒரு ஊகம்தான்."

"ஆருமே போய்ப் பார்க்கலையா?"

அவர் குழி விழுந்த கண்களால் என்னைப் பார்த்தார்.

"போறதா? பாக்கிறதா? எப்படித் தம்பி அந்த இடங்களுக்கெல்லாம் போறது? நம்ம ஆக்களின் நாத்தமே அந்தப் பகுதியிலே இல்ல. அப்படித்தான் போனாலும் நன்மைக்குத் தீமையா ஏதாவது ஆகிட்டா?"

"இப்பதான் பிரச்சினைகள் சுமுக நிலைமைக்கு வந்திட்டே. போய்ப் பார்த்தால் என்ன?"

"என்னமோ உங்கட இஷ்டம்."

முத்துக்காக்கா என்னதான் சொன்னாலும் ஆற்றங்கரை அப்பா சியாரத்தினதும், பள்ளிவாசலினதும் தற்போதைய நிலையை அறியவே வேண்டுமென மனம் துடித்தது. அதற்கேற்றாற்போல அடுத்த நாள் சந்தைக்கூடத்தில் எனது பாடசாலை நண்பன் கணபதியைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அடுத்து வந்த ஞாயிறுகாலை சுப்ஹு தொழுகையை முடித்த கையுடன் நானும், மம்மத்தம்பியும், கனீபாவும் ஆற்றங்கரை அப்பா பள்ளிவாசலுக்குப் போவதற்காக ஆயத்தமானோம்.

"எதற்கும் சில ஆயுதங்களையும் எடுத்துக்கொள்வோம்" என்றான் கனீபா.

"எதுக்கு" நான் கேட்டேன்.

"ஏதாவது ஏடாகூடமா ஆகிவிட்டா நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமல்லவா?"

நான் வாய்விட்டுச் சிரித்தேன்.

"நான் மனிதர்களை நம்புபவன். அவர்களை மதிப்பவன். இறைவன் குடியிருக்கும் இல்லத்தைப் பார்க்க கத்தி தடியுடனா போவது?"

எனது காரில் புறப்பட்டுச் சென்ற நாங்கள் வழியில் பாதையோரமாகக் காத்து நின்ற கணபதியை ஏற்றிக்கொண்டோம். முத்துலிங்கத்தின் வீட்டுக்குச் சென்று அவருடன் கதைத்து எங்களுடன் சேர்த்துக்கொண்டோம்.

நாற்சந்தியிலிருந்து பிரிந்து சென்ற மணல்பாதை தார்வீதியாக மாறியிருந்தது. பொட்டல் காடுகள் அழிக்கப்பட்டு பாதையின் இரு மருங்கும் உயர்ந்த கல் வீடுகள் உருவாகியிருந்தன.

காலை எட்டு மணிக்கெல்லாம் போய்ச் சேர வேண்டிய இடத்தை அடைந்து விட்டோம். காரை பாதையின் ஓரமாக நிறுத்திவிட்டு இறங்க.... சியாரம், பள்ளிவாசல் கட்டிடங்கள் எங்களைப் பார்த்துச் சிரித்தன. ஆல மரத்தின் விழுதுகளும், வேம்பு புளிய மரங்களின் இலைகளடர்ந்த கிளைகளும் மெதுவாக அசைந்து வரவேற்றன.

ஆவல் மிகுதியால் நான்கு எட்டில் பூட்டியிருந்த கட்டிடங்களை அடைந்து ஜன்னல் கிரில்களினூடாக உள்ளே எட்டிப் பார்த்தேன். லாந்தரொன்று இன்னும் சிறிது நேரத்தில் உயிரை விடப் போகிறேனென உமிழ்ந்துகொண்டிருந்தது. நாங்கள் ஆளையாள் ஆச்சரிய விழிகளால் பார்த்துக்கொண்டிருக்கும்போது பக்கத்து வீடொன்றின் கேட்டைத் திறந்தவாறு கையில் விளக்குமாறுடன் வந்த சராசரி வயது மதிக்கத்தக்க பெண்மணியொருவர் கட்டிடங்களின் முற்றத்தில் வீழ்ந்து கிடந்த பழுத்த இலைகளைப் பெருக்கத் தொடங்கினார்.

''நீங்களெல்லாம் ஆரு?'' கேட்டார்.

சொன்னோம்.

''கடவுளே! இத்தனை வருசங்களுக்குப் பொறகு இப்பத்தான் உங்க பள்ளிவாசலைப் பாக்க வாறீகளா? கொஞ்சம் நில்லுங்க. ஆறுமுகம் அண்ணனைக் கூட்டிக்கொண்டு வாறன்.''

சியாரம், பள்ளிவாசல் கட்டிடங்களில் எந்த உடைவுகளும் இருக்கவில்லை. மாறாக, சமீபத்தில் வெண்சாந்து பூசப்பட்டதற்கான ஆதாரங்கள் தெரிந்தன.

சுமார் கால் மணி நேரத்தினுள் நெற்றியில் விபூதி பூசிய அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவர் வேஷ்டி அணிந்து, பருத்துப் பரந்த மார்பை துவாயால் போர்த்தியவாறு எங்களை நோக்கி வந்தார். முகமலர்ந்தார். எங்களை அறிமுகப்படுத்தினோம்.

''இத்தனை நாட்கள் நீங்க ஆருமே இந்தப் பள்ளிவாசல் இருக்குதா இல்லியான்னு கூட பாக்க வரல்லியே'' என்றார் பொய்க் கோபத்துடன்.

''நடந்த நிகழ்ச்சிகளெல்லாம் உங்களுக்குத் தெரியும்தானே'' என்றேன் நான்.

“ஐயா. இந்தப் பகுதியிலே உள்ளவங்க இந்தக் கட்டிடங்களையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கியிருப்பாங்க எனத்தான் நாங்க நினைச்சியிருந்தோம்'' என்றான் கனிபா.

“இடிக்கிறதா?'' கூறிவிட்டு ஆறுமுகம் இடியிடியெனச் சிரித்தார்.

“வன்செயல் உக்கிரமான ஒரு சமயத்திலே வேற ஊர்களிலேயிருந்து இவைகளை இடித்து நொறுக்குவதற்காக ஒரு கும்பல் வந்தது உண்மைதான். ஆனா, நாங்க ஊர் மக்கள் சகலரும் ஒன்றாக எதிர்த்து நின்று அவங்களைத் துரத்திவிட்டோம்.''

“நீங்க சொல்லும்போது மயிர்கள் புல்லரிக்குது'' என்றான் மம்மத்தம்பி.

“இது ஆண்டவன் வாழும் இல்லம் ஐயா. மார்க்கம் என்பது என்ன? ஒருவன் நிம்மதியாக வாழுவதற்கு வழி காட்டுவது. அத்தகைய ஒரு மார்க்கத்துக்குச் சொந்தமான பள்ளிவாசலை பிறிதொரு மார்க்கத்தைப் பின்பற்றும் ஒரு சாரார் இடிக்கலாமோ? கூடாது ஐயா. கூடவே கூடாது. நாங்க இதை இடித்தா கடவுளின் பழி எங்கள் மீது இறங்குமே தவிர எங்களுக்குப் பாவ விமோசனமே இல்லாமப் போகும். வாங்க உள்ளே போய்ப் பார்க்கலாம்'' இடுப்பில் சொருகியிருந்த சாவிக்கொத்தை கையில் எடுத்தவாறு ஆறுமுகம் அழைத்தார்.

பள்ளிவாசலின் படிக்கட்டை நெருங்கினோம். முஸ்லீம்களாகிய நாங்கள் மூவரும் சப்பாத்துகளைக் கழற்றியபோது, ஆறுமுகம் தான் அணிந்திருந்த செருப்புகளைக் கழற்றி விட்டு எதிரே நிலையில் அடித்திருந்த ஆணியொன்றில் தொங்கிய உறையொன்றினுள்ளிருந்து இரண்டு காலுறைகளை எடுத்தார். கால்களில் அணிந்தார்.

“ஐயா. இதை ஏன் அணிகிறீங்க?'' கனிபா ஆவலை அடக்கமுடியாமல் கேட்டான்.

“ஆண்டவனைத் தொழும் அறைக்குள்ள நீங்க கால்களைக் கழுவிவிட்டுத்தான் போவீங்க என்பது எனக்குத் தெரியும். நான் என் அழுக்குக் கால்களோட அந்தத் தரையிலே மிதிக்க விரும்பல்ல. ஊதுபத்தி கொளுத்த, விளக்கேற்ற, ஒட்டடை தூசி துடைக்க, கூட்டிப் பெருக்க....இப்படி பல தேவைகளுக்காக நான் தினசரி உள்ளே போகும்போதெல்லாம் இவைகளை அணிந்துகொள்வேன். உங்களுக்குத் தெரியுமா ரெண்டு மேசன்மாரைப் பிடித்து உள்ளேயும் வெளியேயும் சுவர்களுக்கு வெள்ளை அடிப்பித்தேன். அவங்களுக்குக்கூட காலுறை வாங்கிக்கொடுத்துப் போடச் சொன்னேன்.''

அவர் எனக்கு இமயமாகக் காட்சி தந்தார்.

★ ★ ★

# எறிந்ததை எடுத்தவர்கள்

பொழுது புலர்வதற்கு சற்று முன்பாக நாங்கள் அரபா மைதானத்தை அடைந்தோம். பஸ்ஸிலிருந்தும் இறங்கி எங்களுக்கான கூடாரத்தை நோக்கி நடக்கும்போது எங்களைப் போன்றே பல்லாயிரக்கணக்கானோர் தத்தம் தங்குமிடங்களைத் தேடிச் செல்வதைக் கண்டோம்.

பஸ் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்தும் கூடாரம் சமீபத்தில்தான் அமைக்கப்பட்டிருந்தது. பகல் முழுவதையும் அங்கு கழித்துவிட்டு பொழுது பட்டதும் முஸ்தலிபா நோக்கிச் செல்லவேண்டியிருந்தது.

கையில் எடுத்துச் சென்ற பிளாஸ்டிக் பன் பாயை நிலத்தில் விரித்து, அணிந்திருந்த இ.்.ராம் உடையுடன் கூடாரத்தினுள் அமர்ந்தேன். எனது மனைவி பெண்களின் பகுதியில் இடம் பிடித்துக்கொண்டார்.

பார்க்கும் பக்கங்களிலெல்லாம் மனிதர்கள். ஆண்கள், பெண்கள், பல்வேறு வயதினர்கள், நாட்டினர்கள், நிறத்தினர்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்னர்தாம் நாங்கள் க.்.பதுல்லாவிலிருந்து மீனா வந்தோம். உம்ரா கடமையை நிறைவேற்றுவதற்காக முதன்முறையாக க.்.பத்துல்லாவிற்குள் சென்றபோது கிடைத்த அனுபவம் சடுதியாக நினைவில் முட்டியது.

அது நள்ளிரவைத் தாண்டிவிட்ட நேரம். நாங்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து க.்.பதுல்லாவுக்கு கூப்பிடு தொலைதூரம்தான். விமானம், பஸ் என நீண்ட நேரம் பிரயாணம் செய்திருந்ததால் உடல் சோர்வுற்றிருந்தாலும் மக்காவை வந்தடைந்த அன்றிரவே, க.்.பதுல்லாவைக் கண்குளிரக் கண்டுவிடவேண்டுமென்ற ஆவல் உந்த ஆண்களும் பெண்களுமான எங்களில் பலர் உம்ரா செய்வதற்காக ஆயத்தமானோம்.

க.்.பதுல்லாவை முதன்முதலில் காணும்போது கேட்கும் எந்தக் கோரிக்கையும் எல்லாம் வல்ல அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் என்பதை நாங்கள் அறிந்திருந்தோம். அந்த நள்ளிரவிலும் பள்ளிவாசல், வெளி மாபிள் மைதானம் என எங்கு நோக்கினும் மனிதப் பூச்சிகள். கீழ் நோக்கித் தரையைப் பார்த்தவாறே பள்ளிவாசலினுள்ளால் நடந்தேன்.

“க.்.பதுல்லாவைக் கண்டதும் கேக்க வேண்டிய பிரார்த்தனை ஞாபகமிருக்குதானே?” பக்கத்தில் இ.்.ராம் உடையுடனும், உதடுகளில் தஸ்பீஹ் கலிமாக்களுடனுமாக நடந்து வந்த மனைவியின் கையை நொள்ளியவாறு கேட்டேன்.

''ஏதாவது ஜோக் சொல்லி மூடைக் கெடுத்துடாம பயபக்தியோட நல்ல பிள்ளையா நடந்து வாங்க. வாய்க்குள்ள ஏதாவது கலிமாவைச் சொல்லுங்க.''

''சரிங்க. வாய்க்குள்ளேயே சொல்லாம திறந்தே சொல்றேன். அப்பதான் என் காதுகளுக்காவது கேக்கும்'' கூறிவிட்டு மெதுவாகச் சிரித்தேன்.

''சிரிக்கிற நேரமா இது! நான் தள்ளி நடக்கன். நீங்க தனியா உங்கட சைத்தானோட கதைச்சுக்கொண்டு வாங்க.''

சில வினாடிகளில் நாங்கள் ஸம்ஸம் கிணறின் சமீபத்துக்குச் சென்றுவிட்டோம்.

''இப்ப பார்வையை உயர்த்தி க.்.பதுல்லாவைப் பாருங்க''

யாரோ கூறியதும், எனது பார்வையை மேலாக்கி.... கம்பீர நிலையில் உயர்ந்து நின்றிருந்த நாற் சதுரக் கட்டிடத்தைக் கண்டதும். அதிலிருந்தும் வீசி எறியப்பட்ட இனம்புரியாத ஏதோவொரு சக்தி என் இதயத்தில் புகுந்து.. உள்ளிருந்த எதையோ இழுப்பது போல் உணர்ந்து.. அது நேரம்வரை என் மனதினுள் விளையாடிய கேலியும், சிரிப்பும் ஆவியாக.... எல்லாம் வல்ல அல்லாஹ்வின் எதிரே, நேர் முன்னாலே பாவியான நான் நிற்கிறேன் என்ற உணர்வு பரவ.... எதைக் கேட்கவேண்டுமென மீண்டும் மீண்டும் நினைத்திருந்தேனோ அதை மறந்து.... மனதிலிருந்தும் எழுந்த கண்ணீர் கண்களால் சுனாமி அலைகளாக சுழன்றடிக்கத் தொடங்கியது.

நான் அழுதேன். குலுங்கிக் குலுங்கி, விம்மிவிம்மி, இதயம் வெடித்து அழுதேன். தாய் காலஞ்செல்லும்போது பாசமுள்ள மகனொருவன் அழுவதை விடவும் அதிகமாக அழுதேன்.

'அல்லா! அல்லா! என்னை மன்னித்துவிடு. நான் பாவம் செய்தவன். எனது பாவங்களுக்காக என்னை இம்மையிலோ மறுமையிலோ தண்டித்து விடாதே..' மனம் ஒப்பாரி வைத்தது. கண்களாலும், மூக்கினாலும் தொடராக வழிந்தது.

நேரம் ஊர்வதை உணராமலேயே நீண்ட நேரம், நான் என்ற உருவத்தை மறந்து எனது ஆத்மா அழுதுகொண்டேயிருந்தது.

மனைவி கையைப் பிடித்து என்னை உலுக்கினார். நான் சுதாரித்தேன். தோளைச் சுற்றியிருந்த இஹ்ராம் துணியினால் முகத்தைத் துடைத்துக்கொண்டேன்.

''வாங்க தவாபு செய்யலாம்.''

"என்னால் அசையவே முடியாமலிருக்கு" அழுதவாறே முணுமுணுத்தேன்.

"மற்றவங்களெல்லாம் பச்சைக் கோட்டுக்குப் போறாங்க. அவங்களை விட்டா நாம தனிச்சிடுவம். வாங்க போகலாம்."

கனத்த கால்களை ஒவ்வொன்றாகத் தூக்கி வைத்து, பச்சைக் கோட்டுக்குச் சென்று கைகளிரண்டையும் உயர்த்தி "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" என உடைந்த குரலால் வெம்பியவாறு கூறி க.்.பதுல்லாவை வலம் வரத் தொடங்கினேன்.

என்னைப் போன்ற பல்லாயிரம் மனிதப் புழுக்களின் மத்தியில், நெஞ்சு தொடராக நடுங்க, குலுங்கி அழுதவாறு, இம்மையிலும் மறுமையிலும் நிம்மதியை வேண்டும் 'ஆதினா பித்துன்யா....' என்ற பிரார்த்தனையை மனம் உருகக் கேட்டவாறு ஊர்ந்தேன். பலரின் கண்களிலும் கண்ணீர். மனம் உடைந்த அழுகை. க.்.பதுல்லாவின் சுவர்களில் தலையை மோதியவாறாக ஒப்பாரி.

தொடர் அழுகையுடன் ஏழு தடவைகள் வலம் வந்த பின், மக்காமே இப்ராஹீம் என்ற இடத்தில் தரையில் தலை புதைத்து இரண்டு ரக்ஆத்துகள் தொழுது முடித்து எழுந்து நின்றேன்.

அப்போதுதான் அந்த அதிசய அனுபவம்.

என் உடலில் பாரம் இல்லாதது போன்றதோர் உணர்வு. இறக்கைகள் இல்லாமலேயே தரையிலிருந்தும் மேலெழுந்து ஆகாயத்தில் பறக்கப் போகிறேனோவென்றதோர் எண்ணம். தரையில் கால்களைப் பதித்து உறுதியாக நிற்க முயற்சித்தேன். வீசிக்கொண்டிருந்த மெல்லிய குளிருடன் கூடிய காற்றுக்கு மனம் பஞ்சாக மிதப்பது போன்றதொரு நிலை.

க.்.பதுல்லாவிலிருந்தும் நாற்புறமும் வீசிய காந்தக் கதிர்களுக்கு உள்ளிட்ட விழிப் பார்வை இன்னும் அதிலேயே மொய்த்து விலகாமல் உள்ளூர அதன் அழகை இரசித்தது.

"நான் உயர்ந்து பறந்து விடுவேனோ என நினைக்கேன்" க.்.பதுல்லாவில் விழி பதித்து நின்ற மனைவியிடம் மெதுவாகக் கூறினேன்.

"எனக்கும் அதே உணர்வு. ஏன் இப்படி?"

"மூடை மூடையாகச் சுமந்து வந்த பாவங்களையெல்லாம் அல்லாவின் அருளால் கண்ணீராக வெளியே தள்ளிவிட்டோம். க.்.பத்துல்லாவின் காந்தம் அவற்றை அப்படியே உறிஞ்சிவிட்டது. பாரமகன்ற நாம் பாரமற்ற ஆத்மாவை மட்டும் கொண்டுள்ளதால் இந்நிலையோ?"

வழக்கமாக வெய்யில் இறைக்கும் அரபா மைதானத்தில் அன்று குளிர் தென்றலுடன் மப்புத்தன்மை நிலவியது. சூரியனின் வக்ரம் கனத்த

மேகங்களால் மறைக்கப்பட்டிருந்தது. தனித்தனியான பிரார்த்தனைகளுடன் மதிய வேளைவரை கழித்தோம்.

மதியத் தொழுகையுடன் எங்களது பொதுப் பிரார்த்தனைகள் தொடங்கின. கைகளில் பிடித்த ஒலிவாங்கிகளில் ஹஸரத்மார் கண்ணீர் மல்க எல்லாம் வல்லவனிடம் இம்மை மறுமைக்கான நல்லவைகளை மட்டும் வேண்டி பிரார்த்திக்கத் தொடங்கினர். நாங்கள் ஆமீன் சொன்னோம்.

எங்களின், மாதா பிதாக்களின், உற்றார் உறவினர்களின்.... எல்லோர்களினதும் பாவங்களை மன்னிக்குமாறு கேட்டு, மீண்டும் அழுதோம். மனித குலத்துக்கு நிம்மதியைத் தருமாறு, பாவம் செய்யாத உணர்வைத் தருமாறு, எப்போதுமே மற்றவர்களுக்கு நன்மைகளையே செய்யக்கூடிய வாய்ப்புகளைத் தருமாறு, இனங்களுக்கிடையில் ஒற்றுமையை தொடராகப் பேண உதவுமாறு.. நோயில்லாத வாழ்க்கை, கல்வி என பலதையும் வேண்டினோம். பாவங்களுக்கான மறுமையின் தண்டனையிலிருந்து பாதுகாப்புக் கேட்கும்போது ஏங்கியேங்கி வெடித்தோம்.

அப்போதும் ஓர் அதிசயம் நடந்தது. சூரியனின் ஒளி திடீரெனக் குறைய, மெலிதாக, மிகமிகமெலிதாக மழைத்தூறல் கூடாரத்தின் மீது வீழ்வதை உணர்ந்தோம்.

"அல்லாஹ் தனது அருளை நம்மீது சொரிகிறான். பெற்றுக்கொள்ளுங்கள்" என்றார் பிரார்த்தனையின் மத்தியில் ஹஸரத். நாங்கள் "அல்லாஹு அக்பர்" என்றோம் ஏகோபித்த குரலில்.

பிரார்த்தனை முடிந்து கன்னங்களில் படிந்திருந்த கண்ணீரைத் துடைத்ததும் பாரமற்றதோர் உணர்வு ஏற்பட, உயர்ந்து பறந்து விடுவேனோவென்ற எண்ணம் மீண்டும் ஏற்பட்டது.

அரபா மலையில் ஏறி நின்று பிரார்த்தனை செய்வதற்காக பிற்பகலில் மனைவியுடன் நடக்கத் தொடங்கினேன். நிறையப் பேர் கண்ட கண்ட இடங்களிளெல்லாம் நின்று கையேந்தி பிரார்த்தனை செய்வதைக் கண்டோம்.

அரபா மைதானத்தில் குறிப்பிட்ட இடைவெளிக்கு ஒன்றாக வேப்ப மரங்கள் கிளை பரப்பி நின்றன. பயிர்கள் உண்டாகாத அந்தக் காய்ந்த மணலில் இவற்றை வளர்த்தெடுத்து பல இலட்ச ஹாஜிகளுக்கு நிழல் வழங்கச் செய்யப்பட்ட ஏற்பாட்டைப் பார்த்து வியந்தோம்.

வேப்ப மரங்களைப் பார்த்ததும் கஹ்பதுல்லாவில் வைத்து ஒருநாள் நள்ளிரவு எனக்கு ஏற்பட்ட விசித்திரமானதோர் எண்ணம் நினைவில் எழுந்தது.

தங்க நிற வேலைப்பாடமைந்த கரும்பச்சைத் துணியால் முழுக்கப் போர்த்திய க.்.பதுல்லாவின் உயரமான பகுதியில் பெரிய சைசில் வெட்டுக்கிளி போன்ற சில பூச்சிகள் மொய்த்துக்கொண்டிருப்பதை ஓர் இரவு கண்டேன்.

'இந்தப் பாவ உடல் வடிவெடுத்ததுக்குப் பதிலாக அந்தப் பூச்சிகளில் ஒன்றாக நான் பிறந்திருக்கக்கூடாதா? அல்லும் பகலும் க.்.பதுல்லாவின் சுவர்களில் மொய்த்து, அதையே வலம் வந்து கொண்டும் இருந்திருப்பேனே. என்னை விட அந்தப் பூச்சிகள் எத்தனை பாக்கியம் பெற்றவை!' என்னுள் மறைந்து என்னோடு நிழலாகத் திரியும் பாவ சைத்தானுக்கு வைதுகொண்டேன்.

'வேம்பு மரங்களில் ஒன்றாகவாவது நான் பிறந்தேனா? வருடாவருடம் ஹஜ் கடமையை நிறைவேற்ற வரும் ஹாஜிகளுக்கு நிழல் கொடுக்கும் பணியையாவது கச்சிதமாகச் செய்திருப்பேனே! நான் என்ற மமதையுடன் வாழும் இழிந்ததொரு மனிதனாகவல்லவா வேடம் பூண நேரிட்டுவிட்டது!' இப்போது நினைத்தேன்.

அரபா மைதானத்தை அண்டிய மலையின் மீது தலையை மோதி அழ வேண்டும் போல் தோன்றியது.

அன்று இரவு நாங்கள் முஜ்தலிபாவுக்குச் சென்றோம். பல்லாயிரம் வாகனங்கள் பார்க்குமிடங்களிளெல்லாம் நிறுத்தப்பட்டிருந்தன. மக்கள் வெள்ளம் அலைபுரண்டது. மலைக்கற்கள் இயற்கைச் சுவராய் அமைந்ததொரு பகுதியில் பஸ் நிறுத்தப்பட்டதும் இறங்கினோம். அடுத்த நாள் சைத்தான்களுக்கு எறிவதற்காக குறுங்கற்கள் எடுத்து.. அதிகாலைத் தொழுகைக்காக நித்திரையும், விழிப்புமாகக் காத்திருந்து....

சுப்ஹு தொழுகை முடிந்த கையுடன் எங்களுக்கான பஸ்ஸில் ஏறிக்கொண்டோம்.

பஸ் நத்தையாக ஊர்ந்தது. சைத்தானுக்கு கல் எறிவதற்காக ஹாஜிகள் பட்டாளம் பட்டாளமாக நடந்துகொண்டிருந்தார்கள்.

மீனாவிலிருந்த் எங்களது கூடாரத்தை அடைந்து, வயிற்றில் காலையிலிருந்தே தொடர்ச்சியாக உறுமிக்கொண்டிருந்த பசி மிருகத்துக்கு உணவு அளித்தபின்தான் சற்று தெம்பு ஏற்பட்டது.

எங்களின் அடுத்த கடமை சைத்தானுக்குக் கல் எறிவது. கூடாரத்திலிருந்தும் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்திலிருந்த அதற்கான இடத்தை நோக்கி நடக்கத் தொடங்கினோம். பார்வை சென்ற பக்கங்களிளெல்லாம் இஹ்ராம் ஆடை தரித்த ஹாஜிகள்.

“சைத்தானுக்குக் கல் எறிவதிலுள்ள தத்துவம்தான் என்ன? ” நடந்து கொண்டிருந்த என் மனைவி மெதுவாக என்னிடம் கேட்டார்.

அந்தக் கேள்விக்கான பதிலை அவருக்கு வலியவே கூறவேண்டுமென பல தடவைகள் நினைத்ததுண்டு. சரியான சந்தர்ப்பம் அப்போதுதான் கிடைத்தது.

“சைத்தான் என்றால் என்ன?” நான் மாறிக் கேட்டேன்.

“இப்லீஸ். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு வழிபடாமல், அவனால் படைக்கப்பட்ட மனித இனத்தை வழி கெடுப்பதாகக் கங்கணம் கட்டிக்கொண்டவன். சரியா? ”

“மெத்தச் சரி. ஆகவே அவனை விரட்டுவதற்காக கற்களை எறிகிறோம் என்பதுதான் இதன் நேரான அர்த்தம். ஆனா, மறைமுகமான வேறொரு அர்த்தமும் இருக்கு.”

“அது என்ன?”

“பாவம் செய்யத் தூண்டும் ஏழு கெட்ட குணங்களை ஒவ்வொருவரும் கொண்டிருக்கிறோம். பொய், பொறாமை, கோபம், வஞ்சகம், காமம், குரோதம், பேராசை என இந்த ஏழும்தான் நாம பாவம் செய்வதற்கு அடிப்படைக் காரணங்களாகவுள்ளன. இவற்றின் பாற்பட்டு நாம பாவங்களைச் செய்துவிட்டு பின்னால் காலமெல்லாம் நினைத்து வருந்துகிறோம். நிம்மதியைத் தொலைத்துவிட்டுத் தவிக்கிறோம். சரிதானே?” நான் கேட்டேன்.

“சரி. அதுக்கும் இங்க கல் எறிகிறதுக்கும் என்ன சம்பந்தம்? ”

“அது ஒவ்வொன்றும் ஒவ்வொரு சைத்தான். இதுநாள்வரை நம்மோடு இருந்து, நம்மை வழிகெடுத்த ஏழு சைத்தான்களையும் இந்தப் புனித பூமியில் வைத்து தூக்கி எறிந்து மனங்களைச் சுத்தப்படுத்திக்கொள்வதுதான் கல் எறிவதின் பின்னாலுள்ள தத்துவம்.”

சில நிமிடங்கள் நாங்கள் இருவரும் அமைதியாக நடந்தோம். கல் எறிவதற்கான தூண்கள் தூரத்தே தெரிந்தன. மேம்பாலத்தில் மனித அலைகள் புரள்வது தெரிந்தது.

“கோபம் எப்படி ஏற்படுது?” மீண்டும் மனைவி கேட்டார்.

“கோபத்துக்கு நான்கு படிகள். நான்காவது படிதான் கோபம். ”

“அப்போ மத்தப் படிகள்?”

“மூன்றாவது எரிச்சல். அதாவது கோபம் ஏற்பட முன்னர் எரிச்சல் ஏற்படுது.”

“ரெண்டாவது?”

“நாம விரும்பியவாறு காரியங்கள் நடைபெறவில்லை, தொழிற்படவில்லையென அறியவருவது. முதலாவது படி என்ன தெரியுமா?”

“சொல்லுங்க”

"நான் என்ற அகங்காரம். ஈகோ. கோபத்துக்கு இதுதான் அடிப்படை. இந்த நாலு படிகளும் நொடிக்குள்ளே நடந்துடும். நான் எனும் மமதையை மனதிலேயிருந்து நீக்கி, மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக்கொடுக்கப் பழகிட்டோம்னா கோபமே ஏற்படாது"

நான் கூறியதையிட்டு மனைவி சிந்திக்கிறாரென்று முகபாவம் காட்டிற்று.

கல்லெறியும் இடத்தில் மனிதப் பூச்சிகள் மொய்த்திருந்தன.

"அது சரிய். ஹஜ் செய்து முடித்தவங்கள அன்று பிறந்த பாலகனெனச் சொல்றாங்களே. அது ஏன்?" கல்லெறியும் கூட்டத்தினரோடு நாங்களும் சேர்ந்துகொள்வதற்கு முன்னர் மனைவி கேட்டார்.

"வரும்போது பாவச் சுமைகளோடு வந்தோம். கஃபதுல்லாவில், மீனாவில், அரபாவில், முஸ்தலிபாவில் என எல்லா இடங்களிலும் அதுநாள்வரை செய்த பாவங்களை மன்னிக்குமாறு அல்லாஹ்விடம் கேட்டோம். எங்கட பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட்டிருந்தால் எல்லோருமே பாவங்கள் இல்லாத ஆத்மாக்களாக்கப்பட்டுள்ளோம். மனதிலுள்ள ஏழு பாவ குணங்களையும் இப்போது எறிந்துவிட்டோமென்றால், முற்றிலுமே புது மனிதனாக, அன்று பிறந்த குழந்தையாக ஆகிவிடுவோமல்லவா?"

மனைவி தலையசைத்துக்கொண்டார்.

மனதிலிருந்த சைத்தான்களைத் தூக்கித் தூர எறிந்து விட்டு, கூடாரத்துக்குத் திரும்பி, இஃராம் களைந்து, தலை வழித்து, குளித்து, புத்தாடை அணிந்து சாப்பிடும்போதுதான் அந்த அறிவித்தல் கிடைத்தது.

'தவாபுசெய்ய கஃபதுல்லாவுக்குப் போகணும். சீக்கிரமா புறப்படுங்க.'

நாங்கள் பஸ் நிலையத்தையடைந்தோம். ஒன்றன் பின் மற்றொன்றாக பஸ்கள் வந்துகொண்டிருந்தன. பல்லாயிரமாகத் தெரிந்த கூடாரங்களை நான் பார்த்து வியந்துகொண்டு நிற்கும்போது, எங்களது குழுவினருள் சிலர் ஏறிய பஸ் ஒன்றில் மனைவி ஏறிவிட்டார். ஆசனமொன்றில் அமர்ந்து, பக்கத்து ஆசனத்தில் கைவைத்து எனது வருகைக்காகக் காத்திருந்துள்ளார். என் பக்கத்தில் நின்றிருந்த அவரைக் காணாததால் தேடி நான் அங்குமிங்கும் அலைந்து, மீண்டும் அவரிருந்த பஸ் அருகில் வர.... உள்ளேயிருந்து என்னைக் கண்டதும் சரேலென எழுந்து பஸ் கதவருகில் வந்து அழைத்தார்.

"சீட் வைச்சிருக்கேன். கெதியா ஏறுங்க." நான் உள் நுழைந்து முன்னர் அவர் வீற்றிருந்த ஆசனத்துக்கருகில் சென்றபோது..

அதில் கணவனும், மனைவியுமாக இருவர் இருந்துகொண்டிருப்பதைக் கண்டோம்.

“இது நான் இருந்த சீட். கொஞ்சம் எழும்புறீங்களா?” என்றார் அவர்களைப் பார்த்து என் மனைவி.

“என்ன? நீங்க இருந்ததா? இப்பதான் வாறீங்க. அவங்க இருந்ததாம்” அந்தப் பெண் சீறினார்.

“நான் இதிலே இருந்ததை அங்க நின்றிருந்த நீங்க பார்த்துக்கொண்டுதானே நின்றீங்க” என்றார் தன் கட்சியைப் பலப்படுத்த மனைவி.

“நாங்க நிக்கவுமில்ல. பாக்கவுமில்ல.” ஆண் தனது மனைவிக்காக வக்காலத்து வாங்கினார்.

“பாருங்களன் இவங்க சொல்ற பொய்யை” என் மனைவி மூக்கால் அழுதார்.

“என்ன? பொய் சொல்றோமா? இப்பத்தான் வந்துட்டு சீட் வேணுமாம்” அந்தப் பெண் தனது குரலை உச்சமாக்கி சண்டைக்கு ஆயத்தமாகுமாப் போல் தலையைச் சிலிர்த்தார்.

என் மனைவி ஏதோ கூற வாயெடுக்க.. நான் அவரின் கையைப் பற்றி, சற்றுத் தள்ளி நடந்தேன்.

“பாருங்க அவங்க சொல்ற பொய்யை ” என்றார் மீண்டும் மெதுவான குரலில் மனைவி.

“தபாரு. கொஞ்ச நேரத்துக்கு முன்னாலேதான் ஏழு சைத்தான்களையும் தூக்கி எறிஞ்சுட்டு வந்திருக்கோம். அவங்களும் எறிஞ்சுதான் இருப்பாங்க. ஆனா, எறிஞ்சதிலே ஒன்றை உடனேயே திருப்பி எடுத்துக்கொண்டாங்க. நாம எடுக்கக் கூடாது. அன்று பிறந்த குழந்தையாகவே ஊருக்குப் போய்ச் சேர்ந்துடுவோம். ”

உயரே பொருத்தியிருந்த கம்பியைப் பற்றியவாறு நாங்கள் நின்றுகொண்டிருக்க, நிறைய ஹாஜிகளைச் சுமந்த பஸ் க.்.பதுல்லாவை நோக்கி ஊர்ந்தது.

★★★

கொசுறு: எறிந்தவைகளில் சிலதையோ/ பலதையோ சின்னாட்களில் நாங்களும் மீள எடுத்துக்கொண்டோமென எழுதாவிட்டால் கதை பூரணமாகாது.

# சலாமத் போ

விடுமுறை தினமாதலால் ஹோட்டல் அறையினுள் முடங்கிக்கொண்டிருக்க நான் விரும்பவில்லை. கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த டெலிபோன் றிசீவரைத் தூக்கி தேநீருக்காகக் கட்டளையிட்டு விட்டு அன்றைய பொழுதைக் கழிப்பதற்கான திட்டம் தீட்டுவதில் ஈடுபட்டேன்.

சில நிமிடங்களில் அறைக்கதவை மெதுவாக தட்டிவிட்டு மஞ்சள் நிறக் கவுண் அணிந்த குமரி ஒருத்தி உள்ளே வந்து வழக்கமாகவே காலையில் என்னைப் பார்த்ததும் முகம் நிறைந்த புன்னகையுடன் கூறும் `மகந்தன் உமகா' (காலை வந்தனம்)வை தனது கீச்சுக் குரலால் கூறிவிட்டு கையிலிருந்த தேனீர்த் தட்டத்தை ஸ்டூலில் வைத்துவிட்டு "எனிதிங் எல்ஸ் ஸார்?" என்றாள்.

நான் பதிலுக்கு "மகந்தன் உமகா" என்றேன். எனது உச்சரிப்பு அவளுக்கு எவ்வாறு பட்டதோ உடலைக் குலுக்கிச் சிரித்தாள். நானும் சிரித்தேன்.

காலை உணவுக்கான எனது கட்டளையை ஏற்றுக் கொண்டு அறையை விட்டும் நீங்கினாள். தேனீர் பருகியதும் மனதுக்கு இன்னும் இதமாக இருந்தது.

ஜன்னல் கதவொன்றைத் திறந்து வெளியே பார்வையைப் பாய்ச்சினேன். கட்டைக் கவுண் அணிந்த பெண்களும், நீளக் காற்சட்டை அணிந்த ஆண்களுமாக அகன்ற பாதைகளில் நடந்தனர். பஸ்களும், ஜீப்புகளும் புகையையும், ஹார்ன் சப்தத்தையும் கக்கியவாறு ஓடின. கையிலிருந்த சிகரட்டை அஸ்றேயில் அணைத்து விட்டு டவலைத் தூக்கியவாறு குளியறைக்குள் சென்று இதமான சுடுநீரில் குளித்து.... அகன்ற கண்ணாடியைப் பார்த்து முகச்சவரம் செய்துகொண்டு வெளியே வந்தேன்.

மூன்று நாட்களுக்கு முன்னால் நேபியா சுபர் மார்கட்டில் வாங்கிய கொலோனைக் கையில் தெளித்து, பின் கழுத்து, கழுத்து, கமுக்கட்டுக்களில் தடவும் போது அதன் வாசனை நாசிக்கு என்னவோ போல இருந்தாலும் சகித்துக்கொண்டேன்.

உடுப்பை அணியலாம் என தோல் பெட்டியைத் திறக்க எதிரே நான் பிலிப்பீன்ஸுக்கு வந்த பின்னர் முதன்முதலாக எனது தாயிடமிருந்து கிடைத்த கடிதம் என்னைப் பார்த்துச் சிரித்தது.

நான் எப்போது வெளிநாடு செல்வேன் எனக் காத்திருந்தாளோ என்னவோ, விமானம் ஏறிய மறுநாளே எனது தங்கை பல்லவி பெரிய மனுசியாகி விட்டாளாம் என்ற நற்செய்தியை அம்மா அறிவித்திருந்தார்கள்.

இன்னும் நான்கு கிழமைகளில் எனது குறுகிய கால ஆராய்ச்சிப் பயிற்சியை முடித்து விட்டு நான் தாயகம் செல்லும்போது எனது அன்பளிப்பாக பல்லவிக்கு அழகான ஒரு சாரி வாங்கிச் செல்லவேண்டுமென கடிதம் கிடைத்த அதே நாள் மனதில் வரித்துக்கொண்டேன். இன்று நான் அதைத்தான் செய்யப் போகிறேன். பிலிப்பீன்ஸில் சாரி அணிந்தவர்களை நான் சந்தித்ததே இல்லை. ஏதாவது கடைகளில் இருக்கலாம். தேடிப் பார்க்கப் போகிறேன்.

எக்ஸ்.எம். சுபர் மார்கட்டைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருந்தேன். நாலு மாடிக் கட்டிடமான அது, கற்பனைக்கும் மிஞ்சிய விசாலமானது. பார்த்த இடமெல்லாம் பொருட்கள்.... பொருட்கள்.... பொருட்கள்...! அடேங்கப்பா! அங்கு இல்லாதவை மோட்டார் வாகனங்கள் போன்றவைதானோ?

கிறிஸ்மஸ் நெருங்கிக் கொண்டிருந்ததால் சுபர் மார்கட் சனத்தால் வழிந்தது. பிலிப்பீன்ஸ் நாட்டு அழகிகளும் அவர்களின் அழகுக்கு ஈடு கொடுக்காத அல்லது எட்டிப்பார்க்கக் கூட முடியாத ஆண்களும், கொழுத்த மொழுமொழு குழந்தைகளும், பிள்ளைகளும், குருத்துக் கால்களும், பாப் செய்யப்பட்ட கூந்தலுமாக வாலைக்குமரிகளும் .... சுபர் மார்கட் நிறைய சனம்.

நான் கேள்விப்பட்டதை விடவும் மார்கட் அழகாக இருந்தது. பொருட்கள் அடுக்கப்பட்ட விதம், கவர்ச்சி, வர்ணஜாலம், குளிர்ச்சி......ஆகிய இவைகள் எல்லாவற்றையும் விட, விற்பனைக் குமரிகளாக ஒவ்வொரு பிரிவிலும் கருநீல நிற கட்டைக் கவுணும், பால் வெள்ளைச் சேர்ட்டும் அணிந்து நின்றிருந்தவர்களைப் பார்க்கும் போது... இவர்கள்தான் தேவதைகள் என வர்ணிக்கப்படுபவர்களோ என எண்ண நேர்ந்தது.

மட்டுமட்டான பணத்துடன் உள்ளே சென்ற எனக்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொருட்களைப் பார்ப்பதா, அழகு வனிதையர்களுக்கிடையிலான அழகுராணிப் போட்டி நடத்துவதா என சஞ்சலிக்கும் மனநிலை.

சற்றுக் குட்டையாக, பள பளக்கும் முகங்களுடனும், அளவெடுத்து உருவாக்கிய உடல்களுடனும் அவர்கள் வளைய வருவது பார்ப்பதற்கு இதமாக மட்டுமில்லை, சில நேரங்களில் நாக்கில் ஜலம் ஊற்றெடுக்கவும் காரணமாக அமைந்தது.

நீண்ட நேரமாக அவர்களின் அழகை வியந்து....சில பொருட்களின் விலையைக் கேட்டு மலைத்து.... எஸ்கலிட்டர் மூலமாக மேல் மாடிகளுக்குச் சென்று... பிரிவு பிரிவாகச் சுற்றித் திரிந்து.... கீழ் மாடியில்

றெஸ்ரூரண்டில் ஐசாகக் கரைந்த கேக் சாப்பிட்டு.... கொக்கோ கோலா குடித்து...... பின்னர் எஸ்கலிட்டரில் ஏறி இரண்டாவது மாடியின் பிடவை விற்பனைப் பிரிவுக்குச் சென்று, பாரிய றாக்கைகளில் பல்லவிக்கான சாரிக்காக மேய்ந்துகொண்டிருக்கும் போதுதான்... அந்த கிளி மொழி கேட்டது.

“மே ஐ கெல்ப் யு ஸார்...?”

சடுதியாகத் திரும்பினேன். பின்னால் நின்றிருந்தவளில் இடித்து மட்டும் கொள்ளவில்லை.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதும், அதன் பின்னர் சிவில் பொறியியலாளனாக எனது திணைக்களத்தில் கடமையாற்றும் போதும், பிலிப்பீன்ஸுக்கு வந்த கடந்த ஒரு மாதமாகவும், கண்ட, சந்தித்த இளம் பெண்கள் அத்தனை பேரையும் விட இவள் என் கண்களுக்கு அழகாகத் தெரிந்தாள்.

சுமார் ஐந்தடி நாலங்குலம் இருப்பாள். பிரகாசமான நீலக் கண்கள். பால்வெள்ளை நிறம். செதுக்கியது போன்ற உடல் அமைப்பு. வருடக்கணக்காக பார்த்துக்கொண்டிருக்கக்கூடிய முக அழகு. கத்தரித்து கலைந்து தலைமுழுவதும் பரவியிருந்த முடி.

`இத்தனை அழகியா?' என மலைக்கவைக்கும் இயற்கை அழகு.

நான் என்னை மறந்து, அவளின் பூரண பொலிவான முகத்தை, அதன் கீழ்ப் பாகங்களை மனதினுள் ரசித்தும், அளவெடுத்துக்கொண்டும், அவளின் கேள்விக்குப் பதில் அளிக்காமல் நின்றுகொண்டிருந்தபோது....

அவள் மீண்டும் கேட்டாள் “கேன் ஐ கெல்ப் யு ஸார்?”

அவளின் வாளிப்பான கழுத்துப் பிரதேசத்தை மெதுவாக, இதமாகத் தொட்டுப் பார்க்கலாமா என்ற ஏதோ ஒரு பைத்தியத்தனமான சிந்தனை என்னளவில் ஏற்பட்டாலும், அடக்கிவிட்டு, தொண்டையைக் கனைத்தேன். அவளைப் பார்த்துச் சிரித்தேன்.

அவளும் சிரித்தாள். கவர்ச்சி சிதறியது அல்லது கொட்டியது.

“எஸ்! ஐ ஆம் சேர்ச்சிங் போ எ சாறி....இஸ் இட் எவெய்லபிள்...?”

“வட் ஸார்....?”

“சாறி.....”

“ஐ கான்ட் அண்டஸ்ரான்ட் ஸார்...”அவளுக்கு எவ்வாறு விளக்குவதெனப் புரியாமல் தவித்து..... எவ்வாறோ ஊமைப் பாசையாலும், நடிப்பாலும் புரிய வைத்து....

“ஓ! ஐ நௌ அன்டஸ்டான்ட் ஸார். யூ இன்டியன் ஸார்....?”

“நோ! சிறிலங்கா...சிலோன்... ஏன் கேக்கே?”

"இன்டியன் லேடீஸ் அப்படி உடுத்தி வாரதை ரீ.வீ.யிலே பார்த்திருக்கேன். நீங்க டூரிஸ்டா...?"

"இல்லை..."

பிலிப்பீன்சுக்கான எனது வருகையைச் சொன்னேன்.

"கௌ டு யூ லைக் அவ கன்றி ஸார்?"

"ஓ...!வெரி பைன்....ஸ்பெஸலி தி லேடீஸ் ஆ வெரி ப்யூடிபுல்...."

"இஸ் இட்...?"

"பை த வே, வட்ஸ் யுவ நேம்?"

இருபது வயது மதிக்கத்தக்க அவள், என்னை அவளது நீல விழிகளால் உற்றுப் பார்த்து விட்டு....

"லுலு" என்றாள்.

"வட்? இஸ் யுவ நேம் லுலு...?"

"எஸ்..."

`வட் ஏ பணி நேம்.?' நினைத்துக் கொண்டேன்.

"மை நேம் இஸ் ராஜ்"என்றேன். ஏனோ தெரியாது என்னை அவளுக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் சரேலென மனதில் தைத்தது.

"ராஜ்? ராஜ் மீன்ஸ்?"

"கிங்."

"ஓ! ஆ யூ....த கிங் ஒவ் சிலோன்?"சிரித்தவாறு கேட்டாள்.

"ஓ!நோ! மை புள் நேம் இஸ் ராஜசுந்தரம்" என்றேன்.

அவளும் நானுமாக சுபர் மார்கட்டைப் பற்றி, அதனுடைய விசாலமான அமைப்பைப் பற்றி, அதனுள் குவிந்து கிடக்கும் பொருட்களைப்பற்றி , அவளுடைய நாட்டைப் பற்றி..... எல்லாமே ஓர் ஐந்து நிமிடங்கள் பேசினோம்.

"உனக்கு ஆட்சேபனை இல்லையென்றால் உன்னைப் பற்றி ஒன்று சொல்லட்டுமா?"

"சொல்லுங்க ராஜ்?"

"இந்தப் பிலிப்பீன்ஸில் உன்னைவிட அழகிகளே இருக்கமாட்டார்கள் போல் தெரிகிறது."

அவள் மார்பு குலுங்கச் சிரித்தாள். தேடிய சாரி அங்கே கிடைக்கவில்லை.

★ ★ ★

ஐந்தாவது தடவையாக அவளை நான் சந்திக்கச் செல்கிறேன். அவளைச் சந்தித்த முதல் நாள் தொடக்கம், கடந்த மூன்று நாட்களும் பிற்பகல் வேளைகளில் எதையாவது வாங்கும் சாக்கில் அவள் கடமையாற்றும் பிரிவுக்குச் சென்றேன்.

அவளைப் பார்த்துக் கதைத்தேன். சிரித்தேன். தனிமையாக அறைக்குள் அடைந்து கிடக்கும் இரவு வேளைகளிலும், ஆராய்ச்சிக்காக எனக்காகக் குறித்தொதுக்கப்பட்ட அமைப்பினுள் வளையவரும் பகல் வேளைகளிலும் அவள் என் மனதில் தொடராக நடமாடினாள். சிரித்தாள். கதைத்தாள். என்னால் மறக்க முடியாத, மறக்கக்கூடாத ஒருத்தியாக ஆகினாள். அவள் பால் நான் கொண்டுள்ளது நட்பா அல்லது வேறு எதுவுமா என இனம் பிரிக்க முடியாமல் அவஸ்தைப்பட்டேன்.

ஆராய்ச்சியை முடித்து விட்டு இலங்கைக்குத் திரும்பிய சில மாதங்களின் பின் எனது முறை மாமனின் மகளான கல்யாணியை மணக்கவிருக்கிறேன். கல்யாணி அனுப்பிய கடிதம் கூட இரண்டு நாட்களுக்கு முன்னால் எனக்குக் கிடைத்திருந்தது.

நான் சற்றுமே எதிர்பாராத வகையில் என் மனம் முழுவதும் இப்போது லுலு. கல்யாணியை நினைத்து இவளை மறந்துவிடலாமென்றால் என்னால் முடியாமலிருந்தது. பிற்பகல் எப்போது விடியுமென எதிர்பார்த்து…அவசர அவசரமாக அறைக்குச் சென்று முகம், கைகால் கழுவி…கவர்ச்சியான ரீசேர்ட் அல்லது சேர்ட் அணிந்து, எக்ஸ். எம். சுபர் மார்கட் போகும் வரை என்னளவில் ஒரு இயந்திர கதி செயற்பட்டது.

"குட் ஈவினிங் ராஜ்…."என்னைப் பார்த்து வெண் பற்கள் தெரிய லுலு குயில் கூவியது.

"குட் ஈவினிங் லுலு…"

பிற்பகல் ஆறுமணிக்கு அவளுக்கு கிடைக்கும் தேநீர் இடைவேளையில் இருவருமாக கீழ் மாடிக்கு வந்து, அலைமோதும் ஆட்கள் மத்தியில் கதிரைகளில் இடம் பிடித்து, கொக்கோ கோலாவை ஸிப்பியவாறு கதைத்தோம்.

எதைக் கதைத்தோமோ தெரியாது. கதைத்தோம்.

"லுலு. நாளை மறுநாள் சனிக்கிழமை எனக்கு மெட்றோமனிலா போய் மலகஞ்சா (ஜனாதிபதி மாளிகை) பார்க்கணும்னு விருப்பம். என்னோட நீயும் வாரியா?"

"சற்ரடே எனக்கு வேலை நாள். லீவு போடணுமே"

"தபாரு லுலு. நான் உங்க நாட்டுக்கு புதியவன். எனக்கு வழிகாட்ட யாரும் உதவிக்கு இல்லை. உனக்கு முடியுமுன்னா என்கூட வாவேன்"

பால் வெள்ளை நெற்றியைச் சுருக்கி சில வினாடிகள் சிந்தித்தாள்.

"ஓகே ராஜ். உனக்காக லீவு போடுறேன். எங்கே சந்திப்பது?"

"ஹார்ட் சென்ரருக்குப் பக்கத்து பஸ் நிலையத்திலே காலை எட்டு மணிக்கு காத்துக்கொண்டிருப்பேன். வந்துடு. இடம் தெரியுமா?"

"தெரியும். நீ அங்கே எங்கே இருக்கே?"

"நான் தங்கி நிற்கும் ஹோட்டல் அந்தப்பக்கம் தான் இருக்கு."

★ ★ ★

வாக்களித்தபடியே சரியாக எட்டு மணிக்கு என்னை நோக்கி நடந்து வந்தாள். தனியாக அல்ல. அவளுடன் கூடவே வேலை செய்யும் இன்னும் ஒரு குட்டைக்கால் அழகியுடன்.

நாங்கள் பஸ்ஸில் ஏறி, ஒரே ஸீட்டில் மூவருமாக உட்கார்ந்து, பாரிய சாலைகளில் பிரயாணம் செய்து, பக்கத்தே தெரிந்த கட்டிடங்களைப் பற்றியெல்லாம் அவள் எனக்கு விபரித்து...

"ராஜ். அதோ பார்த்தீங்களா. அந்த வீடுகளிலே வசிக்கிறவங்களெல்லாம் கோடீஸ்வரர்கள். என்னைப் போல சாமானியர்கள் அந்தப் பகுதியில் வசிப்பது பற்றி கற்பனையே பண்ண முடியாது"என்றாள் உயர்ந்ததும் விசாலமானதுமான சில வீடமைப்புகளைச் சுட்டிக்காட்டி.

அவள் கூறியதிலிருந்து பணம் தொடர்பாக அவள் கொண்டுள்ள ஆதங்கம் துல்லியமாக வெளிப்பட்டது.

"நீ ஏன் உன்னை சாமானியமானவள்ன்னு நினைக்கே?" கேட்டேன்.

"சாமானியமானவள்ன்னு நினைப்பதே தவறு. என்னைப் போல வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழுறவங்களுக்கு எந்தவித விடிவுமே இல்லை ராஜ்"

அவளுடைய காந்தக் கண்கள் நீரை உகுத்து விடுமோ என எண்ணி, பேசிக்கொண்டிருந்த விடயத்தை மாற்றினேன். பக்கத்திலிருந்த அவளுடைய சிநேகிதியைச் சீண்டினேன். அவளின் பெயர் மேரி லூ.

மெட்றோ மனிலாவில் இறங்கி, கால் நடையிலும் டாக்ஸியிலுமாக பகலெல்லாம் அங்குமிங்குமாக சுற்றித் திரிந்து, பரந்த கடலில் படகுப் பிரயாணம் செய்து, பக்கத்திலிருந்த உல்லாச ஹோட்டலொன்றில் மீன்கறியும் சோறும் உண்டு.....

மீண்டும் குவாஸன் சிற்றியை அடையும்போது இரவாகி விட்டது.

"ராஜ். நீ ஹோட்டலுக்கு தனியாகச் சென்று தங்கப் போறியா?"லுலு கேட்டாள்.

"உனக்குத் துணை வேண்டுமென்றால் இவளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு நான் உன் கூட வர்றேன்." என்றாள் என் காதோடு வாயாக.

எனக்கு திடீரென உடல் முழுவதும் மின்சாரம் பாய்ந்தது.

`இவள் என்னைக் காதலிக்கிறாளா?'அன்று முழுதும் அவள் என்னுடன் பழகிய விதம், கதைத்தவைகள் எல்லாமே என்னுள் அலைகளாக எழுந்தன.

`நான் அவளைக் காதலிக்கிறேனா?'அந்தக் கேள்வி என்னை அலைக்கழித்தது.

கல்யாணி முன்னால் பாய்ந்து ஓடி வந்தாள். அவளை மறந்து விட வேண்டாம் என என் கால்களைப் பிடித்துக் கெஞ்சினாள். நான் இத்தனை நாட்களாக கட்டிக்காத்த எனது கலாச்சார பண்பாடு, பெண்கள் தொடர்பாக நான் கொண்டிருந்த எண்ணம்...

"வேண்டாம். இவள் இன்றிரவு என் அறைக்கு வந்தால் எனது கொள்கைகள், நான் சார்ந்துள்ள எனது சமூக கோட்பாடுகள்.... அத்தனையையும் ஒரே இரவில் இழந்துவிடுவேன்."

"வேணாம்மா. நீ உன் வீட்டுக்குப் போ"என்றேன்.

அவள் என்னை வித்தியாசமாகப் பார்த்தாள்.

அந்த முகத்தில் தெரிந்த அப்பாவித்தனம் நான் என்னைக் கெடுத்துக்கொள்ள விரும்பாததை விட மிகச் சொற்ப நாட்கள் மட்டும் அவளின் நாட்டில் வாழும் காலத்தைப் பயன்படுத்தி அவளைக் கெடுத்து, அவளில் மாறா வடுவை ஏற்படுத்தி விட்டு வருவதை அடியோடு வெறுக்க வைத்தது.

"சலாமத் போ" (நன்றி) என்றாள். என் உள் மன ஓட்டத்தைத் தெரிந்து கொண்டு எனக்கு நன்றி சொல்லியிருப்பாள் என நினைத்துக் கொண்டேன்.

★★★

நாள் தவறாமல் நாங்கள் சந்தித்தோம். கடமை முடிந்து அவள் வெளியே வரும் வரை நான் அவளுக்காகக் காத்துக்கொண்டிருப்பேன். நானும் அவளும், அல்லது அவளும் மேரி லூவும், நானுமாக மின் விளக்குகள் ஒளி சிந்தும் பாதைகளில் உல்லாசமாக நடந்து திரிவோம். பாதை ஓர உணவு இல்லங்களில் ஐஸ்கிறீமும் வெந்த இறைச்சியும் சுவைப்போம். ஜீப்புகளில் ஏறி அருகருகே அமர்ந்து... அவள் சொல்லும் ஏதாவது இடத்தில் இறங்கி... நேபியா மார்கட்டிலும், அலிமாலிலும் ஒவ்வொரு கோணமாகச் சுற்றித்திரிந்து....

விடுமுறை நாளொன்றில் கோழிச் சேவல் சண்டை பார்க்கச் சென்று...கொண்டையைச் சிலுப்பியவாறு சேவல்கள் ஒன்றோடொன்று பயங்கரமாகப் போர் செய்வதைப் பார்த்துத் திகிலுற்று...

இப்போதெல்லாம் எனது அறைக்குள் வருவதைப் பற்றி அவள் என்னிடம் கதைப்பதே இல்லை. மலகஞ்சாவுக்கு சென்று வந்த அடுத்த நாள் நான் அவளைச் சந்தித்த போது அவள் என்னிடம் கேட்ட முதலாவது கேள்வியே, கடந்த இரவு எதற்காக அவளை நான் மறுத்தேன் என்பதைப் பற்றித்தான்.

எனது சமூக, கலாச்சாரம், நான் அத்தனை நாட்களாக கட்டிக் காத்து வரும் பவித்திரத்தனம், என்னையே நினைத்துக் கொண்டிருக்கும் கல்யாணி... எல்லாவற்றுக்கும் மேலாக சந்தர்ப்பவாதியாகி அவளை அழித்துவிட்டுப்போக விரும்பாத எனது மன இயல்பு...

“தபாரு லுலு. நீ ஒரு கன்னிப் பெண். எக்காரணம் கொண்டும் நான் உன்னைத் திருமணம் செய்ய இயலாது. உனக்கும் எனக்கும் இடையில் பல்லாயிரம் மைல்கள் வித்தியாசம். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உன்னில் ஒரு வடுவை ஏற்படுத்தி விட்டு நான் போய் விட்டால் அதனால் முழுதுமே பாதிக்கப்படப் போவது நானில்லை. நீதான்”

நான் கூறியதைக் கேட்டதும் அவள் ஆழமான ஒரு பெருமூச்சை ஊதினாள்.

எதற்காக பெருமூச்சு என்பதை அப்போது நான் அறிந்து கொள்ளவில்லை.

அவள் என்னைக் காதலிக்கிறாள் என்பதை மட்டும் நான் அறிந்தும், அறியாதவனாகக் காட்டிக் கொண்டேன்.

ஒரு நாள் பிற்பகல் கேட்டாள். “ராஜ் நீங்க எங்க நாட்டு நைட் கிளப்புகளுக்கு போய் இருக்கீங்களா?”

பிலிப்பீன்ஸின் நைட் கிளப்புகளைப் பற்றி நான் நிறையவே கேள்விப்பட்டிருந்தேன். அங்கு நடக்கும் அசிங்கங்களை அறிந்திருந்ததால் போய்ப் பார்க்க விருப்பமில்லாமல் இருந்தது.

"இல்லையே” என்றேன்.

“போய்ப் பார்க்க விருப்பமா?”

“நீயும் வருவியா?”

“நான் இல்லாமலா?”

அப்படி என்னதான் அங்கு நடக்கிறது எனப் பார்த்து விடலாம் என்று எண்ணி, அரை மனதுடன் சம்மதித்து...அன்று இரவே அவளும் நானுமாக டாக்ஸியில் சென்று...மங்கிய வெளிச்சத்தின் நடுவே கர்ணகடூரமாக ஒலித்த ஆங்கில இசையை ரசிக்க முயன்று தோற்று... கம்பனி கொடுக்கும் இளம் நடன நங்கைகள் போத்தல் மாறிப் போத்தலாக பீர் குடிப்பதைப் பார்த்து உள்ளுக்குள் வெந்து...வர்ண விளக்குகளின் மத்தியில் ஹாலின் நடுவே

போடப்பட்டிருந்த மேடையில் முதலில் கால் நிர்வாணமாகவும், பின்னர் அரை... முழு என வந்து உடலிலுள்ள அத்தனையையும் களைந்து கன்னிகள் குலுக்கும் போது சில கட்டங்களில் கண்களை மூடியவாறு கல்யாணியை நினைத்து... என்னை நானே வைது...

நாட்டிய நங்கைகளில் சிலர் அந்தக் கோலத்திலேயே லுலுவைப் பார்த்துக் கண்சிமிட்டிச் சிரித்தனர்.

"உனக்கு இவங்களை முன்னமேயே தெரியுமா?"

"எங்கேயாவது பார்த்திருப்பேன்"

"இவர்களை நினைத்து நான் பரிதாபப்படுகிறேன்."

"ஏன்?"

"கண்ணிறைந்த கணவனுடன் காதல் வாழ்க்கை வாழ வேண்டியவர்கள், இந்த வயதில் மதுவும், சிகரட்டும், நிர்வாண நடனமுமாக..."

"ராஜ். இவங்க எல்லாருமே பொதுவாக விபச்சாரிகள்தான்."

"அதற்கான காரணம் என்ன?"

"வறுமையைச் சொல்லலாம். சிறு வயதில் ஆசைகாட்டி யாராவது இவர்களைக் கெடுத்திருக்கலாம். அப்புறம் படிப்படியாக, தேவையின் உந்துதல்களால் ...மதுப் பழக்கத்தால் ..." கூறியவாறு அவள் கண்கலங்குவது அந்தக் கலங்கிய வெளிச்சத்திலும் எனக்குத் தெரிந்தது.

நடனமாடுபவர்களுக்காக பச்சாதாபப்படுகிறாள் என நினைத்துக்கொண்டேன்.

"எல்லா ஆண்களுமே உன்னைப் போல ஜென்டில்மன்களாக இருப்பார்களா?"என்றாள் திடீரென.

நான் சிரித்துக்கொண்டேன்.

★ ★ ★

என்னுடைய ஆராய்ச்சி முடிந்து நாடு திரும்ப இன்னும் நான்கு நாட்கள்தான் இருந்தன. இந்த நான்கு நாட்களுமே எனக்கு விடுமுறை. பயண ஏற்பாடுகளெல்லாம் ஏற்கனவேயே செய்து முடித்திருந்தேன்.

"ராஜ். ஒரு திருமண வைபவத்தில் கலந்துகொள்வதற்காக நான் பாகியோ போக இருக்கிறேன். நீங்களும் வாரீங்களா?"என்றாள் லுலு எனது அறைக்கு டெலிபோன் செய்து அதிகாலை வேளையில்.

நமது நாட்டில் நுவரெலியா போல் பிலிப்பீன்ஸில் பாகியோ. நாடு திரும்புவதற்கு முன்னர் அங்கு போய்வர ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என ஏங்கிக்கொண்டிருந்த நான் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தீர்மானித்தேன்.

"எப்போ போறீங்க?"

"சுமார் ஒன்பது மணிக்குப் புறப்படுறோம்."

"எதிலே போறீங்க?"

"எங்க குடும்ப நண்பர் ஒருவனுடைய காரிலே"

"எப்ப திரும்பலாம்?"

"நாளையே திரும்பிடலாம்"

"ஓகே. ஐ வில் பி வெயிட்டிங் போ யு நிய தி ஹார்ட் சென்றர்."

குஷியும், கும்மாளமும், பாட்டுமாக நாங்கள் பயணம் செய்தோம்.

காருக்குள் இன்னும் ஐந்து பேர் இருந்தனர். அப்போது பிரபலமாக இருந்த `வந்தன மேலா' பாடலை லூலு அடிக்கடி சப்தமிட்டுப் பாடினாள்.

பாகியோவை அடையும் போது பிற்பகலாகி விட்டது. அடுத்த நாள் திருமணம். காரில் வந்தவர்கள் எல்லாம் திருமண வீட்டில் அடைக்கலமாயினர். என்னையும் அங்கு தங்குமாறு வற்புறுத்தினர். நான் பணிவாக மறுத்து விட்டு, நட்சத்திர ஹோட்டலொன்றில் அறை எடுத்தேன்.

லூலு என்னை மட்டும் காரில் ஏற்றிக் கொண்டு மலைப்பகுதியான பாகியோவைச் சுற்றிக் காண்பித்தாள். ஜனாதிபதியின் விடுமுறைக்கால வாசஸ்தலத்துக்குக் கூட்டிச் சென்றாள். முன்னால் செதுக்கிய புல் வெளியில் இருவரும் அருகருகே அமர்ந்து... வறுத்த கச்சான் பருப்புச் சுவைத்து...

இன்னும் நான்கு தினங்களில் ஏற்படப் போகும் எனது பிரிவை நினைத்து... அவள் அழுத காட்சி என்னை அவள் பால் இன்னும் ஈர்க்க...

உல்லாசப் பிரயாணிகள் ஞாபகார்த்தப் பொருட்கள் வாங்குவதற்கான இடத்திற்கு அழைத்துச் சென்று....கடற் சிப்பிகளினால் செய்யப்பட்ட ஆண் பெண்ணான ஒரு சோடி கிளிகளை வாங்கி...

"ராஜ். என் ஞாபகத்துக்கு"எனக் கூறிவாறு என் கையில் தந்தாள்.

அன்றெல்லாம் அவள் அருகில் இருந்து பிரயாணம் செய்ததாலும், பிற்பகலில் அவளும் நானுமாக தனியாக ஒன்றாகத் திரிந்ததாலும், இன்னும் என்னென்னவோ காரணங்களினாலும் என் ஆண்மை சிறுகச் சிறுக மேலெழுந்து ஏதோ ஒரு பைத்தியத்தனம் சரேலென என்னுள் புகுந்து...

காரை ஹோட்டலுக்கு வெளியே பார்க் பண்ணிவிட்டு, எனது அறையை நோக்கி இருவரும் நடந்து... அறையைத் திறந்து...

அவளின் நீல விழிகளை உற்றுப் பார்த்தவாறே நான் கேட்டேன் "லூலு. இரவைக்கு நீ என்னோடு தங்கேன்."

அவள் என்னை வித்தியாசமாக முறைத்துப் பார்த்தாள்.

என்ன நினைத்தாளோ மூன்று விரல்களை மட்டும் என்னிடம் காட்டி... அது காரணமாக முடியாது என்றாள்.

நான் உடனேயே புரிந்து கொண்டேன். என்னையும் மீறி நான் தவறிவிட நினைத்தபோது நான் பிரார்த்திக்கும் கடவுள் அந்தச் சங்கடமான நாட்களை அவளுக்கு ஏற்படுத்தி என்னைக் காத்துவிட்டார்.

என்னைத் தனியே விட்டுவிட்டு அவள் சென்றாள்.

அடுத்த நாலாம் நாள். அவளை அழுத கண்களுடன் தனியே விட்டுவிட்டு நான் விமானம் ஏறினேன்.

★ ★ ★

அடுத்த நாள் காலையில் எனக்கும் கல்யாணிக்கும் திருமணம். வீடு நிறைய பந்தல். சொந்தக்காரர்களும் நண்பர்களும் வருவதும் போவதுமாக ...... புத்தாடைகள் சரசரத்தன. நண்பர்களின் ஜோக் என்னை திக்குமுக்காட வைத்தது. மகிழ்ச்சியின் உச்ச எல்லையில் நான் இருந்துகொண்டிருக்கும் போதுதான், தபால்காரன் அந்த வெளிநாட்டுக் கடிதத்தைக் கொண்டு வந்து என்னிடம் தந்தான்.

பிலிப்பீன்சிலிருந்து மேரி லூ அனுப்பியிருந்தாள். லுலுவுக்கும், அவளுக்குமாக இரண்டு திருமண அழைப்பிதழ்கள் வெவ்வேறாக அனுப்பியிருந்தேன். அவர்களால் வரமுடியாவிட்டாலும், வாழ்த்துச் செய்தியாவது அனுப்புவார்கள் என எண்ணியிருந்தேன்.

லுலுவிடமிருந்து எனக்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. நான் திருமணம் செய்வதில் அவளுக்குப் பொறாமையோ? அல்லது கோபமோ? 'பிலிப்பீன்ஸில் இருந்தபோது நான் அவளைக் காதலிக்கவே இல்லையே. பின்னர் எதற்காக கோபமும், பொறாமையும்!

மேரிலூவின் கடிதத்தை வாசித்தேன். மைகாட்!என்னால் நம்பவே முடியாமல் இருக்கிறதே! லுலு செத்துவிட்டாளா? அதுவும்...அதுவும் எயிட்ஸ் நோயினாலா?

கடிதத்தைத் தொடர்ந்து வாசித்தேன். இரண்டு கிழமைகளுக்கு முன்னர் செத்தாளாம். `அவள் ஒரு விபச்சாரி என்பதை நான் முன்னர் தெரிந்திருக்கவில்லை. பிறகு தான் அறிய முடிந்தது. அத்தகைய ஒருத்திக்கு எயிட்ஸ் வராமல் விடுமா என்ன?' என கடிதத்தை முடித்திருந்த மேரிலூ, லுலு வருத்தமுற்று ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாக வீற்றிருந்தபோது எனக்காக எழுதிய கடிதம் ஒன்றையும் கூடவே வைத்து அனுப்பியிருந்தாள்.

கண்களில் மல்கிய கண்ணீருடன் அக்கடிதத்தைப் பரக்கப் பரக்க வாசித்தேன். அது ஒரு நீண்ட கடிதம். லுலு சொல்லச் சொல்ல மேரிலூதான் எழுதியிருந்தாள். எழுதக் கூட முடியாத நிலையில் இருந்திருப்பாள் போலும்.

வாசிக்க வாசிக்க எனக்கு தொண்டையை அடைத்தது. மனம் அவளுக்காக ஏங்கி உள்ளுக்குள் அழுதது.

நானும் அவளும் சந்தித்த முதல் நாள் தொடக்கம், விமான நிலையத்தில் பிரிந்தது வரை நடைபெற்ற அத்தனை சம்பவங்களையும் எழுதிவிட்டு.......

`ஆரம்பத்தில் உங்களையும் சாதாரண ஒரு வெளிநாட்டு விருந்தாளி எனத்தான் நினைத்தேன். உங்களிடம் இருந்த பணத்தில்தான் என் நோக்கம் முழுவதும் இருந்தது. அதனால்தான் வலியவே உங்களின் அறைக்கு வரவாவெனக் கேட்டேன். ஆனால், நீங்கள் உங்கள் உயர்ந்த பண்பாடுகளுக்கு மதிப்பளித்து, என்னை ஒரு பெண்ணாகக் கருதி, என்னைக் கெடுத்து விட்டால் என் வாழ்க்கையே பாழாகி விடுமேயென்று நினைத்த உங்களின் உயர்ந்த மனப்பாங்கை நினைத்து உங்களை உண்மையான ஓர் ஆண்மகனாகக் கருதினேன்.

`வறுமையில் பிறந்து, வறுமையில் வாடிய நான், சந்தர்ப்ப சூழ்நிலைகளால் விபச்சாரியாக ஆக்கப்பட்டிருந்தேன். என்னைக் கெடுத்த முதலாவது மனிதன் மட்டும் உங்களைப் போல உயர்ந்த எண்ணங்கள் கொண்ட ஒருவனாக இருந்திருந்தால் எனக்கு இப்போது இந்தக் கெதி வந்திருக்காது. மிக மிக சொற்ப காலத்துக்குத்தானும் என்னையும் ஒரு பெண்ணாக மதித்து, என்னுடன் நீங்கள் பழகிய காலம் மட்டும்தான் நான் உயிருள்ளவளாக வாழ்ந்த காலமாகும்.

`அப்போதே சிறுகச் சிறுக எனக்கு இந்த நோய் இருந்தது. அதனால்தான் பாகியோவில் வைத்து, உங்களுடன் தங்குமாறு என்னை அழைத்தபோது உங்கள் பால் நான் கொண்டிருந்த பெருமதிப்பு காரணமாக எதையோ சொல்லி மறுத்தேன். என் வாழ்க்கையில் குறுகிய காலத்துக்கு மட்டும் மலர்ந்த வசந்தம் நீங்கள். பெற்றோர் இல்லாத அனாதையான எனக்கு, என் மரணத்துக்காக கண்ணீர் சிந்த எனக்காக உள்ளது நீங்கள் மட்டும்தான். ராஜ்! எனக்காக கண்ணீர் சிந்துவீர்களா? என்னுடைய வசந்த காலமே! உங்களுக்கு என்னுடைய சலாமத் போ'

வாசித்து முடிக்கும் போது கண்கள் நீருற்றைக் கொட்டத் தொடங்கியது.

அவளுக்காக நான் அழுதேன்.

`லுலு! நீ மட்டும் பாகியோவில் என் அழைப்புக்கு இணங்கியிருந்தால் எனக்குமல்லவா உன் கதி ஏற்பட்டிருக்கும். அதற்காக உனக்கு சலாமத் போ... ம்மா.'

மனம் அவளுக்கு நன்றி சொன்னாலும், அவளை நினைத்து, அவளுடைய அப்பாவித்தனமான நல்ல உள்ளத்தை நினைத்து அழுது கொண்டேயிருந்தது.

★ ★ ★

# முள்ளை முள்ளால்.....

பள்ளிவாசலில் அஸர் தொழுகையை முடித்துக்கொண்ட கையுடன் சம்சுதீன் தனது நண்பரான உதுமானைச் சந்திப்பதற்காக அவரது வீடு நோக்கி நடந்தார்.

நீலமும் பச்சையுமான கோடுகளுடன் கூடிய சாரனொன்றை உடுத்து முடிகள் நிறைந்த சதைப்பிடிப்புள்ள வெற்று மார்புடன் ஆடுகளைக் காலைக்குள் சாய்த்துக்கொண்டிருந்த உதுமான் இவரைக் கண்டதும் முகமலர்ந்தார்.

“பள்ளிக்குத் தொழ வருவீங்க எனப் பார்த்தன். காணல்ல. அதான் ஊட்டுக்கு வந்த.” என்றார் சம்சுதீன்.

காலைக்குள் நான்கைந்தும், வெளியே ஐந்தாறுமாக ஆடுகள் நின்றன. வெளியே நின்றவற்றை உள்ளுக்குள் ஏற்றுவதில் அவர் சிரமப்பட்டார். ஒவ்வொன்றினதும் பின் பக்கத்தைப் பிடித்து உள்ளே தள்ளினாலும் காலைக்குள் ஏறாமல் அவை தலை திருப்பி வாசல்புறத்தை நோக்கி ஓடமுயன்றன.

“காலைக்குள் ஏத்த நேரம் இருக்கே. இப்பவே ஏன் ஏத்துறீங்க?” சம்சுதீன் கேட்டார்.

“வில பேச யாவாரி ஒருவன் வாறன்டிருக்கான். காலைக்குள்ள கிடந்தா தெரிவு செஞ்சி வித்துப்புடலாம்ல”என்றார் உதுமான்.

“ஒரு சின்ன விசயமா உங்ககிட்ட யோசனை கேக்க வந்த”

"இதுகள அடைச்சிட்டு வந்துடுறன். உள்ள போய் இருங்க”

சப்தமிட்டு மனைவியை அழைத்து சம்சுதீனுக்கு தேனீர் கொடுக்குமாறு உதுமான் கூறினார்.

சம்சுதீனுக்கு வயது ஐம்பதைத் தாண்டிவிட்டிருந்தது. வளர்ந்த ஆண் மக்கள் இருவரும், வயதுக்கு வந்த இரண்டு பெண்களும் இருந்தனர். கிராமத்தில் சிறிய அளவிலதான பெட்டிக்கடையொன்றை நடாத்துகிறார். பக்கத்திலுள்ள பட்டினத்தில் சில்லறைச் சாமான்களைக் கொள்வனவுசெய்து, பக்கீஸ் பெட்டியினுள் பொருட்களை வைத்து, கரியர் பொருத்திய சைக்கிளில் ஏற்றி, வியர்வை வடிய மிதித்து கடைக்குக் கொண்டு வருவது, கடைப் பலகைகளைத் திறந்து வியாபாரம் செய்வது ஆகிய சகல வேலைகளையும் இவர் தனியாளாகவே செய்யவேண்டிய கட்டாயத்துக்குள்ளானவர்.

தனது தகப்பன் வழியால் கிடைத்த இரண்டு துண்டுக் காணிகளில் ஒன்றை அடிமாட்டு விலைக்கு விற்று யார் யாரினதோ கால்களைப்பிடித்து மூத்தவனைக் கட்டாருக்கு அனுப்பிவிட்டார். மற்றவன் சாட்டுக்கு ஏதோ படித்துவிட்டு ஊர் சுற்றுபவன். தெருப் பொறுக்கிகளுடன் சேர்ந்து பாலான சினிமாப் படங்களை பீடிப்புகை நாற்றங்களுடன் கூடிய கொட்டகைகளில் பார்ப்பவன். நாலுபேர் சேர்ந்து விட்டால் நேரம் போவதே தெரியாமல் சீட்டு விளையாடுபவன். சில சந்தர்ப்பங்களில் வலியவே சண்டைக்குச் சென்று மூக்குடைபடுபவன். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் கடையைப் பார்த்துக் கொள்ளுமாறு இவனிடம் கூறிவிட்டு சம்சுதீன் அகன்றால் அவர் திரும்பும் வரை நடைபெறும் விற்பனையால் கிடைக்கும் பணத்தில் கூடிய பங்கைச் சுருட்டிக்கொள்பவன்.

தேர்தல் காலங்களில் இவனுடைய காட்டில் மழை பெய்யும். இவன் சார்ந்து நிற்கும் கட்சியின் அபேட்சகருக்கு வஞ்சனையின்றி இரவும், பகலுமாக உழைப்பான். சுவர் நோட்டீஸ் ஒட்டுவது, பனர் கட்டுவது, அபேட்சகர்களுடன் சென்று வீட்டுக்கு வீடு வாக்குக் கேட்பது, ஒலி பெருக்கியில் தொண்டை கிழிய பிரசாரம் செய்வது, எதிரணியினரை தேவைப்படும் போதெல்லாம் தாக்குவது. கள்ள வாக்களிப்பது... என தற்போதைய ஜனநாயக விதி முறைகளாக அபேட்சகர்களினால் கைக்கொள்ளும் சட்ட மீறல்கள் சகலதிலும் மனவிருப்புடன் ஈடுபடுபவன்.

சென்ற தேர்தலில் கூட இவன் எதிரணியைச் சேர்ந்த யாருக்கோ கிரிஸ் கத்தியால் குத்துவதற்கு முயற்சித்ததான பொலிஸ் நிலைய முறைப்பாடொன்று தொடர்பாக ஒளித்துத் திரிந்தவனை பிடரியில் பிடித்து உள்ளே தள்ளியபோது இவன் சார்ந்த கட்சியைச் சேர்ந்த யாரும் உதவ முன்வரவில்லை. நாய்படா பாடுபட்டு சம்சுதீன் இவனைப் பிணையில் எடுத்தார்.

வயதுக்கு வந்த மூத்த மகள் சமூக சம்பிரதாயங்களுக்கேற்ப விரும்பியோ, விரும்பாமலோ வீட்டில் சிறைப்பட்டு பல வருடங்கள் கடந்து விட்டிருந்தன. வாய்க்கும் கைக்குமென சம்சுதீனின் வருமானத்தில், உள்ள பழைய வீட்டைக் கொடுத்து அவளை வாழவைக்க இயலாமல் இருந்தது. அவரிடம் எஞ்சியிருந்த மற்றத் துண்டுக் காணியையும் விற்று மூத்த மகன் கட்டாரிலிருந்து பெரிய மனசு பண்ணி அனுப்பும் பணத்தையும் சேர்த்து புதிய வீடொன்றைக் கட்டத் தொடங்கியிருந்தார்.

பாதியளவில் முடிந்திருந்த கட்டுமான வேலையில் சடுதியானதொரு இடைநிறுத்தல் ஏற்பட்டது. வளவினுள் கிளைபரப்பி நின்ற பலா மரமொன்றை வேர்களோடு பிடுங்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு சம்சுதீன் ஆளானார்.

"அதை வெட்டாமல் விட்டால் அதன் வேர் போகும் பகுதியெல்லாம் கட்டுமானத்தில் பின்னால வெடிப்பு ஏற்படும். வெட்டுற மரத்தை அரிந்தா கூரை வேலைக்கோ கதவுகளுக்கோ பயன்படுத்தலாம்." என்றான் மேசன்.

பலா மரத்தை வெட்டுவது தொடர்பாக அவருக்கு விருப்பமே இல்லை. அந்த மரத்தின் காய்ந்த இலைகள் தனது வீட்டின் முற்றத்திலும், கிணற்றினுள்ளும் வீழ்கின்றன என பக்கத்து வீட்டுக்காரர் தொடராகக் கூறுவதும்.... பொறுக்கமுடியாதவிடத்து வாய்விட்டு ஏசுவதும்... இவரைப் பொறுத்த வரை செவிடன் காதில் ஊதிய சங்கொலிகளாயிருந்தன. நாலுபேர் வற்புறுத்தி மரத்தைத் தறிப்பதற்கு இவரை இணங்க வைக்க முயன்றாலும் எப்போதுமே எதிர்மறையாகச் சிந்திக்கும் இவரது மனைவி உருட்டும் விழிகளாலேயே இவரைத் தடுத்து விடுவாள். இப்போது மரத்தைத் தறித்தே ஆகவேண்டுமென்ற கட்டாயத்தக்கு ஆளானார்.

"சரி தறிச்சிப்புடுங்க" மனைவியுடன் கலந்து கதைத்தபின் முடிவைக் கூறினார்.

"நினைச்ச மாதிரிக்கெல்லாம் மரம் தறிக்க ஏலா" என்றான் மேசன்.

"ஏன்? என் மரம். நான் தறிப்பேன்."

"அந்தக்காலம் மலை ஏறிப்போச்சு. சொந்த வளவுல நிற்கிற மரத்தைத் தறிக்கவும் உத்தரவு பெறணும். இல்லயென்டா கம்பி எண்ணவேண்டிவரும்"

"அதென்னடாது! என் மரத்த நான் தறிக்க உத்தரவு! ஆருகிட்ட பெறோணும்?"

மேசன் விளக்கப்படுத்தினான். அது தொடர்பாக ஆலோசனை பெறத்தான் உதுமானைத் தேடி சம்சுதீன் வந்திருந்தார்.

அழுக்கடைந்த பழைய துவாய்த் துண்டொன்றால் முதுகைப் போர்த்தியவாறு பின்னல் பிரிந்த கதிரையொன்றில் அமர்ந்த உதுமானிடம் தான் வந்த நோக்கத்தை சம்சுதீன் கூறினார்.

"மேசன் சொன்னது மெய்தான். ஏஜிஏ கிட்ட உத்தரவு வாங்கித்தான் ஆகணும்."

"லேசா வாங்கிடலாமா?"

உதுமான் வாய்விட்டுக் கடகட வெனச் சிரித்தார்.

"நம்ம நாட்டில் அதிகாரிகள் அவ்வளவு லேசா காரியங்கள் முடித்துக் கொடுக்கிறதை கேள்விப்பட்டிருக்கிறீங்களா? பிலா மரம் தறிக்க அனுமதி பெறணும்னா பல பேருகிட்ட போகணும். ஏஜிஏ, பரஸ்ட் ஆபிஸர், கிராம சேவையாளர் என பல பேருக்கிட்ட அலையணும்"

உதுமான் கூறக்கூற சம்சுதீனின் கண்களில் நட்சத்திரங்கள் மின்னின.

"நீங்க படிப்பறிவில்லாத ஆள். அவங்க கேக்குற கேள்விகளுக்கு நீங்க இடக்கு முடக்கா எதையாவது சொல்லிட்டா உத்தரவு தராம விட்டுடுவாங்க. அப்புறம் கட்டுமான வேலையைத் தொடர்ர கஷ்டம்."

"இப்ப என்னதான் செய்யலாம்கிறீங்க?" சம்சுதீன் பேயறைபட்ட முகபாவத்துடன் மெதுவாகக் கேட்டார்.

"ரெண்டு வழிகள் இருக்கு. ஒன்டு நம்ம பகுதி எம்.பியை உங்களுக்கு தெரியும்தானே. அவரு இப்போ மந்திரியும் கூட. அவருக்கிட்ட போய் விசயத்தைச் சொல்லி நம்ம பகுதி ஏஜிஏக்கு ஒரு கடிதம் எடுத்தா, இல்லாட்டி போன் போட்டுச் சொல்லச் சொன்னா விசயம் சீக்கிரம் முடிஞ்சிடும். மந்திரி சொன்னா ஏஜிஏ பம்மரமா ஆடுவாரு. உங்கள அவர்ர கந்தோருக்குக் கூப்பிட்டு உத்தரவு தருவாரு."

"மத்த வழி?"

உதுமான் பிகுபண்ணினார்.

"சொல்லுங்க. மத்தவழி?"

"எனக்கிட்ட ஒரு ஆயிரம் ரூபாயத் தாங்க. விசயத்த முடிச்சித்தாரன்"

சம்சுதீன் யோசித்தார்.

'என் வளவில் நிக்கிற என்ட மரத்த வெட்ட இந்த மசிராண்டிக்கு எதுக்கு ஆயிரம் ரூபா கொடுக்கணும்? மந்திரிக்கிட்ட போவம். சீக்கிரமா விசயத்தை முடிச்சி எடுத்திடலாம்'

"நான் எதுக்கும் என் பொஞ்சாதியோட கேட்டுட்டு உங்களுக்கிட்ட வந்து சொல்றன்" கூறிவிட்டு சம்சுதீன் இருக்கையிலிருந்தும் எழுந்தார்.

★ ★ ★

பெட்டிக்கடைக்கான பல சரக்குகளை வாங்குவதற்காக பட்டனத்திற்குப் போக சம்சுதீன் சைக்கிளைத் தள்ளும்போது, இடுப்பில் கைகளைக் குத்தியவாறு மனைவி எதிரே நின்றாள்.

"மந்திரியாரைப் பார்க்க நாளைக்குத்தானே போகப் போறீங்க?" கேட்டாள்.

சம்சுதீன் தலையசைப்பில் விடை இறுத்தார்.

"டவுனுக்குப் போற நீங்க நல்ல ஒரு சோடி தோல் செருப்பு வாங்கிட்டு வாங்க."

"ஆருக்கு? உனக்கா?"

"உங்களுக்குத்தான். இல்லாட்டி கால்ல கிடக்கிற இந்த தேஞ்ச பாட்டாவோடயா போகப் போறீங்க?"

அவள் கூறியது அவருக்கு சரியெனப்பட்டது. தோல் செருப்பு வாங்கவேண்டுமெனில் வீடு கட்டுவதற்காக உள்ள பணத்தில்தான் செலவழிக்க வேண்டுமென நொடிக்குள் மனம் எச்சரித்தது.

"அதெல்லாம் வாங்க இப்ப காசி இல்ல." முணுமுணுத்தார்.

"ஒரு நன்மை தீமை, கல்யாணம் காட்சி என வந்தா எல்லா இடத்துக்கும் கால்ல கிடக்கிற அதோடானே போறீங்க. நாலு பேருக்கு மத்தியில் நல்லா போகணும். யோசிக்காம வாங்கிட்டு வாங்க."

"நானூறு ரூபா போயிடும்" புறுபுறுத்தார்.

"ஐநூறு எண்டாலும் பரவால்ல. ஒரு சீமெந்து பேக்கோட காசுதான். நாளைக்குப் போட்டுப் போக நல்ல சேர்ட்டு இருக்கா?"

"ஒன்டு இருக்கு. டவுணுக்குப் போயிட்டு வந்து கழுவிப்போடணும்"

"நான் கழுவுறன். எடுத்துத் தந்துட்டுப் போங்க"

பட்டிணத்திலிருந்து வெயர்வை வடிய திரும்பி வந்ததும் வராததுமாக முன்னூற்றுத் தொண்ணூற்று ஒன்பது ரூபாவுக்கு வாங்கிய செருப்புச் சோடியை சம்சுதீன் மனைவியிடம் காட்டும்போது. வாசலில் கிடந்த கல்லொன்றில் குந்தி பல் குத்தியவாறிருந்த தறுதலை மகன் அவரை நோக்கி வந்தான்.

"செருப்பு எனக்கா?" கேட்டான்.

"ஓன்டா. உனக்குத்தான். போட்டுக்கொண்டு தெருச் சுத்துறதுக்கு" தகப்பன் வெடுக்கெனக் கூறியதும் மகனின் முகம் கறுத்தது.

"ஓ.... ஓ.... புது மாப்புள! இதெல்லாம் வேணுந்தான்" நக்கலடித்தவாறு மகன் நகர்ந்தான்.

★ ★ ★

சம்சுதீன் நேர காலத்தோடு படுக்கையிலிருந்தும் எழுந்தார். அன்று புதன்கிழமை. அமைச்சரை அவரது கொழும்பு காரியாலயத்தில் அன்று சந்திக்கலாமென தெரிந்து வைத்திருந்தார்.

பெரிதாகக் கொட்டாவி விட்டவாறு புரண்டு படுத்த அவரது மனைவி "எழும்பிட்டீங்களா?" எனக் கேட்டாள். எழுந்து உட்கார்ந்தாள். சிலுப்பிக் கிடந்த அவளது அடர்ந்த முடிகள் சற்றுக் கோரமானதொரு தோற்றத்தை அவளில் வரைந்தன.

"அம்பது அறுபது கட்டை பஸ்ல போகணும்ல. நேரத்தோடு புறப்பட்டால்தான் உரிய நேரத்துக்கு முந்தி போய்ச் சேர்ந்துடலாம்"

சம்சுதீன் சுப்ஹு தொழுது, காலைக் கடன்களை முடித்து, முதல் நாள் கழுவி டோபி கடையில் கொடுத்து ஸ்திரிக்கை செய்து எடுத்த வெள்ளை நிற ஷேர்ட் அணிந்து, கடந்த நோன்புப் பெருநாளின் போது யாரோ ஹதியாவாகக் கொடுத்து உடுத்து விட்டு மடித்து வைத்திருந்த சாரனை உடுத்து, இடுப்பில் தோல்பட்டி தரித்து, கால்களில் புதுச்செருப்புகளுடன் வீட்டிலிருந்தும் வெளியேற ஆயத்தமானார்.

"டவுணுக்குப் போய்த்தானே பஸ் எடுக்கணும். எப்படிப் போப்பிறீங்க.?"

"சைக்கிள்ல போகலாம். ஆனா சேட்டும் சாரனும் வேத்துப்போகும்."

"அதுல போகாதீங்க ஒரு ஆட்டோவப் புடிச்சுப் போங்க"

"நூத்தி அம்பது கேப்பான்"

"காசைப் பார்த்தா வேர்வை நாத்த உடுப்போடத்தான் மந்திரிக்கு முன்னால போகவேண்டிவரும்"

"அதுவும் உண்மைதான். வேன்ல போகட்டோ?"

"வேன்காரன் மாடுகளை அடைக்காப்ல அடைப்பான். மத்தவங்கட வேர்வை நாத்தம் உங்கட உடுப்பெல்லாம் நாறும். ஆட்டோவிலேயே போங்க".

மனைவி கூறியவாறே முச்சக்கர வண்டியொன்றில் பட்டணத்துக்கு வந்து சேர்ந்தார். காலையிலேயே வெய்யில் இறைக்கத் தொடங்கிவிட்டிருந்தது. கசகச வென வெயர்த்தது. கமுக்கட்டினுள் பனித்த வெயர்வைத்துளிகள் கைகளிலும், மார்பிலும் உருண்டோடின.

`இந்த வெயில்ல பஸ்ல போனா இன்னும் வேர்க்கும். ஏசி பஸ்லதான் போகணும்.' நினைத்தவாறு குளிரூட்டிய பஸ்ஸுக்காக காத்து நின்றார்.

அமைச்சரின் காரியாலயம் அமைந்துள்ள இடம் சம்சுதீனுக்கு சரிவரத் தெரிந்திருக்கவில்லை. கையிலிருந்த கடதாசியில் எழுதப்பட்ட விலாசத்தைப் பலரிடமும் காட்டினாலும் ஒவ்வொருவரும் வெவ்வேறு திசைகளைச் சுட்டிக் காட்டினர். முச்சக்கரவண்டியொன்றில் ஏறியமர்ந்து உரிய விலாசத்துக்குப் போகுமாறு கூறினார். கணிசமானதொரு தொகையை பிரயாண முடிவில் சாரதியிடம் கையளிக்கும்போது மனம் வேதனையுற்றது.

அமைச்சரின் காரியாலய வளவினுள் உட்புகும்போதே கெடுபிடிகள் ஆரம்பமாயின. காக்கிச்சட்டை அணிந்து கறுத்த உதடுகளைக் கொண்டவனாக நின்ற ஒருவன் வாகனங்களை மறிப்பதற்கான துலாந்தின் அருகே வைத்து இவரைத் தடுத்தான்.

“எங்க போறே?” புருவங்களை உயர்த்தியவாறு சகட்டு மேனிக்கு கேட்டான்.

“மந்திரியாரைப் பார்க்க”

“வரச்சொல்லி இருக்காரா?”

சம்சுதீன் இல்லையெனத் தலையசைத்தார்.

“அவரை உனக்குத் தெரியுமா?”

“அவருதான் எங்கட எம்பி.”

அவன் அவரை ஒரு சந்தேக நபராகக் கருதி விசாரிப்பது போல் அவருக்குப் பட்டது. அவனுடைய கேள்விகளுக்கு சுடச் சுடப் பதிலிறுக்க விரும்பினாலும். எப்படியாவது காரியம் முடியவேண்டுமென்ற எண்ணம் அவரைத் தடுத்தது. காலில் அணிந்திருந்த புதுச் செருப்பு வேறு கடிக்கத் தொடங்கியது. அவர் அமைதியாக நிற்க முயன்றார்.

“சரி. சரி. அடையாள அட்டையைக் கொடுத்து கையொப்பம் போட்டுட்டுப்போ”

அவன் கூறியவாறு ஒப்பமிட்டு, அட்டையொன்றைப் பெற்றுக்கொண்டு காரியாலய வாசலை அடைந்தார்.அமைச்சரின் அறையை விசாரித்து புதுச் செருப்புக் கடியைச் சகித்தவாறு, மின் தூக்கியால் செல்லலாமென்பதைத் தெரியாதவராக மூன்று மாடிகள் இளைக்க இளைக்க ஏறினார்.

அப்போது மணி பத்து இருக்கலாம்.

அமைச்சரின் அறைக்கு முன்னால் விசாலமான மண்டபத்தினுள் போடப்பட்டிருந்த சோபாக்களிலும் கதிரைகளிலும் பலர் வீற்றிருந்தனர். சிலர் ஆளுக்காள் பேசிக்கொண்டனர். வேறு சிலர் முகங்களை வக்ரமாக வைத்துக் கொண்டு கண்ணாடி ஜன்னல்களினூடாக தூரத்தே தெரிந்த கட்டிடங்களின் மீது பார்வையைச் செலுத்தினர்.

இரண்டொருவர் அடிக்கடி சிணுங்கிய கையடக்கத் தொலைபேசிகளை செவி மடல்களில் பொருந்தியவாறு தொண்டையினூடாக ஒலியலைகளைக் காற்றுடன் கலக்க விட்டனர். வெள்ளை நிற அரைக்கை ஷேர்ட், அதே நிறத்தில் கால்சட்டை அணிந்த கால்களில் சப்பாத்துகளுடன் ஒட்டவெட்டிய முடிகளுடனான சிலர் கைகளில் செல்லிடத் தொலைபேசிகளுடன் அங்குமிங்குமாக நடப்பதும், ஆளுக்காள் கதைப்பதும், தோள்களில் தட்டிச் சிரிப்பதுமாகப் பொழுது போக்கினர்.

வாளிப்பான தோள்கள் தெரிய, துருத்திய மார்பகங்களைக் கொண்ட உதடுகளில் இரத்தச் சாயம் பூசிய ஒருத்தி முழங்கால்களுக்கு மேல்

படிந்து கிடந்த குட்டைப் பாவாடையை தளிர் விரல்களால் கிழே இழுத்து விட்டாள். அணிந்திருந்த கறுப்புக் கண்ணாடியைக் கழற்றி உதடுகளால் ஊதி கைக்குட்டையால் துடைத்துவிட்டு மீண்டும் போட்டுக்கொண்டாள்.

நேரம் கரைந்து கொண்டிருந்தது. மண்டபத்தில் அமர்வதற்காக ஆசனம் பெற முடியாதவர்கள் ஜன்னல் கட்டுகளில் கைகளை ஊன்றியவாறு பெருமூச்சு விட்டவர்களாக நின்றனர். சிலர் ஒற்றைக்கால் கொக்குகளாக நேரத்துக்கு நேரம் கால் மாற்றினர்.

அடிக்கடி கொட்டாவிச் சப்தங்கள் கேட்டன.

“மந்திரி வருவாங்கதானே?” தன்னருகில் வந்து நின்ற தலை முடியை ஒட்டவெட்டியிருந்தவனிடம் சம்சுதீன் கேட்டார்.அவனிடம் ஏற்கனவே பலர் இவ்வாறு கேட்டதை அவதானித்திருந்தார்.

“இப்ப வந்துடுவாங்களா?” மீண்டும் கேட்டார்.

அவன் அவரை அசூசையைப் பார்ப்பது போல் பார்த்தான்.

“இதப்பாரு பெரியவர். அமைச்சர் என்ன உன்னைப் போல சும்மா இருக்கிற பேர்வழியா? அவருக்கு ஆயிரம் வேலை. ஆயிரம் தொல்லை. வந்த நீ சும்மா இரி. மத்தவங்களப் போல பேசாம இரி. அமைச்சர் வந்ததும் பாத்துட்டுப் போ”

அவனிடம் ஏன்தான் வாயை விட்டோமோ என்றிருந்தது அவருக்கு. வயிற்றினுள் மெலிதாக எதுவோ கிள்ளியது. பசி மிருகம் அவருக்கு மட்டும் கேட்க உறுமியது. பக்கத்தில் நின்றிருந்த ஒருவன் வெளியே சென்று சிகரட் புகைத்துவிட்டு வந்தான். அவன் மூச்சு விடும் போதெல்லாம் புகை நாற்றம் இவரை மூக்கை மூடத் துண்டியது.

மண்டப சுவர்க்கடிகாரத்தின் சிறிய முள் ஒன்றைத் தொட முயன்ற தறுவாயில் ...

ஒட்ட முடிவெட்டிய வெண் உடுப்பர்கள் பரபரப்பானார்கள். அமைச்சர் வரப்போகிறார் என குசுகுசுத்தார்கள். ஆசனங்களில் வீற்றிருந்த அனைவரும் ஆசுவாசப்பட்டவாறு நிமிர்ந்து உட்காந்தனர். ஒரு சில நிமிடங்களில் செல்லிடத் தொலைபேசிகள் இரண்டால் இரு செவிகளையும் பொத்தியவாறு தலையைப் பக்கத்திற்கு பக்கம் திருப்பி அதிலும் இதிலும் கதைத்தவாறு பலர் பின்னால் சூழ்ந்துவர... உயர்ந்த தோற்றமும் பரந்த மார்பும் உப்பிய கன்னங்களும் கொண்ட அமைச்சர் வேகமாக நடந்து வந்தார். அனைவரும் எழுந்து நின்றனர். சிலர் பிற்பகல் வணக்கம் தெரிவித்தனர். அமைச்சர் ஏக மொத்தத்திற்கு அனைவரையும் பார்த்துச் சிரித்தார். கறுப்புக்கண்ணாடி அழகியின் சமீபமாக அவர் செல்லும்போது வினாடி தரித்து இவராகவே அவளுக்கு வந்தனம் கூறி, இவரின் முன்னால் நீண்ட அவளது கையைப்பற்றி குலுக்கி விட்டு அறைக்குச் சென்றார்.

நேரம் மெதுவாக ஊர்ந்தது.

கழுத்துப் பட்டியணிந்த பின்தலையில் மட்டும் வெண் மயிர்கள் அடர்ந்த உயரமான ஒருவர் கையில் தாங்கிய சில காகிதக் கோவைகளுடன் அமைச்சரின் அறையினுள் புகுந்தார்.

சுமார் அரை மணி நேரத்துள் வெளிவந்தார். யாரோ வந்து கறுப்புக் கண்ணாடி அழகியை உள்ளே வருமாறு கூறியதும் அவள் ஒய்யாரமாக எழுந்து பின்பக்கத்தை அசைத்தவாறு நடந்தாள்.

நேரம் நத்தையாக நகர்ந்தது. அமைச்சரைச் சந்திப்பதற்காக காத்திருந்தவர்களில் பலர் பசிக் கொட்டாவிகளை விட்டனர். ஆசனங்களின் முனைகளின் இருந்தவாறு உள்ளே அழைக்கமாட்டார்களாவென பரபரத்தனர். கறுப்புக் கண்ணாடி அழகி வெளியே வந்தாள். அவள் சென்ற சிறிது நேரத்தில் அமைச்சரின் அறைக்குள்ளிருந்து கறிவாசனை வெளியேற, வெளியே இருந்தவர்களின் வயிறுகள் சடுதியாக வலித்தன.

நேரம் பிற்பகல் மூன்றைத் தாண்டி ஓடியது. கழுத்துப்பட்டியுடனான சில அதிகாரிகள் சட சடவென அமைச்சரின் அறைக்குள் நுழைந்தனர்.

சம்சுதீனுக்கு வயிறு நிறைய பசி. குடல் முறுகி வலித்தது. சிறு நீர்ப்பை நிரம்பி சங்கடப்படுத்தியது. வாந்தி வரப்போவது போன்றதோர் உணர்வு மெலிதாக தலை கிளம்பியது. நா வரண்டு கிடந்தது. சல கூடம் போய் வரவும் அவர் விரும்பவில்லை. அதற்கிடையில் தன் பெயரை அழைத்து விடலாமென்ற ஆதங்கம் போகாமல் அவரைத் தடுத்தது. பற்களை நறநறத்து சகல உபாதைகளையும் சகித்தவாறு அமைச்சரின் அறைக்கதவையே பார்த்துக்கொண்டிருந்தார். அவரைப் போன்றே மற்றவர்களும் காத்திருந்தனர்.

நேரம் இப்போது நாலரையைத் தாண்டிக் குதித்தது.

அன்றைய நாள் வியாபாரமின்றி மூடிக்கிடக்கும் தனது பெட்டிக்கடையை சம்சுதீன் வினாடி நினைத்தார்.

அறைக்குள்ளிருந்து அதுவரை கேட்ட சப்தங்கள் சடுதியாக ஓய்ந்தன. இரண்டொரு நிமிடங்களில் கதவு திறக்க அமைச்சரின் திருமுகம் தெரிந்தது. அவர் வெளிச் செல்வதற்காக வந்துகொண்டிருந்தார். சரேலென சகலரும் எழுந்தனர். அமைச்சர் அத்தனை பேர் மீதும் தனது புன்னகையை எறிந்து விட்டு மின் தூக்கியை நோக்கி விரைந்தார்.

"ஸேர் கபினட் மீட்டிங்குக்குப் போறாங்க. நாளைக்கும் ஆபிஸ் வருவாங்க. எல்லாரும் போயிட்டு நாளைக்கு வாங்க" யாரோ கூறியதை எரிச்சலுடனும் கோபத்துடனும் மற்றவர்கள் செவிமடுத்தனர்.

எழுந்து நின்ற சம்சுதீன் சல கூடத்தைத் தேடிக் கண்டு பிடித்து, வீங்கிய வயிற்றின் அடர்த்தியைக் குறைத்து, செருப்புக் கடியைச்

சகித்தவாறு பாதைக்கு வந்தார். முச்சக்கர வண்டியொன்றை நிறுத்தி ஏறினார்.

"எங்க போகணும்?"

சொன்னார்.

வாகன நெரிசலுடன் கூடிய பாதையில் வண்டியைச் செலுத்தியவாறு சாரதி இவருடன் கதை தொடுத்தான்.

"சொந்த ஊரு எது?"

சொன்னார்.

"இப்ப அங்கதான் போகப் போறீங்களா?"

"ஆமா"

"அப்ப எதுக்கு சென்றல் பஸ் நிலையத்துக்குப் போகப் போறீங்க? சமீபத்திலே ஒரு பஸ் நிலையம் இருக்கு. அங்கிருந்தே உங்க ஊருக்கு பஸ் எடுக்கலாமே. அங்க விடட்டா?"

அவனுடைய நேர்மையை மனதினுள் மெச்சியவாறே ஆமென்றார்.

"எங்க போயிட்டு வாறீங்க?"

அவருடைய மன வேதனையை அவனிடம் கூறினால் சற்று ஆறுதலாக இருக்கலாமென நினைத்து தான் அமைச்சரைப் பார்க்க வந்த நோக்கத்தை விபரித்தார்.

சாரதி பெரிதாகச் சிரித்தான்.

"ஏன் சிரிக்கே?"

"கால்ல முள்ளுக் குத்தினா கிண்டி எடுக்க ஒரு முள்ளு போதுமே. உளியும் தட்டுக்கட்டையும் வேணுமா? பலா மரம் தறிக்க உத்தரவு பெறுவதற்கு ஏ.ஜிஏ. கந்தோருக்கு போனா போதுமே. உங்க ஊர்லேயே கிராம சேவை உத்தியோகத்தர் இருப்பாரே. அவரிட்ட போனா லேசா விசயத்தை முடிக்கிற வழியை சொல்லித் தந்திருப்பாரே. அத உட்டுட்டு இப்படி அலைஞ்சிருக்கீங்களே." கூறி விட்டு சாரதி மீண்டும் சிரித்தான்.

"அமைச்சர் சொன்னா ஏஜிஏ பம்பரமா சுத்துவார் என்றாங்களே?"

"யார் சொல்லி யாரும் சுத்தமாட்டார். சட்டம் என்ன சொல்லுதோ அதைத்தான் பலரும் செய்வாங்க. மரம் வெட்ட வேண்டிய தேவை உண்மையானதென்றா நிச்சயமா அனுமதி தருவாங்க. நாளைக்கே போய் ஏஜிஏயைப் பாருங்க."

சம்சுதீன் தனது அறியாமையால் ஏற்பட்ட இழப்புகளுக்காக தன்னையே நொந்தவாறு காலில் செருப்புக்கடியுடனும் வயிற்றுப் பசியுடனும் பஸ்ஸுக்காகக் காத்துக்கொண்டு நின்றார்.

★ ★ ★

# வெள்ளைக் கொடிகள்

நான்?

கதையைத் தொடங்கும்போதே கூறிவிட்டால் வாசகர்களாகிய உங்களுக்கும் நல்லது. எனக்கும் நல்லது.

நான் ஒரு பிசாசு. பேய் என்றும் ஆவி என்றும் அழைப்பார்கள்.

நான் வாழும் மரமாக நீங்கள் பொய்யாகக் கற்பனையில் கொள்ளும் முருங்கை மர இலை சைசாக உலகப் படத்தில் காணும் இலங்கை நாட்டைச் சேர்ந்தவனல்ல. எனக்கென்று சொந்த நாடெதுவும் கிடையாது. என்னாடும் என்னாடே. பல கோடி அங்கத்தவர்களைக் கொண்டு உலகம் முழுதும் வியாபித்திருக்கும் எனது இனத்தின் தலைவன், எனது கடைமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்றவற்றை பல வருடங்களாக நுணுகி அவதானித்து தென் கிழக்காசியாவை எனக்குப் பொறுப்புச்சாட்டியிருக்கிறான். இதனால்தான் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் சற்று அதிகமாக பற்பல தடவைகளில் நான் எனது பணியாளர்களுடன் மரகதத்தீவு என நீங்கள் அழைக்கும் உங்களின் நாட்டுக்கு வந்திருக்கிறேன்.

சில வருடங்கள் தொடர்ச்சியாகத் தங்கியுமிருக்கிறேன். வடக்கு, தெற்கு எனப் பேதம் பாராது நகரங்களில் குறைவாகவும், கிராமங்களில் பரவலாகவும் காரியாலயங்களைத் திறந்துமிருக்கிறேன். இரவென்றும், பகலென்றும் களைப்பென்பதேயில்லாமல் உங்களுக்காகப் பணியாற்றியிருக்கிறேன். சிங்களவர், தமிழர், முஸ்லீம்களென உங்களுக்குள் வகுத்துக்கொண்ட பேதங்களைச் சற்றேனும் பொருட்படுத்தாது கடந்த கால் நூற்றாண்டுக்குள் பல்லாயிரக்கணக்கான உங்களின் வீடுகளுக்கு நானும் எனது குழுவினரும் வந்திருக்கிறோம். அவ்வாறான வருகையின் போதெல்லாம், வீட்டுடமையாளர்களும், அயலவர் சொந்தக்காரர்களென பற்பலரும் “மகே தெய்யனே....!” “என்ட கடவளே...!” “என்ட அல்லா...!” என நீட்டி முழக்கி ஓலமும் ஒப்பாரியும் விட்டதையெல்லாம் பார்த்தும், கேட்டும் மனப்பதிவு செய்து வைத்திருக்கிறோம்.

நான் பிறந்தது இரண்டாவது உலக மகா யுத்தத்துக்குப் பின்னரென அம்மா கூறியிருக்கிறார். யுத்த காலத்தில் அப்பா சரியான வேலைப்பழுவால் கஷ்டமுற்றாராம். அப்போது அவருக்காக ஒதுக்கப்பட்ட நாடு ஜேர்மனி.

நாஜிக் கட்சியின் நாயகன் ஹிட்லர் வகை தொகை பாராமல் யூதர்களைக் கொன்று குவித்தபோதெல்லாம் இவர்தான் தனக்குச் சாட்டப்பட்டிருந்த கடமைகளைச் செவ்வனே செய்தாராம். இவருடன் சம காலத்தில் பணி புரிந்த பலர் கிழக்கு மேற்கு என பற்பல நாடுகளில் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டு சேவையாற்றியமையை அம்மா அடிக்கடி கூறக் கேட்டு வளர்ந்தவன் நான்.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் முதலாவது உலக யுத்த காலத்தில் மேற்கு நாடுகள் பலவற்றில் சாதாரண பணியாளனாக எனது அப்பா பணியாற்றி பட்ட அவஸ்தைகளையும், அனுபவங்களையும் கதை கதையாக என்னிடம் கூறியிருக்கிறார்.

ஏன், அதே காலத்தில் உங்களுடைய நாட்டில் இடம் பெற்ற சிங்கள முஸ்லீம் இன வன்செயல்களின் போது எங்களுடைய செயற்பாடுகளுக்குப் பொறுப்பாகக் கடமையாற்றியவரும் எனது தகப்பனின் மூத்த சகோதரர்தான். அவர் இப்போது தள்ளாத வயதாகி, கூனல் முதுகுடன் பொறுப்புக்களில்லாத `கிழட்டுப் பேய்' என்ற பட்டத்துடன் மனிதர்கள் வசிக்காத எங்கேயோ ஒரு காட்டில் வசிக்கிறார்.

உங்களுடைய நாட்டில் 1980 தொடங்கி 2001 இறுதிவரை பணியாற்றி சடுதியாகக் கிடைத்த தற்காலிக விடுப்பில் நீண்ட காலமாகக் காணாமலிருந்த அம்மாவைப் பார்க்கலாமெனச் சென்றேன்.

பாவம் அம்மா! நிறையப் பிள்ளைகளை ஈன்றதால் இளைத்துக் களைத்து முள்ளும் தோலுமாகக் காட்சி தந்தார். கண்கள் சுருங்கி கரு விழிகளை வெண் படலம் மறைக்க என்னை அடையாளம் காண முடியாமல் தின்றாடி..... குரலைக் கொண்டு இனம் கண்டு... ஆரத் தழுவினார்.

"அம்மா..." என அவரின் பாதத்தடியில் விழுந்தேன். மனித அமைச்சர்கள் பலர் பெண் முதலமைச்சரொருவரின் பாதங்களில் விழுந்து நெடுஞ்சாண்கிடையாகக் கிடந்ததையெல்லாம் ஒரு நாட்டில் பல தடவைகள் மறைந்து நின்று பார்த்தது ஏனோ தெரியாது சடுதியாக நினைவில் எழுந்து மறைந்தது.

"டேய்...டேய்.... இதெல்லாம் மனுசங்க செய்றதுடா. எழும்புடா. ஏன்டா இப்புடி இளைச்சிப்போயிட்டே? " அம்மா கேட்டார்.

"வேலைம்மா. அப்புடி வேலை."

"அவ்ளவ் வேலையா?"

"நாளாந்தம் பொணம். ஒரு இடத்துலே மட்டும்னா கொஞ்சம் ஆறுதலாயிருக்கும். இது என்னடான்னா நாட்டிலே நானா பக்கங்கள்லேயும்

பொணம். யுத்தத்திலே செத்த பொணம்க. அங்கேயெல்லாம் போகணும். கடமைகளைச் செய்யணும். யோசிச்சுப் பாரு. வடக்குக்கும் தெற்குக்கும் நான் மட்டும்தான் பொறுப்பாயிருக்கேன் " என்றேன்.

"எதற்கும் உடம்மைப் பாத்துக்கடா. சுவர் இருந்தாத்தான் சித்திரம் வரையலாம்னு யாரோ மனுசங்க சொன்னது ஞாபகமிருக்குடா."

தாயாரும் நானும் நீண்ட நேரமாக் கதைத்துக்கொண்டிருந்தோம். இலங்கையின் போர்க்கால என் அனுபவங்களை அவருடன் பகிர்ந்தேன்.

"சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்டதாலே யுத்தம் நின்னுடிச்சென்கே. இனி உனக்கு ஆறுதல்தானே. என்னோடேயே நில்லுடா."

"எனக்கும் அதான்மா விருப்பம். ஆனா..."

"என்னடா ஆனா? "

"யுத்த நிறுத்தம் தற்காலிகம்தானே. பேச்சுவார்த்தை பண்ணப் போறாங்களாம். அதப் பொறுத்துதான் நிலையான சமாதானமா இல்லையான்னு தெரியும். அது சரிய்... அப்பா எங்க? "

"அவரைத் தூக்கி ஆபிரிக்க நாடொன்றிலே போட்டிருக்காக. உனக்குத்தான் தெரியுமே அந்த மனுசன் வேலை செய்யாம கையக்காலை வைச்சுக்கொண்டு சும்மா இருக்கமாட்டாரே."

"அங்க எங்க யுத்தம் நடக்குது?"

"யுத்தத்தாலே மனுசங்க சாகல்லையாம். பட்டினிச்சாவு. நீ வேலை செய்ற இலங்கையைப் போல நீண்ட காலமா உள்நாட்டுப் போர் இனங்களுக்கிடையிலான போரென்று நாட்டின் பணத்தையெல்லாம் செலவழிச்சுட்டு இப்போ வறுமையிலே வாடுறாங்களாம். தினம் தினம் பொணம்தானாம்."

"அப்பா... பாவம்!"

"ஏன் பாவமென்கே?"

"பட்டினியாலே சாவுறது பரிதாபச் சாவும்மா. அதச் சகிக்க ஏலா. பொணங்களோட வாடின முகங்களையும், ஒட்டி உலர்ந்துபோன உடல்களையும் பார்க்கும்போது அழுகை அழுகையா வரும். ஆனா யுத்தத்திலே சாகுற பொணங்களைப் பார்த்தா அப்படி ஒன்னும் ஆகாது. வீம்புக்குச் சாகுறாங்க. யுத்தத்திலே சம்பந்தப்படுறவங்கள அறைஞ்சி கொல்லணும் போல நமக்கும் தோணும். அது சரிய்... அண்ணன் இப்போ எங்கே இருக்கான்? "

"அவன் ஈராக்கிலே. "

"நான் நெனைச்சேன். அவனைத்தான் போட்டிருப்பாங்கன்னு."

“அங்கதான் யுத்தம் முடிஞ்சி பல வருசங்களாச்சே? இன்னும் அவனுக்கு அங்க என்ன வேலை? ”

“யுத்தம் முடிஞ்சிதா? ” கேட்டவாறே கடகடவெனச் சிரித்தேன்.

நான் வந்திருப்பதைக் கேள்வியுற்றுப் போலும், குட்டியும் நெட்டியுமான எனது சொந்தக்காரர்கள் பலர் காற்றைக் கிழித்தவாறு வந்து என்னருகே நின்றனர். முகத்தைப் பார்த்தனர்.

“உன்ட தங்கச்சிமார்ர புள்ளகள்டா” என்றது ஒரு கிழம். நான் எல்லோரையும் பார்த்து ஏகமாகச் சிரித்தேன்.

“அம்மா என்ன கேட்டே? ஈராக்கிலே யுத்தம் பத்தியா? வியட்நாமிலே உன் தம்பி போய் கடமையாற்றினானே. அதே மாதிரி இப்போ அமெரிக்கனுக்கு எதிரா ஈராக்கிலே நடக்குது. நாளாந்தம் சாவுதான்.” என்றேன்.

“ஏன்டா உன் பெரியப்பாவைப் போய்ப் பாத்தியா?” என் தாயை ஈன்றவள் பொக்குவாயால் கேட்டாள்.

“போகல்ல ஆச்சி”

“போய்ப் பார்டா. நொந்து போய்க் கிடக்கானாம். ”

என் அப்பாவின் அண்ணனைப் பார்த்துப் பேச வேண்டுமென்று எனக்கும் நீண்ட நாட்களாக ஆசைதான். மனிதர்களில் அறிவாளிகள் போல எனது குடும்பத்தில் அவர். மனிதர்களைப் பற்றி, அவர்களின் குணங்கள், ஆசாபாசங்கள், பரிமான வளர்ச்சி, பண்பாடு, பழக்கவழக்கங்கள், உடல் மற்றும் உள நோய்கள் என பலதும் அறிந்ததொரு பண்டிதர்.

“அவர் இப்போ எங்க இருக்கார். ”

“ஆருக்குத் தெரியும்? அவன்தான் ஞானியாச்சே. போக்கத்தவனுக்குப் புத்தி சொல்லத்தான் தெரியும்பாங்க. எங்கேயாவது, யாருக்காவது புத்தி சொல்லிக்கொண்டு கிடப்பான்” என்றது இன்னுமொரு கிழம்.

நான் அவர்களிடமிருந்து விடை பெற்றேன்.

உடலைக் காற்றோடு கலந்தேன். அனுமான் சீதாதேவியைத் தேடி அலைந்தது போல காடு, கரை, வனம், வனாந்திரம், நாடு நகரமென நானாக(பேயாக) அலைந்து, நீங்கள் ஆட்டோக்காரர்களிடம் தெருக்களை விசாரிப்பது போன்று எதிர்கொண்ட என் இனத்தார் பலரிடம் விசாரித்து....பெரியப்பாவைக் கண்டுபிடித்தேன்.

என் அம்மாவின் எதிரே வைத்து கிழம் ஒன்று கூறியது போலவே உங்களுடைய நாட்டின் பெரும்பான்மையினருக்கு அன்பு மதமாம் புத்த

சமயத்தைப் போதித்த புத்தருக்கு ஞானம் கிடைத்ததாகக் கருதப்படும் மர இனமான அரச மரமொன்றின் மேல் பெரியப்பா உட்கார்ந்திருந்ததைக் கண்டேன்.

"பெரியப்பா..."

"ஆர்ரா நீ?"

அறிமுகப்படுத்தினேன்.

"அட! என் மவன்! சொகமாயிருக்கியாடா?"

"ஏதோ இருக்கேன்" அதுக்கு எதிரில் அமர்ந்தேன்.

எனது ஆச்சி கூறியது போன்று, பெரியப்பா நொய்ந்து நொடிந்து நூலாகத்தான் காட்சி தந்தார். உங்கள் நாட்டில் தற்போதைய வாலிபர்கள் பெரும்பாலானோரின் முகங்களில் காணப்படும் வக்ர பாவமின்றி அருளொழுகும் களை அவரின் முகத்தில் தெரிந்தது.

"எப்படா வந்தே?"

"இப்பத்தான் உன்னைப்பார்க்க."

"அடப்போடா. பகிடிபண்ணாம சொல்றா. உனக்கு எங்க வேல?"

"சிலோன்ல. இப்ப சிறிலங்கான்னு பெயரை மாத்திட்டாங்க தெரியுமா?"

"தெரியும்டா. பெயரை மாத்தி சிங்களப் பெயரை வைச்சதும் அந்த நாட்டில நடக்கிற பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணங்களிலொன்றுடா. அங்க இன்னும் யுத்தம் நடக்குதா?" அவர் கேட்டார்.

"இப்போ இல்ல."

"ஏன்?"

"அரசாங்கமும் புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்துட்டாங்க"

"அப்போ நாட்டுப் பிரச்சினை முடிஞ்சதெண்டு சொல்லுறே".

"அதான் இல்ல. இது தற்காலிக யுத்த நிறுத்தம்தான்."

"பேச்சுவார்த்தை பண்ணுறாங்களா?"

"பண்ணப்போறாங்களாம்."

பெரியப்பா எதையோ யோசித்தவாறு நிசப்தமானார்.

"அரசாங்கம் ஸ்திரமா இருக்கா?" திடீரெனக் கேட்டார்.

"அதான் இல்ல. ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் சரிக்குச்சரியா இருக்கு"

"அப்போ பிரச்சினைக்குத் தீர்வு காணமாட்டாங்க. இழுத்தடிப்பாங்க."

"திரும்பவும் யுத்தம் வரும் என்கிறீங்களா?"

"வரலாம். ஆளுக்காள் விட்டுக்கொடுக்காட்டி வரலாம்."

“எதை விட்டுக்கொடுக்கணும்?” கேட்டேன்.

“ஆதிக்க வெறியை! ஆணவத்தை! நான்தான் ஆளனும் என்ற அதிகார வெறியை! விட்டுக்கொடுக்கமாட்டேனென்ற வீம்பை!'' கூறிவிட்டு வெறிக்க எதையோ பார்த்தார்.

“உனக்குத் தெரியுமாடா புத்தர் போதித்தது அன்பு மார்க்கம். அசோக மன்னன் யுத்தம் புரிந்து எதிரியெனக் கருதியவனையெல்லாம் கொன்று பொணமாக்கியபோது நம்ம மூதாதைகள்தான்டா பொணம் பொதைக்கிற வேலைகளையெல்லாம் செய்தாக. யுத்தத்தைக் கைவிட்டு அன்பு வழிக்குத் திரும்புமாறு கூறிய துறவியின் போதனையால்தான் அசோகன் புத்த சமயத்தைத் தழுவினான். அவன்தான் இலங்கையில் புத்த சமயம் பரவக் காரணமானவன். அந்தச் சமயத்தைச் சேர்ந்தவங்களே விடவேமாட்டோம்னு யுத்தம் செய்துகொண்டே இருக்காங்கடா. ”

“ஏன் பெரியப்பா. அந்த நாட்டுக்காரங்க தொன்னூற்று ஒரு வீதமானவங்க படிச்சவங்கன்னு சொல்றாங்களே. அப்படிப்பட்டவங்க ஏன் பிரச்சினைகளை தங்களுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ளாம இருக்காங்க?” இத்தகைய விடயங்களில் அரை வேக்காடான நான் கேட்டேன்.

“மமதைடா. வீம்புடா. விட்டுக்கொடுக்காத தனம்டா. மற்றவனை விட தான்தான் உயர்ந்தவன் என்ற நினைப்புடா. சுயநலம் புடிச்சவங்கடா. சிங்களவனும் அதான். தமிழனும் அதான். அவங்க ஆளையாள் மதித்து, தங்கட பிரச்சினைகளை ஆற அமர ஆழமாச் சிந்தித்து தீர்மானங்களை எடுக்கிற மனப்பக்குவத்தை அடைகிறவரை அந்த நாட்டிலே பிரச்சினைதான்.”

“பிரச்சினையை லேசாகத் தீர்க்க ஏதாவது வழி இருக்கா பெரியப்பா?”

“இருக்குடா. பிரச்சினையின் காரணத்தை, தாக்கத்தை உண்மைக்கு உண்மையாக அரசியல்வாதிகள் மக்களுக்கு எடுத்துச் சொல்லணும். பிரச்சினையைத் தீர்த்து நாட்டை அபிவிருத்தி செய்யணும்னு அரசியல்வாதிகள் சாதகமாச் சிந்திக்கணும். அதேபோல மக்களும் மதவாதிகளும் சாதகமாச் சிந்திக்கக்கூடிய மனப்பக்குவத்தை ஏற்படுத்தினா பிரச்சினையைத் தீர்த்துடலாம்”

இலங்கை மக்கள் தொடர்பாக அவர் கூறியதையெல்லாம் நான் செவி மடுத்தேன்.

“அது சரிய்.... நீ அங்கே என்னென்ன வேலையெல்லாம் செய்றே?” கேட்டார்.

“பெரியப்பா. அந்த நாட்டிலே மூணு விதங்களிலே பொணம் உழும். ஒன்னு அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலே யுத்தம். நாளாந்தம் பத்து இருபதுன்னு, சில நாக்களிலே நூறு இருநூறென்னு உழும். மற்றது, தமிழ் குழுக்களுக்கிடையிலே வெட்டுக் கொத்து வெடியென்னு நடக்கும். அப்போதெல்லாம் அங்க இங்கயென்டு பொணம் உழும். அடுத்தது, தமிழாக்களுக்கும் முஸ்லீம் ஆக்களுக்கும் இடையிலே வன்செயல்கள் நடக்கும். அப்போதும் பொணம் உழும். ”

“அப்போ நாட்டுக்குள்ளே எல்லாப் பகுதியிலேயும் பிரச்சினைன்னு சொல்லு. ”

“ஒன்னை மறந்துட்டேனே. அடிக்கடி எங்கேயாவது குண்டு வெடிச்சி பெரிய்ய பெரிய்ய ஆக்களெல்லாம் சாகுவாங்க. அப்போதெல்லாம் நிறையப் பொணம் கிடைக்கும். ”

“கிடைக்கிற பொணங்களையெல்லாம் அந்த நாட்களிலே நாங்க செஞ்சது போல ஒரு குழிக்குள்ளேயே போட்டு புதைக்கிறீங்களா? பத்த வைக்கிறீங்களா? இல்லே, மனுசங்க நம்மைப்பத்தி சொல்றாப்ல துண்ணுற்றீங்களா? ” கேட்டவாறே சிரித்தார்.

“என்ன பெரியப்பா இப்படிக் கேக்கிறீங்க? நம்ம இனம் எப்போதாவது பொணம் திண்டிருக்கா? சாராயம் கள்ளு குடிச்சிருக்கா? ரெத்தம் குடிச்சிருக்கா? அதெல்லாம் மனுசங்க வேல. எங்க வேலை என்னன்னா ஒவ்வொரு பொணம் உழுந்ததும் அஞ்சாறு பேரு அதுக்குப் பொறுப்பா போவோம். பொணத்தைப் புதைக்கிற அல்லது எரிக்கிற வரையிலே உள்ள சகல வேலைகள்ளேயும் ஈடுபடுற ஆக்களுக்குள்ளே பூந்துடுவோம்.”

அவர் ஆர்வமாகக் கேட்டார்.

“சவப்பெட்டி தயாரிக்கறது தொடக்கம் இறுதி ஊர்வலம் முடிஞ்சி பொட்டியை குழிக்குள்ள இறக்குற அல்லது தீ மூட்டுற வேலை வரை உள்ள எல்லா வேலைகளையும் அவங்களோட சேர்ந்து செய்வோம். ”

“சரிய். உன் வேலை என்ன? ”

“அங்க இங்கயென்டு எல்லா இடங்களுக்கும் பறந்து திரிஞ்சி நடக்கிற வேலைகளையெல்லாம் கண்காணிப்பேன். எல்லாம் சரியென்றா சோகத்தைத் தெரிவிக்கக் கட்டுற வெள்ளைக் கொடிகள்ல கடைசிக் கொடியை நான்தான் கட்டிவிடுவேன். ”

பெரியப்பா சிறிது நேரம் பேசாமல் இருந்தார்.

“முட்டாள் ஜனங்க! ” கூறியவாறு பெருமூச்செறிந்தார்.

“ஏன் சொல்றீங்க? ”

"பெரும்பான்மையான படிச்சவங்க வாழுற ஒரு சின்னத் தீவிலே, அவங்களுக்குள் உள்ள ஒரு பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளாம ஆளையாள் கொலைசெய்து சாகுறாங்களே. அவங்க பொணங்களைப் புதைக்கிற வேலைகள்ல நம்ம இனத்தவங்க ஈடுபடவேண்டியிருக்கே."

நாங்கள் கதைத்துக்கொண்டிருந்தோம்.

★ ★ ★

இந்தோனேசியாவில் கடற்கோளால் மரணித்தவர்களுக்கான இறுதிச் சடங்குகளைச் செய்துவிட்டு, ஈராக்கில் என் சகோதரனுக்கு உதவியாகப் பணியாற்றிக்கொண்டிருக்கும்போது 2005 டிசம்பர் மாத முற்பகுதியில் தலைமையகத்துக்கு அவசரமாக வருமாறு என்னை அழைத்தனர்.

போனேன்.

பணிப்பாளர் சிரித்தவாறே வரவேற்றார். "உன்னுடைய கணங்களைத் தயார் செய்து வை. எந்த நேரத்திலும் நீ இலங்கைக்குப் போக வேண்டி நேரலாம்."

"ஏன்? அங்கதான் யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுல்படுத்தப்படுதே?"

"அதுக்கு ஆபத்து வரப்போகுது. அந்த முட்டாள் ஜனங்க யுத்தத்துக்கு ஆயத்தமாகுறாங்க. ஏற்கனவேயே பரவலாக வன்முறைகள் நடக்கத் தொடங்கிட்டு. அம்பூலன்ஸ் சைரன் சப்தங்கள் அதிகரிக்கத் தொடங்கிட்டு. ஹெலியில் பொணங்கள் வரத் தொடங்கிட்டு. அங்க இங்கயென்டு பொணங்கள் கிடக்கத் தொடங்கிட்டு. ஹர்த்தால்கள் நடக்கத் தொடங்கிட்டு."

அவர் கூறிக்கொண்டிருக்கும்போது நான் ஒன்றைப்பற்றி ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கினேன்.

"என்ன பலமா சிந்திக்கிறே?" அவர் கேட்டார்.

"யுத்தம் தொடங்கிட்டா நிறைய வெள்ளைப் புடவ தேவைப்படும். சைனாவிலேயிருந்து இறக்குமதி செய்றதா இல்லே வேற ஏதாவது ஒழுங்கு செய்றதா என யோசிக்கேன்."

"கொடி கட்டுவதற்குத் தேவைப்படும் இல்லே? செலவு குறைவானது எதுவென யோசிச்சிச் சொல்லு."

யோசிக்கும்போது திடீரென பொறி தட்டியது.

"அந்த நாட்டிலே கோடிக்கணக்கிலே முதலீடு செய்து தாபித்த பிடவை ஆலைகள் பல உற்பத்தி இல்லாம மூடிக்கிடக்கு."

“ஏன்? “பணிப்பாளர் குறுக்கிட்டார்.

“அற்ப காரணங்களுக்கெல்லாம் தொழிலாளிங்க வேலை நிறுத்தம் செய்து உற்பத்தியை முடக்குவாங்க. வேலை நிறுத்தம் தொடர்ந்தா ஆலைகளை மூடவேண்டி வரும். ”

“தொழிலாளிங்க நிலம? ”

“பட்டினிதான். சம்பளம் தரச்சொல்லி அரசாங்கத்தை நெருக்குவாங்க. வேலையற்றோர் பட்டியல்ல சேர்ந்துக்குவாங்க. உங்களுக்குத் தெரியுமா? தங்களைத் தாங்களே ஆள்வதற்காக தேர்தல் நடத்தி அரசாங்கத்தை அமைப்பாங்க. அப்புறம், தொழிலாளர் தினமென்ற ஒன்றில் சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கெதிராக கோசமெழுப்புவது போன்று தொழிலாளர் உரிமைகளைப் பறிக்காதே என்று குரல் எழுப்புவாங்க. ”

"இதையெல்லாம் ஏன் சொல்றே? ”

“தொழிலாளர் பிரச்சினைகளால அந்த நாட்டில துல்ஹிரிய என்ற இடத்தில் ஒரு விசாலமான புடவ ஆலையொன்று பல வருசங்களாக மூடிக்கிடக்கு. அத நாம எடுத்தா நம்ம கணங்களை ஈடுபடுத்தி வெள்ளைப் புடவ தயாரிக்கலாம். உற்பத்தி முழுவதையும் பொணங்களுக்கான இறுதிச் சடங்குகளுக்குப் பயன்படுத்தலாம். ”

“நல்ல யோசனை. ஆலையைப் பெற நான் நடவடிக்கை எடுக்கேன்.”

நான் அவரிடம் விடைபெற்றேன்.

வெள்ளைக்கொடிகள் கட்டுவதற்காக நான் எனது கணங்களுடன் இலங்கைக்குச் செல்லவேண்டிய கட்டளைக்காகக் சில நாட்கள் மட்டும்தான் காத்துக்கொண்டிருந்தேன்.

கட்டளை கிடைத்துவிட்டது. வந்துவிட்டோம். கொடிகள் கட்டத்தொடங்கிவிட்டோம். இனி என்ன? சதா வேலைதானாக்கும்! தலையெழுத்துடா சாமிய்!

★ ★ ★

# வாக்களிக்க வாரீகளா?

அழகிய பெண்கள் ஐவரும் அதிகாலையிலே எழுந்து விட்டனர். போர்த்திக்கொண்டிருந்த போர்வைகளை ஒதுக்கிவிட்டு வாழைத்தண்டுகளையொத்த வழவழப்பான கணுக்கால்களுக்கு மேலே சுருண்டு கிடந்த பாவாடைகளை கீழே இறக்கிவிட்டு... பரக்கப் பரக்க காலைக்கடன்களை முடித்து விட்டு.... முதல் நாள் பேசிக்கொண்டதற்கிணங்க ஐவரும் சொல்லிவைத்தாற்போல் ஒரே நேரத்தில் அந்தச் சந்தியில் கூடினர்.

அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரகம். எல்லோருமே பதினைந்து வயதுக்குள் உள்ளவர்கள். பாவாடை தாவணி அணிபவர்கள். பாடசாலையில் ஒரே வகுப்பில் படிப்பவர்கள். ஏறக்குறைய ஒரே உயரமும் பருப்பமுமானவர்கள். நெற்றியில் ஸ்டிக்கர் பொட்டிட்டிருப்பவர்கள்.

வகுப்பாசிரியை முதல் நாள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பாடசாலையில் அன்று பிற்பகல் நடைபெறவுள்ள இல்ல விளையாட்டுப்போட்டிக்கு பிரதம மற்றும் கௌரவ விருந்தினர்களாக வருகை தரவிருப்பவர்களுக்கு அணிவதற்காக மாலைகள் கோர்க்க அந்த ஐவரும் பூக் கொய்யப் போகிறார்கள்.

பிரதம விருந்தினராக வரவிருப்பவர் அப்பகுதியின் அரசாங்க அதிபர். கௌரவ விருந்தினர் கல்வி அதிகாரி. அவர்களுடன் கூட சில அதிகாரிகள் கும்பல். இவர்கள் எல்லோரையும் வரவேற்க, இவர்களின் கழுத்துகளை பூக்களால் அலங்கரிக்க பூமாலைகள் தொடுக்கப் போகிறார்கள்

ஒவ்வொருவரின் கைகளிலும் சொப்பின் பேக். அவர்கள் அனைவரும் ஒன்றாக நடந்தார்கள். ஒன்றாக சத்தமிட்டு கதைத்தார்கள். ஒன்றாகச் சிரித்தார்கள். ஒருத்தி ஏதோ ஒரு சினிமாப் பாடலை ஹம் பண்ணினாள்.

"ஏன்டி பத்மினி. மல்லிகைப் பூத்தானே கொண்டுவரச் சொன்னவ டீச்சர்?" கேட்டாள் மெலிந்து தலை மயிரை பாப் செய்துவிட்டிருந்த ஒருத்தி.

"மல்லிகையை விட கொடி மல்லிகை ரொம்பவும் வாசனைடா" என்றாள் நெற்றியில் அகலமான திலகமும் காதுகளில் வளையமுமாகக் காட்சியளித்த வேறொருத்தி.

"மல்லிகையோ கொடி மல்லிகையோ. கைக்கு கிடைக்கிறதைக் கொய்வோம். ஐந்து மாலைகள் தொடுக்கணுமாக்கும்."

“ஒவ்வொரு வீடு வீடா போவோம். சொந்தக்காரங்ககிட்ட சம்மதம் கேட்டிட்டு ஆயவேண்டியதுதான்.”

“சம்மதம் தராம விட்டாங்கன்னா…?” காதுகளில் வளையல் கேட்டாள்.

“அப்படி எல்லாம் மறுக்க மாட்டாங்கடா. பூக்கள்தானே. வாடி உதிர்ந்து போயிடும். மாலை கோக்கப் போறோம்னா சம்மதிச்சிடுவாங்க”

“போற வீட்டிலே நாய் கிடந்தா என்னடா செய்யிறது?”பத்மினி கேட்டாள்.

“உன்னைக் கண்டதும் ஆண் நாய்ன்னா பாய்ந்து கொண்டு வருமாக்கும்” என்றாள் மூக்குத்தியுடன் காட்சி தந்தவள்.

அனைவரும் கொடி மல்லிகைகள் மொட்டு விரிவது போல் கொல்லெனச் சிரித்தனர்.

“போங்கடி. கேலின்னாலும் அளவோடு இருக்கணுமாக்கும்”

“நாங்க என்னடா கண்ணு சொன்னோம்? நீதான் வகுப்பிலே சள் சள்னு பாய்றவ. அதான் நம்ம இனம் வருதுன்னு அது பாய்ந்து வரும்ணோம்”

மீண்டும் சிரிப்பலைகளை தெருவில் வீசினர்.

“உங்களோட வர என்னால ஏலா. நான் போறன்” சிணுங்கினாள் பத்மினி.

“பாத்தியா பாத்தியா. இதானே நாய்க் குணம்னோம். சும்மா பகடிடா கண்ணு. பெரிசா எடுத்துக்காதேம்மா. வா போகலாம்.”

அவர்கள் அடர்ந்த குடியிருப்புக்கள் உள்ள தெருவில் நுழைந்து வீடு வீடாகச் சென்று சிரிக்கச் சிரிக்க சொந்தக்காரர்களுடன் கதைத்து பூக்கள் கொய்யத் தொடங்கினர்.

★★★

தேர்தல் காலமாதலால் நாடு முழுதும் ஒரே பரபரப்பு. தேர்தலுக்கு இன்னும் பத்துத் தினங்கள் மட்டுமே இருந்தன. கிராமங்களிலும் நகரங்களிலும் மூலை முடுக்குகளிலெல்லாம் ஒலிபெருக்கிகள் அலறின. பற்றைகள் மண்டி காடுகளாகக் காணப்பட்ட வளவுகள் துப்புரவாக்கப்பட்டு மேடைகள் போடப்பட்டன. இரவு வேளைகளில் மெர்க்குரிகளும், குளு குளு டியூப்களும் வர்ண ஜாலம் காட்டின. தெருக்களிலுள்ள சுவர்கள் பெரிய பெரிய போஸ்டர்களினால் அலங்கரிக்கப்பட்டு காற்றிலும் வெய்யிலிலும் முழுக்காடி அசிங்கமாகக் காட்சி தந்தன. கரித்துண்டுகளாலும், வண்ண வண்ண மையினாலும் கொட்டை

கொட்டையான எழுத்துக்கள் தேர்தலில் போட்டியிடும் அங்கத்தவர்களைப் புகழ்ந்தும், இகழ்ந்தும் கூறிக்கொண்டிருந்தன.

பத்திரிகைகள் தேர்தலைப் பற்றி எழுதித் தள்ளின. புள்ளி விபரங்களும் வண்ட வாளங்களும் கட்டமிட்ட செய்திகளாக வெளிவந்துகொண்டிருந்தன. ஹெலிகொப்டர்கள் கிராமங்களில் காட்சிப் பொருட்களாக மாறி வாக்காளர்களை கூட்டங்களுக்கு அழைக்கும் கருவிகளாயின.

அந்த மாவட்டத்தில் போட்டியிடும் அழகிய குமரன் அப்போதுதான் படுக்கையை விட்டும் எழுந்திருந்தார். நேரம் எட்டைத் தாண்டி விட்டிருந்தது. கடந்த இரவு அவர் தனது சகதர்மினியுடன் கட்டிலுக்குச் செல்கின்ற போது நள்ளிரவு மூன்றைக் கடந்து விட்டது. ஊன் உறக்கம் என எதையும் கருதாமல் எந்த எந்த யுக்திகளால் வாக்காளர்களை மடக்கிப் பிடிக்க முடியுமோ அந்த ஒவ்வொரு யுக்திகளையும் கையாண்டார் அவர்.

நாட்டிலுள்ள முக்கியமான பிரச்சினைகளான வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, தொழில் இல்லாமை ஆகிய இரண்டும் அவருக்கு தண்ணீர் பட்ட பாடு. அவைகளை இல்லாமல் ஆக்குவதுதான் தான் சார்ந்து நிற்கும் கட்சியின் இலட்சியம் என இதுவரை அறுபது கூட்டங்களில் தனது கம்பீரமான குரலால் ஆக்ரோஷமாகக் கூறி வாக்காளர் பெருமக்களின் கரகோஷங்களை நிறையவே சம்பாதித்து இருக்கிறார்.

அவருடன் எதிர்த்துப் போட்டியிடும் கட்சிக்காரர்களினதும், அங்கத்தவர்களினதும் சொந்த வண்டவாளங்களை தனது பொற்குரலால் கூறாமல், கூட்டங்களில் கூலிக்கு மாரடிக்க வருபவர்களைக் கொண்டு கூறவைத்து வாக்காளர்களை சிரிக்கவும் நிலை தடுமாறவும் வைப்பது அவர் கையாளும் இன்னுமொரு யுக்தி.

வாக்காளர் ஒவ்வொருவரையும் எந்த வழிகளால் அணுகவேண்டும் என்பதை அவர் தனது கடந்தகால அனுபவங்களைக் கொண்டு பெரிதுமே தெரிந்து வைத்திருந்தார். குடிப்பவனுக்குக் குடி. பணம் தேவைப்பட்டவனுக்குப் பணம். வேலை தேவைப்பட்டவனுக்கு பொய் வாக்குறுதி. அபிவிருத்தித் திட்டங்கள் ஆயிரம் செய்யப் போவதாக மேடைகளில் சூளுரைப்பு. இப்படி பலப் பல யுக்திகள்.

கடந்த இரண்டொரு நாட்களாக அவர் இன்னுமொரு யுக்தியை கையாள்கிறார். தேர்தல் நெருங்கவிருப்பதால் அவசர அவசரமாக வாக்காளப் பெருமக்கள் அனைவரது வீடுகளுக்கும் (முடிந்தவரை) கால் நடையாக தனது பரிவாரங்களுடன் சென்று வாக்கு கேட்கத் தொடங்கியிருக்கிறார்.

கொட்டாவி விட்டவாறே கட்டிலிலிருந்து எழுந்து ஜன்னல் திரையை நீக்கிவிட்டு கண்ணாடி ஊடாக வெளியே பார்வையை மேய்ந்தார். வாசலிலும் கேட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் அவரது ஆதரவாளர்கள் கொசுக்களாக அலைந்தனர். ஒவ்வொருவரும் ஏதோ தான்தான் பாராளுமன்ற உறுப்பினராகி மெதுமெதுப்பான கதிரைகளில் உட்கார்ந்து அகன்ற கூட்ட அறையில் அலங்காரப் பொருட்களாக காட்சியளிக்கப் போகிறோம் என்ற நினைப்பில் பரபரத்துக்கொண்டிருந்தனர்.

வாகனங்கள் சர் சர் என வந்து நின்றன. கொழுத்த பணக்காரர்கள் சிலர் ஆடம்பரமாக இறங்கி வீட்டையும் வாக்காளர் பெருமக்களையும் பார்த்தவாறு வராந்தாவை நோக்கி நடந்தனர். அபேட்சகரின் வெற்றிக்காக சிறிய மீன்களை தூண்டிலில் போடும் வியாபாரிகள் இவர்கள்தானோ என எண்ண வைத்தது இவர்களின் நடை.

இவர்களைக் கண்டதுமே அழகிய குமரன் இரண்டெட்டு வைத்து கட்டிலருகில் வந்து கனத்த பாரத்துடன் இன்னும் உறங்கிக்கொண்டிருக்கும் சகதர்மினியைத் தொட்டு எழுப்பினார். டவலைக் கையில் எடுத்தவாறு பாத்ரூமுக்குச் செல்லும் வழியில் பட்டனொன்றை நசித்து காலைத் தேனீரை படுக்கை அறைக்குள் கொண்டு வருமாறு கட்டளையிட்டார்.

காலைக்கடன்களை முடித்து, வெள்ளை வெள்ளையில் அவர் நடந்து ஹாலுக்கு வரும்போது ஒன்பதைத் தாண்டிவிட்டிருந்தது. இரு கைகளையும் மேலே உயர்த்தி, கூப்பி பெரியதொரு கும்பிடு போட்டார். அவரைக் கண்டதுதான் தாமதம் எழுந்து நின்றவர்களை பெரிய மனிதத் தோரணையில் அமருமாறு கையசைத்தார். அங்குமிங்குமாக நடைபயின்ற கொசுக்கூட்டம் அவரைச்சுற்றி வட்டமிடத் தொடங்கியது.

"காலையிலே குளிர் நீரிலே குளித்தாலும் நித்திரை மயக்கம் தீர்ந்தபாடில்லை" என்றார் குமரன் சிறிது ஆயாசத்துடன்.

"அதான் கண்ணிலேயே தெரியுதே" அவருடைய ஊது குழல்களில் ஒன்று மெதுவாக அடக்கி வாசித்தது.

"கண் சிவந்து தெரியுதா?"

"கொச்சிப்பழம் போல இருக்குதுங்க"

"ஒழுங்காக உறங்கி எத்தனை நாளாகுது. மக்களுக்கு சேவை செய்வதென்று முன்வந்தா இதை எல்லாம் பார்க்கக் கூடாது."

"ஆமாங்க. ஆமாங்க. பார்க்கக் கூடாது." இன்னுமொரு ஊதுகுழல் ஒத்து ஊதியது.

கூட்டத்தினுள் நின்ற தனது தந்தையை ஏதோ அவசர காரியமாகச் சந்திக்க வந்த இளைஞனொருவனின் செவிகளிலும் இந்த உரையாடல் அகஸ்மாத்தாக உள்நுழைந்தது. அவன் மனதுக்குள் சிரித்தான்.

`தேர்தல்ல வென்று பாராளுமன்றத்திற்குப் போயிட்டா அப்புறம் பகலிலும் இரவிலும் தூக்கம்தானே'.

குமரன் வந்தவர்களோடெல்லாம் அவரவர்கள் தகுதி அந்தஸ்துக்கு ஏற்ப உரையாடினார். சிலருக்கு மாமூலான வாய்கரிசி போடுமாறு கஜானாவுக்குப் பொறுப்பான தன் சகோதரனுக்கு உத்தரவிட்டார். அன்று வாங்கவேண்டிய சாராயத்துக்கான பெறுமதி எழுதிய காசோலையில் ஒப்பமிட்டார். இன்னும் என்னென்னவோ அலுவல்கள்....

"ஓ..கே. அப்போ புறப்பட வேண்டியது. இன்றைக்கு எந்தத் தெரு?" குமரன் கேட்டார்.

வெள்ளை வேஷ்டியும் நெற்றிப் பொட்டும் கொண்ட வாய் நிறைய வெற்றிலையை குதப்பி இருந்த ஒருவர் தெருவின் பெயரைக் கூறினார்.

"கார்களிலே போயிடலாமே!"

"ஆமாங்க. தெரு மூலையிலே கார்களை நிறுத்தி நேற்றையப் போல நடந்தாச் சரி."

"நடப்பதென்றா நினைக்கவே முடியாம இருக்குப்பா. நாலைந்து நாள் நடந்ததாலே தொடை ரெண்டும் ஒன்றோடொன்று உரசுப்பட்டு புண்ணாகி இருக்குதுப்பா"

"என்னங்க செய்கிறது. இன்னும் ஆறோ ஏழு நாளைக்கு நடக்கப்போறீங்க. அப்புறம் அடுத்த எலக்சன் வரை இந்தப் பகுதிகளை எட்டிப் பார்க்கப் போறீங்களா என்ன?" என ஒருவர் கூற மற்றவர்கள் கொல்லென்றனர்.

"சரி. சரி. தலையெழுத்து! மக்களுக்கு சேவை செய்ய முன்வந்தால் இவைகளையெல்லாம் பார்க்கக் கூடாதில்லையா?" என்றவாறு பரிவாரங்கள் பின்தொடர தனது பென்ஸை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

அவர்களின் வாகனங்கள் தெரு மூலையில் நின்றதும் எல்லோரும் இறங்கி குமரனைச் சுற்றி மொய்த்தனர்.

"அப்போ புறப்படுவோம். எழவு தொடைகள்தான் புண்ணா எரியுது" என்றார் குமரன்.

அவர்கள் நடக்கத் தொடங்கினர்.

"எதிரே வர்ற வீடு வெள்ளையனுக்குச் சொந்தமானது. ஞாபகம் வச்சிக்கோங்கோ" குமரனுக்குப் பக்கத்தில் நடந்து சென்றவன் அவரது காதுக்குள் ஊதினான்.

"என்ன பெயரு? திரும்பச் சொல்லு"

"வெள்ளயன்."

"ஆளு எப்படி?"

"ஆரு? வெள்ளயனை கேட்கிறீங்களா?" அவருக்குப் பின்னால் வந்தவன் சிறிது சப்தமிட்டுக் கேட்டான்.

"ஆள் நெருப்பன். அதையும் இதையும் கேட்டு திணறடிச்சிடுவான்."

"கேட்கட்டுமே. அப்படி என்னதான் கேட்டுடப் போறான்? பொஞ்சாதிக்கு புருசன் வேண்டுமென்று கேட்காம வேறு எதைக் கேட்டாலும் ஐயா சமாளிச்சுடுவாரு." என்றான் சற்று தள்ளி நடந்துகொண்டிருந்த தோளில் துண்டுடன் காணப்பட்ட ஒருவன்.

குமரன் உட்பட அனைவரும் வெடித்தனர்.

"வெள்ளையன்டது பஸ்ட் கிளாஸ் சரக்கு. ஐயா அதையும் சமாளிச்சிடுவாராக்கும்" என்றார் தேர்தலுக்கு சிறிய மீன் என நினைத்து லட்ச ரூபாயை நிதியாகக் கொடுத்த உள்ளூர் வியாபாரியொருவர்.

"மொள்ள... என் பொஞ்சாதிக்கிட்ட போய் யாராவது வத்தி வச்சிடப் போறானுகள்."

"ராஜாதி ராஜனென்னாலும் இந்த விசயம்னா பொஞ்சாதிக்குப் பயம்தான்" அவர்கள் கதைத்தவாறே வெள்ளையனின் வீட்டை நெருங்கினர். கேட்டைத் திறந்தவாறு அழைப்பில்லாமலேயே உள்ளே முற்றத்துக்குச் சென்றனர்.

இவர்களைக் கண்டதுதான் தாமதம் மண் வெட்டியால் வளவினுள் பாத்தி கொத்திக்கொண்டு நின்ற வெள்ளையன் சக்கர கால்களானான்.

"ஐயா வரோணும்" வரவேற்றான்.

"எப்படி வெள்ளையன். சொகமா இருக்கியா?" குமரன் கேட்டார்.

'எந்தப் பெரிய மனுசன்! நம்ம பேரைக் கூட சரியாக ஞாபகம் வச்சிருக்காரே!' நினைத்தான்.

"இருக்கேங்க"

"வீட்டிலே மத்தவங்களெல்லாம்...?"கேட்டவாறே சற்றுத் தள்ளி நின்ற வெள்ளையனின் அழகிய மனைவியின் உருண்டு திரண்ட உடலைக் கடைக்கண் பார்வையால் தழுவினார்

"மூத்தவன்தான் படிச்சுட்டு ஒரு தொழிலுமில்லாம இருக்கான். நாலு வரிசமா சும்மா இருக்கான். என்னோட வந்து வேளாண்மை செய்கையிலே உதவி செய்டான்னா படிச்சவனாம்னு பிகு பண்றான். அதான் உங்கட ஊட்டுக்காவது வந்து உங்ககிட்ட சொல்லி அரசாங்கத்திலே அவனுக்கு ஒரு வேலை பெற்றுக்கொடுங்கோண்ணு கேக்கலாமென்..."

அவனைக் கதைக்க விடாமல் குமரன் இடை மறித்தார்.

''தபாரு வெள்ளையன். நீ எதுக்காக உன் தொழிலை அலைச்சிட்டு என் வீட்டுக்கு வந்து அலையணும்? நானே உன் வீடு தேடி வந்திருக்கேன். இதுக்காகத்தானே எங்க கட்சிக்கு வாக்களிக்குமாறு கரடியா கத்துறோம். நாங்க மட்டும் ஆட்சிக்கு வந்துட்டா முதலாவது வேலையா உன் மகனுக்கு உத்தியோகம் பெற்றுத் தருவதுதான் என் வேலைன்னு நினைச்சிக்கோ.''

''ரொம்ப சந்தோசங்க.''

''ஆம்மா, வயலுக்கு தண்ணீர் எல்லாம் ஒழுங்கா வருதா?''

''அந்தக் கர்மத்தை ஏன் கேட்கிறீங்க?''

''ஏன்?'' குமரன் உட்பட மற்ற அனைவருமே நெற்றியில் கேள்விக் குறி வரைந்தனர்.

''எங்கட வயல்களுக்கு வாய்க்கால் வைச்சுத் தாறதா பத்து வருசமா சொல்லிக்கொண்டிருக்காக. நாங்களும் ஏமாந்துகொண்டே இருக்கோம்.''

''செய்யமாட்டாகளே. அதுக்காகத்தானே ஐய்யா கட்சிக்கு வோட்டுப் போடுங்க எங்கிறோம். ஏங்க, வெள்ளையனுக்கிட்ட உங்க திட்டத்தை சொல்லுங்களேன்'' என்றார் ஓர் ஊது குழல்.

''என்ன திட்டம்?''

''வெள்ளயன். பக்கத்திலே கடல் தானே இருக்கு?''

''ஆமாங்க''

''கடல் நீரை நன்னீரா மாற்றி பாரிய குழாய்களை வைத்து இறைத்து இந்த வயல்களுக்கெல்லாம் நீர் பாய்ச்சலாம் என்பது அபிவிருத்திக்காக வைத்திருக்கின்ற திட்டங்களில ஒன்று.''

''சா.... ரொம்ம்பப் பெரிய்ய திட்டம். இது மட்டும் அமுலாகினா அமெரிக்காவுக்கே அரிசி ஏற்றுமதி செய்யலாம். அவங்க மாவை நாம சாப்பிட, நம்ம அரிசியை அவங்க சாப்பிடுவாங்க. அமெரிக்கன்காரன் மட்டும் நம்ம அரிசியை வாங்கத் தொடங்கினான்னா. நீ எல்லாம் தண்ணீரால வாய் கொப்பளிக்கமாட்டாய். பன்னீரால...எது? பன்னீராலதான் கொப்பளிப்பாய்'' என்றான் தோளில் துண்டு அணிந்து நின்ற ஊதுகுழல்.

''எதுக்குங்க இதெல்லாம். தூர்ந்து போய்க் கிடக்கிற வாய்க்காலை தோண்டி துப்பரவு செய்து தந்தாங்கன்னா அதுவே எங்களுக்குப் போதுங்க''

''பாத்தியா பாத்தியா. இதானே சுயலநலமென்கிறது. பெரிய்ய பெரிய்ய திட்டங்களை ஐயா செய்ய இருக்கும்போது உங்களப் போல விசயம் புரியாத ஆக்கள்தான் இடையிலே புகுந்து எல்லாத்தையும் கெடுத்துடுவீங்க. வெள்ளையன்! நீ மட்டும் ஐயாவிற்கும் கட்சிக்கும்

வோட்டுப் போட்டுடு. உன் மகனுக்கு வேலை. உன் வயலுக்குத் தண்ணி. அப்புறம் ...உனக்கு என்ன வேணும்? சரி. எதெது தேவையோ அதையெல்லாம் சத்தியப்பிரமாணம் எடுத்து ஒரு மாதத்துக்கிடையிலே ஐயா முடிச்சுச் தந்திடுவாரு.'' என்றார் அருகே நின்ற உள்ளூர் வியாபாரி.

''சரிங்க. எதையாவது குடிச்சுட்டு.....'' வெள்ளயன் தலையைச் சொறிந்தான்.

"இல்லப்பா. தலை கொள்ளாத வேலை கிடக்கு. இன்னொரு நாளைக்கு ஐயா உன்ட ஊட்டுக்கு சம்சாரத்தையும் கூட்டிக்கிட்டு வருவாரு. அப்போ..... நாங்க வர்ரோம்.''

''வெள்ளயன். ஆமா.... நீயும் எங்களோடு கூட வாயேன். நாலு ஊடுகளுக்குப் போயிட்டு வரலாம்'' என்றார் குமரன்.

"இல்லங்க. பாத்தி போட்டிருக்கேன். தக்காளி நடணும்.''

''பாத்தியாவது! தக்காளியாவது! போட்டுட்டு வாப்பா. ஐயா எம்.பி.யா வந்துட்டார்னா உன் ஊட்டிலே பொன்னா கொட்டப்போகுது. சும்மா இருந்து சாப்புடுவதற்கு இப்பவே ஒரு ஈசிசெயாரை வாங்கிப் போட்டுடு'' என்றார் வாய்க்குள் வெற்றிலையை இன்னும் குதப்பிக் கொண்டு நின்றவர்.

"இல்லங்க. வயலுக்கு வேற போகணும்'' வெள்ளயன் தலையைச் சொறிந்தான்.

''சரி. சரி. நாங்க போறம். ஐயாவுக்கும் கட்சிக்கும் வோட்டுப் போடுவதை மறந்துடாதே.''

எல்லோரும் வெளியே வந்ததும் குமரன் கேட்டார் "இந்த ஆளுக்கு எத்தனை வோட்டுப்பா இருக்கு''

''எல்லாம் ஐந்து. ஐந்தும் நமக்குத்தாங்க'' அவர்கள் சிரித்தவாறு அடுத்த வீட்டை நோக்கி நடந்து செல்வதை பூக் கொய்து கொண்டு நின்ற இளம் பெண்கள் பார்த்து தங்களுக்குள் எதையோ கதைத்துக்கொண்டனர்.

★★★

அப்போதைய ஹிட் பாடல்களை ஒலிபரப்பி காற்றில் கலக்க விட்டுக்கொண்டிருந்தது. பாடசாலை விளையாட்டு மைதானம் நிறைய இல்லங்களின் விளையாட்டு வீரர்களும் மத்தியஸ்தர்களும் நடை பயின்றனர். மூன்று தனித்தனி நிறங்களைக் கொண்ட இல்லங்கள் நிறைய அழகிய உடையணிந்த மாணவிகளும் மாணவர்களுமாகக் காணப்பட்டனர். பெற்றோர் திரளாக வந்து மைதானத்தைச் சுற்றி நின்றனர். பிற்பகல் வெய்யிலை மறைப்பதற்காக வண்ணக் குடைகளைப் பிடித்திருந்தனர்.

அம் மாவட்டத்தின் பிரபல பாடசாலையொன்றின் விளையாட்டுப் போட்டியாதலால் அரசாங்க அதிபரும், பிராந்திய கல்வி அதிகாரியும் பேசிக்கொண்டவாறு சரியாக மூன்று மணிக்கு மைதானத்துக்கு அருகில் மோட்டார் வாகனங்களில் வந்து இறங்கினர்.

அரசாங்க அதிபர் உயர்ந்து மெலிந்தவராக இருந்தார். கண்களில் மூக்குக்கண்ணாடி. பாதிக்கு மேல் நரை மயிர். அந்த மாவட்டத்தில் கடந்த நான்கு வருடங்களாகக் கடமையாற்றுகிறார். சிறந்த நிருவாகி என்ற பெயரை பல தரப்பினரிடமிருந்தும் பெற்றிருக்கிறார்.

ஒலிபெருக்கியில் பாடல் நிறுத்தப்பட்டு பிரதம, கௌரவ அதிதிகளின் வருகை பறைசாற்றப்பட்டது. பார்வையாளர் கூடத்தை அதிதிகள் குழு நடந்து அடையும்போது பாடசாலை யூனிபோம் அணிந்த அழகு வழியும் மாணவியொருத்தியின் கையிலிருந்த வெள்ளித்தட்டில் தயாராக வைக்கப்பட்டிருந்த மாலைகளை எடுத்து கல்லூரியின் அதிபர் கரகோஷங்களுக்கு மத்தியில் அதிதிகளின் கழுத்துகளில் சூடிவிட்டார்.

மாலைகளில் கோர்த்திருந்த பூக்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி. சமுதாயத்தில் முக்கிய பதவிகளை வகித்துக்கொண்டிருக்கும் பிரபல மனிதர்களின் கழுத்துக்களை ஆகக் குறைந்தது ஒரு நிமிட நேரமாவது அலங்கரிப்பதற்கு தங்களுக்குக் கிடைத்த பேற்றை நினைத்து அவை மகிழ்ந்தன. கம கம வென்ற வாசம், உட்கார்ந்து கொண்டிருந்த இடம்.... எல்லாமே அவைகளை மகிழ்ச்சிக் கடலில் நீராட்டின.

ஒரு நிமிடம் கூடச் சென்றிருக்காது. அதிதிகள் மாலைகளைக் கழற்றி கைகளில் ஏந்தி வந்து மேசையில் வைத்தவாறு கதிரைகளில் உட்கார்ந்தனர்.

இல்ல விளையாட்டுப் போட்டி முடிந்து பரிசளிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அரசாங்க அதிபரின் வாகனச் சாரதி மாலையை எடுத்து வந்து காரின் முன் கண்ணாடி ஓரமாக வைத்துக்கொண்டான். கார் விடுதியை அடைந்ததும் அரசாங்க அதிபர் அன்று இரவு வாசிப்பதற்காகக் கொண்டு வந்த காகிதக் கோவைகளுடன் மாலையையும் சுமந்து வந்த சாரதி மேசை ஒன்றில் வைத்தான்.

★ ★ ★

வாக்களிப்பு காலையிலேயே தொடங்கிவிட்டது. வாக்களிப்பு முடியும் வரை வாக்காளர்கள் அனுமான் வாலாக நின்றனர். கட்சித் தொண்டர்கள்

அவரவர்கள் சார்ந்த கட்சிகளின் நிறத்தில் சேட் அணிந்தவாறும் தொப்பியணிந்தவாறும்.... ஒரே பரபரப்பு.

வெள்ளையன் தனக்கு தபாலில் கிடைத்த வாக்கு அட்டையைக் கையில் எடுத்துக்கொண்டான். அவனுடைய மனைவி, வயதான தாய், தகப்பன், மகன் ஆகிய அனைவருக்கும் வாக்கு அட்டைகளைப் பிரித்துக் கொடுத்தான்.

"நல்லா கேட்டுக்கோங்கோ. அவருதான் பெரிய பெரிய திட்டமெல்லாம் வைச்சிருக்காரு. ஒரு மாதத்துக்கிடையில் நம்ம மகனுக்கு உத்தியோகம் எடுத்துத் தாரதா சொல்லியிருக்காரு. வாய்க்கால வேற வெட்டித் தந்திடுவாராம். அதனாலே... அவருக்கே போட்டுடுங்க" என்றான் தனது குடும்பத்தாரைப் பார்த்து வெள்ளையன்.

"எப்படிப்பா அவரை நம்புறது?" சற்று புரட்சியான சிந்தனையுடன் கூடியவனான மகன் கேட்டான்.

"எனக்கென்னப்பா தெரியும். உள்ளதுக்குள்ளே அவருதான் நல்லதா எனக்குப் படுது. உனக்கு அரசாங்க உத்தியோகம் பெற்றுத்தருவாருன்னு அவரைத்தான் நான் மலையாக நம்பியிருக்கேன்."

வெள்ளையன் வாக்குச் சாவடியை நோக்கி நடக்கத் தொடங்கினான். அவனைப் பொறுத்தவரை அது அவனுக்கு பெருமையான நாள். குமரன் போன்ற பலர் அவனுடைய வீடு தேடி வந்து அவனிடம் வாக்குப்பிச்சை கேட்டுச் சென்றனர்.

அவன் அளிக்கப் போகும் வாக்கு 'இந்த நாட்டையே மறுமலர்ச்சிப் பாதைக்கு இழுத்துச் செல்லப் போகும் படகு என்பதை அவன் தெரிந்து வைத்திருந்தான். அவன் அத்தனை நாட்களாகக் கனவு கண்டு கொண்டிருக்கும் மகனுக்கான அரசாங்க உத்தியோகம், வாய்க்காலில் மத மத வென தண்ணீர் வரப்போவதால் பொன் விளையப்போகும் காணி, அதனால் அவனுடைய குடும்பத்தில் ஏற்படப் போகும் மகிழ்சிப் பிரவாகம்..... எல்லாமே அளிக்கப் போகும் வாக்குச் சீட்டால் ஏற்படப்போகும் நன்மைகள் என வெள்ளையன் நினைத்தான்.

`நான் தான் இந்த நாட்டின் ஆட்சியாளர்களையே நியமிக்கப்போறவனாக்கும்!' என அவனுடைய மனம் நினைத்து அந்த எண்ணத்திலேயே இலயித்தது.

வாக்குச் சாவடிக்குள் கொடுத்த வாக்குச் சீட்டைப் பெற்று மமதை நடையுடன் புள்ளடியிடுவதற்கான மேசையை அடையும் வரை அவன் கனவு உலகில் சஞ்சரித்தான்

`நான் இடப்போகும் இந்தப் புள்ளடிகள் ஒரு மாதத்துக்குள் என் மகனை அரச கதிரையொன்றில் இருத்திவிடும். வாய்க்காலை வெட்டிட்டாங்கன்னா இரண்டு போகமும் ஒழுங்காக செய்துடலாம். ஒரு போகத்தை வெட்டி மறு போகம் செய்யறதுக்கிடையிலே மாற்றுப் பயிரா பாசிப்பயறு போடலாம். முதல்ல வீட்டுக்கு மின்சார சப்ளை எடுத்துடணும். அப்புறம்....? அறுதலி மாதிரி வெறும் கழுத்தோட அவள் இருக்காள். அவளுக்கு கட்டின தாலியைக் கூட ஈடு வைச்சி தின்னுட்டேன். சரி சரி. முதல்ல அவரு எம்.பி.யாயிடட்டுமே.'

அலை பாய்ந்த மனதைக் கட்டுப்படுத்தி புள்ளடிகளையிட்டு மடித்து பெட்டிக்குள் போட ஒரு நிமிட நேரம் எடுத்தது. அந்த ஒரு நிமிடம் வெள்ளையன் தன்னை ஒரு நிறைவான மனிதனாக நினைத்த நேரமாகும்.

★ ★ ★

பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்று முடிந்த மறுநாள் காலை. அரசாங்க அதிபரின் மனைவி வழமைப் பிரகாரம் அதிகாலையிலேயே எழுந்து விட்டார். பூஜை அறைக்குள் சென்று ஊதுபத்தி கொளுத்தி, வாசலுக்குச் சென்று பூக்கள் கொய்துவந்து வழக்கமாகப் பாடும் தேவாரங்களைப் பாடி பூசையை முடித்துக்கொண்டார். காயத்ரி மந்திரங்களைப் பதிவுசெய்து வைத்திருந்த கசெற்றை டேப் ரெக்கோடரில் வைத்து முடுக்கிவிட்டார்.

அறையொன்றினுள் சயனித்துக்கொண்டிருந்த அவருடைய பேரப்பிள்ளைகள் இரண்டும் அப்போதுதான் எழுந்து நித்திரை மயக்கத்தில் வெளியே ஹாலுக்கு வந்தன. அப்பிள்ளைகளின் பெற்றோரான அவருடைய மகளும் மருமகனும் கனடாவில் வசிக்கின்றனர்.

பாத்றூமுக்குச் சென்று விட்டு வந்த பிள்ளைகள் இருவரும் சோர்ந்து துவண்டு போய் அநாதரவாய்க் கிடந்த முதல் நாள் அரசாங்க அதிபரின் கழுத்தை நிமிட நேரம் அலங்கரித்த மாலையை எடுத்து விளையாடத் தொடங்கினர். பூக்கள் அங்குமிங்குமாக சிதறி தரையை அசிங்கப்படுத்தின.

"ஐயையோ! என்னம்மா இது! இப்படி அங்குமிங்குமா பூக்களைப் போட்டு தரையை அசிங்கப்படுத்தினா....? போய் வாசல்ல விளையாடுங்கோ" கூறியவாறு அரசாங்க அதிபரின் மனைவி மூலையில் சாத்தியிருந்த தும்புத்தடியை எடுத்து வந்து உதிர்ந்து சோர்ந்து துவண்டு கிடந்த மாலையையும் பூக்களையும் பெருக்கத் தொடங்கினார்.

★ ★ ★

தேர்தல் முடிந்து மூன்று மாதங்களுக்கு மேலாகி விட்டது. குமரன் பாராளுமன்றக் கதிரையை அலங்கரித்தவாறு யாரோ ஓர் இளைஞன் மனதில் எண்ணியது போன்று விவாதங்களும் உரைகளும் மந்தகதியில் நடைபெறும் வேளைகளிலெல்லாம் பகல் தூக்கம் போடுவதில் கழித்துக்கொண்டிருந்தார்.

இந்த மூன்று மாத இடைவேளைக்குள் வெள்ளையன் பல தடவைகள் பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்கு நடந்து அலுத்திருந்தான். வாக்கு வேட்டைக்காக அவர் அவனுடைய வீட்டுக்கு வந்தபோது வாக்களித்த எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

மகன் தொழில்லாமல்...வயல் நீரில்லாமல்... அவனுடைய மகனும் மனைவியும் அடிக்கடி அவனைப் பார்த்து நையாண்டி வேறு பண்ணத் தொடங்கினர்

''மலையாக அந்த மனிசனை நம்புறதா சொன்னீங்களே. செய்து காட்டியிருக்காரே. எல்லாமே வேஷம்'' என அவனுடைய மகன் ஒருநாள் முகத்தில் படும்படியாகவே கூறிவிட்டான்.

நாட் செல்லச் செல்ல வெள்ளையனுக்கு ஆக்ரோஷம் அதிகரித்தது.. இரண்டிலொன்று பார்த்துவிடுவது என்ற வைராக்கியத்துக்கு வந்த அவன் சாரனை மடித்துக்கட்டியவாறு கால் நடையாக நடந்து குமரனின் வீட்டைச் சென்றடைந்தான். காலை எட்டு மணி இருக்கும். குமரன் இன்னும் கட்டிலை விட்டும் எழுந்திருக்கவில்லை. அவருடைய வேலைக்காரப் பெண்ணிடம் அவரைப்பற்றி விசாரித்தான். அவளுடன் வாக்கு வாதப்பட்டு சற்றுப் பலமான குரலில் அவன் சப்தமிடத் தொடங்க...

உள்ளே தும்புத்தடியால் தரையைப் பெருக்கிக்கொண்டு நின்ற குமரனின் மனைவி ஜன்னலூடாக இந்த காட்சியைக் கண்டு தும்புத்தடியும் கையுமாக வெளியே வந்தாள்.

''பாருங்கம்மா. இந்த மனுசன் ஐயாவுக்கு ஏசுறாரு''

''என்னப்பா? என்ன விசயம்?''

வெள்ளையன் சற்றுப் பலமான குரலில் தனது கட்சியை எடுத்துரைத்தான்.

''அதுக்காக...அவர் ஊரிலே இல்லாத நேரத்திலே காட்டானைப் போல வந்து சப்தம் போடணுமா? அவருக்கு ஆயிரம் வேலை. சரி. சரி. போயிடுட்டு அப்புறமா வந்து சந்தி'' கூறியவாறு கையிலிருந்த தும்புத்தடியால் வராந்தைப் படியைப் பெருக்கத் தொடங்கினாள்.

வெள்ளையன் உலர்ந்து, வெளுத்து, துவண்டு, சோர்ந்து தன்னைத்தான் அவள் தும்புத்தடியால் தள்ளி விடுகிறாள் என நினைத்தவாறு பாதையைப் பார்த்து நடக்கத் தொடங்கினான்.

★ ★ ★

# சீட்டுக்காசி

“உம்மா....உம்மோவ்....” சப்தமிட்டுக் கூப்பிட்டவாறு பத்து வயதான பரகத் வாயிற்கதவினூடாக குசினியை நோக்கி ஓடி வந்தான்.

அவனுடைய தாய் மூமினா குசினிக்குள் ஊஞ்சலில் உட்கார்ந்தவாறு குர்ஆன் ஓதிக்கொண்டிருந்தாள். ஓதிய பக்கத்தில் குறுக்கு நூலை வைத்து குர்ஆனை மடித்த கையுடன் எழுந்து நின்றாள்.

“என்னடா? போனியா? ஆருக்கு உழுந்த?” வழக்கமாக முகத்தில் கொலுவோச்சும் சிடுசிடுப்புடன் கேட்டாள்.

“நமக்குத்தான். நான் எடுத்த துண்டுக்குத்தான் உழுந்த” முகம் நிறைந்த மகிழ்ச்சியுடன் மூச்சிரைத்தவாறு பரகத் கூறினான்.

“சனியன்! இப்பவாவது உழுந்திருக்கே!” அம்மாதத்தில் குலுக்கிய சீட்டுத்துண்டு தங்களுக்கு விழுந்ததுக்காக மகிழ்சியடைவதற்குப் பதில் மூமினா வெறுப்பைக் கொட்டினாள்.

“நமக்காம்மா சீட்டு உழுந்தயாம்? ” கேட்டவாறு வாசல் பெருக்கிக்கொண்டு நின்ற மூத்த மகள் மும்தாஜ் தாயை நோக்கி ஓடி வந்தாள். அவள் வயதாகி வீட்டில் சிறைப்பட்டு ஐந்து வருடங்களுக்கு மேலாகின்றன. அவளுக்கு மூன்று வருடங்களால் சிறியவளான சுரையாவும் பாடசாலைக் கல்விக்கு தலாக் கூறிவிட்டு வீட்டில் அடைபட்டுள்ளாள். மும்தாஜை யாருக்காவது கையளிக்கலாமென்றால் குடியிருக்கும் பழைய வீடு முட்டுக்கட்டையாகத் தடை செய்கிறது.

“ஓ.ஓ. சனியன்! அந்தா உழும் இந்தா உழுமென்று இருபத்துநாலு மாசம் காத்துக்கிட்டு இருக்க வைச்சிட்டு” மீண்டும் மூமினா வெறுப்பைக் கக்கினாள்.

“முப்பதாவது கடைசிச் சீட்டு உழாம ஆறு மாசம் முந்தி நமக்கு உழுந்திருக்கேன்னு சந்தோசப்படும்மா” என்றாள் மும்தாஜ்.

“எப்பம்மா காசி கிடைக்கும்? சுளையா முப்பதினாயிரம் தருவாங்க இல்லியா? ” பாத்திரங்கள் கழுவிக்கொண்டு நின்ற சுரையா கேட்டவாறே வந்தாள்.

“அப்பிடித்தானே தரோணும். நம்முட காசி ஆயிரம் கொடுக்காட்டி இருபத்தொன்பதுதான் கிடைக்கும் ” என்றாள் மும்தாஜ்.

“உம்மா... சீட்டுக்காசைக் கொண்டு என்னம்மா செய்யப் போறீங்க?” கேட்டுவிட்டு தாயின் முகத்தை சுரையா உற்றுப் பார்த்தாள்.

அவளது கேள்விக்குப் பதில் அளிப்பதில்தான் மூமினாவுக்கு நிறையவே பிரச்சினைகள் இருந்தன.

★ ★ ★

மூமினாவின் தாயின் தகப்பனுக்கு ஒரு காலத்தில் சிறிய அரிசி ஆலையொன்று சொந்தமாகவிருந்தது. அப்போது கிராமத்தில் அவர் மட்டும்தான் அரிசி ஆலை நடாத்தியதால் `மில்காரன்' என அவரை அழைத்தனர். தான் மில்காரனின் பேத்தி என்ற வரட்டுக் கௌரவம் காரணமாக, தனக்குக் கூடிய அந்தஸ்த்தும், மரியாதையும் கிராமத்தார்களிடமிருந்து கிடைக்கவேண்டுமென இவள் எப்போதுமே எதிர்பார்த்தாள்.

இவளுடன் கூடப் பிறந்தவர்களில் மூத்தவளைத் தவிர மற்ற மூவரும் ஆண்கள். மூத்தவள் கணவனை இழந்து விதவையாக எங்கேயோ ஒரு சிற்றூரில் பிள்ளை குட்டிகளுடன் கஷ்ட ஜீவனம் நடத்துகிறாள்.

மூமினா பூப்பெய்திய இரண்டு வருடங்களில் அரசாங்கக் காரியாலயமொன்றில் கடமைமையாற்றிக்கொண்டிருந்த மன்சூர் அவளை மனைவியாக்கிக் கொண்டான். அவன் கிராமத்தில் ஏழைக் குடும்பமொன்றைச் சேர்ந்தவன். மில்காரனின் பேத்தியான தன்னை ஏழை உத்தியோகத்தனொருவனுக்கு மணமுடித்துக் கொடுத்ததை அவளால் சீக்கிரத்தில் சீரணிக்க முடியவில்லை. இயற்கையிலேயே சற்றுச் சிடுசிடுப்பான அவள், நாளாவட்டத்தில் ஒன்று, இரண்டு என பிள்ளைகள் கூடிக்கொண்டு போனபோது, பொருளாதாரச் சுமைகள் கழுத்தை அமர்த்தும் வேளைகளிலெல்லாம் வெடித்துச் சிதறத் தொடங்கினாள். அவளுடைய கோப வெய்யில் அப்பாவிப் புருசனையும், பிள்ளைகளையும் சுட்டெரிக்கும்.

மூமினா கோபக்காரியாகவிருந்தாலும் அதீத மார்க்க பக்தியுள்ளவள். பொதுவாக தினமும் தஹஜ்ஜத் தொழுகைக்காக எழுந்துவிடுவாள். தொழுகை முடிந்து தஸ்பீஹ் சொல்லியவாறே சுப்ஹுக்காகக் காத்திருந்து சுன்னத்துகளுடன் தொழுவாள். தொடர்ந்து தொழுத பாயில் இருந்து புனித குர்ஆன் ஓதுவாள். ஏழரை வாக்கில் லுஹாத் தொழுகையுடன் முடித்துக்கொள்வாள்.

தொழுத பாயிலிருந்தும் அவள் எழுந்ததுக்குப் பின்னர்தான், சுப்ஹு தொழுதுவிட்டு மீண்டும் நித்திரையான அவளுடைய இரு குமர்களும் துயில் நீங்கி எழுவர். பாடசாலைக்குச் செல்லும் பரக்கத்தையும் மற்ற ஒருத்தியையும் பரக்கப்பரக்கச் செயற்பட்டு அனுப்பி வைப்பர்.

கணவன் காரியாலயத்துக்குச் சென்ற பின், மூன்று பெண்களும் வீடு வாசல் பெருக்குவது போன்ற வேலைகளை முடித்து, அன்றைய சமையலைத் தொடங்குவர். மூவர் சேர்ந்து எழுவருக்குச் சமைப்பர்.

சமையல் முடிந்ததும் அவர்களுக்கு வீட்டில் எந்த வேலைகளும் இருப்பதில்லை. மதிய உணவின் பின் ஆழமாக நித்திரை செய்வர்.

பிற்பகலில் மூமினாவுடன் கதைத்துக்கொண்டிருக்க வரும் பெண்களுடன் சேர்ந்து கிராமத்தார்களின் சகல வம்புகளையும் அளப்பாள். சகட்டுமேனிக்கு யார்யாருக்கெல்லாமோ ஏசுவாள்.

அவளுடைய கணவன் மன்சூர் தானுண்டு, தனது கடமையுண்டு என வாழ்பவன். தனிப்பட்ட கடிதமொன்றை எழுதுவதற்குக்கூட காரியாலய கடதாசியைப் பாவிக்க விரும்பாத நேர்மையாளன். மாதக் கடைசியில் பெறும் வேதனத்தை எண்ணித்தானும் பார்க்காது மனைவியின் கரங்களில் ஒப்படைப்பவன். மேலதிக நேர வேலை செய்ததால் கிடைத்த ஊதிபத்தைச் சேமித்து அந்நாட்களில் ஒன்றிரெண்டு பவுண் நகை செய்து பிள்ளைகளின் கழுத்து, கையென அணிந்து மகிழ்ந்திருக்கிறான்.

உத்தியோகம் பார்க்கத் தொடங்கி சுமார் முப்பது வருட காலத்தின் பின்னும் அவனுக்குக் கிடைக்கும் வருமானம் நாளாந்த வாழ்க்கைச் செலவுக்கே அல்லாட வைத்தது. மனைவியோ, பிள்ளைகளோ எதையாவது வாங்கித் தருமாறு கேட்கும் போதெல்லாம் வழக்கமான றெடிமேட் பதிலைக் கூறி சமாளித்து விட்டதாக திருப்திப்பட்டுக் கொள்வான்.

"சம்பளம் கூடட்டும். வாங்கித் தாரேன். "

எப்போது சம்பளம் கூடும் என்பது அவனுக்கே தெரியாது. அரசியல்வாதிகள் "வாழ்க்கைச் செலவு அதிகரித்துவிட்டது. அரசாங்க ஊழியர்களின் வேதனங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுப்போம் " எனக் கூறி ஏமாற்றுவதைப் பார்த்து இவனும் தன் குடும்ப இதயத் தளிர்களை ஏமாற்றப் பழகிக்கொண்டான்.

"எப்ப வாப்பா சம்பளம் கூடும்? " ஒரு பிள்ளை எப்போதாவது எதிர்த்துக் கேட்கும்.

"அதான் அடிக்கடி மந்திரிமாரெல்லாம் சொல்றாங்களே. பட்ஜட்ல கூட்டுவாங்க"

வேதன அதிகரிப்புக்காக எந்தச் சங்கம் எவ்விடத்தில் கூட்டம் நடாத்தினாலும் மன்சூர் ஆஜராவான். ஊர்வலத்தில் கொடி பிடிப்பான்.

"உயர்த்து! உயர்த்து! வேதனத்தை உயர்த்து! " என தொண்டை கிழியக் கத்தி முடிந்து வீட்டுக்கு வந்து, நோவுக்கு சுடுநீர் ஒத்தடம் கொடுப்பான்.

காரியாலயம் முடிந்து வீட்டுக்கு வந்த பின் தனது பொழுதை அவமே கழிப்பான். சொந்தக்காரர்களின் வீடுகளுக்குச் சென்று வம்பளப்பான். தெருக்களில் தெரிந்த முகங்களைச் சந்தித்தால் நின்று கதையளப்பான்.

"ஏன் அங்க இஞ்சயென்டு போய் அலையிறீங்க? ஊட்ட இருங்களேன்" என்பாள் ஒரோர் சமயங்களில் மூமினா கணவனைப் பார்த்து.

"இஞ்ச இருந்து ஒன்ட தொணதொணப்பைக் கேக்கயா? ஒரு ரீவி இருந்தாலும் பொழுது போகும். அத வாங்க நமக்கிட்ட வக்கில்ல. நாலு பேரச் சந்திச்சி கதைச்சிக்கொண்டிருந்தா பொழுது போயிடும் " என்பான்.

"ஓ.ஓ. உங்களப் போல ஹறாம் ஹலால் பார்த்தா ரீவியும் வாங்கலாம். அதுக்கு மேலயும் வாங்கலாம் " கூறிவிட்டு மூமினா முகத்தை நொடிப்பாள்.

"கொஞ்சம் பொறு. சம்பளம் கூடட்டும். "

"ஒவ்வொரு வருசமும் இந்தப் பஞ்சப்பாட்டுத்தானே பாடுறீங்க. நீங்களாவது! வாங்கிறதாவது! "

மூமினாவின் சகோதரர்களில் மூத்தவன் அவனுடைய மனைவி மூலமாகக் கிடைத்த வயற்காணியில் வேளாண்மை செய்கிறான். ஆரம்பத்தில் சிறுகச் செய்தவன் இப்போது சொந்தக்காணி, குத்தகைக்காணியென செய்கையை விஸ்தரித்துள்ளான். வேளாண்மை செய்யத் தொடங்கிய ஆரம்ப காலங்களில் அறுவடை முடிந்த பின் சில மரைக்கால் நெல்லை தங்கையின் வீட்டுக்கு அனுப்பி வைப்பான். காலப்போக்கில் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக அவனது மனைவியின் விருப்பமின்மையாலோ, வேறு காரணங்களினாலோ அவனிடமிருந்து ஒரு பருக்கைதானும் இவளுக்குக் கிடைப்பதில்லை. தங்கையின் வீட்டுக்கு வருவதைக்கூட குறைத்துக்கொண்டான். அவனுடைய விதவைச் சகோதரியின் வீட்டுக்கும் அவன் போவதில்லையென மூமினா அறிந்திருந்தாள். ஏதாவது நன்மை தீமைகள் வீட்டில் நடைபெறும் சந்தர்ப்பங்களில் ஆளனுப்பி அழைத்தால் வந்து கலந்து கொள்வான்.

ஒவ்வொரு போக அறுவடை முடிந்ததும் கிடைக்கும் இலாபப் பணத்தில் ஆடம்பரமானதெனக் கருதப்படும் டெலிவிசன், பிறிஜ் என பலதையும் வாங்கி அவ்வருடத்தின் உழைப்பின் பலனை அப்பொருட்களை உற்பத்திசெய்யும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவிடுவான். இந்த வரிசையில் கடைசியாக அவன் வாங்கியது விலைகூடியதொரு மோட்டார் சைக்கிள். மூத்த சகோதரன் அத்தகையவைகளை வாங்கியதாக கேள்வியுற்றதும் மூமினா பொறாமை வெடித்து எரிச்சலாக வாந்தியெடுப்பாள்.

இவளுக்கு ஐந்து வயது இளைய சகோதரனை சிறு வயதில் இவள்தான் வளர்த்தாள். அவன் பிறந்து இரண்டு வருடங்களில் தாய் இன்னுமொருவனைப் பெற்றதால் அவனை வளர்க்கும் முழுதான பொறுப்பு மூமினாவின் தலையில் வீழ்ந்தது. "ராத்தா..ராத்தா...."என கன்றுக்குட்டியாக அவன் அவளோடு ஒட்டி, உறவாடி, ஓடிப்பிடித்து, உணவுண்டு, ஊஞ்சலாடி மகிழ்ந்த அந்தப் பொற்காலம் இன்னும் மூமினாவின் மனதில் நிழலாடும்.

அவன் ஐந்தாம் வகுப்பு படித்த கையுடன் பாடசாலையிலிருந்தும் விலகி, மலை நாட்டுப் பட்டண ஜவுளிக்கடையொன்றில் சேர்க்கப்பட்டான். குடும்பத்தின் நைந்த பொருளாதாரம் மேற்கொண்டும் அவனைப் படிப்பிக்க இடமளிக்கவில்லை. விற்பனையாளனாக நீண்ட நாட்கள் பணியாற்றியபின், கையிலிருந்த சொற்ப முதலுடன் அங்காடி வியாபாரத்தைத் தொடங்கினான். அந்நாட்களில்தான் அவனது திருமணம் நடைபெற்றது.

அவனும் அவளது வீட்டுக்கு வருவதை சிறுகச்சிறுக குறைக்கத் தொடங்கினான். அங்காடி வியாபாரம் செய்த பட்டணத்தில், வசதியாகக் கிடைத்த கட்டிடமொன்றை வாடகைக்குப் பெற்று, தனது மனைவி, அவளது சொந்தக்காரர் என அழைத்து தடபுடலாக ஜவுளிக்கடையொன்றைத் திறந்தான்.

தோணி நிறைந்த மீன்களுடன் கடலிலிருந்து கரைசேரும் செம்படவன் எட்டி நின்று தோணியினுள் மீன் பார்க்கும் தெரிந்தவர்களைக் கண்டுகொள்ளாதவனாக இறுகிய முகத்துடன் செயற்படுவதைப் போன்று அல்லது தெரிந்த பொலிஸ்காரன்தானேயென்று பொலிஸ் நிலையம் சென்றால் அவன் பாரா முகத்துடன் செயற்படுவதைப் போன்று ஜவுளிக் கடை திறந்த நாளிலிருந்து அவனும் மூமினாவின் வீட்டுக்கு வருவதை நிறுத்திக்கொண்டான். அவனது கையில் இப்போதெல்லாம் எக்கச்சக்க பணம் வழிந்தது.

தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான பணத்தை உழைத்துக்கொண்டதும், சமூக மதிப்பு, அந்தஸ்த்து ஆகியவை கிடைப்பதற்காக குடும்பத்தினர் தவிர்ந்த அன்னியர்களுக்கும், பொதுநல விடயங்களுக்கும் தாராளமாகத் தானம் செய்கிறானென மூமினா கேள்வியுற்றிருந்தாள்.

மூமினாவின் ஆக இளைய சகோதரன் சாதிக் மட்டும் மற்றவர்களிலிருந்தும் சற்று வேறுபட்டவன். தாயுடன் வசிக்கும் அவன் பல்கலைக்கழகமொன்றில் கல்வி பயில்கிறான். யதார்த்தமான சிந்தனையுடையவன். விடுமுறையில் வரும்போதெல்லாம் இவளது வீட்டுக்கு

வருவான். மணிக்கணக்கில் கதைத்துக்கொண்டிருப்பான். மற்றச் சகோதரர்கள் இவளை ஓரக்கண்களால் பார்ப்பதையிட்டுப் பொருமுவான்.

மூமினாவின் மூத்த மகனுக்கு வயது இருபதுக்கும் மேலாகி விட்டது. அட்வான்ஸ் லெவல் சித்தியடைந்தும் பல்கலைக்கழகத்துக்குப் போகமுடியாத அபாக்கியசாலி. அரசாங்க தொழில் தேடுபவர்களின் பட்டியலில் இடம் பிடித்துள்ளான். அரசியல்வாதிகளின் பின்னாலும், முன்னாலும் அலைகிறான். பொழுதைக் கழிப்பதற்காக நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று தொலைக்காட்சிப் பெட்டியின் முன் குந்திக்கொள்கிறான்.

"நீ வயதுக்கு வந்த ஆம்புள. அவங்கட இவங்கட ஊடுகளுக்கெல்லாம் அடிக்கடி போகாத" மூமினா மகனைப் பார்த்துக் கூறுவாள்.

"போகாம ஊட்டேயே நிக்கலாம்தான். ஆனா, பொழுது போறதுக்கு ஒரு ரீவி, றேடியோ இஞ்ச இருக்கா? தரித்திரம் புடிச்ச ஊடு! "

அவனின் கூற்றைக் கேட்டு அவள் சரேலென தனது கணவன் மீது கோபம் கொள்வாள். அவன் காரியாலயம் முடிந்து வீட்டுக்கு வந்ததும் வராததுமாக பாய்ந்து குதறவேண்டுமென எள்ளும் கொள்ளும் முகத்தில் வெடிக்க காத்துக்கொண்டிருப்பாள்.

`மில்காரன்ட பேத்திய அந்தத் துப்புக்கெட்ட பரதேசிக்கு கட்டிக்கொடுத்ததால வந்த வினை!' தலையைக் கைகளால் பொத்தியவாறு அழுவாள்.

விடுமுறையில் நின்ற சாதிக் இவளைப் பார்ப்பதற்காக ஒரு நாள் வந்தான். மூமினா குர்ஆன் ஓதிக்கொண்டிருந்தாள்.

"என்ன ஓதிக்கொண்டிருந்தே? " மூமினாவைப் பார்த்துக் கேட்டான்.

"ஏன் தெரியல்லே?. குர்ஆன். " றேஹான்பலகையிலிருந்த குர்ஆனை மடக்கியவாறு பதிலிறுத்தாள்.

"அது தெரியும். நான் கேட்டது குர்ஆனில எதை ஓதினாயென்டு? "

ஓதிய சூராவைக் கூறினாள்.

"நான் அதையும் கேக்கல்ல. இதுவரை ஓதினியே அதிலயிருந்து என்ன விளங்கிக்கொண்டாயென்று கேட்டேன். "

"எனக்கொன்றும் விளங்கல்ல. ஓதணும்னு ஓதிக்கொண்டிருந்தேன். "

"விளங்காம ஓதி என்ன பிரயோசனம்? "

"ஓதினா நன்மை கிடைக்கும்தானே. "

"கிடைக்கும்தான். ஆனா, குர்ஆன் ஓதுறதுக்கு மட்டும் உள்ளது இல்ல. அதில என்ன சொல்லியிருக்கிறதென்று தெரியணும். அதன்படி வாழ்ந்தாத்தான் நன்மை கிடைக்கும், சொர்க்கத்துக்கும் போகலாம் " என்றான் சாதிக் சிரித்தவாறு.

"நீ சொல்றமாதிரியெல்லாம் செய்யச் சொல்லிச் சொல்லல்ல. குர்ஆனை ஓதச்சொல்லித்தான் சொல்றாஹு."

"உன்னையெல்லாம் திருத்தவே ஏலா. நல்லா ஓது. பொழுதைக் கழி. அது சரிய்.. உன்ட மூத்த மகன் எங்க? "

"ஆராவது கூட்டாளிமாரைப் பார்க்கப் போயிருப்பான். "

"இன்னும் தொழில் ஒன்றும் கிடைக்கலியா? "

"அது எங்க கிடைக்கப்போகுது. முசல் கொம்பு."

"முயல் கொம்பென்று சீவியம் முழுவதும் சும்மாவே இருக்கிறதுதானா?"

"வேற என்ன செய்யிற? "

"ஒரு கடையிலே போய் நிக்கலாம்."

மூமினா சரேலென எரிச்சலுற்றாள். தனது சகோதரனான அவன் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும்போது, அவனைப் போல் உயர் தரப் பரீட்சை சித்தியடைந்த தன் மகனை கடையொன்றில் கூலிக்காரனாகப் பணியாற்றச் சொன்னதற்காக அவன் மீது கோபமுற்றாள்.

"சீ! வாயைக் கழுவு! மில்காரன்ட பேத்திட மகன் அட்வான்ஸ் லெவல் படிச்சிட்டு கடையில கூலிக்காரனா நிக்கிறதா? "என்றாள் முகம் நிறைந்த வெறுப்புடன்.

"இந்தப் பெருமையெல்லாம் பார்த்த காலம் மலை ஏறிப் போச்சு. கூலித் தொழிலென்றாலும் செய்து குடும்ப வருமானத்தை அதிகரிக்கப் பார்க்கணும் " என்றான் சாதிக் விட்டுக்கொடுக்காமல்.

"அப்போ என் மகனை மண் அள்ளுற, மூடை சுமக்கிற, றோட்டுக் கூட்டுற வேலைகளுக்கு அனுப்பணும்னு சொல்றியா? " மூமினாவின் முகம் நிறைய கடுகடுப்பு.

"அனுப்பினா என்ன? எல்லாம் தொழில்தானே. ஒருவர்ர உழைப்பில மட்டும் தங்கிக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, மற்றவங்களும் உழைக்கலாமே" சாதிக் கூறிவிட்டு சில வினாடிகள் வீட்டு முற்றத்தை உற்றுப் பார்த்தான்.

"தபாரு ராத்தா. உன்ட இந்த வளவிலேயே பல ஆயிரம் ரூபா உழைக்க வசதியிருக்கு" என்றான்.

மூமினாவின் வீடு அமைந்திருந்த காணி சற்று விசாலமானது.

"இங்க என்ன வசதியிருக்கு? " கேட்டாள்.

"வளவு முழுவதும் மரக்கறித் தோட்டம் போடலாம். வளர்ந்த பிள்ளைகள் மூணு பேர் உனக்கு இருக்கு. எல்லாருமா சேர்ந்து செய்யலாம் " கூறிவிட்டு சகோதரியை உற்றுப் பார்த்தான்.

மூமினாவுக்கு அவன் மீது அதீத எரிச்சல் ஏற்பட்டது.

“மில்காரன்ட பேத்திட பிள்ளைகள் மண்வெட்டி பிடித்து மண் கொத்தி பயிர் செய்யவேண்டுமென்று சொல்ற உனக்கு மான, ரோசமே இல்லியா? ” கேட்டாள்.

”இது மான ரோசப் பிரச்சினையே இல்ல. சரி. அதைச் செய்ய வாணா. கோழி வளர்க்கலாம். ஆடு வளர்க்கலாம். இடியப்பம் அவித்து கடைகளுக்குக் கொடுக்கலாம். ஏதாவது ஒன்றோ, பலதோ தொழில் செய்து குடும்ப வருமானத்தை அதிகரிக்கணும். ஒவ்வொருவருக்கும் ரெண்டு கால்களும், ரெண்டு கைகளும் இருக்கு. அவைகளைக் கொண்டு உழைக்கணும். இல்லையென்றா பஞ்சப் பாட்டே பாடக் கூடாது” என்றான் சற்று ஆக்ரோசமாக.

“வருமானத்தை அதிகரிக்கணும்னு வேசையாடலாமா? நாம ஆரு, நம்முட குடும்பம் எப்படிப்பட்டது என்ற எண்ணம் முதல்ல நமக்குத் தெரியணும். கோழி, ஆடு, மாடு வளர்க்க கள்ளன் உடுவானா? புடிச்சிக்கிட்டுப் போயிடுவானுகள். என்ன செய்யிற! அல்லா நமக்கு அளந்தது அவ்வளவுதான் என்டு பொறுமையோடு வாழ வேண்டியதுதான். பொறுமையாளர்களுக்குத்தான் சொர்க்கம் கிடைக்குமாம். இந்த லோகத்திலேதான் தராட்டியும், மவுத்துக்குப் பொறவு மத்த லோகத்திலேயாவது தருவான்தானே” கூறியவாறு மூமினா பெருமூச்செறிந்தாள்.

மீண்டும் தொடர்ந்தாள் ”இப்படியெல்லாம் சொல்ற நீ உன் படிப்பை முடிச்சிட்டு வந்து அரசாங்க தொழில்தானே தேடப் போறே?”

“அதான் இல்ல. நீ பாரேன். கற்றவன் என்ற மமதையே இல்லாம எந்தத் தொழில் வாய்ப்பாய்ப் படுதோ நான் அதைத்தான் செய்வேன்.”

“ஓ.ஓ. மில்காரன்ட பேரன் போய் நின்டு றோட்டுக் கூட்டு.”

`திருத்தவே முடியாத ஜென்மங்கள்!’ நினைத்தவாறு அவன் போவதற்காக எழுந்தான்.

இன்னுமொரு நாள் சாதிக் இவளின் வீட்டுக்கு வரும்போது, மூமினா கணவனுடன் பலத்த வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதைக் கண்டான்.

“என்ன பிரச்சினை?” கேட்டான்.

“புள்ளைகள் போட்டுக் கேக்க சின்ன றேடியோவா ஒன்று வாங்கிட்டு வாங்கன்னு சொன்னா, சம்பளம் கூடட்டும் வாங்குவோம்கிறார். இவருக்கு எப்ப சம்பளம் கூடுற? எப்ப வாங்கிற? ” மூமினா கோபமாகக் கேட்டாள்.

“என்னைக் கேட்டா சம்பள அதிகரிப்பே ஏற்படுத்தக் கூடாது என்பேன்” என்றான் சாதிக் அமைதியாக.

"உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? வாழ்க்கைச் செலவு றொக்கட் வேகத்திலே கூடிக்கொண்டு போகுது. அதுக்கு ஏத்த மாதிரி சம்பளத்தை அதிகரிக்காம விட்டா என்னைப் போன்ற அரசாங்க ஊழியர்கள் செலவை எப்படிச் சமாளிக்கிறது?" மன்சூர் படபடவெனப் பொரிந்தார்.

"உங்களைப் போன்ற அரச ஊழியர்களும், பென்சன்காரர்களும் ஜனத்தொகையிலே நூற்றுக்கு நாலு வீதம்தான். உங்கட மாத வேதனத்தை அதிகரிக்க அரசுக்கு கோடிக்கணக்கிலே பணம் தேவைப்படும். ஒரு கையாலே வேதனத்தை அதிகரித்துவிட்டு, மறு கையால ஏதாவது வரிகளை உயர்த்திடுவாங்க. அதன் காரணமாக பாவனைப் பொருள்களின் விலை கிடுகிடுன்னு ஏறும். இந்த விலை ஏற்றத்துக்கு உங்களைத் தவிர்ந்த மற்ற தொன்னூற்றாறு வீத சனமும் முகம் கொடுக்க வேண்டி நேரிடும். இப்ப சொல்லுங்க. சம்பள அதிகரிப்புத் தேவையா? " கேட்டுவிட்டு அவரின் முகத்தை உற்றுப் பார்த்தான்.

"நீ சொல்றதும் சரிதான். வாழ்க்கைச் செலவைக் குறைக்க என்னதான் செய்யலாமென்கே? "

"அதுக்கு வழி இருக்கு."

"அதான் என்னென்னு கேக்கேன் "

"பாவனைப் பொருள்கள் தொடர்பாக மக்களினது தேவைகளை சரிவரக் கணக்கிட்டு அதுக்கேற்றவாறு உள்ளூர் உற்பத்தியைப் பெருக்க திட்டமிட்டுச் செயற்படணும். தரிசாக் கிடக்கிற ஒவ்வொரு அங்குலக் காணியிலயும் மரக்கறி, தானியங்களென்று உற்பத்தி செய்யணும். நீர் பெறக்கூடிய விசாலமான ஒவ்வொரு வீட்டு வளவிலும் தோட்டப் பயிர் செய்யணும். தொட்டிகளில் பூங்கன்றுகள் வளர்ப்பதற்குப் பதிலாக வெண்டி, கத்தரியென்று வளர்க்கணும். ஆடு, கோழி போன்றவைகளை வளர்க்கணும். பயிர் வளர்ப்புப் பற்றி நிறைய ஆராய்ச்சிகள் செய்து அமுல்படுத்தணும். உணவுப் பொருட்களின் உற்பத்தி தொடர்பாக நாடு தன்னிறைவு அடைய நடவடிக்கை எடுக்குமாறு அரசை வற்புறுத்தணும் " சாதிக் கூறிவிட்டு நிறுத்தினான்.

"வேறு என்ன செய்யலாமென்கே? "

"நமது மக்கள் தங்களது வருமானத்தின் கணிசமானதொரு தொகையை ஆடம்பரப் பொருட்களை வாங்குவதற்காக வருடா வருடம் வெளிநாடுகளுக்கு அள்ளிக் கொடுத்துக்கொண்டேயிருக்காங்க. இந்தப் போக்கை நீடிக்க விடவே கூடாது. தமது உற்பத்திப் பொருட்களை விற்பது மூலமாக நமது உழைப்பின் பலனை அவங்க உறிஞ்சிடுறாங்க. "

மைத்துணன் சாதிக் கூறியதையெல்லாம் மன்சூர் செவியுற்றவாறு இருந்தார். அருகில் நின்ற மூமினாவுக்கு அவன் கூறியவைகளில் அநேகமானவை விளங்கவேயில்லை.

★ ★ ★

"உம்மா... என்னம்மா பேசாமயிருக்கீங்க? சீட்டுக்காசை என்ன செய்யப் போறீங்க? " தொடர் சிந்தனையிலிருந்த தாயின் தோளைத் தொட்டு சுரையா மீண்டும் கேட்டாள்.

"எனக்கு பொறந்த இடத்தாலேயும் எந்த சுகமும் இல்ல. வாழ்க்கைப்பட்ட இடத்திலேயும் தரித்திரம்தான். " மனதினுள் எழுந்ததை அடக்க முடியாமல் வெளியில் கக்கியவாறு மூமினா சுதாரித்தாள்.

"என்னம்மா சொல்றே? "

"ஒண்ணுமில்லடி. எல்லாம் என் விதி! என்ன கேட்டே? சீட்டுக்காசை என்ன செய்கிறதென்றா? வாப்பாவோடயும் யோசிச்சி முடிவு பண்ணுவம். "

சில நாட்கள் சென்றன.

கடந்த இருபத்து நான்கு மாத காலமாக தங்களின் வருமானத்தில் சேமித்ததும், இன்னும் ஆறு மாதங்களுக்கு கடன் இறுக்கவேண்டியதுமான முப்பதாயிரம் ரூபாவுக்கு வாங்கப்பட்ட அழகிய வடிவத்திலமைந்த வர்ண தொலைக்காட்சிப்பெட்டியொன்றை மன்சூர் வீட்டுக்குக் கொண்டு வந்தார்.

வறுமை வாழ்க்கையின் மத்தியில் சேமித்த அவர்களது பணத்தில் உள்ளூர் வியாபாரிகளின் இலாபம், இறக்குமதி வரி ஆகியவை தவிர்ந்த மிகுதி முழுவதையும் தொலைக்காட்சிப் பெட்டியைத் தயாரித்த நாடு கபளிகரம் செய்துகொண்டது.

குடும்ப அங்கத்தவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் அவ்வவ்வாறே இருக்க, அவர்கள் இப்போதெல்லாம் தொலைக்காட்சிப்பெட்டியின் முன் தங்களின் பொழுதைக் கழிக்கின்றனர்.

★★★

தஹஜ்ஜத் – அதிகாலை சுப்ஹு தொழுகைக்கு முன்னர் தொழுவது
தஸ்பீஹ் – அல்லாவின் திருநாமங்களை உச்சரிப்பது
சுப்ஹு – அதிகாலைத் தொழுகை
லுஹா – சூரியன் உதித்த பின்னர் தொழுவது
ஹறாம் – விலக்கப்பட்டவை
ஹலால் – ஆகுமாக்கப்பட்டவை

# வாரிசு

இருந்தாற்போலிருந்து காரிருளைக் கிழித்துக்கொண்டு அந்தச் சப்தம் தெருவெங்கும் கேட்டது.

"கொழும்புல புறை கண்டதால ராவைக்கு நோன்பாங்கா கூய்...." பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் முஅத்தின் தெருத்தெருவாகக் கூவிச் சென்றதை வாசலில் வேப்ப மரத்தின் கீழ் போடப்பட்டிருந்த ஊஞ்சலில் ஆடியவாறு இருந்த நானும் கேட்டேன்.

வராந்தாவில் சாய்மனையில் வாப்பா கோழித்தூக்கம் போட்டுக்கொண்டிருந்தார். உம்மாவும், தங்கச்சி சல்மாவும் குசினிக்குள் சாப்பிட்ட பாத்திரங்களை அலம்பிக்கொண்டிருந்தனர்.

"உம்மோவ்...புறை கண்டுட்டாங்களாம். ராவைக்கு நோன்பாம்" என்றேன் சற்று சப்தமிட்டு.

பக்கத்து வீடுகளில் கசமுச சப்தம் கேட்டது. முஅத்தின் தொண்டை கிழிய கூவும் சப்தம் மீண்டுமொரு முறை மெலிதாகக் கேட்டது.

ஊர் முழுதும் ஒரே இருள். பக்கத்து ஓலை வேலிக்குள் ஒளித்திருந்த சில்லூறு விட்டு விட்டு இரைந்தது. பலா மரத்திலிருந்த சில காய்ந்த இலைகள் மெல்லிய சப்தத்துடன் காற்றில் அசைந்தாடியவாறு வந்து ஊஞ்சலருகில் வீழ்ந்தன.

ஈரக்கையை காய்ந்த துணியொன்றில் துடைத்தவாறு உம்மா வாப்பாவின் அருகில் வந்து, அவருடைய தோளைத் தொட்டு "நோன்பாம். எழும்புங்க" என்றார்.

"புறை கண்டுட்டாங்களாமா? எங்கேயாம்?" என்ற கேள்வியுடனேயே வாப்பா எழுந்து சாய்மனையில் வசதியாக உட்கார்ந்தார்.

"கொழும்பிலயாம். பள்ளிக்குப் போகல்லியா?"

வாப்பா எழுந்து கிணற்றடிக்குச் சென்று முகம் கழுவினார். பக்கத்து வீட்டு இஸ்மாலெவ்வையை பெயர் கூறி சப்தமாக அழைத்தார்.

"என்ன காசீம். நோம்பாமே?" கேட்டவாறு இஸ்மாலெவ்வை கையில் டார்ச் லைட்டுடன் வெளியே வந்து வேலிக்கு அப்பால் நின்றார்.

"ஓமாம். நான் கொஞ்சம் கண் அயர்ந்துட்டன். அவதான் எழுப்பிச் சென்னா. பள்ளிக்குப் போறல்லியா?" வாப்பா கேட்டார்.

"போகத்தான். இன்டைக்கு தலை நோம்புதானே. கொஞ்சம் பிந்தித்தான் தறாவீஹ் தொழுவாங்க. போகக்க கூப்புடுங்க. நானும் வாறன்."

இஸ்மாலெவ்வையை அனுப்பிவிட்டு ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்த என்னை நோக்கி வாப்பா வந்தார். "ஏன்டா இன்னும் படுக்கலியா? போய்ப்படு" என்றார்.

நான் ஒன்றும் பேசவில்லை. வெடுக் என ஊஞ்சலிலிருந்தும் எழுந்து உம்மாவின் அருகில் சென்று அவரின் காதுக்குள் முணுமுணுத்தேன். உம்மா சிரித்தார். "நீயே வாப்பாக்கிட்ட செல்லேன்" என்றார்.

"ஏலா. நீங்கதான் செல்லுங்க."

"ஏங்க. இவனும் பள்ளிக்கு வரப் போறானாம். கூட்டிட்டுப் போங்க."

"இப்பவே பத்தாகிடுச்சி. தொழும்போது சுஜூதிலே நித்திரையாகிடுவான். இன்னொரு நாள் பார்க்கலாம்" என்றார் சற்றுக் கண்டிப்பாக.

அவர் கூறியதைக் கேட்டதும், நான் கால்களைத் தரையில் தேய்த்து, உம்மா உடுத்திருந்த சீலையைப் பிடித்து இழுத்து அடம் பண்ணினேன்.

"நான் ஒன்னும் நித்திரைகொள்ளமாட்டேன். கூட்டிட்டுப் போகச் செல்லுங்க" என்றேன்.

"நீங்க பள்ளிக்குப் போன பின்னாலே என்னை வைச்சு நெருப்பெடுப்பான். கூட்டிக்கொண்டே போயிடுங்க" என்றார் உம்மா.

பக்கத்து வீட்டு இஸ்மாலெவ்வையும், வாப்பாவும், நானும் இருள் கௌவிய தெருக்கள் ஊடாக சற்றுத் தூரத்தே இருந்த பள்ளிவாசலை நோக்கி டார்ச்லைட் வெளிச்சத்தில் நடந்தோம். சந்தியொன்றில் கிராமசபைக்குச் சொந்தமான கண்ணாடிக் கூண்டுடன் கூடிய எண்ணெய் விளக்கு மெலிதாக ஒளி உமிழ்ந்தது. சுவர்க்கோழிகள் பெரிதாகக் கத்தின. மையவாடியில் இலை பரப்பிய பற்றைகள் குட்டி யானைகளாக பயம் காட்டின. வானத்தில் வானவெடித் துகள்களாக நட்சத்திரங்கள்.

தராவீஹ் தொழுதுவிட்டு வீட்டுக்கு வரும்போது இரவு பன்னிரெண்டைத் தாண்டிவிட்டது. வந்ததும் வராததுமாக உம்மா கரைத்து வைத்திருந்த சர்பத்தைக் குடித்தேன். கசகசாக் கொட்டைகளின் பஞ்சு ருசியைச் சுவைத்ததுடன், பற்களுக்கிடையில் வைத்து கொட்டைகளைக் கடிக்கலாமாவென்ற முயற்சியிலீடுபட்டு தோற்றுப்போனேன்.

"நீயும் நோம்பு புடிக்கிறானே?" உம்மா கேட்டார்.

"என்ன கேள்வி இது? அவனுக்கு வயசு பதினொன்றுக்கு மேலாகிது. முப்பது நோன்பும் அவன் தப்பாமப் பிடிக்கணும்" என்றார் வாப்பா.

என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. முன்னைய வருடங்களிளெல்லாம் நான் நோன்பு நோற்பதென்றால் என் முயற்சிக்கு எதிராக இருப்பவர் வாப்பாதான். இப்போது வாப்பாவே சொல்லிவிட்டார்.

“சரி.சரி. போய்ப் படு. சஹருக்கு எழுப்பறோம்.”

பாயைத் தட்டிவிட்டு வராந்தாவின் ஓரத்தில் விரித்தேன். மெலிதான எண்ணெய் நாற்றமடித்த தலையணையை தொபீரென பாயில் போட்டேன்.

“ஏன்டா வராந்தையிலே படுக்கப் போறே? அறைக்குள்ள போய் கட்டிலிலே படு” என்றார் வாப்பா.

வராந்தையில் பாய் விரித்துப் படுப்பது தொடர்பாக எனக்குள் பெரியதொரு எதிர்பார்ப்பு இருந்தது. அதை அவர்களிடம் சொல்ல நான் விரும்பவில்லை. அப்படித்தான் சொன்னாலும் வாய்விட்டுச் சிரிப்பார்கள்.

“உள்ளே ஒரே புழுக்கம். வாப்பா வராந்தையிலேதானே படுப்பார். நானும் இங்கதான் படுக்கப் போறன்.”

“வாணா மகன். வாசல் முழுதும் ஒரே இருட்டு. நீ பயந்து போயிடுவே. உள்ளேயே போய்ப் படு” என்றார் உம்மா.

“வெளியே படுத்தா என்ன பயம்? நீ அவனைக் கோழையாகவே ஆக்கிடுவே போலிருக்கு. நீ வராந்தையிலேயே படுடா”

உம்மா இன்னும் குசினிக்குள் சமைத்துக்கொண்டிருந்தார். கோழி இறைச்சிக் கறியின் தாளிப்பு மணம் வீடு முழுதும் பரவியது. பக்கத்து வீடுகளில் பேச்சுக் குரல்கள் கேட்டன. தண்ணீர் அள்ளும் துலாந்துச் சப்தங்கள் கேட்டன.

நான் பாயில் உருண்டுகொண்டிருந்தேன். அறைக்குள் சுவர்க் கடிகாரம் இரண்டு தடவைகள் மட்டும் அடித்துவிட்டு ஓய்வெடுத்தது. பக்கத்தில் பாயில் படுத்திருந்த வாப்பா மெலிதாக குறட்டை விட்டார். உம்மாவும், சல்மாவும் அறைக்குள் கதவைப் பூட்டியவாறு நித்திரை செய்தனர்.

எனக்குள் இருந்த அந்த எதிர்பாப்பு என்னை நித்திரைகொள்ள விடாமல் தடுத்தது. கடந்த ஒரு வருட காலமாக நான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது அது.

நேரம் மெதுமெதுவாகக் கரைந்தது. இன்னும் சுவர்க் கோழிகளின் சப்தம் கேட்டது. நுளம்புகள் செவிகளின் அருகே சிணுங்கிவிட்டு திறந்து கிடந்த கால்களில் கடித்தன. உள்ளே அறைக்குள் சுவர்க் கடிகாரத்தின் டக் டிக் ஒலி வெளியே கேட்டது.

நான் எதை எதிர்பார்த்தவாறு நித்திரையை விரட்டிவிட்டு காத்துக்கொண்டிக்கிறேனோ, அந்தச் சப்தம் இன்னும் கேட்கவில்லை. ஒருவேளை...?

‘அவர் இல்லாமல் வேறு ஆராவது வந்து விட்டால்...? அவர்தான் வருவார். இந்தத் தெரு அவருக்குத்தான் உரியது.’ எனது மனம் அதையும், இதையும் நினைத்து அல்லாடிக்கொண்டிருக்கையில்...

அந்தச் சப்தம் கேட்டது.

தெருவே அதிரக்கூடியவாறு, கும்மிருட்டைக் கீறிக் கிழித்துக்கொண்டு, தஹராவில் தட்டிய இரண்டு சப்தங்கள் கேட்டன. தொடர்ந்து "ஹில்...ஹில்...எழும்புங்கோ" என்ற சப்தமும் கேட்டது.

நான் காதைக் கூராக்கினேன். அத்தனை நேரமும் எதிர்பார்த்திருந்த ஹயாத்து பாவாவின் குரல்தான் அது. நள்ளிரவு நேரத்தில், கர்ணகடூரமாக ஒலிக்கும் தஹராவில் தட்டும் இரண்டு தட்டல்களும், அதைத் தொடர்ந்து இடது கை சிறிய விரலால் சதங்கைகளில் மெதுவாகத் தட்டியவாறும், வலது கையால் தான் பாடும் பாடல்களுக்கேற்ற தாளம் தட்டியவாறும் தெரு முழுதும் அவர் பாடிக்கொண்டு செல்வதைக் கேட்பதென்றால் ... அதைவிட மகிழ்ச்சியான பிறிதொன்றைக் கற்பனை பண்ணித்தானும் பார்க்கக்கூட என்னால் இயலாமல் இருந்தது.

ஹயாத்து பாவா பாடியவாறே எனது வீட்டுப் பக்கமாக வருவது கேட்டது.

"ஆலம் படைத்தவனைப் பயந்து
அழகாக நடங்களென்றார் முஹம்மத்
எந்தன் ஸலவாத்தைச் சொல்வோர்கள்
என்னுரித்தாளரென்றார் முஹம்மத்
ஸலவாத்துச் சொன்னோர்க்கு ஸபாஅத்
நான் செய்வேன் என்றுரைத்தார் முஹம்மத்....."

பாவா ஒவ்வோர் அடியாகப் படித்து, இசைக்கேற்றவாறு தஹராவில் தாளம் தட்ட, அவரின் பின்னால் லாந்தரை ஏந்தியவாறு நடந்து செல்லும் சிறு பையனொருவன் "அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மது யாரப்பி ஸல்லிவலைஹிவஸல்லம்" என்று பாடிக்கொண்டு வருவதும் கேட்டது.

இருள் கௌவிய முற்றிலுமே நிசப்தமான நள்ளிரவில் ஒலிக்கும் நாதம் பேசும் அந்த தஹரா சப்தம் .... ஹயாத்து பாவாவின் சிம்மக் குரலில் ஒலிக்கும் ஸலவாத்துப் பாடல்கள் ... மணிக்கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கக் கூடியவை.

நீண்ட நாட்களாக எனக்குள் ஒரு கேள்விக்குறி. தஹரா அடித்துப் பாடும் பல பாவாக்களின் பாடல்களைக் கேட்டிருக்கிறேன். ஹயாத்து பாவாவின் தஹரா சப்தம் மட்டும் ஏதோ ஒரு வகையில் வித்தியாசம்தான்.

வாப்பா அசைந்து படுத்தவர் எழுந்து உட்கார்ந்தார். தலையணைக்குக் கீழிருந்த நெருப்புப்பெட்டியை எடுத்து, தட்டி லாந்தரைப் பற்றவைத்தார்.

பக்கத்து வீடுகளிலெல்லாம் ஸஹர் செய்வதற்காக எழும்புவது கேட்டது.

★ ★ ★

நோன்பு பதினைந்தைத் தாண்டி விட்டது.

ஒரு நாள் பிற்பகல் ஹயாத்து பாவா தஹறா தட்டியாறு எங்களது தெருவில் நடந்து வந்தவர் எனது வீட்டின் கேட் அருகே நின்று தட்டத் தொடங்கினார். அகஸ்மாத்தாக வாப்பா வீட்டில் நின்றதால் சப்தம் கேட்டு கேட்டருகில் வந்தார்.

"என்ன பாவா இங்க நின்னு பாடுறீங்க? உரிமையோட உள்ளே வாரதுதானே" என்றவாறு அவரை அழைத்து வந்து வராந்தையில் உட்காரச் சொன்னார்.

"பாவா. நீங்களென்றால் இவனுக்கு உசிர். உங்க பாடல்களைக் கேக்க வேணும்னு ராவைகளிலே நித்திரைகொள்ளாம நீங்க வரும்வரை முழிச்சுக்கொண்டிருக்கான்" என்றார் தூரத்தே சிரித்தவாறு நின்றிருந்த என்னைச் சுட்டிக்காட்டி.

பாவா என்னைப் பார்த்துச் சிரித்தார். நானும் சிரித்தவாறு அவர் அருகில் சென்றேன். என் மனதினுள் அத்தனை ஆசைகளை வளர்ப்பதற்குக் காரணமான அந்தத் தஹறாவை உற்றுப் பார்த்தேன்.

ஏனைய பாவாக்கள் வைத்திருப்பதைப் பார்க்கிலும் இது அகலமானது. விரல்களால் அதைத் தடவிப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் எழ...பெருவிரலால் வழவழப்பான தோலில் தடவி...சிறிது பலமாக பெருவிரலால் தட்டினேன். `ணங்....' என எழுந்த சப்தத்தால் கலவரப்பட்ட வாப்பா, என்னை அதட்டலாகப் பார்க்க.... அதைக் கண்ட பாவா "பரவால்ல காசீம். இந்தா மகன். நல்லா தட்டிப் பாரு" என்றார் தஹறாவைத் தூக்கி என்னிடம் தந்தவாறு.

இடது கையில் அதைத் தாங்கி, வலது கையால் மெதுவாகத் தட்டி...பின்னர் சற்றுப் பலக்க...

"பாவா. ஹில், ஹில் என்ற சப்தத்துடன் ரெண்டு தட்டுத் தட்டுவீங்களே. அதை மட்டும் தட்டிக் காட்டுங்களேன்" என்றேன்.

பாவா தஹறாவை என்னிடமிருந்து பெற்று மிகப் பலமாக இரண்டு மூன்று தடவைகள் தட்டிவிட்டு உள்ளங்கையால் தோலில் இழுத்து விட்டார். பக்கத்தில் நின்ற நான் இடியோசையாகக் கேட்ட அந்தச் சப்தத்தால் கைகளைத் தூக்கி காது மடல்களை மூடிக்கொண்டேன்.

"ஏன் பாவா, உங்களுக்கு ஒரு மகன் இருந்தானே. அவன் இப்போ என்ன செய்றான்?" வாப்பா கேட்டார்.

"அதை ஏன் கேக்கீங்க? இருந்தாந்தான்....ஆனா..."

"என்ன ஆனா?"

"கூடக்கூடாத நண்பர்களோட கூடி....இப்போ சிறுவர் சீர்திருத்தப்பள்ளியிலே இருக்கான்."

"ஸ்கூல்லே படிச்சிக்கொண்டிருந்தானே?"

"படிச்சாந்தான். துர்ச் சிநேகிதம் யாரை உட்டுது? ஒரு களவாணிப் பயலோட கூட்டாளியானான். அவன் யாருடையதோ சைக்கிலொன்றைக் களவாடி, விக்கச் செல்லி இவனுக்கிட்டே கொடுத்திருக்கான். இவன் வித்திருக்கான். போலிஸ் புடிச்சுட்டுது. இவன் தலையெழுத்து மாட்டிக்கொண்டான். அவன் தப்பிச்சுட்டான்."

"எப்ப வருவான்?"

"ஆறு மாசத்துக்கு அங்கே அனுப்பியிருக்கு என்றாக. வழக்குப் பேச எனக்கிட்ட பணம் இருக்கல்ல. பெத்த பாவத்துக்காக அவனை நினைச்சி தினம் தினம் அவளும் நானும் அழுகிறதைத் தவிர வேற என்னதான் செய்யலாம்?" கூறியவாறே பாவா கண்கலங்கத் தொடங்கினார்.

கும்மிருட்டான நள்ளிரவில், எந்தப் பயனுமில்லாமல் தெருத் தெருவாகச் சுற்றியவாறு, சிங்கமாக முழங்கும் தனது குரலால் நோன்பு நோற்பதற்காக எழுப்பிச் செல்லும் கம்பீரமான பாவாவுக்குள் இத்தகைய உணர்ச்சிக் கலவைகளா?

உம்மா வாப்பாவிடம் கொடுத்தனுப்பிய ஒரு தொகை அரிசியைப் பெற்றுக்கொண்டு பாவா விடைபெற்றுச் சென்றார்.

★★★

இருபத்தாறாம் நோன்பு நோற்றிருந்தோம். எனது நண்பர்களில் ஒருவனான மஜீதும், நானும் முந்திரிப் பழங்கள் வாங்குவதற்காகச் சென்று கொண்டிருக்கையில் தவக்கல் மௌலானா கபுறடி கட்டிடத்துக்குள்ளிருந்து மெல்லிய முனகல் ஒலி கேட்டது. மெதுவாக எட்டிப் பார்த்தோம். தலைப்பாகைக்காகப் பாவிக்கும் கச்சைத் துணியை உடல் முழுவதும் போர்த்திக்கொண்டு அனுங்கியவாறு மணலில் ஹயாத்து பாவா படுத்துக்கொண்டிருந்தார். அருகே அவருடைய தஹ்றா. கதவினூடாக உள்ளே சென்றோம். சரேலென உடலைக் குலுக்கியவாறு மீண்டும் முனகினார். அவருடைய உடலை மெதுவாகத் தொட்டுப் பார்த்தேன். நெருப்பாகத் தீய்த்தது.

"பாவா...பாவா...." என்றேன் மெலிதாக அவரை உசுப்பியவாறு.

கண் விழித்து என்னைப் பார்த்தார். கண்கள் சிவந்திருந்தன. உஷ்ணக் காற்று என் கன்னங்களில் உராய்ந்தது.

"உங்களுக்கு என்ன பாவா?" கேட்டேன்.

"காச்சல் மகன். சரியா காயுது" முணுமுணுத்தார்.

"ஊட்டுக்குப் போகாம ஏன் இங்க படுக்கிறீங்க?"

"நோம்புக்காக ஆக்களை எழுப்பிட்டு வரும்போதே நடக்க முடியாமப் போயிட்டு. ஊட்டுக்குப் போய்ச் சொல்றான்னு பொடியனை அனுப்பிட்டு இங்கேயே படுத்திட்டேன்."

"நீங்க நோன்பா பாவா?"

"ஓம் மகன்"

"எங்க சாப்டீங்க?"

அவர் என் கண்களை உற்றுப் பார்த்தார்.

"கபுறடிக் கிணத்திலே தண்ணிய அள்ளிக் குடிச்சிட்டு அப்படியே நிய்யத்து வைச்சுட்டேன்."

எனக்குக் கண்கள் பனிக்கத் தொடங்கின.

"பட்டினி நோன்பா?"

ஏழையான பாவா என்னைப் பார்த்து ஏழையாகச் சிரித்தார்.

நான் சடுதியாக எதையோ தீர்மானித்து "மஜீது. பாவாவைப் பாத்துக்க. இதோ வந்துடறேன்" என்றவாறு பதிலுக்குக் காத்திராமல் வெளியே ஓடினேன். எதிர்ப்பட்ட வண்டிக்காரர் ஒருவரிடம் கதைத்தேன். பணம் தருவதாகக் கூறினேன்.

"நீ போடியார்ர மகனா இருக்கலாம் தம்பி. நோம்பு நோற்க அவர்தான் என்னையும் எழுப்புறவர். அந்தச் சீதேவிக்கு உதவி செய்வதுக்கு நான் பணமா கேப்பேன்? வா போகலாம்"

வண்டிக்காரனின் உதவியுடன் பாவாவைத் தூக்கி வண்டியில் படுக்க வைத்து அவருடைய வீட்டுக்கு எடுத்துச் சென்றோம்.

"பாவா. அப்படியே படுங்க. போய் பரிசாரியைக் கூட்டி வாரன்"

"வேணா மகன். அதுக்கெல்லாம் கொடுக்க என்கிட்ட பணம் இல்ல. கொத்தமல்லியை அவிச்சுக் குடிச்சா சரியாப் போகும்."

தொடர்ந்து அங்கு நிற்க நான் விரும்பவில்லை. வீட்டுக்கு வந்து வாப்பாவிடம் விசயத்தைக் கூறினேன். "பரிசாரிக்குக் கொடுக்கக்கூட பணம் இல்லியாம் வாப்பா" என்றேன்.

"நான் போய்ப் பாத்துட்டு வாறன்." வாப்பா சால்வையைத் தூக்கித் தோளில் போட்டவாறு வெளியேறினார். நான் அவருக்குத் தெரியாமல் பின்தொடர்ந்தேன்.

நடக்கும்போது திரும்பிப் பார்த்ததும் என்னைக் கண்ட அவர் "நோன்பைப் பிடித்துக்கொண்டு இந்த வெய்யிலுக்குள்ளே நீ ஏன்டா அலைகிறே? ஊட்டுக்குப் போ" என்றார் சற்று முரட்டுத் தனமாக.

"இல்ல. நானும் வருவேன். பாவாவைப் பாக்கணும் போல இருக்கு" கால்களால் தரையைப் பிராண்டினேன்.

வாப்பா என்ன நினைத்தாரோ, " சரி.சரி. வா. மனிசங்களுக்கு உதவி செய்வதை சின்ன வயசிலேயே பழக்கப்படுத்திக் கொள்ளணும். அதுவும் இந்த நோன்பு நாட்களிலே ரொம்ப முக்கியம். நீ என்ன செய்றே. ஓட்டமா ஓடிப்போய் முகுத்தார் பரிசாரியை நான் சென்னதா கையோடு கூட்டிக்கொண்டு அங்க வந்துடு" என்றார்.

வைத்தியருடன் பாவாவின் வீட்டுக்குப் போகும்போது வாப்பா அங்கிருந்தார். பக்கத்து வீடுகளைச் சேர்ந்த சிலர் முகங்களைத் தொங்கப்போட்டவாறு நின்றனர். பாவாவின் உடல் குலுங்கியது.

வைத்தியர் கை பிடித்துப் பார்த்தார்.

"பயப்படும்படியா ஒன்டும் இல்ல. சளிக் காச்சல். பனியிலே நனைஞ்சிருக்கார். ரெண்டொரு நாட்கள் ஊட்டிலே சும்மா இருந்தார்னா சரியாயிடும்"

அதுவரை நடுங்கியவாறு நல்ல பிள்ளையாகப் படுத்திருந்த பாவா, கால் கைகளை உதறியவாறு சடுதியாக எழுந்து உட்கார்ந்தார்.

"என்ன பரிசாரி சொன்னீங்க? ரெண்டொரு நாள் சும்மா இருக்கிறயா? அப்போ... ராவைக்கு... அதுவும் நோம்பு இருபத்தியேழு... உங்களையெல்லாம் ஆர் எழுப்புறது? பள்ளிவாசலுக்குப் போயிட்டு வந்ததும் மயக்கத்துலே படுத்துடுவீங்க. ராவைக்கு லைலத்துல் கத்ர். நீங்க என்னதான் செல்லுங்க. ராவைக்கு நான் தஹறா தட்டி உங்களையெல்லாம் எழுப்புறது எழுப்புறதுதான்." கதைத்துக்கொண்டிருந்தவர் மயக்கம் வந்ததுபோல் கண்கள் சோர்ந்து போக பாயில் சாய்ந்தார்.

"பாருங்க பரிசாரியார். இந்தக் காய்ச்சலுக்குள்ள பட்டினி நோம்பு கூடப் புடிச்சிருக்காரு. நோம்பை விட்டுட்டு அவித்த இந்த மல்லித் தண்ணியைக் குடிங்க என்றா, உனக்கு அடிப்பன்டின்னு ஏசுறாரு. " என்றார் பாவாவின் மனைவி கதவு மறைவில் நின்றவாறு.

"ஏன் பாவா கொஞ்சம் புடிவாதத்தை உடுங்களேன். சட்டத்திலே இடம் இருக்கு. இப்படி நெருப்பா காய்கிற நேரத்திலே நோன்பை உட்டுட்டு அப்புறமா களாச் செய்யலாம். நான் தாற மருந்தைக் குடிங்க" என்றார் பாவாவின் தலையைத் தடவியவாறு பரிசாரியார்.

“என்ன சென்னீங்க? நோம்பை உட்றதா? எங்கே நோம்பின் நிய்யத்தைச் செல்லுங்க பாக்கலாம். அதாவாக நாளைப் பிடிக்க நிய்யத்து வைக்கிறேன். அல்லாவுக்காக. ஆருக்காக? அல்லாவுக்காக. நோம்பு நோப்பது எனக்காக அல்ல. என்னையும் உங்களையும் படைச்ச றப்புக்காக. நான் அவன்ட அடிமை. என்னை அவனுக்காக நோம்பு நோக்குமாறு செல்லியிருக்கான். நான் நோற்கிறேன். இப்படிச் சின்னச் சின்ன வருத்தங்களுக்கெல்லாம் நோம்பை உட்டா, அப்புறம் எப்படிப் பரிசாரியார் அல்லாவைச் சந்திப்பது?”

வாப்பா, சுற்றிவர நின்றோர், பரிசாரியார் ஆகிய எல்லோரும் எவ்வளவுதான் சொன்னாலும் பாவா நோன்பை விடவும் இல்லை; அன்றிரவு தஹுரா அடித்து நோன்புக்காக எழுப்பப் போகவேண்டுமென்ற முடிவை மாற்ற விரும்பவுமில்லை.

★★★

தராவீஹ் தொழுது முடிந்து வீட்டுக்கு வர நள்ளிரவாகிவிட்டது. பள்ளிவாசலில் நிறைய நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்திருந்தனர்.

ஊஞ்சலில் படுத்தவாறு ஹயாத்து பாவாவைப் பற்றிய கற்பனைகளில் ஆழ்ந்தேன். பாவாவுக்குக் காய்ச்சல் விட்டிருக்குமா? இன்றும் தஹுராவை அடித்தவாறு தெருத்தெருவாக வருவாரா? அல்லது மனதை மாற்றிக்கொண்டிருப்பாரா?

“மிச்சம் அசதியாயிருக்கு. கொஞ்சம் படுத்தாத் தேவலை. ஹயாத்து பாவா இன்றைக்கு வருவாரா என்பது சந்தேகம். அதனாலே யாராவது ஒருத்தர் முழிச்சிகொண்டிருந்தால்தான் நல்லது. வாற மயக்கத்துக்கு எல்லாரும் படுத்தா அப்படியே மயக்கமாகிடுவோம்” என்றார் வாப்பா உம்மாவைப் பார்த்து.

“நான் முழிச்சிக்கொண்டிருக்கேன்” என்றேன் முந்திரிக்கொட்டையாக.

“டேய் முந்திரிக்கொட்டை! ஏன்டா பனியிலே உஞ்சில்ல இருக்கே? உள்ளே வந்து படு”

நான் எழுந்து வந்து எனக்காகப் போடப்பட்டிருந்த பாயில் படுத்தேன். வாப்பாவைப் படுக்குமாறும், உம்மா விழித்திருப்பதாகவும் கூறினார்.

எனக்கு நித்திரை வரவே இல்லை. நேரம் நிமிடங்களாகக் கரைந்தது. உம்மாவின் அருகில் சென்று அவரின் மடியில் தலை வைத்து ஹயாத்து பாவாவைப் பற்றி, லைலத்துல் கத்ர் தினத்தின் சிறப்பு பற்றியெல்லாம் கதைத்தேன்.

“உம்மா. ஹயாத்து பாவாவை பேய் அடிச்சிருக்குமோ? திடீரென அப்படி ஆகிட்டாரே?”

”இல்ல மகன். நல்ல அடியார்களை பேய், பிசாசுகள் எதுவும் செய்யாது. மனிதர்களிடம்தான் பேய்க் குணம் இருக்கு”

வராந்தையில் ஒரேயொரு குப்பி விளக்கு மட்டும் எரிந்தது. எங்கேயோ ஒரு வீட்டில் தண்ணீர் அள்ளும் துலாந்துச் சப்தம் கேட்டது.

திடீரென....

வழக்கத்தை விடவும் பெரிதாக தஹ்ரா தட்டும் சப்தமும் ”ஹில்...ஹில்... எழும்புங்கோ...” என்ற சப்தமும் கேட்டன. தொடர்ந்து மிக இனிமையாக... இது நாள் வரை கேட்டதை விடவும் இனிய இசையுடன் கூடியதாக பைத்துக்கள் பாடியவாறு தஹ்ரா அடித்துச் செல்லும் சப்தம் அந்த நள்ளிரவு வேளையில் கேட்பதற்கு சுகானந்தமாக விருந்தது.

சரேலென வாப்பா எழுந்தார்.

“பாவாவுக்குச் சுகம் போலும். அதான்....” என்றேன் நான்.

”இது அவருட குரலா தெரியலியே. எதுக்கும் விசாரிப்போம்”

தொடர்ந்து தஹ்ராச் சப்தம் கேட்டுக்கொண்டேயிருந்தது.

காலையில் எழுந்ததும் முதல் வேலையாக வாப்பாவும், நானும் ஹயாத்து பாவாவைப் பார்ப்பதற்காக அவருடைய வீட்டுக்குச் சென்றோம். பா‌வா போர்த்தியவாறு படுத்திருந்தார்.

“அத்தனை காய்ச்சலுக்கு மத்தியிலும் தஹ்ராவைத் தூக்கிக்கொண்டு வந்துட்டீங்க இல்லே?” என்றார் வாப்பா.

பாவா சிரித்தார்.

“காசீம் காக்கா. அது அல்லாட செயல். வந்தது நானல்ல”.

“உங்க தஹ்ராச் சத்தம்தானே கேட்டது. அப்போ வந்தது?”

“அது என் மகன். என் வாரிசு.” எனக் கூறியவாறு வாப்பாவை உற்றுப் பார்த்தார்.

“உங்க மகனா?”

“அவன் இருந்த இடத்திலே நல்லா நடந்தானாம். ஆறு மாசத்திலே ஒரு மாசத்தைக் கழிச்சுட்டு முந்தா நாள் விடுதலை செஞ்சுட்டாங்களாம். நேற்றுப் பின்னேரம்தான் ஊடு வந்தான். என் நிலமையைப் பாத்துட்டு ஓ...வென்று அழுதுட்டான். என் தஹ்ராவைத் தூக்கிக்கொண்டு அவன்தான் உங்களையெல்லாம் எழுப்ப வந்தான்.”

பாவா கூறிவிட்டு பலமாகச் சிரித்தார். சிரித்ததன் காரணமோ என்னவோ பலமாக இருமத் தொடங்கினார்.

"கேப்பதுக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு பாவா."

"அவன் இன்னும் ஒன்னு சென்னான்"

"என்ன?"

"படிப்பை தொடரப் போறானாம். அதுக்கெல்லாம் இந்த பாவாவிடம் என்ன இருக்கு" கூறிவிட்டு மறு பக்கம் திரும்பி கண்களில் பனித்த நீரைத் துடைத்துக் கொண்டார்.

வாப்பா என்ன நினைத்தோரோ, பாவாவின் கையொன்றைச் சரேலெனப் பிடித்து "பாவா, இன்டைக்கு நோம்பு இருபத்தி ஏழு. உங்களுக்கு வாக்குத் தாரேன். உங்க மகன் படிப்பதற்கு நான் செலவு செய்றேன்." என்றார்.

★ ★ ★

சுமார் நாற்பது வருடங்கள் உருண்டோடி விட்டன. நீண்ட நாட்களுக்கு முன்னர் கொழும்பில் குடியேறிய நான் இவ் வருட நோன்பை சொந்தக் கிராமத்தில் நோற்க வேண்டுமென்ற எண்ணத்துடன் வந்து சல்மாவின் வீட்டில் தங்கி நிற்கிறேன்.

ஹயாத்து பாவா மௌத்தாகிய பின்னர், அவருடைய வாரிசு சில வருடங்கள் நோன்புக்காக தஹரா அடித்து எழுப்பினார். புலமைப் பரிசில் ஒன்றின் மூலம் மேற்படிப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டு, தொடர்ந்து படித்து மேல் நாடொன்றிலுள்ள பல்கலைக்கழகமொன்றில் கல்விச் சேவையாற்றிக்கொண்டிருக்கிறார்.

படுக்கை மாறியதனாற் போலும், நித்திரையில்லாமல் நான் கட்டிலில் உருண்டுகொண்டிருக்கிறேன். மேலே மின் விசிறி சுழல்கிறது. என் மனது கடந்த கால கிராமிய நினைவுகளை அசை போடுகிறது.

நேரம் துகள்களாகக் கரைய...ஒன்று, இரண்டு என சுவர்க் கடிகார சப்தத்தை அடிக்கடி எண்ணிக்கொண்டு.....

அந்த நள்ளிரவின் நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு தஹராச் சப்தம் கேட்காதா என்ற நப்பாசை எனக்கு. அதற்காக செவிகளைத் தீட்டியவாறு காத்துக்கொண்டிருந்தேன்.

மணி மூன்றடித்தது. அடுத்த அறைக்குள் அலாரம் ஒலித்தது. சல்மாவின் கணவன் எழும்புவதும்....மற்றவர்கள் ஒவ்வொருவராக...என் அறைக் கதவு தட்டப்பட்டது.

“எழும்புங்க மாமா. ஸஹருக்கு நேரமாயிட்டு.” என் மருமகள் ஒருத்தியின் குரல் கேட்டது.

அறைக்கதவைத் திறந்தவாறு வெளியே வருகிறேன். வீடுகளில், தெருக்களில் எல்லாம் மின்சார வெளிச்சம்.

அந்தத் துலாந்துச் சப்தம்… அந்தக் கும்மிருட்டு… அந்தத் தஹ்ராச் சப்தம்… பக்கத்து வீடுகளில் சப்தமிட்டு ஆளையாள் எழுப்பும் சப்தம்… தேங்காய் துருவும் சப்தம்.... தரையில் அடித்து விழாம்பழம் உடைக்கும் சப்தம்......பப்படம் பொரிக்கும் எண்ணெய் நாற்றம்.......எதுவுமே இல்லை. எல்லாமே இயந்திர வாழ்க்கை.

குளியலறைக்குள் முகம் கழுவுவதற்காகச் செல்கிறேன். மனதில் எங்கோ ஒரு மூலையில் ஹயாத்து பாவாவின் ஸலவாத்து பாடல்களுடன் கூடிய தஹ்ரா சப்தம் கேட்பது போன்றதோர் உணர்வு எனக்கு.

★ ★ ★

# தேவை ஒரு மாப்பிள்ளை

மூன்று பக்கங்களிலும் விசாலமான கண்ணாடிகளால் அடைக்கப்பட்ட அறையொன்றினுள் என் வருகைக்காகக் காத்திருந்த பால் வெள்ளை நிறமான அகன்ற மேசையில் கையில் எடுத்துச் சென்ற பிறீவ்கேஸை வைத்துவிட்டு வெல்வெட் துணியினால் குஷன் செய்யப்பட்ட கதிரையில் உட்கார்ந்து கண்ணாடியூடாக வெளியே பார்வையை மேய்கிறேன்.

நெளிவுத் தகரங்களினால் சுற்றிவர அடைக்கப்பட்டு கூரையுடன் கூடிய விசாலமான ஆலை. ஆளுயரத்துக்குச் செதுக்கப்பட்ட செட்றோ மரங்கள். அங்கொன்றும் இங்கொன்றுமான பூக்களுடன் முகம் மலர்ந்து சிரிக்கும் போகன்வில்லாக்கள். அடிக்கடி பெய்துகொண்டிருக்கும் மழையில் துளிர் தள்ளிக் காட்சிதரும் மென்மையான இலைகளுடன் கூடிய கிறிஸ்மஸ் மரங்கள். சிறிய புல்வெளி. கற்கள் பரப்பப்பபட்ட பாதையில் செம்புழுதியைக் காற்றில் கலக்கவிட்டவாறு வேகமாக விரையும் வாகனங்கள். ஆலையின் கொறகொற சப்தம். ஆலையினுள்ளே தலைகளில் ஒட்ட வெட்டிய சுருள் முடிகளுடன் கூடிய கரிய நிற தொழிலாளர்கள். அழுக்கு உடுப்புகள். சிலர் அரை நிர்வாணம். காற்சட்டையும் சேர்ட்டும் அணிந்த சுபர்வைசர்கள்.

கறுப்பு நிறத் தொழிலாளர்களை பார்வை மேயும்போதுதான் எனது நாட்டிலிருந்து பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள கிழக்கு ஆபிரிக்க நாடொன்றில் இருக்கிறேன் என்பதை உணர்கிறேன். மக்களின் முகங்களிலுள்ள வித்தியாசத்தையும், நிறத்தையும் தவிர, மரங்களும் புழுதியும், கிறவலும், நீரும்........எல்லாமே எல்லா நாடுகளிலுமே ஒரே தோற்றமானவைதான் என்பதை உள்ளுணர்வு எனக்குக் கூறுகிறது.

கண்ணாடியூடாகப் பார்த்துக்கொண்டிருந்த எனது பார்வையைச் சுருக்கி காரியாலயத்திலுள்ளவர்களின் முகங்களில் பதிக்கிறேன். மெலிந்து ரீ ஷேர்ட் அணிந்த களுஞ்சி, ஷேர்ட்டில் சிறிய ஓட்டையுடன் கூடிய கபாலே, ஆட்டுத்தாடியுடன் காட்சிதரும் வன்யாமா, ஐந்தடி உயரத்துக்கும் குறைந்த கட்டு, முன் தலையில் வழுக்கை விழுந்த புகன்யா, கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் பியோன் மொகாகா, டைபிஸ்ட் கும் டெலிபோனிஸ்டான மோனிகா ஆகியோரைப் பார்க்கிறேன்.

எல்லோருமே நிறத்தில் கறுப்பு. உடலில் மெலிவு. அணிந்திருக்கும் துணிகளில் நாகரிகத்தன்மையின்மை. ஒட்ட வெட்டிய முடி. அடர்முடிக்குள் சொருகிய கூர்முனைப் பேனாக்கள். தடித்த உதடுகள்.

காரியாலயத்திலுள்ள ஒவ்வொருவரிலும் சில வினாடிகளுக்கு மட்டும் எனது பார்வையைப் பதித்துவிட்டு, உள்ளுணர்வு என்ன கூறிற்றோ சரேலெனத் திரும்பி டைப்பிஸ்ட் மோனிகாவின் மீது குத்திடுகிறேன்.

எனது உள்ளுணர்வு கூறியது போன்று மோனிகா என்னையே பார்த்துக்கொண்டிருப்பதை அறிகிறேன். என்னுடைய பார்வை அவளுடையதுடன் மோதியதுதான் தாமதம் மெலிதாகச் சிரித்தவாறே வேறு திசைக்கு மாற்றினாள்.

மோனிகா சுமார் ஐந்தடி ஐந்தங்குலம் உயரம் இருப்பாள். கரியைப் போல கறுப்பு என்பதை விட, மோனிகாவைப் போன்றது கரி என உதாரணத்துக்குக் காட்டக்கூடியவள். கால் அங்குல உயரத்துக்கு ஒட்ட வெட்டப்பட்ட அடர்த்தியான சுருள் முடி. நீண்ட கொக்குக் கழுத்து. அணிந்திருக்கும் சேர்ட்டுக்கு மேலால் துருத்தித் தெரியும் தோள் எலும்புகள். பலகை மார்பு. சீகிரிய ஓவியங்களில் வடிக்கப்பட்ட அழகிகளின் மெல்லிடை. நீண்ட கால்கள். வயதென்னவோ இருபத்தெட்டு அல்லது முப்பது இருந்தாலும் முக்கோண முகம் சில நேரங்களில் வயதானவளாகவும், வேறு சில நேரங்களில் யுவதியின் தோற்றத்திலும் காட்ட வைத்தது. அவள் செல்வி என்பது மட்டும் உண்மை.

நான் இந்த ஆலைக்கு வந்து இன்னும் இரண்டு கிழமைகள் கூடச் செல்லவில்லை. ஆலையில் புதிதாகத் தொடங்க உத்தேசித்திருக்கும் பிரிவொன்றுக்கான கட்டமைப்பு, படவமைப்பு ஆகிய வேலைகளைச் செய்து எடுப்பதற்காக பணிப்பாளர் சபை என்னை மூன்று மாத கால ஒப்பந்தத்தில் வரவழைத்திருந்தது. வந்த இந்த இரண்டு கிழமைகளுக்கிடையில் இங்கு கடமையாற்றுபவர்கள் என்னுடன் அறிமுகமாகி .....நட்புடன் பழகத் தொடங்கி...காலையில் என்னைக் கண்டதும் “குட் மோர்னிங் சார்” என முகம் மலர்ந்து கூறி.... எனது அறைக்குள் வருபவர்கள் மேசைக்கு முன்னால் கிடக்கும் ஆசனத்தில் அமர முன்னர் விரல்களை மட்டும் நீட்டி என்னுடையதைத் தொட்டதன் பின்னால் அமர்ந்து..... தொலைபேசியில் என்னுடன் யாராவது தொடர்பு கொள்ளும்போது விடயத்தைக் கூறாமல் என் சுகத்தை விசாரித்து விட்ட பின்னர் கூறி.....

காலையில் காரியாலயம் எட்டுக்குத் தொடங்கினாலும் மோனிகா என்னவோ எட்டேகாலுக்குப் பிறகுதான் வருவாள். ஒரு வேளை பஸ் நிலையத்திலிருந்து நடந்து வருவதால் பிந்தி வருகிறாளோ என்னவோ? `போடா போடா' (நமது நாட்டில் ஆட்டோ போன்று, இங்கு சைக்கிள்களின் பின்னால் கேரியரில் ஆளை வைத்து தேவையான இடங்களுக்குக்

கொண்டு செல்பவர்களை போடா போடா என்பர்) வில் வருவதற்கு தினசரி பணம் செலுத்த அவளுக்குக் கட்டுபடியாகாமல் இருக்கலாம்.

வந்ததும் வராததுமாக ஏதாவது ஒரு சாட்டில் என் அறைக்குள் புகுந்து ''குட் மோர்னிங் ஸார்'' என்பாள்.

ஒரு நாள் அவளுக்கு என்ன நேர்ந்ததோ, காரியாலயத்துக்கு வந்தவள் என் அறைப் பக்கம் வரவே இல்லை. விசாலமான கண்ணாடியூடாக அவளை நோக்கினேன். ஜன்னலூடாக வெளியே தெரிந்த போகன்வில்லாக்களையோ அல்லது தூரத்தே அடர்த்தியாக வளர்ந்து நின்ற நாணல் புற்களையோ பார்த்தவாறு இருந்தாள். ஒன்பதரை சுமாருக்கு என் அறைக்குள் வந்தாள். என்னைப் பார்த்து ''குட் மோர்னிங் ஸார்'' என்றாள்.

''மோர்னிங் மோனிகா. சிட் டௌன்''

வெல்வெட்டால் குஷன் செய்யப்பட்ட ஆசனத்தில் முழங்காலுக்குச் சற்றுக் கீழே தொங்கிய கவுணைச் சரிசெய்தவாறு அமர்ந்தாள்.

''எனது நாட்டில் ஒரு பழமொழி உள்ளது. உனக்குச் சொல்லவா?'' கேட்டேன்.

மெதுவாகச் சிரித்து தலையசைத்தாள்.

''கரடி பிறை காண்பது போல'' என்றேன்.

''அதாவது?''

பழமொழியை விளக்கிவிட்டு ''மணி ஒன்பதரையாகி விட்டது. இப்போதுதான் குட் மோர்னிங் சொல்ல முடிந்ததாக்கும் கரடியைப் போல'' என்றேன்.

அவள் வழக்கமாகச் சிரிக்கும் அந்த `அஹா..அஹா..அஹா...' சிரிப்பை அறை முழுவதும் நிறையக்கூடியதாக வெளியாக்கினாள். அதுவரை அவளின் முகத்தில் கௌவியிருந்த சோக இருளை சிரிப்பு விலக்கியதைக் கவனித்தேன்.

''ஏன் வீட்டில் ஏதாவது பிரச்சினையா?'' நான் ஆதரவாகக் கேட்டேன்.

''உங்களுக்கு எப்படித் தெரியும்''

''நான் ஒரு மைன்ட் ரீடராக்கும். சொல்லு. என்ன பிரச்சினை?''

சில வினாடிகள் அமைதியாக இருந்தாள். முகத்தைச் சுருக்கினாள்.

''கிராமத்திலே எனது சொந்தக்காரர் ஒருவர் செத்துவிட்டாராம்'' கண்களில் சோகம் ததும்பக் கூறினாள்.

''ஓ! நான் நினைத்தேன். சுகயீனமாக இருந்தாரா?''

''ஏஸ்''

''என்ன வருத்தம்?''

“எயிட்ஸ்”

அவள் கூறியதுதான் தாமதம் என் உடல் மெலிதாகச் சிலிர்க்க கதிரையில் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

“உங்க நாட்டிலே நிறையப் பேருக்கு எயிட்ஸ் நோய் உள்ளதாமே?”

“ஆமா. ஆஸ்பத்திரிகளில் உள்ள நோயாளர்களிலே நாற்பது வீதமானவர்களுக்கு எயிட்ஸ் நோயின்னு பத்திரிகையிலே போட்டிருந்தாங்க.”

என் உடல் மெதுவாக வெடவெடத்தது. ஏதாவது பார்ட்டிக்குப் போனால், தெருக்களில் தெரிந்த நாலு பேரைக் கண்டு கதைத்தால், பத்திரிகைகளைத் திறந்தால்.... எல்லா இடங்களிலும் எயிட்ஸ் பற்றிய கதை. ஆசிரியர் கடிதங்கள், விளம்பரங்கள், மார்பின் குறுக்கே துணி கட்டிய தடித்த கறுத்த பெண்ணுடன் கூடிய கொண்டோம் பற்றிய விளம்பரம்.... `பாம்புகளுக்குப் பயப்படுவதை விட இந்த எயிட்ஸ் வைரசுக்கல்லவா கூடுதலாகப் பயப்பட வேண்டியுள்ளது.’

நான் கொடுத்த டிக்டேஷனை எடுத்துக்கொண்டு மோனிகா எனது அறையை விட்டும் சென்றாள்.

சரேலென இலங்கையிலுள்ள எனது மனைவி, பிள்ளைகளின் நினைவு என்னைக் கௌவியது. கண்களை மூடியவாறு மனைவியின் முகத்தை மனதால் நினைத்து, பிள்ளைகள் ஒவ்வொருவரையும்....மூத்த மகள் மூமினா பேகம், இரண்டாவது மகன் இர்ஷாத்....அப்படியே ஒவ்வொருவராக.... சில நிமிடங்களில் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர்த் துளிகள் கன்னங்களினூடாக எறும்பூர்ந்தன.

நீண்ட நாட்களாக அவர்களுடனேயே வாழ்ந்து, அவர்களின் எண்ணங்கள், உணர்ச்சிகளில் சம பங்கெடுத்து, அவர்களின் தேவைகளை என் தேவைகளாகக் கருதி, அவர்களின் சுக துக்கங்களை என்னுடையவைகளாக எண்ணி வாழ்ந்துகொண்டிருந்த நான், இப்போது அவர்களைப் பிரிந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் தனியாக வாழ்வதை நினைக்கும்போது....மனம் கனத்து கண்ணீராகக் கொட்டியது.

மூக்குக் கண்ணாடியைக் கழற்றி, கண்களைத் துடைத்து விடலாமென நினைத்து குனிந்திருந்த தலையை உயர்த்தினேன். மோனிகா தென்பட்டாள். அவளின் கைகள் ரைப்ரைட்டரில் தாள்களைப் பொருத்திக்கொண்டிருந்தாலும் கண்கள் என்னையே பார்த்தவாறு இருந்தன. நான் அவளைக் கவனிக்கிறேன் என்பதை உணர்ந்தோ என்னவோ ரைப்ரைட்டர் பக்கமாக பார்வையின் திசையை மாற்றினாள்.

★ ★ ★

நைல் நதி உற்பத்தியாகும் இடத்தைச் சென்று நான் பார்த்து வந்ததுக்கு அடுத்த நாள். அது ஒரு திங்கட்கிழமை. முதல் நாள் நானும், இந்தியாவைச் சேர்ந்த இன்னும் இருவருமாக அந்த இடத்துக்குச் சென்று வந்தோம். ஜிஞ்ஜா என்ற நகரிலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்தில்தான் நைல் நதியின் உற்பத்தி தொடங்குகிறது. உலகின் இரண்டாவது மிகப் பெரிய ஏரியான விக்டோரியா கென்யா, தன்ஸானியா, உகண்டா ஆகிய நாடுகளுக்கு நடுவில் அமைந்திருந்தாலும் நைலின் ஆரம்பம் உகண்டாவிலேயே தொடங்குகிறது. விக்டோரியா ஏரியின் ஒரு முனை நதியாகத் தொடங்கி சூடான், எகிப்து ஊடாக பல ஆயிரம் மைல்கள் ஓடுகிறது. நீண்ட நேரம் என்னையே மறந்து நதியின் தொடக்கத்தை, பரந்து கிடக்கும் கற்களின் மேலால் நீர் பரந்து பாய்ந்து ஒடுக்கமான நதியாக ஓடத் தொடங்குவதை, சுற்றி வளர்ந்துள்ள மரங்களை, ஒட்ட வெட்டிய புல்வெளியை எல்லாம் பார்த்துக்கொண்டு நின்றேன். சரேலென என் மனம் மனைவி பிள்ளைகளை நினைத்து ஏங்கத் தொடங்கியது. இந்த அழகிய காட்சியைக் காண அவர்கள் என்னுடன் இல்லையே என மனம் நினைத்து வேதனையைக் கக்கியது.

முதல் நாளின் அனுபவத்தை….. அந்தப் பெரிய ஏரி, நதி ஆகியவற்றைப் பற்றியெல்லாம் நான் இரை மீட்டுக்கொண்டிருக்கும்போது அறையின் கண்ணாடிக் கதவைத் திறந்தவாறே மோனிகா உள்ளே நுழைந்தாள்.

“குட் மோர்னிங் ஸார்” என்றாள்.

பதில் கூறியவாறு அவளை உட்காருமாறு பணித்தேன்.

“நேற்று சோர்ஸ் ஒப் நைலுக்குப் போனீங்களாமே?” கேட்டாள்.

நான் திடுக்குற்றேன்.

“உனக்கெப்படித் தெரியும்?

“என் சகோதரன் சொன்னான்”

“அவனுக்கு எப்படி என்னைத் தெரிந்திருக்கு?”

மோனிகா வழமைப் பிரகாரம் அஹா…அஹா…அஹா… என வாய் விட்டுச் சிரித்தாள்.

“ஏன் சிரிக்கே?”

“என் சகோதரன் கூட இதே ஆலையிலேதானே வேலை செய்றான்.”

”இங்கேயா?”

“ஆலையின் உற்பத்தி தொடர்பான விபரங்களை அவன்தானே உங்களுக்கு அடிக்கடி தந்துகொண்டிருக்கிறான்.”

“முகேஸ்கா உன் சகோதரனா? அவனை நேற்று சோர்ஸ் ஒவ் நைல் ஓரமா பார்த்தேனே. யாரோ ஒரு குட்டியோட கதைத்துக்கொண்டு நின்றான்.”

"இப்போது அந்தக் குட்டியோட தான் சுற்றித் திரிகிறான்" கூறியவாறே சிரித்தாள்.

"அப்படீன்னா, இதற்கு முதல்ல வேறு குட்டிகளா?"

"எனக்குத் தெரிந்தவரை இது அவனுடைய ஐந்தாவதோ ஆறாவது"

அவர்களுடைய கலாசாரத்தை நினைக்கும்போது கண்களை அகல வைத்தது. மிருகங்களைப் போல.....நினைத்தபோது ஒருத்தி........கொஞ்ச நாட்களில் அவள் கசந்து விட்டால் இன்னொருத்தி.....அதற்கப்புறம் வேறொருத்தி....

குடும்பமாகவே அவர்களுடன் அவன் வாழ்கிறானா எனக் கேட்கலாமா என்று நினைத்து அடக்கிக்கொண்டேன். முன்பின் சரிவரத் தெரியாத ஓர் அன்னிய பெண்ணிடம் இத்தகைய கேள்விகளைக் கேட்பது நான் சார்ந்த கலாசாரத்துக்கு சரியானதாகப் படவில்லை.

"உண்மையிலேயே சோர்ஸ் ஒவ் நைல்ஸ் பார்க்கவேண்டியதொரு இடம்தான். இல்லையா மோனிகா?" என்றேன்.

"அதை விடவும் முஜாகாலி ரொம்ப இன்டரஸ்டிங் ஸார். ஒரு தடவை போய்ப் பாருங்க"

"எவ்வளவுதான் இன்டரஸ்டான இடமென்றாலும் எனது மனைவி பிள்ளைகள் இல்லாமல் தனியா போய்ப் பார்ப்பதென்றால் மனதிலே ரொம்ப வேதனையாக இருக்கு மோனிகா" சரேலென என் கண்கள் சோர்ஸ் ஒவ் நைலாக ஆக, அவைகளிலிருந்து கண்ணீர் வெள்ளம் ஊற்றெடுக்கத் தொடங்கியது.

மோனிகா என்னையே பார்த்தவாறு இருந்தாள். என்னைப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாகப் பட்டிருக்க வேண்டும்.

"நீங்க ஒங்க குடும்பத்தோட ரொம்ப அட்டச் இல்லையா ஸார்?" கேட்டாள்.

"ஏஸ்" கண்களைத் துடைத்தவாறு கூறினேன்.

"உங்களைப் பற்றி எல்லோருமே கதைக்கிறாங்க"

"என்னென்னு?"

"உங்க மனைவி, பிள்ளைகளை நினைத்ததுமே உடனேயே அழுதுடுவீங்களாம்"

நான் அவளை உற்றுப் பார்த்தேன். கண்கள்தான் அவளைப் பார்த்தனவே தவிர, என் இதயம் முழுதும் மனைவியும் பிள்ளைகளுமே நிறைந்து நின்றனர்

"ஸார். நான் அதிகப் பிரசங்கித்தனமா ஒன்று கேட்டா கோபிப்பீங்களா??"

"இல்லம்மா. நான் ஏன் கோபிக்கணும்?"

அவள் என்னிலிருந்தும் பார்வையை அறையின் கண்ணாடி ஜன்னல் பக்கமாகத் திருப்பினாள்.

"கண்களில் கண்ணீர் எங்கிருந்து ஸார் உற்பத்தியாகுது?"

அவளின் இந்தக் கேள்வி என்னைச் சற்று திகைக்கவைத்தாலும் நோக்கம் புரியாமல் தடுமாறினேன்.

"உள்ளுக்குள்ள ஏதாவது சுரப்பிகள் இருக்கும். அவைகளிலிருந்துதான்." என்றேன்.

"இல்லை ஸார்"

"அப்போ?"

"இதயத்திலிருந்துதான் ஸார் கண்ணீர் பெருக்கெடுக்கிது" அவளுடைய தத்துவம் எனக்குப் புதுமையாகப் பட்டது.

"எப்படி? சொல்லு பார்க்கலாம்"

"உண்மையான காதல் என்றால் முகமும், முகமும் காதலிப்பது இல்லை ஸார். அகமும், அகமும் காதலிப்பது. உங்க மனைவியை நீங்க இதயத்தால காதலீக்கிறீங்க. பிள்ளைகளோட இதயத்தால பாசம் வைத்திருக்கிறீங்க. அவங்க அருகே இல்லாதபோது இதயம் அழுகுது. சரியா ஸார்?" கேட்டவாறே ஜன்னலிலிருந்து பார்வையை என் பக்கம் திருப்பினாள்.

"உண்மைதான்" என்றேன் நான் மெதுவாக.

"நான் ஓர் உதாரணம் சொல்றேன். இப்போ நான் உங்களுக்கு ரொம்பத் தெரிந்தவள். என் கிராமத்துக்கு நான் போனப்போ ஒரு அக்ஸிடென்ட்ல அகப்பட்டு ஹாஸ்பிடல்ல இருக்கேன்னு நீங்க கேள்விப்பட்டா எனக்காக பரிதாபப்படுவீங்களா அல்லது அழுவீங்களா?"

"பரிதாபப்படுவேன்"

"ஆனா அழமாட்டீங்க. ஏன்னா உங்க இதயத்தால நீங்க என்னோட அன்பு வைக்கல்ல" கூறிவிட்டு பார்வையை சரேலென வேறு பக்கம் திருப்பி ஒரு நீண்ட பெருமூச்சை ஊதினாள். அந்தப் பெருமூச்சின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள எனக்கு அதிக நாட்களெடுக்கவில்லை.

★ ★ ★

நான் முஜாகாலிக்குச் சென்றபோது அகஸ்மாத்தாக முசேஸ்காவைச் சந்தித்தேன். சில இளம் பையன்களுடனும், யுவதிகளுடனும் கதைத்தவாறு நின்றுகொண்டிருந்தான். யுவதிகளில் சிலர் அரை நிர்வாணம். முழங்காலுக்கு மேல் தெரியும் கவுண். சிலிவ்லெஸ் ரீசேர்ட். இடுப்பில் பெல்ட்.

என்னைக் கண்டதுதான் தாமதம் கதைத்துக்கொண்டு நின்றவர்களிடம் எதையோ சொல்லிவிட்டு, என்னருகில் ஓடி வந்தான்.

“குட் ஈவினிங் ஸார்”

“குட் ஈவினிங். ஹெள ஆர் யூ?”

“பைன் ஸார். இன்றைக்குத்தான் முதன்முதலா இந்த இடத்துக்கு வாரீங்களா?”

“ஆமா. ரொம்ப அழகான இடம் இல்லையா?” என்றேன்.

நைல், நதியாக ஓடத் தொடங்கிய சுமார் மூன்று மைல்கள் தூரத்தினுள் ஏழு பிரிவுகளாகப் பிரிந்து மீண்டும் முஜாகாலி என்ற இடத்தில் ஒன்றாகச் சங்கமமாகிறது. சுமார் இருநூறு யார் தூரத்தினுள் ஏழு பிரிவுகளும் வேகமாக ஓடி வந்து விழுவது கண் கொள்ளாக் காட்சிதான்.

“மொசேஸ்கா, மோனிகாவை அழைத்து வரல்லையா?” கேட்டேன்.

“நோ ஸார். அவட மகளுக்கு சுகயீனம். டாக்டருட்ட போயிருக்கா”

“வா...ட்? மோனிகாவுக்கு மகளா?” பக்கத்தில் நின்ற நண்பர்களையும் கவனிக்காமல் கூவினேன்.

“உங்களுக்குத் தெரியாதா?”

”இல்லையே. சொந்த மகளா அல்லது வளர்ப்பு....?”

“அவள்ட சொந்த மகள். வயது பன்னிரெண்டு”

“அப்போ... அவட ஹஸ்பன்ட்?”

“என்ன ஹஸ்பன்ட் ஸார். ஸ்கூல்ல உயர் கல்வி பயிலும் போதே உண்டாகிட்டா. அதனாலேதான் ஸ்கூலை விட்டும் விலகினா? இப்போ பிள்ளையை வளர்த்துக்கொண்டு தனியா வாழுறா”

“அவனிடமிருந்து ஏதாவது தாபரிப்பு?”

“என்ன ஸார் தாபரிப்பு. இந்த நாட்டிலே இது ரொம்ப சகஜம் ஸார்”

சில நிமிடங்கள் நான் பேசாமல் நின்றேன். என் மனம் இயந்திர கெதியில் இயங்கத் தொடங்கி... இவர்களின் திறந்த செக்ஸ் கொள்கை... திருமணமாகாமலேயே குழந்தை பெறும் கலாச்சாரம் ... அதனால் அனுபவிக்கும் அவஸ்தைகள்... தகப்பன் யாரென்றே தெரியாத பிள்ளைகள்... தாய் தகப்பனின் கட்டுப்பாட்டிற்குள் வாழாமல் சுதந்திரமாக வாழ விரும்பும் தன்னிச்சைத்தனம்... உடல் சுகத்திற்காக மட்டும் ஆளையாள் விரும்பி, விரும்பியது கிடைத்ததும் மிருகங்களைப் போல் பிரிந்து...

அகமும் அகமும் காதலிப்பதுதான் உண்மையான காதல் என கூறிய பின் நீண்ட பெருமூச்சை அவள் ஊதியது இதற்காகத்தானோ?

★ ★ ★

மோனிகாவை மேசையின் முன்னால் உட்கார வைத்து நீண்டதொரு அறிக்கைக்கான டிக்டேசனை நான் கொடுத்துக்கொண்டிருக்கும் போதுதான், பியோன் மொகாகா அந்த எயாமெயில் கடிதத்தை என்னிடம் கொண்டு வந்து தந்தான். உறையிலுள்ள கையெழுத்தைப் பார்த்ததும் புரிந்துகொண்டேன் அது என்னுடைய மனைவியிடமிருந்து வந்துள்ளது என.

டிக்டேசனை இடை நடுவில் நிறுத்தி விட்டு அரக்கப் பரக்க உறையைக் கிழித்து கடிதத்தைக் கையில் எடுத்ததுதான் தாமதம், என் இதயத்தைச் சுண்டி யாரோ நசித்துவிட்டது போல் உணர்ந்து... சரசரவென கண்ணீர் கன்னங்களில் மாலைகளாயின. என் மனைவியின் எழுத்து வரிகள் ஒவ்வொன்றிலும் எழுத்துகளுக்குப் பதிலாக அவளின் அகன்ற முகம் தெரிய... அதில் லயித்துப் போன நான் கடிதத்தை வாசிக்காமல் அந்த முகத்தையே பார்த்தவாறு... என்னை மறந்து... கண்ணீரைக் கக்கினேன்.

"ஏன் ஸார். வீட்டிலே ஏதாவது பிரச்சினையா?" மௌனத்தைக் கலைத்தாள்.

நான் திடுக்குற்று "என்னம்மா கேட்டே?" என்றேன்.

"உங்க வொய்ப் கடிதம் அனுப்பியிருக்காங்க போல. அழுவுறீங்களே? ஏதாவது பிரச்சினையாயிருக்கலாமோ எனக் கேட்டேன்."

"நோ.நோ. நான் கடிதத்தையே இன்னும் வாசிக்கவில்லையே."

"வாசிக்காமலேயே அழுவுறீங்களா?" கூறியவாறு அவளது அஹா.. அஹா.. அஹா.. சிரிப்பை உதிர்த்தாள்.

"ஸார் உங்க மனைவி உண்மையிலேயே கொடுத்து வைச்சவங்க" என்றாள்.

"ஏன் சொல்றே?"

"இவ்வளவு பாசமான கணவனைப் பெற்றதற்காக. ஏன் ஸார் நீங்க மட்டும்தான் இப்படியா? அல்ல உங்க நாட்டுக்காரங்க எல்லோருமே இப்படித்தானா?"

"பொதுவாக எல்லோருமே இப்படித்தான்."

நான் கூறியதைக் கேட்டதும் அவள் நெஞ்சு விம்மித் தணிந்தது. எனக்குத் தெரியும் அவள் எதற்காக பெருமூச்சை ஊதினாள் என்று.

★ ★ ★

மூன்று நான்கு தினங்களின் பின் கிராமத்தில் வசிக்கும் தாய்க்குச் சுகயீனம் எனக் கூறி அவளைச் சென்று பார்த்துவிட்டு வந்திருந்தாள். வழக்கமாக காரியாலயத்துக்கு வந்ததும் தோளில் போட்டுக்கொண்டு வரும்

கைப்பையை எடுத்து அவளது மேசையில் வைத்துவிட்டு சகலரிடமும் சென்று காலை வந்தனம் சொல்வாள். ஓட்டக்காரனைப் போல முழுங்கைகளை மடக்கி முன்னங்கைகளை மெதுவாக முன்னாலும் பின்னாலும் அசைத்தவாறு இனிமையான குரலால் கிறிஸ்தவ கீதமொன்றை மெதுவாக இசைத்தவாறு வராந்தையில் நடப்பாள்.

இன்று எதுவுமே இல்லை. வந்ததும் வராததுமாக சோர்ந்து போய் அவளது ஆசனத்தில் இருந்தாள். எனது அறைக்குள்ளிருந்து கண்ணாடியூடாக அவளைப் பார்க்கப் பரிதாபமாகவிருந்தது. பியோன் மொகாகாவிடம் சொல்லி அவளை அழைப்பித்தேன்.

"குட் மோர்னிங் ஸார்" மெதுவாக முணுமுணுத்தாள்.

"மோர்னிங் மோனிகா. இரு"

நான் அவளின் முகத்தை உற்றுப் பார்த்தேன்.

"வட் ஹப்பன்ட் டு யுவ மதர்?"

"அவவுக்கு டைபொயிட்"

"ரொம்ப சீரியஸா?"

"அப்படித்தான் சொல்றாங்க"

"நீ நின்று பார்த்திருக்கலாமே"

"எப்படி ஸார் நிற்பது. ஒபீஸுக்கு வரம்ணும்னு வந்திட்டேன்."

அவள் பொய் கூறுகிறாள் என்பது எனக்குத் தெரியும். பாடசாலைக்குச் செல்லும் மகளுக்காக வந்திருப்பாள்.

"உன் அப்பாதான் பார்க்கிறாராக்கும்"

"அப்பாவா?" நெற்றியைச் சுருக்கியவாறு கேட்டாள்.

"அதாவது உன் பாதர்"

வேதனை கலந்த சிரிப்பொன்றைக் கக்கினாள்.

"எந்த வொய்ப் என்று ஸார் அவர் பார்ப்பது?"

"எனக்குப் புரியல்ல"

"அவருக்கு நாலு மனைவிங்க"

"வட்?"

"அவருக்கு மொத்தமா ஐந்து மனைவிமார் இருந்தாங்க. ஒருத்தி விலகிட்டுப் போயிட்டா."

"உன் தாய் அவரோடதான் இருக்கிறாவா?"

"அந்த வீட்டிலேதான் ஒரு ஒதுக்குப் புறத்திலே வசிக்கிறா"

"உன் சகோதரர்கள்?"

"எல்லாமா இருபத்தெட்டுப் பேர்."

"வாவ்.... எத்தனை?"

"ருவென்ரி எயிட்! என் அப்பாவுக்குப் பிறந்தவங்க"

"இந்த நாட்டிலே இப்படித்தான் எல்லாருக்குமே ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிமார்களா?"

"பெரும்பான்மையானவர்களுக்கு ஒரு மனைவிதான். ஆனால் நிறைய பேர் இப்படியும் கூடுதலாக வைத்துக்கொண்டிருக்காங்க. உங்க நாட்டிலே எப்படி ஸார்?"

"மிகமிகக் குறைவு."

நான் இது தொடர்பாகச் சிந்திக்கத் தொடங்கினேன். ஆண்களுக்குப் பொறுப்புக்கள் குறைவு. சோளம் மாவைக் கூழாகக் காய்ச்சிக் குடிப்பதுடன் மதிய உணவை முடித்துக் கொள்ளலாம். சில வாழைக்காய்களைத் தோலுரித்து அவித்து, தட்டையாக்கி இறைச்சி அல்லது மீனுடன் சாப்பிட்டு இரவுச் சாப்பாட்டை நிறைவேற்றிக்கொள்ளலாம். காலை உணவுக்கு இருக்கவே இருக்கிறது கசாவா(மரவள்ளி). தங்க நகைகளை பெண்களின் உடல்களில் காணவே முடியாது. வெளி நாடுகளில் பாவித்த உடைகளை இறக்குமதி செய்து மலிவு விலைகளில் வாங்கி அணிந்து கொள்ளலாம். தினசரி வருமானம் இருபது ரூபா கிடைத்தாலே பெரிய தொகை. கிடைத்தால் திருப்தி. நீண்ட கால உள்நாட்டு யுத்தத்தினால் இவர்களுக்குக் கிடைத்த பரிசு இந்த வறுமையும் பொருளாதாரப் பற்றாக்குறையும்தான்.

கீழைத்தேய, மேற்கத்தைய கலாசாரங்களுக்கிடையிலான வித்தியாசத்தை என் மனம் எடை போடுகிறது. ஒரு மனைவி. அவளுக்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் கணவன். பிள்ளைகள் பாசம். தாய் தகப்பன் மரியாதை... இத்தியாதிகளுடன்... பல மனைவிகள் திறந்த காமக் கொள்கை. வயதானதும் பெற்றோர் பாசமற்று தன்னிச்சையாக வாழும் பிள்ளைகள். எயிட்ஸ் நோய்... ஆகியவைகளை ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.

★★★

எனது அறிக்கையைத் தயாரித்து பணிப்பாளர் சபையிடம் கையளித்து...அவர்களின் எதிரில் தோன்றி கேள்விகளுக்குப் பதிலளித்து... திருத்த வேண்டிய சில பகுதிகளைத் திருத்தி... எதற்காக நான் உகண்டாவுக்கு அழைக்கப்பட்டேனோ, அந்த வேலை முற்றுப்பெற்று விட்டது.

இன்னும் சில நாட்களில் நான் இலங்கைக்குப் பயணமாவதற்கான ஒழுங்குகளில் ஈடுபட்டேன். நாட்கள் நத்தைகளாகின. இரவு வேளைகள் மனைவி பிள்ளைகளின் நினைவால் தூங்கா இரவுகளாகின.

அன்று பிற்பகல் எனக்காக சிறிய அளவிலதான பிரிவுபசார வைபவமொன்றை ஒழுங்கு செய்திருந்தனர். நான் அறைக்குள் கதிரையிலிருந்து `நியூவிஷன்' வாசித்துக்கொண்டிருந்தேன்.

மோனிகா அறைக் கதவைத் திறந்தவாறு உள்ளே வந்தாள். அவளுடைய முகத்தில் தெரிந்த வினாக்குறி எதையோ என்னிடம் கேட்கப் போகிறாள் என்பதைக் காட்டியது.

"எஸ் மோனிகா. ஹௌ ஆ யு?" நியூவிஷனை மேசையில் வைத்தவாறு கேட்டேன்.

"பைன் ஸார்" கூறியவாறே கதிரையில் உட்கார்ந்தாள். கரும் பச்சை நிறத்தில் அரைக்கை சேர்ட்டும், கறுப்பு நிற கவுணும் அணிந்து இடையில் அகன்ற தோற்பட்டி கட்டியிருந்தாள்.

"இன்னும் மூன்று தினங்களுக்குப் பின்னாலே ஸார் அழவே மாட்டீங்க" என்றாள் திடுதிப்பென.

"ஏன்?"

"அதான் உங்க மனைவி பிள்ளைகளுடன் போய்ச் சேர்ந்திடுவீங்களே" என்றவாறு அஹ..அஹா... சிரிப்பை அறைக்குள் தூவினாள்.

நானும் சிரித்தேன்.

அவள் என்னையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். எதையோ என்னிடம் கேட்கப் போகிறாள் என்பது மட்டும் உண்மை.

"ஸார். நான் உங்களிடம் ஒன்று கேட்கலாமா?" என்றாள்.

`எதைக் கேட்கப் போகிறாள்? பணமா? அல்லது....? இந்த வயதான என்னிடம் என்னதான் எதிர்பார்க்கிறாள்?'

"ஓ எஸ். தாராளமாக" என்றேன்.

"ஸார். வாழ்க்கை எல்லாமே ஒருத்தியோட மட்டும் அன்பு வைத்துக்கொண்டு, அவளுக்காக வாழக்கூடிய ஒரு மாப்பிள்ளையை எனக்காக உங்க நாட்டிலே பார்க்க முடியுமா?" கேட்டாள்.

"என் நாட்டிலேயா?"

"ஆமா ஸார். நான் அங்கேயே வந்து வசிக்கத் தயாரா இருக்கேன்"

கீழைத் தேய நாகரிக பண்பாடு என் மனதில் மலையாக உயர்ந்து மலைக்க வைத்தது.

★ ★ ★

# நசிந்து மடியும் புற்கள்

மூசுமூசென மூச்சிரைக்க நடந்து வந்த மாட்டை ஆசுவாசப்படுத்திய காளிமுத்து வண்டியை நிறுத்தினான். மாட்டின் மயிர்கள் அடர்ந்த முதுகில் கைகளால் தடவி விட்டான். அண்ணாந்து எதிரே தெரிந்த மணிக்கூண்டு கோபுரத்தில் மணி பார்த்தான்.

`இன்னிக்கு இது போதும். டக்னு ஊட்டுக்குத் திரும்பணும். அந்த நல்ல சேதியோட இதுவரையிலே மாணிக்கம் வந்திருப்பான்' நினைத்தவாறு வண்டிக்குள் அடுக்கப்பட்டிருந்த மூடைகளைத் தூக்கிச்சென்று கடையொன்றின் வராந்தையில் ஒன்றுக்கு மேல் மற்றொன்றாக அடுக்கினான். தோளில் கிடந்த அழுக்கடைந்த துவாய்த் துண்டால் தலையிலும் முகத்திலும் வழிந்த வெயர்வை முத்துக்களைத் துடைத்தான். கக்கத்தினுள் துவாயை அடக்கியவாறு கடையினுள் சென்று முதலாளியின் எதிரே பவ்யமானான்.

"காளிமுத்து கொண்டாந்திட்டியா?" மூக்குக் கண்ணாடி அணிந்து கொழுத்த கன்னங்களுடன் உல்லாசமாக வீற்றிருந்த முதலாளி கேட்டார்.

"ஆமாங்க"

"அடுத்த றிப் போய் மற்ற பேக்குகளையும் கொண்டாரவேண்டியதுதானே"

காளிமுத்து மௌனம் காத்தான். விரல்களால் தலையைச் சொறிந்தான்.

"ஏன் பேசாம நிக்கே? அந்த ஓடருக்கு எனக்கு இன்னைக்கே சப்ளை பண்ணணும். இன்னும் பத்து பேக் கட்டாயம் வேணும். போ. போ. போயிட்டு ஏற்றிக்கொண்டாந்து போட்டுடு"

காளிமுத்து அசையாது மரமாக நின்றான். முதலாளியைப் பார்த்து காவிப் பற்கள் தெரியாமல் சிரித்தான்.

"எனக்கு அவசரமா ஊட்டுக்குப் போகணுங்க. இதுவரையிலே என் மகன் வந்திருப்பான். அவன் கொண்டு வந்த நல்ல சேதியை என் காது குளிர கேக்கணுங்க."

"அதென்ன நல்ல சேதி?"

காளிமுத்து பற்கள் தெரியச் சிரித்தான்.

"உங்களுக்குத் தெரியாதுங்களா? இன்னிக்குத்தான் என் மகன் எடுத்த அட்வான்ஸ் லெவல் சோதனைட முடிவு வருதாம். பத்தொம்பது வருசமா நான் படாத பாடுபட்டு அவனைப் படிப்பிச்சதுக்கு இன்னிக்குத்தான்

பலன் கிடைக்கப் போகுது'' சிறிது உணர்ச்சிவசப்படக் கூறிவிட்டு கமுக்கட்டினுள் சுருட்டி வைக்கப்பட்டிருந்த துவாயின் ஓரத்தால் புறங்கைகளில் இன்னும் வழிந்துகொண்டிருந்த வெயர்வையைத் துடைத்தான்.

"அட! அதச் சொல்றியா? பரீச்சை முடிவு வாரதெல்லாம் எனக்கு எங்க தெரியப் போகுது. நம்ம புள்ளைகள் எல்லாம் பிஸினஸ்தான். உன் மகன் எதுக்குப் படிக்கான்? "

"சயன்ஸ்ங்க. சரியா பாஸ்பண்ணிட்டான்னா டாக்டருக்குப் படிப்பான். வண்டிக்கார காளிமுத்தோட மகன் டாக்டருக்குப் படிப்பாங்க'' பெருமை மிகுதியால் அவனது புருவங்கள் அகன்றன.

முதலாளி என்ன நினைத்தாரோ சற்றுத்தூர கணனியில் கணக்குகளைப் பதிந்தவாறும் அவர்களின் உரையாடலுக்கு செவிகொடுத்தவாறும் இருந்துகொண்டிருந்த மகனைப் பார்த்து கண்களால் ஏளனச் சிரிப்பொன்றைக் கக்கினார்.

"இது ஒன்னும் அவ்வளவு அவசரமானதா எனக்குத் தெரியல்ல. சோதனையில பாஸ் பண்ணினானா இல்லியான்ற செய்தியை இப்ப அறிஞ்சா என்ன? அப்புறமா அறிஞ்சா என்ன? முதல்ல தொழிலப் பாருப்பா. நாலு காசி உழைக்கிறதுக்கு வழியப் பாருப்பா. ஆயிரம் பேரு படிச்சிட்டு றோட்டில குப்பை கூட்டுறான். ஏதோ உன் மகன் மட்டும்தான் படிச்ச மாதிரி'' தன் முன் கை கட்டி வாய் பொத்தி நிற்கும் ஒரு வண்டிக்காரன் அவனது மகனை டாக்டருக்குப் படிப்பிக்கவைக்கவேண்டுமென்று கொண்டிருந்த ஆர்வத்தைச் செமிக்கமுடியாமலோ என்னவோ முதலாளி உள்ளத்தினுள் கிளர்ந்தெழுந்த எரிச்சலை மெதுவாக உதடுகளால் துப்பினார்.

அவர் கூறியது காளிமுத்துவுக்கு கிஞ்சித்தும் பிடித்ததாகத் தெரியவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் மாணிக்கம் அவனிடம் தெரிவிக்கப்போவதுதான் அதுநாள் வரையான அவனது வாழ்க்கையில் கேட்கப்போகும் மிகவுமே மகிழ்ச்சியானதொரு செய்தி.

"என்ன முதலாளி இப்படிச் செல்றீங்க? என் மகனப் படிப்பிக்க நானும் எண்ட பொஞ்சாதியும் பட்ட கஷ்ட நஷ்டங்கள் ஆருக்குத் தெரியும். அத உடுங்க. நான் உடனேயே போகணும். என் கூலியக் குடுங்க. மிச்சத்த நாளைக்கு நேரத்தோட வந்து ஏத்திக்கொண்டாந்து தாரன். "

முதலாளி அவனின் முகத்தை உற்றுப் பார்த்தார். அவரது முக பாவனை மாறிக்கொண்டு போவதை அவனால் உணர முடிந்தது.

“ஏய் காளி! நான் சொன்னது உனக்கு விளங்கல்ல? அம்பது மூடை பதினொரு மணிக்கு முன்னதா தாரதா அந்த ராணுவ அதிகாரிக்கிட்ட சொல்லிட்டன். மூணு நாள் லீவிலதான் அவரு வந்து நிக்காரு. ஊட்டுக்கு அடித்தளம் போட்ட கையோட அவரு போகணுமாம். எனக்கிட்ட இருப்பு முடிஞ்சின்னுதான் என் தம்பி கடையிலேருந்து கொண்டு வந்து இங்க வைடான்னு உனக்கிட்ட சொன்னேன். நீ என்னடான்னா.. சோதனையாம்! முடிவாம்!” கோபமாகக் கூறியவாறு மேசையில் விரித்துக் கிடந்த சிகரட் பெட்டிக்குள்ளிருந்து ஒன்றை வலது கை விரல்களால் எடுத்து இடது புறங்கையில் அதன் கீழ் புறத்தைக் குற்றினார்.

“என் அவஸ்தையைப் புரிஞ்சிகொள்றீங்க இல்லியே. காலைலே ஏழு மணிக்கு வேலையைத் தொடங்கி நாப்பது பேக் கொண்டாந்துட்டேன். மிச்சத்தை நாளைக்கு.... ”

“பேசாதே. எதுவும் பேசாதே! உனக்கு உன் ஜோலிதான் பெரிசாப் பட்டா கூலியைத் தாரேன் வாங்கிட்டுப் போ. இனிமே என் கடைப் பக்கம் எட்டிக்கூடப் பாக்காதே. என்ன செய்யப் போறே? ”

காளிமுத்து யோசித்தான். அவனுக்கு அடிக்கடி வேலை கொடுக்கும் கிரமமான வாடிக்கையாளர்களில் முதலாளியும் ஒருவர். அவருடன் பகைத்துக்கொள்ள அவன் விரும்பவில்லை. அவரின் முகத்தை நொடி உற்றுப் பார்த்தான். கமுக்கட்டினுள்ளிருந்த துவாயை எடுத்து உதறி தோளில் போட்டான். வெளியே நிறுத்தியிருந்த வண்டியை நோக்கி நடந்தான்.

‘கோபமா சொன்னாத்தான் நாய்களுக்கு உறைக்கும். தின்னவே வழியில்ல. அதுக்குள்ள மகன டாக்டராக்கப் போறாரு!’ காளிமுத்து உதறிய துவாயிலிருந்தும் கடையினுள் பரவிய வெயர்வை நாற்றத்தால் வினாடி நேரம் மூக்கைச் சுளித்த முதலாளி தனக்குத்தானே கூறிக்கொண்டார்.

காளிமுத்து வண்டியுடன் நடந்தான். பாதையில் வாகனங்கள் வேகவேகமாக ஊர்ந்தன. அங்குமிங்குமாக அடிக்கடி ஒலித்த ஹார்ன் சப்தங்கள் வேதனையுடனான அவனது மனதுக்குள் எரிச்சலை ஏற்படுத்தியது. ஒருநாள் சந்தியொன்றில் சிக்னலுக்காக அவன் தரித்து நின்றபோது பொலீஸ்காரனொருவன் வாகனச் சாரதியொருவனைப் பார்த்து கடுகடுத்த முகத்துடன் பொரிந்து தள்ளியது சடுதியாக நினைவில் எழுந்தது.

“மேலை நாடுகளிலே ஹார்ன் சத்தமே ஒலிக்கிறதில்ல. எல்லாமே சிக்னல்தான். நீங்க என்னடான்னா என்ஜினை ஸ்டாட் பண்ணினா ஒரு

கையை ஹார்ன்ல வைச்சுக்கொண்டுதானே ஓட்டுறீங்க. போங்கடா. போயி சரியா வாகனம் ஓட்டுறது எப்படின்னு படிச்சிட்டு வாங்கடா!''

பாரமில்லாத வண்டியை மாடு இழுத்துச் செல்லும் வேகம் போதாததாகத் தெரிந்தது அவனுக்கு. எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் தேவையான மூடைகளை ஏற்றிச்சென்று கொடுத்துவிட்டு வீட்டுக்குச் செல்லத் துடித்துக்கொண்டிருந்தான் அவன்.

மாட்டின் முதுகில் சற்றுப் பலமாகத் தட்டி நடையின் வேகத்தை அதிகரிக்கச் சொன்னான். அதி வேகத்தில் பின்னால் வந்த மோட்டார் சைக்கிளொன்று மயிர் இடைவெளியில் வண்டியை முந்திக்கொண்டு சென்றது.

'நாசமறுவான்! இந்த வேகத்தில போறானே! வண்டி மட்டும் கொஞ்சம் வலப்பக்கத்தில அசைஞ்சிருந்தா இதுவரையில புணமா ஆகிருப்பான்.' மனதுக்குள் ஏசியவாறு நடையைத் தொடர்ந்தான்.

சரேலென அவனது மனதில் மணி வாத்தியாரின் எண்ணம் உருக்கொண்டெழுந்தது.

`அவரு மட்டும் இப்போ இருந்திருந்தா இன்டைக்கு என்ட மகன் செல்லப்போற சேதியை நான் அறிவிக்கும் முதல் ஆள் அவர்தான். அதைக் கேட்டு அவர் எப்படி சந்தோசப்படுவார். டேய் காளி! நீ சாதிச்சிட்டாடா! இப்பிடிச் செல்லி என்னைச் சந்தோசப்படுத்துவாரே....'

எந்த வித அடிப்படை வசதிகளும் இல்லாத குக்கிராமமொன்றில் எழுத்தறிவில்லாத பெற்றோருக்குப் பிறந்த காளிமுத்து பக்கத்துக் கிராம ஆரம்பப் பாடசாலையொன்றில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தான். பட்டணத்துக்குச் சென்று படிக்க பொருளாதார வசதியில்லாததால் தகப்பனுடன் சேர்ந்து கிராம குளங்களில் மீன் பிடிக்கத் தொடங்கினான். மரக்கறிக்கன்றுகளுக்கு நீர் இறைத்தான். அவனையொத்த வயதானவர்களுடன் சேர்ந்து தெருச்சுற்றினான்.

ஒரு நாள் பிற்பகல் உடுத்திருந்த அழுக்குச் சீலையால் முழு உடலையும் போர்த்தியவாறு அவனுடைய தாயார் குலுங்கத் தொடங்கினாள். கிராம பரிகாரியொருவரை அழைத்து வந்து காட்டினர்.

''காய்ச்சல்தான். லேசாக்கிடலாம்''

வைத்தியர் கொடுத்த குளிகைகளை உரைத்துப் பருக்கினர். அடுத்த நாள் இருள் கௌவத் தொடங்கும் நேரத்தில் நோயின் வேகம் அதிகரித்தது. பக்கத்துக் குடிசைகளில் வசிக்கும் பெண்கள் அவளைச் சுற்றி மொய்த்தனர்.

“சன்னி அடிக்குது. உடனேயே ஒரு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணும்” என்றாள் வயதான ஒருத்தி.

“பத்துக் கட்டை போகணுமே. அதுக்குள்ளே ஏதாவது நடந்துட்டா?” வேறொருத்தி இழுக்க....

“வேற வழியே இல்ல. ஒரு வண்டில புடிச்சிட்டு வாங்க”

மாட்டு வண்டி கிராம கிறவல் பாதையில் ஆடி அசைந்து இரண்டு மைல் தூரம் கூடப் போயிருக்காத வேளையில் காளிமுத்துவின் தொடையில் தலை வைத்துப் படுத்திருந்த அவனது தாயின் உயிர் பிரிந்தது.

அவன் ஓ..வென குலுங்கி அழுதான். கிராமத்தில் வைத்திய வசதியுடன் டாக்டர் ஒருவர் இருந்திருந்தால் தாய் இறந்திருக்கமாட்டாளென்ற அபிப்பிராயம் அவனுடைய நெஞ்சினுள் ஆணியாக ஏற்றப்பட்டது.

`எனக்குத்தான் படிக்கமுடியல்ல. நான் வளர்ந்து பெரியாளாகி திருமணம்செய்து குழந்தையொன்றைப் பெற்றெடுத்தா அவனை டாக்டருக்குத்தான் படிக்க வைப்பேன். ஏழை மக்கள் வசிக்கிற ஒரு கிராமத்துக்குப் போய் அவங்க கண்ணீரைத் துடைக்கக்கூடியவாறு சேவைசெய்யணும்னு நான் அவனை ஊக்குவித்துக்கொண்டே இருப்பேன்.'

அந்த எண்ணம் அப்போதிருந்தே அவனுடைய நெஞ்சில் அணையாத் தீபமாக எரிந்துகொண்டேயிருந்தது.

தாய் காலஞ்சென்ற சில வருடங்களில் தகப்பன் மறுமணம் செய்து கூட்டி வந்த சித்தியினால் ஏற்பட்ட மன வேதனைகளைத் தாங்க இயலாமல் யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் கிராமத்தை விட்டும் ஓடி எங்கெங்கெல்லாமோ திரிந்து, இரவு வேளைகளில் சந்தைச் சதுக்கங்களில் உறங்கி, யார் யாருடைய கைகளினாலெல்லாமோ அறைபட்டு, ஹோட்டல்களில் எச்சில் பாத்திரங்கள் கழுவி.... ஒரு நாள் டிக்கட் இல்லாமல் புகையிரதமொன்றில் பிரயாணம் செய்யும்போது பிடிபட்ட வேளையில் அதே பெட்டியினுள் பிரயாணம் செய்த மணி வாத்தியாரினால் காப்பாற்றப்பட்டு.... அவருடைய வீட்டில் வேலை செய்ய அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

`மணி வாத்தியார் எஜமான் மட்டுமில்ல. எனக்குத் தந்தையும் அவர்தான்' என நினைத்துக்கொள்வான். கணிசமான வருடங்கள் அவருடைய வீட்டில் வேலை செய்தவனை அவர்தான் தோல் பதனிடும் தொழிற்சாலையொன்றில் சேர்த்துவிட்டார். அங்கு வைத்துத்தான் கூடவே வேலைசெய்த மெனிகேயுடனான நட்பு காதல் துளிராக அரும்பியது.

தமிழனான இவனுக்கும் சிங்களப் பெண்ணான அவளுக்கும் மணி வாத்தியார்தான் முன்னின்று திருமணம் செய்து வைத்தார். அவர்கள் வசிப்பதற்காக அவருக்குச் சொந்தமான நிலத்துண்டொன்றில் குடிசையும் அமைத்துக் கொடுத்தார்.

மெனிகே கருவுற்ற பின் வேலைக்குப் போவதை நிறுத்திக்கொண்டதால் வருமானம் பாதியாகக் குறைந்தாலும் இவன்தான் மேலதிக நேர வேலை செய்து சரிக்கட்டினான். பிறந்த ஆண் குழந்தைக்கு மாணிக்கம் என பெயர் சூட்டி மகிழ்ந்தான்.

"இத பாரு மெனிகே. என்ட மனசில பெரிசா ஒரு விசயம் இருந்துகொண்டே இருக்கு. அது உனக்குத் தெரியும். இப்ப புள்ள புறந்துட்டான். நீ சாப்பிட்டியோ, நான் சாப்பிட்டேனோ நீ அதையெல்லாம் பாக்கப்பூடா. நம்ம புள்ள மட்டும் ஒரு நாளாவது பட்டினி கிடக்கக் கூடா. அவன வளத்து ஒரு டாக்டராக ஆக்கியே தீரணும். அவன் நம்மளப் போல ஏழ ஜனங்களுக்கு சேவை செய்றதை கண்களால நாம பாக்கணும். "

அவனுடைய இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி, அடிக்கடி அவர்களின் குடிசைக்கு வரும் மணி வாத்தியாரின் உபதேசங்களுக்கு ஏற்ப மாணிக்கத்தை வளர்த்தனர். பாடசாலையில் நடைபெற்ற ஒவ்வொரு பரீட்சையிலும் அவன் முதல் ஆளாக வருவதை அறிந்து மகிழ்ந்தனர்.

மணி வாத்தியார் வட மாகாணத்தைச் சேர்ந்தவர். நடைபெறும் உள்நாட்டு யுத்தம், அது தொடங்கியதற்கான காரணங்கள், ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகள், மீறப்பட்டதும் கிழித்து எறியப்பட்டதுமான நிகழ்வுகள், பெரும்பான்மையினத்தின் மேலான்மைத் தனங்கள்.... போன்றவற்றை அவர் நண்பர்களுடன் உரையாடும்போதெல்லாம் இவன் கேட்டுக்கொண்டு நின்றிருக்கிறான்.

"நம்ம நாட்டிலே நடக்கிறதை நாலு வார்த்தையிலே சுருக்கிச் சொல்லிடலாம்."

"எப்படி? " மணி வாத்தியாரைப் பார்த்து ஒருவன் கேட்டான்.

"அஞ்சு பிள்ளைகள் கொண்டதொரு குடும்பம். பெற்றோரும் மூத்த அண்ணனும் தனக்குரிய அந்தஸ்த்தைத் தருவதில்லையென்பது ஒரு பிள்ளையின் குற்றச்சாட்டு. அதைப் பெற அந்தப் பிள்ளை முயற்சிக்க, அவனுடைய முயற்சியை முறியடிப்பதற்காக அவனுடன் மோதுவதற்கு மாதச் சம்பளம் பெறும் தகப்பன் தனது வருவாயில் மூன்றில் ஒன்றுக்கு மாதாமாதம் ஆயுதங்கள் வாங்கி வாறான். மகன் நண்பர்களுடன் கூட்டுச்

சேர்ந்து எப்படியோ பணம் எடுத்து தகப்பனுடன் மோதுவதற்காக ஆயுதங்கள் வாங்கிறான். ஒவ்வொரு மாதமும் ஆயுதங்கள் வாங்குவதும் போராடுவதுமாக குடும்பமே நாசமாகிக்கொண்டு போகுது. இதான் நம்ம நாட்டிலேயும் நடக்கிது'' மணி வாத்தியார் கூறிவிட்டு அனாயாசமாக மற்றவர்களைப் பார்த்தார்.

''நான் ஒரு கேள்வி கேக்கேன். பதில் சொல்லுங்க பார்க்கலாம் '' என்றார் சரேலென.

''என்ன கேள்வி? ''

''காட்டிலே யானையும் யானையும் சண்டை புடிச்சா சாகிறது யாரு?''

அவரின் எதிரில் இருந்தவர்கள் மௌனம் காத்தனர்.

''நசுங்கிச் சாகிறது புல்லுகள்தான். நம்ம நாட்டிலே நடக்கிற யுத்தத்தாலே நசுங்கிச் சாகிற புல்லுகள் நாமதான். ''

அடுத்தவர்களுக்கு நன்மைசெய்வதுதான் தனது இலட்சியமென வாழ்ந்த மணி வாத்தியார் திடீரெனக் காலஞ்செல்ல நேர்ந்ததும் புல்லாக நசிந்துதான். அவர் பிரயாணம் செய்துகொண்டிருந்த பஸ் வண்டியொன்றினுள் வெடித்த குண்டு விழுங்கிய முதல் உயிர் இவருடையதுதான்.

போக வேண்டிய இடத்தை அடைந்து, சீமெந்து மூடைகளை வண்டியில் ஏற்றி மீண்டும் மாட்டுடன் நடக்கத் தொடங்கினான்.

மனம் முழுதும் இப்போது மாணிக்கம் வலம் வந்தான். அவனை வளர்த்தெடுப்பதற்காக மனைவியுடன் சேர்ந்து அனுபவித்த சிரமங்களெல்லாம் ஒன்று மாறி மற்றொன்றாக மனத் திரையில் மின்னி மறைந்தன. அவன் நோய்வாய்ப்பட்டபோதெல்லாம் தூங்கா இரவுகளாகக் கழிந்தவைகளின் எண்ணிக்கை ஏராளம். பெருநாள் தினங்களில் அவனுக்கு மட்டும் எடுத்த புதுத்துணிகள், உழைக்கப் போகாத மாரி காலங்களில் அவனுக்கு மட்டும் உணவளித்துவிட்டு தண்ணீரைக் குடித்து பசிக்கொட்டாவிகளுடன் கழித்த நாட்கள், படிப்புத் தேவைக்காக அவன் பணம் கேட்டபோதெல்லாம் தனது இல்லாமையைக் காட்டிக்கொள்ளாமல் இரவு வேளைகளில் மூச்சிரைக்க மூடை சுமந்து உழைத்த நாட்கள்.... எல்லாமே நினைவில் எழுவதும் அடங்குவதுமாக..

`நானும் மெனிகேயும் அவனுக்காகத்தான் வாழ்ந்தோம். நாய் படாபாடுபட்டதெல்லாம் அவனுக்காகத்தான். அந்த நன்றி அவனுக்கு இருக்கு. என்ட லட்சியம் அவனுக்குத் தெரியும். அதை நிறைவேற்றுவதில் அவன் பின் நிக்கவே மாட்டான்.' உறுதியான எண்ணத்துடன் காளிமுத்து கடையை அடைந்தான்.

"கொண்டாந்துட்டேன் முதலாளி. கூலியைத் தாங்க. சட்டு புட்டுனு ஊடு போய்ச் சேந்துடணும்."

முதலாளி அவனை எரிச்சலுடன் பார்த்தார்.

"பொறுப்பா. அப்பிடி என்னதான் அவசரம்? கையிலே உள்ள வேலயை முடிச்சுட்டு வந்துர்ரன். "

எதிர்த்துக் கதைத்தால் காரியம் கெட்டுவிடுமென நினைத்து காளிமுத்து வாளா நின்றான். சிறிது நேரம் செல்ல அண்ணாந்து கடிகாரத்தைப் பார்த்தான். மெதுவாகச் செருமினான். நேரம் ஊர்வதைப் பொறுக்கமுடியாமல் "முதலாளிய்..." என்றான்.

"ஏய் கணக்குப்புள்ள. காளிட கூலியைக் கொடுத்து அனுப்பிடு. பிச்சைக்காரன்களை வேலைக்கு எடுத்தா இதான் சங்கடம். நம்ம கஷ்டத்தை உணர மாட்டான்கள்." முதலாளியின் முணுமுணுப்பு காளியின் இரத்த ஓட்டத்தை அதிகரித்தாலும் பொறுமை காத்தான்.

காளிமுத்து வீட்டை அடைந்ததும் மனைவியை விளித்து பெரிதாகக் குரல் எழுப்பினான்.

"மாணிக்கம் வந்துட்டானா? "

"இன்னும் இல்ல"

"நேரம் பன்னெண்டுக்கும் மேலாகிட்டே? ஏன் இன்னும் வரல்ல?"

"எனக்கென்ன தெரியும் "

"ஒருவேளை சோதினையிலே பாஸ் பண்ணல்லியோ? அந்த வேதனையிலே ஊட்டுக்கு வராம எங்கேயாச்சும் நிக்கானோ? "

அவர்கள் இருவரும் ஆளுக்காள் யோசித்தவாறு மாணிக்கத்தின் வரவை எதிர்பார்த்து குடிசை முற்றத்தில் நின்றுகொண்டிருக்கையில்....

பக்கத்துத் தெரு பரமநாதன் அவர்களை நோக்கி நடந்து வந்தார்.

"காளி. உனக்கிட்டதான் வந்தன். ரெண்டு விசயம். ஒன்டு உனக்குச் சந்தோசமான செய்தி. உன்ட மகன் மாணிக்கம் மட்டும்தான் நாலு பாடங்களிலும் ஏ எடுத்திருக்கானாம். ஸ்கூலுக்குப் போய் றிசல்ட் பார்த்த என் மகன் டெலிபோன்ல சொன்னான். "

"மாணிக்கம் கூட அங்கதானே போனான். இன்னும் வரல்லியே?"

"யோசிக்காதே. வந்துடுவான்."

"மத்த விசயம் என்னங்க? "

"ஊடு றிப்பயருக்கு செங்கல் கொஞ்சம் வாங்கிப் போட்டிருக்கன். ஏத்திக் கொண்டாந்து தந்துடணும். "

"நாளைக்கி ஏத்தித் தாறன். "

காளிமுத்து சந்தோச மிகுதியால் பக்கத்தில் நின்ற மெனிகேயைப் பார்த்துச் சிரித்தான்.

“கேட்டியா. நம்ம புள்ள சாதிச்சிட்டான். ”

பரமநாதன் சென்றுவிட்டார். நேரம் ஒன்றரையைத் தாண்டிவிட்டது. மாணிக்கம் இன்னும் வீடு திரும்பவில்லையென்ற விசனம் அவர்களை வாட்டியெடுத்தது.

தெருப்பையனொருவன் அவர்களின் வீட்டை நோக்கி தலை தெறிக்க ஓடி வருவது தெரிந்தது.

“காளி மாமா. டவுணிலயிருந்து வந்த பஸ்ஸில குண்டு வெடிச்சயாம். எட்டுப்பேரு செத்துட்டாங்களாம். செத்ததிலே உங்க மகனும் ஒரு ஆளுன்னு பேசிக்கிறாக” மூச்சிரைக்க பையன் கூறி முடிப்பதற்கிடையில் அவர்கள் இருவரும் துப்பாக்கி ரவைகளானார்கள்.

பஸ் எரிந்துகொண்டிருந்தது. சுற்றிவர நூற்றுக்கணக்கான ஆட்கள். காக்கி உடையணிந்தவர்கள் சப்பாத்துச் சப்தம் ஒலிக்க அங்குமிங்குமாக நடமாட.. தலத்தில் எட்டுச் சடலங்கள் இடைவெளிவிட்டு வரிசையாக அடுக்கப்பட்டிருக்க.. ஒரே இரைச்சல்.

காளிமுத்துவும் மெனிகேயும் ஆட்டோவிலிருந்தும் இறங்கி தலை தெறிக்க ஓடி வந்தார்கள். மகனின் உடலை அடையாளம் கண்டு..

குந்திக்கொண்டிருந்த காளி என்ன நினைத்தானோ, சடுதியாக எழுந்து நின்றான். இரு கைகளையும் அகல நீட்டினான்.

“நிறுத்துங்க! நிறுத்துங்க! யுத்தத்தை நிறுத்துங்க! நாங்க அப்பாவிக! எங்களைக் கொல்லாதீங்க!.... ” தொண்டை கிழியக் கத்தினான்.

அவனுடைய அலறல் போரில் ஈடுபடும் இரு தரப்பாருக்கும் கேட்கிறதோ என்னவோ, நசுங்கிக் சாகும் பொதுமக்களினது தொகை கூடிக்கொண்டே செல்கிறது.

★ ★ ★

# விருது அல்ல விழல்

இலங்கை வானொலி முஸ்லிம் சேவை ஸஹர் நேர ஒலிபரப்பின்போது வாசிக்கப்பட்ட அந்த மரண அறிவித்தலைக் கேட்டதும் திடுக்குற்றேன்.

`பிரபல எழுத்தாளர் நெய்னாகுடி நெய்னா அவர்கள் காலமாகிவிட்டார்கள். அன்னார்....'

எச்சில் பாத்திரங்களைக் கழுவியவாறு குசினிக்குள் நின்றிருந்த மனைவி மஸாஹிறாவை நோக்கி அவசரமாக குரல் கொடுத்தேன்.

"கையிலே வேல. முடிச்சிட்டு வந்துடறேன்." மஸாஹிறாவுக்குப் பதிலாக குரல் வந்தது.

"கெதியா வாங்களேன். உங்க மாமா மௌத்தாம்"

மஸாஹிறா தனது பெருத்த சரீரத்தைத் தூக்கிக்கொண்டு அணிந்திருந்த ஹவுஸ்கோட் கால்களுக்கிடையில் சிக்க ஓடியவாறு ஹாலினுள் வந்தாள்.

"யாரு மௌத்து?" பதறினாள்.

"அதான் உங்க நெய்னா மாமா. அடுத்த தடவையும் அறிவிப்பாங்க. கேளுங்களேன்." எழுந்து சென்று வானொலியின் சப்தத்தை அதிகரித்தேன்.

அறிவித்தலைக்கேட்ட மஸாஹிறா அவளை அறியாமலேயே "இன்னாலில்லாஹி..."என்றாள்.

"அல்லாவே! நெய்னா மாமா மௌத்தாகிட்டாரா? முந்தானாள்தானே ரெண்டு பேருமா போய்ப் பார்த்துட்டு வந்தோம். மௌத்தாப் போற அளவுக்கு எந்த அறிகுறியும் இல்லைன்னும் சொன்னீங்களே...." என்றவாறே பக்கத்தில் இருந்த பிரம்பு நாற்காலியில் மெதுவாக அமர்ந்து கால்களைத் தரையில் நீட்டிவைத்தாள்.

"ஏங்க.... எப்படி இப்படி திடுதிப்பென மௌத்தாகி இருப்பாரு? முந்தா நாள் அவ்வளவு திடகாத்திரமாக இருந்தவருக்கு என்னதான் ஏற்பட்டிருக்கும்?" கண்களில் கருக்கட்டிய கண்ணீர் மணிகளை புறங்கையால் தேய்த்தவாறு கேட்டாள்.

"எனக்கென்னம்மா தெரியும்? வயதானவர்தானே. அறுபதைக் கடந்தா போற நாளை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்க வேண்டியதுதான்."

"காலையிலே ஜனாஸா எடுக்கிறாங்களாமே, எப்டிப் போறது?"

"நான் பள்ளிக்குப் போய் சுப்ஹு தொழுதுட்டு வந்துடறேன். உங்க வேலைகளையெல்லாம் முடிச்சி, தொழுதுட்டு றெடியாகுங்க. பஸ்ஸிலே போயிடலாம்"

"எனக்கு கையும் ஓடாது, காலும் ஓடாது. உடனேயே போய் மையத்தைப் பார்த்துட்டு மாமிக்கு ஆறுதல் சொல்லணும் போலயிருக்கு."

தலையில் தொப்பியைப் போட்டவாறு பள்ளிவாசலுக்குப் போவதற்காகப் புறப்பட்டேன்.

★★★

எனது கிராமத்திலிருந்து நெய்னாகுடிக்கு சுமார் முப்பது கிலோமீற்றர் இருக்கும். நடுங்கும் குளிரில் நானும், மஸாஹிறாவும் பஸ் ஆசனமொன்றில் வாகாக அமர்ந்து, துள்ளிப் பாய்ந்து முகங்களில் பிராண்டிய ஊதல் காற்றை வெளியே தள்ளிவிட திறந்திருந்த ஜன்னல் கண்ணாடியை இழுத்து மூடினேன்.

தமிழ் ஆசிரியரான எழுத்தாளர் நெய்னா எனக்கு முதன் முதலில் அறிமுகமானது எனது திருமணப் பந்தலில்தான். தாய் வழியில் அவர் மஸாஹிறாவுக்கு மாமன் முறையானவர். அவருடைய தாயும் இவளுடைய பாட்டியும் ஒன்று விட்ட சகோதரிகள்.

மஸாஹிறாவின் தகப்பனாரான எனது மாமனார்தான் நெய்னாவை அறிமுகம் செய்துவைத்தார்.

"நான் உங்க சிறுகதைகளை நிறைய வாசிச்சிருக்கேன்" என்றேன்.

அவர் இமைகளை விரித்தவாறு முகத்தில் மகிழ்ச்சி காட்டினார்.

"உங்க கதைகள் எனக்கு மட்டுமல்ல, என் நண்பர்கள் பலருக்கும் நிறையப் பிடிக்கும்"

அவருடைய மகிழ்ச்சி மேலும் அதிகரிப்பதை முகம் காட்டியது.

"எனது சிறுகதைகளை மட்டும்தான் வாசிச்சிருக்கீங்களா?"

"பத்திரிகைகளில் வந்த தொடர்கதைகள் சிலதையும் வாசிச்சிருக்கேன். அணிந்த ஆடைன்னு ஒரு தொடர்கதை எழுதுனீங்களே. ஞாபகமிருக்கா?"

நெய்னா கடகடவென வாய்விட்டுச் சிரித்தார்.

"பெற்ற பிள்ளைகளைத் தாய் மறந்தா விடுவாள்?" எனது தோளில் இதமாகத் தட்டியவாறே கேட்டார்.

"அந்தக் கதை தினச்சுடர் பத்திரிகையில் தினசரி வெளிவந்த நாட்களிலே அடுத்த நாள் எப்போது விடியுமெனப் பல பேர் காத்துக்கிடப்பாங்க. என்னையும் சேர்த்து"

"எதுக்கு?"

"உங்க கதையின் அடுத்த அங்கத்தை வாசிப்பதற்காகத்தான்."

"போச்சுடா! அப்போ...உங்க நித்திரையையெல்லாம் நான் கெடுத்துட்டேன்னு மறைமுகமா சொல்றீங்க?"

அவருடைய ஹாஸ்யத்தைக் கேட்டு நானும் உடல் குலுங்கினேன்.

"தம்பீ, நீங்க இப்படிச் சொல்லும்போது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கு தெரியுமா?" என் கைகளிலென்றைப் பற்றியவாறு கூறினார்.

"நீங்க எழுதின சில கதைகளிட முடிவு சோகமாக அமையும்போது நாங்க எங்களை அறியாமலேயே அழுதிருக்கோம்."

நெய்னா என்னை உற்றுப் பார்த்தார்.

"ஒரு எழுத்தாளன் அவனுடைய ஆக்கங்களைப் பற்றி சந்தோஷமடைவது இப்படி உங்களப்போல வாசகர்கள் அவனது ஆற்றலைப் பற்றி பாராட்டும் போதுதான். ம்! அது எங்கே அவங்களுக்குத் தெரியப் போகுது!" கூறிக்கொண்டிருந்தவர் எதைப்பற்றி நினைத்தாரோ ஆழமான பெருமூச்சொன்றை ஊதினார்.

அந்தப் பெருமூச்சுக்கான அர்த்தத்தைத் தெரிந்துகொள்ள எனக்கு அதிக நாட்கள் எடுக்கவில்லை.

★★★

திருமணமாகி சில நாட்களில் மஸாஹிறாவின் வேண்டுகோளுக்கிணங்க நானும், அவளும் ஒருநாள் காலையில் நெய்னா வீட்டுக்குச் சென்றோம்.

அவருடைய வளவினுள் அமைந்திருந்த சாதாரணதரக் கல்வீட்டை மகள் ஒருத்திக்கு சீதனமாகக் கொடுத்துவிட்டு, அதே வளவின் ஒதுக்குப் புறத்தில் தென்னோலையினால் குடிசையொன்றை அமைத்து மனைவி, திருமணமாகாத வயதுவந்த மகள் மற்றும் பாடசாலைக்குச் செல்லும் மகன் ஆகியோருடன் வசித்தார். குடிசைதானென்றாலும் மிக நேர்த்தியாக இருந்தது. மத்திய கிழக்கில் வேலைசெய்யும் மகன் ஒருவனால் அனுப்பப்படும் பணத்தைக் கொண்டு வளவின் ஒரு மூலையில் சிறியதொரு கல் வீட்டையும் கட்டிக்கொண்டிருந்தார்.

நாங்கள் அவரின் குடிசையை அடையும் போது கூட அங்கு கிடந்த பழைய மேசையொன்றின் அருகில் பலகைக் கதிரையின் மேல் உட்கார்ந்தவாறு எதையோ எழுதிக்கொண்டிருந்தார்.

எழுந்து வந்து எங்களை வரவேற்றார்.

“என்ன மாமா எழுதிக்கொண்டிருக்கீங்க?” கேட்டேன்.

”இப்போ ஸ்கூல் விடுமுறைக்காலம். பிரயோசனப் படுத்தலாமேன்னு ஒரு நாவல் எழுதிக்கொண்டிருக்கேன்.”

“எதைப்பற்றி?”

“சமூக உறவுகளைப் பற்றி. இனங்களுக்கிடையிலான ஒற்றுமையைப்பற்றி, ஒவ்வொரு இனமும் மற்ற இனங்களுக்கு விட்டுக்கொடுத்து மற்றவங்களை மதித்து, நானும் பெரிசில்ல, நீயும் பெரிசில்ல, நாம எல்லோரும் மனித குடும்பமொன்றின் அங்கத்தவர்கள் என்பது பற்றி....” நிறுத்தியவர் தூர ஆகாயத்தில் எதையோ உற்றுநோக்கியவாறு பெரிதாக ஒரு பெருமூச்சை எறிந்தார்.

“ஏன் பெருமூச்சு?”

”இப்போ இந்த நாட்டிலே நடப்பவைகளை நினைக்கும்போது பெருமூச்சாகவே வருது. மனித உயிர்களுக்கு மதிப்பே இல்லாம போயிட்டு. மனித நேயம் கொஞ்சம், கொஞ்சமாக மரணித்துக்கொண்டே போகுது. இதைத் தடுத்து நிறுத்தணும். இனங்களுக்குள்ளே ஒற்றுமையை வளர்த்து, அதன் மூலம் இந்த நாட்டைக் கட்டியெழுப்பணும். அதற்கான எனது பங்களிப்பாகத்தான் இந்த நாவலை எழுதுறேன்.” உணர்ச்சி வசப்படக் கூறினார்.

“நாவலின் பெயர் என்ன மாமா?” மஸாஹிறா கேட்டாள்.

“ஆலமர விழுதுகள்”

சுற்றிவர பத்துப்பேர் நின்று கையோடு கை சேர்த்துப் பிடித்தாலும் பிடிக்க முடியாத பருமனைக் கொண்டு, தும்பிக்கைகளாகத் தொங்கிய விழுதுகளுடன் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் வளவினுள் நிற்கும் ஆலமரம் மனதில் காட்சிதந்தது.

“இப்பத்தான் வந்திருக்காங்க. உங்க தொண தொணப்பைத் தொடங்கிட்டீங்களா?” என்றார் செல்லமாகக் கடிந்தவாறு மாமி.

நெய்னா அவரது மனைவியை ஒரு முறை உற்றுப் பார்த்துவிட்டுப் பார்வையை அடக்கிக் கொண்டார்.

“எதுக்கெல்லாமோ கற்பூர வாசனை தெரியாதும்பாங்க. இல்லையா மருமகன்?” என்றார் மெதுவாக என்னைப் பார்த்து.

நெய்னாவின் எழுத்து நடையில், அவர் வெளியிடும் கருத்துக்களில், அவருடைய கதைகளில் பொதிந்து கிடக்கும் அர்த்தங்களில் கட்டுண்ட பலரை எனக்குத் தெரியும். அவர் வெளிப்படையாகத் தெரிவிக்கும் சமூக விரோதச் செயல்களில் பரகசியமாகவோ, இரகசியமாகவோ ஈடுபடும் பலர் அவரை வெறுப்பதும் தெரியும். அவரின் எழுத்து நடையே ஓர் அலாதிதான். மார்கழியின் காலைப் பொழுதில் முகத்தை வருடும் குளிர்ந்த தென்றலைப் போன்று சில சமயங்களில் அவை மனதைத் தடவிவிடும். சமூக அநியாயங்களை எதிர்த்து அவர் கக்கும் எழுத்துக்கள் துப்பாக்கிக் குழாயினுள்ளிருந்து வெளித்தள்ளிய குண்டூசிகளாக மனதைத் தைக்கும்.

இத்தனை வருடங்களாக அவருடன் இரண்டறக் கலந்து வாழும் மாமிக்கு இவைகள் எதுவும் தெரியாதோ?

"பரவால்ல மாமி. இன்றைக்குப் பொழுது சாய்கிற வரை உங்க வீட்லதான் நிக்கப்போறோம். மாமாவோட கதைத்துக்கொண்டிருந்தா, அவருட எழுத்தை வாசிப்பது போன்ற ஒரு மனநிறைவு ஏற்படுது. நீங்க கதைங்க மாமா'' என்றேன்.

"என்னமோ உங்க தலையெழுத்து அதுதான்னா கதைச்சுக்கொண்டிருங்க'' என்றார் வாய்விட்டுச் சிரித்தவாறு மாமி.

"நீங்க எதைச் சொல்றீங்க?''

"இந்த தேவையில்லாத வேலையால இவரு எவ்வளவு பணத்தை வீணாக்கிப்போட்டு இருக்காருன்னு உள்ளே வந்து பாருங்களேன். புத்தகம் போடுறேன்னு அச்சடித்த புத்தகமெல்லாம் விக்காம மூலையிலே கிடந்து கறையான் அரிக்குது. இப்ப யாரு காசு கொடுத்து வாங்கி புத்தகம் வாசிக்கான்? விழல் வேலை. இதுக்கு செலவழித்த பணத்தைக் கொண்டு இந்தக் குமருக்கு வீட்டைக் கட்டி முடிச்சிருக்கலாம்.'' பக்கத்தில் வந்து நின்ற திருமணமாக காத்து நிற்கும் மகளை நோக்கி விரலொன்றை நீட்டியவாறே மாமி கூறினார்.

"அவ கிடக்கா. அதான் சொன்னேனே வாசனை தெரியாத ஏதோவென்று'' என்றார் மாமா வெடுக்கென.

"ஏன் மாமா கதைகள், நாடகங்கள்ன்னு இத்தனை எழுதியிருக்கீங்களே .உங்களுக்குத் தேசிய அளவிலே பல விருதுகள் கிடைச்சிருக்கணுமே?'' மஸாஹிறா கேட்டாள்.

நெய்னா பதில் சொல்லாமல் நீண்ட பெருமூச்சொன்றை ஊதினார்.

"இதுவரையிலே அப்படி ஒன்றுமே இல்லை'' முகத்தை தரையை நோக்கித் தொங்கப்போட்டார்.

“எப்படிக் கிடைக்கும்? இவரைத் தேடிவந்து விருது கொடுக்கணும்னு இவர் விரும்புறாரு. அது நடக்குமா? ஒவ்வொருத்தனும் யார் யாரையோ பிடிச்சு அவைகளைப் பெறுறான். மந்திரிக்குப் பல்லிளிக்கணும், துதிபாடணும், புகழ்ந்து கதைக்கணும், எழுதணும், அரசாங்கத்துக்கு வால் பிடிக்கணும். இவரு மகான். இவரு அதெல்லாம் செய்வாரா? ஒவ்வொரு சமயத்திலே அரசாங்கத்துக்கு எதிராகவும் எழுதிப்போடுறாரு. விருது கொடுக்கிற சமயங்களிலே தனக்கு கிடைக்கல்லேன்னு வேதனைப் படுறாரு.” மாமி கூறிவிட்டு மூச்சிரைத்தார்.

”இதப்பாரு ஆயிஷா, சமைக்கிறதைத் தவிர இந்த உலகத்திலே வேற எந்த இழவும் தெரியாத ஜடம் நீ. நீ சொல்றாப்ல விருது பெறுறவன் எல்லோரும் இப்படிக் குறுக்கு வழிகளிலே போய்த்தான் பெற்றுக்கொள்கிறான் என்பதெல்லாம் சுத்தப் பொய். ஏதோ ஒன்று, ரெண்டு அப்படியும் இருக்கலாம். ஆனா,நான் அப்படியெல்லாம் வலியக் கேட்டுப் போக மாட்டேன். அரசாங்கம் என்னை மதித்து விருது வழங்க வேண்டுமென்ற தேவையே எனக்கு இல்லை. என் எழுத்துக்கள் வாசகர்களின் கண்களைத் திறக்க வைச்சா அது மட்டும் எனக்குப் போதும்.”

நெய்னா என்னதான் கூறினாலும், தேசிய அளவில் அவரது எழுத்துக்கு அல்லது அவருக்கு ஓர் அங்கீகாரம் அதுவரை கிடைக்கவில்லை என்பது நீறு பூத்த நெருப்பாக அவரினுள் கனன்று கொண்டிருக்கிறது என்பதும், அந்த வேதனையின் காரணமாகத்தான் உஷ்ணப் பெருமூச்சுக்களை அவர் சிற் சில சந்தர்ப்பங்களில் வெளிவிடுகிறார் என்பதும், அன்றைய பொழுதில் மாமியுடன் உரையாடியதிலிருந்து என்னால் தெரிந்து கொள்ள முடிந்தவைகள்.

வருடங்கள் சில உருண்டோடின. ஆசிரிய சேவையிலிருந்து நெய்னா இப்போது இளைப்பாறிவிட்டிருந்தார். இளைப்பாறும் போது கிடைத்த உபகாரத்தொகையைக் கொண்டு கட்டிக்கொண்டிருந்த வீட்டை முடித்து மகளைத் திருமணம் செய்து கொடுத்தார்.

ஓய்வு பெற்றபின் அவர் நிறைய எழுதுவதாக அடிக்கடி அவரது வீட்டுக்குச் சென்றுவரும் மஸாஹிறா கூறுவாள். அவருடைய ஆசிரிய அனுபவங்கள் தினச்சுடரில் தொடராக வெளிவந்துகொண்டிருந்தன.

ஒவ்வொரு வருடமும் இலக்கியவாதிகளுக்கான தேசிய விருது வழங்கப்படும் வேளைகளிளெல்லாம் இவருடைய பெயர் இடம்பெற்றிருக்க மாட்டாதா என பத்திரிகைகளில் தேடி பல தடவைகள் ஏமாந்துள்ளேன். ஒரு ஞாயிறு தினச்சுடரில் வெளிவந்திருந்த விளம்பரமொன்றைப் பார்த்ததும் உடனடியாக எனக்கு நெய்னா மாமாவைச் சந்திக்க வேண்டும் போல் தோன்றியது.

மஸாஹிறாவிடம் சொல்லிவிட்டு புதிதாக வாங்கியிருந்த மோட்டார் சைக்கிளில் நெய்னா மாமாவின் ஊரை நோக்கி விரைந்தேன்.

அவர் வராந்தையில் கிடந்த சாய்மணையில் சாய்ந்தவாறு தினச்சுடரை வாசித்துக்கொண்டிருந்தார். முற்றத்தில் நின்ற வேம்பு மர நிழலில் உட்கார்ந்து மாமி பாய் பின்னிக்கொண்டிருந்தார்.

"மாமா. இந்த விளம்பரத்தைப் பாத்தீங்களா?" கேட்டவாறே பத்திரிகையை அவரிடம் நீட்டினேன்.

"என்ன போட்டிருக்காக?"

"இந்த வருட தேசிய விருதுக்காக பொருத்தமானவர்களாகக் கருதப்படுபவர்களை சுயமாக விண்ணப்பிக்குமாறு கேட்டிருக்காக"

"நான் கூட அதை வாசிச்சேன்"

"இதைப் பத்தி உங்களோட கதைச்சு உங்களை இதற்கு விண்ணப்பிக்குமாறு கேட்கத்தான் வந்தேன்."

புழுவொன்றை உற்றுப் பார்ப்பதைப் போன்று நெய்னா என்னைப் பார்த்தார்.

"கேட்டியா ஆயிஷா உன் மருமகப்புள்ள சொல்றத?" என்றார் கரகரத்த குரலில். அந்தக் குரலில் ஒரு சோகம் நூலிழையாக ஓடியதை எனக்கு உணர முடிந்தது.

"அவர் சொன்னதிலே என்ன புழை? எதையும் கேட்டுத்தான் பெறோணும்"

"கண்ணுக்குத் தெரியாத புகழையுமா?"

நான் அவர்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்தேன்.

நெய்னா என்ன நினைத்தாரோ, வாய் திறந்து கடகடவெனச் சிரித்தார்.

"நான் ஒரு எழுத்தாளன். சமூக அநீதிகளுக்கு எதிராகப் போராடுபவன். நீதியான, இணக்கமான, ஒழுங்கான சமுதாயமொன்றை அமைக்க என் பங்களிப்பு என்னன்னு சதா சிந்திச்சிக்கொண்டிருப்பவன். உயிரையும் விட ரோசம் பெரிசென்று எண்ணி வாழ்பவன். அப்படிப்பட்ட நான் `ஐயாமாரே, நான் ஒரு எழுத்தாளன். எனக்கும் விருது வழங்குங்கடாப்பா'ன்னு போய்க் கேக்கணுமாக்கும்" கூறியவாறு மூச்சிரைத்தார்.

"அப்போ, இந்த ஜென்மத்திலே உங்களுக்கு அது கிடைக்காது. அது கிடைக்கல்லியேன்னு இனி ஒரு நாளும் நீங்க என்னோட வேதனைப் பட்டுக் கதைக்கப்படாது."

"ஆயிஷா! பட்டமும், பேரும், புகழும் தேடிப் போய்ப் பெறக்கூடியதாயிருக்கப்படாது. நாம தகுதீய்ன்னா அது நம்மைத் தேடி

வரோணும். ஆனா, ஒன்று சொல்றேன் கேட்டுக்கோ. இந்த நெய்னா அந்த மட்டத்துக்கெல்லாம் இறங்கிப் போகவே மாட்டான்.''

அவ்வாறு இறங்கிப் போகாமலேயே அவர் காலஞ்சென்று விட்டார்.

மாமி இத்தாக் கடமையை அனுஷ்டித்துக்கொண்டிருந்தார். என்னால் அவரைச் சென்று பார்க்க முடியாமலிருந்தாலும் மஸாஹிறா அடிக்கடி சென்று வருவாள்.

நெய்னா மாமா காலஞ்சென்றதன் பின்னர் தீவில் வெளியாகும் சகல பத்திரிகைகளிலும் அவரைப் பற்றிய விபரங்களும், செய்திகளும், வாழ்க்கை வரலாறும், அனுதாபச் செய்திகளுமாக.... பத்திரிகை ஒன்றை விரித்தால் எங்கேயாவது ஓர் இடத்தில் நெய்னாவைப் பற்றிய ஏதாவது செய்தியொன்று எழுதப்பட்டிருக்கும். போதாக்குறைக்கு சில அமைச்சர்கள் கூட அனுதாபச் செய்தி வெளியிட்டிருந்தனர். எனக்கு, மஸாஹிறாவுக்கு, மாமி ஆயிஷாவுக்கு, ஏன் அவர்களது பிள்ளைகளுக்குக் கூட மாமாவைப் பற்றித் தெரியாத, அறியாத விபரங்களைக் கூட சிலர் தங்களுக்குத் தெரிந்ததாகத் தம்பட்டமடித்து எழுதினர். அமைச்சரொருவர் நெய்னாவை `இலக்கியத் திலகம்' என்று பட்டம் சூட்டி எழுதியிருந்தார். தலைநகரில் அவரது சொந்தக்காரர்கள் எவரும் கலந்துகொள்ளாமலேயே பல அனுதாபக் கூட்டங்கள் நடந்ததுடன், அவைகளைப் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் புகைப்படங்களுடன் (அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது பிடிக்கப்பட்டவைகள்) வெளிவந்தன.

"இதையெல்லாம் பத்திரிகைகளில் பார்க்கும் போதும், சொல்லக் கேட்கும் போதும் மாமி ரொம்பச் சந்தோஷப்பட்டிருப்பாவே?'' ஆயிஷா மாமியைப் பார்த்துவிட்டுத் திரும்பியிருந்த மஸாஹிறாவிடம் ஒரு நாள் கேட்டேன்.

''மாமி அவைகள் எதையுமே வாசிக்க விரும்பல்ல. காது கொடுத்துக் கேட்கக் கூட விரும்பல்ல. நான் இவைகளைப் பற்றிச் சொன்னபோது கூட முகத்திலே வெறுப்பைக் காட்டினா''

மாமியின் இந்தப் போக்கையிட்டுச் சிந்திக்கத் தொடங்கினேன்.

★ ★ ★

மாமியின் இத்தாக் காலம் முடிவடைந்து விட்டது. நானும், மஸாஹிறாவும் எங்களது பிள்ளைகளுடன் சென்று மாமியைப் பார்த்துவிட்டு வந்தோம்.

இரண்டொரு மாதங்கள் கழிந்திருக்கும். ஒரு ஞாயிறு தினச்சுடரில் அந்த மகிழ்ச்சியான செய்தி வெளிவந்திருந்தது.

`காலஞ்சென்ற பிரபல எழுத்தாளர் நெய்னாகுடி நெய்னா எழுத்துத் துறைக்குச் செய்த அளப்பரிய சேவையைப் பாராட்டி அரசாங்கம் தேசிய விருது வழங்கி கௌரவிக்கவுள்ளது. கூடவே ஐம்பதினாயிரம் ரூபா பொன்முடிச்சும் பெறுகிறார்.'

பத்திரிகையை மடித்துக் கையிலெடுத்தவாறு, மஸாஹிறாவிடம் செய்தியைத் தெரிவித்து விட்டு, நெய்னாகுடியை நோக்கி விரைந்தேன்.

"வாங்க மகன். மஸாஹிறா வரல்லையா?" மாமி வரவேற்றார்.

"பத்திரிகையைப் பார்த்தீங்களா? செய்தி வந்திருக்கு" என்றேன்.

"மாமாவுக்கு விருது வழங்குவது பற்றித்தானே?"

"உங்களுக்கு ஏற்கனவேயே தெரியுமா?"

"நேற்றுக் கடிதம் வந்துச்சி. அதைக் குப்பையிலே எறியச் சொன்னேன்."

நான் திடுக்குற்றேன். மாமிக்கு என்ன நடந்தது? மனம் பேதலித்துப் போய்விட்டதோ?

"மாமி. இது ரொம்ப மதிப்பான விருது. மிகப் பிரபல்யமான எழுத்தாளர்களுக்குத்தான் கொடுப்பாங்க. எழுத்தாளரின் சேவையைத் தேசிய மட்டத்திலே கௌரவிக்கிற விருது இது" என்றேன்.

"விருதாவது! விழலாவது! குப்பை. இது இப்ப யாருக்குத் தேவை? கதைகளையும், நாடகங்களையும் நானா எழுதினேன்? எழுதின ஒவ்வொன்றுக்காகவும் அவர் அனுபவித்த கஷ்டங்கள் எனக்குத் தெரியும். இரவிரவாக கண் விழித்திருந்து எழுதியிருந்தாரு. அடுத்த நாளைக்கு எழுதவேண்டியவைகளைப் பற்றி கற்பனை பண்ணிப் பண்ணியே அவர் தூங்காமல் கழித்த இரவுகள்தான் எத்தனை? புத்தகங்கள் அச்சிட பணமில்லாமல் கடன் பட்டு, பட்ட கடனைத் திருப்பிக் கொடுக்க அவர் அனுபவித்த சிரமங்கள் யாருக்குத் தெரியும்? உயிருடன் வாழுறப்போ இவங்க யாருடைய கண்ணுக்கும் அவர் படல்ல. தனக்குத் தேசிய விருது கிடைக்கவில்லையேன்னு அவரு எப்படியெல்லாம் மனதுக்குள்ளேயே ஏங்கினாரு. அவர் உயிரோட இல்லாத இப்போ இந்தக் குப்பை யாருக்குத் தேவை?" மாமி பொரிந்து தள்ளினார்.

"ஐம்பதாயிரம் ரூபா பணம் வேற தாராங்களாம்"

"எனக்குத் தேவல்ல. தன் தோளாலேயே கஷ்டப்பட்டு பொறுப்புக்களையெல்லாம் முடிச்சுட்டு அவர் போயிட்டாரு. எனக்குப் பென்சன் வருது. அது போதும். என் புருசனைப் போல இந்த விருதைப் பெறத் தகுதியானவங்க பலபேரு உயிருடன் இருப்பாங்க. தேடிப் புடிச்சு அவங்களுக்குக் கொடுக்கச் சொல்லி கடிதம் எழுதிடுங்க."

ஆயிஷா மாமியைப் பொறுத்த வரை விருது விருதல்ல. விழல்.

★★★

# காகமூளை

கிராமமா, பட்டினமா என வகைப்படுத்த முடியாததோர் ஊர் அது. சுமார் பதினைந்து இருபது வருடங்களின் முன் விரல்களை மடக்கி எண்ணிவிடக்கூடிய தொகையினதாகத்தான் அதன் பிரதான வீதியின் இரு மருங்குகளிலும் கடைகள் இருந்தன. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் கிழமைச் சந்தையொன்று நடைபெற்றது. சுற்றுச்சூழவுள்ள கிராமங்களிலிருந்து தோட்டப்பயிர் உற்பத்திகளை மாட்டு வண்டிகளில் ஏற்றி வந்து மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்றுவிட்டு , சீனி, பருப்பு, கருவாடு வகையறாக்களை கிராமத்தவர் வாங்கிச் சென்றனர். இரவு வேளைகளில் பிரதான வீதியில் பாரமேற்றிய லாரிகளை அதி வேகமாகச் செலுத்தி வரும் சாரதிகள் திறந்திருக்கும் இரண்டொரு ஹோட்டல்களின் முன் நிறுத்தி, கைகளைத் தோள்களுக்கு மேலால் உயர்த்தி சோம்பல் முறித்து ஆசுவாசப்பட்டுக்கொள்வர்.

கிராமத்தை ஊடறுத்த பிரதான வீதியில் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் படுத்திருக்கும் நாய்கள் சாரதிகள் தின்றுவிட்டுக் கழித்தவைகளைக் கௌவுவதற்காக ஓடோடி வந்து அவர்களை வலம் வரும். சில கால்களை நக்கும். தெரு விளக்குகள் சில தூங்குமூஞ்சுகளாக ஒளி கக்கும்.

கிராம எழுச்சித் திட்டம், கம்முதாவ, வீடமைப்பு, குடியேற்றம், அது இது என இடம் பெற்ற நிகழ்வுகள் அக்கிராமத்தை புது மலர்ச்சி பெற வைத்தன. நெல், புகையிலை, மரக்கறி, தானிய வகை உற்பத்தி என சுற்றுச் சூழவுள்ள கிராமத்தவர்கள் ஈடுபட, பலன் அவர்களின் கைகளில் பணம் புரண்டது.

கிராமம் படிப்படியாக பட்டினமாகி நகரமாகும் நிலைக்கு மேம்பட்டுக்கொண்டிருந்தது. வீதிகளின் கொள்ளளவைக் கவனத்தில் எடுக்காமல் வருடா வருடம் இறக்குமதியாகும் வாகன எண்ணிக்கைக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவ்வீதியும் விழி பிதுங்கியது. போவதற்கும் வருவதற்கும் ஒரே பாதைதான். சில சந்தர்ப்பங்களில் பல நூறு விடயங்களை ஒழுங்கற்று மனம் சிந்திப்பது போல ஆட்டோ, மோட்டார் சைக்கிள், சைக்கிள், கார், பஸ், லாரி என சகல வகை வாகனங்களும் வீதி ஒழுங்கை மீறிப் போவதும், வருவதுமாக விருக்கும். விரும்பிய விரும்பிய இடங்களிலெல்லாம் வலப் பக்க, இடப்பக்க வீதிகளுக்கு வாகனங்கள் மாறும்.

சைக்கிள்களில் செல்லும் இருவரோ மூவரோ சமாந்தரமாகக் கதையளந்தவாறு செல்வர். ஹார்ன் சப்தங்களைக் கேட்கும்போதெல்லாம் முன்னே பின்னேயாகிவிட்டு வாகனம் தங்களைத் தாண்டியதும் சமாந்தரமாகிவிடுவர்.

வரிக்குதிரைக் கடவைக் கோடுகள் அவ்வவ்வாறே இருக்க, சிலபல அடிகளுக்கு அப்பால் அல்லது விரும்பிய இடங்களிலெல்லாம் பாதசாரிகள் பாதைகளைக் கடப்பர். சில நாய்களும், மாடுகளும் மட்டும் ஓரோர் சமயங்களில் சரியாக கடவைக் கோடுகளுக்குள்ளால் நடந்து கடக்கும்.

பட்டினப் பெருந்தெருவில் கடமை சாட்டப்படும் பொலிஸாரில் சிலருக்கு மக்களின் அசட்டையீனத்தையும், சட்டங்களுக்குக் கீழ்ப்படியாத குணங்களையும் தொடர்ச்சியாகப் பார்க்கும்போது எரிச்சலாக வரும். பாதசாரிகளோ, வாகனச் சாரதிகளோ போக்குவரத்துச் சட்டங்களை மீறும்போதெல்லாம் கண்டிப்பான சில பொலிஸார் பெருங் குரலில் ஏசி மன்னித்து விடுவதிலும் அல்லது வழக்கு எழுதுவதிலும் முனைப்புக் காட்ட, வேறு சிலர் சாரதி அனுமதிப்பத்திரங்களுடன் சேர்த்துத் தள்ளும் ரூபாய் நோட்டுக்களை அபேஸ் பண்ணிக்கொண்டு கடுகடுப்பாக முகத்தில் பாவம் காட்டியவாறு போகச் சொல்வர்.

பாதையின் இரு மருங்கிலும் இரு நூற்றுக்கு மேற்பட்ட மொத்த, சில்லறை விற்பனை என வேறுபடுத்தப்பட்ட கடைகள். சுற்றிவர நீண்ட தூரத்துக்கு வேறு பட்டினங்கள் இல்லாததால் கொள்வனவு, விற்பனை போன்றவற்றுக்காக பற்பல கிராமங்களைச் சேர்ந்தவர்கள் இப்போதெல்லாம் சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் இப்பட்டினத்துக்குப் படையெடுத்தனர்.

ஆதார வைத்தியசாலை, அரச மற்றும் தனியார் வங்கிகள் , தேசிய பாடசாலை என பலப்பல வசதிகள் பட்டினத்தில் ஆக்கப்பட்டிருந்தன. அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பாராளுமன்ற உறுப்பினர், அவரின் பினாமி, அடிதடி ஆட்கள், அம்பு வில்லு என சகலரும் பட்டினத்திலேயே பலவித வசதிகளுடன் வசித்தனர்.

பாதையோரமாக மாடியுடன் கட்டப்பட்டிருந்த விசாலமான சந்தையில் வியாபாரம் கொடிகட்டிப் பறக்கும்.

அந்தப்பட்டினத்தில் ஒரு நாள் காலையில்......

ஊரின் மத்தியிலுள்ள சிறியதொரு மைதானமொன்றில் விக்கட் பொல்லுகளாகக் கருதப்பட்ட கல்லொன்றில் சாத்தி வைக்கப்பட்டிருந்த பலகைக்கு முன்னால் துடிப்புடன் நின்ற வாண்டு ஒருவன் தன்னை நோக்கி

வீசிய இரப்பர் பந்தொன்றுக்கு ஓங்கி அடிக்க.... பக்கத்தில் நின்ற மாமரக் கிளையில் கண்களை மூடியவாறு ஹாயாக வீற்றிருந்த காகமொன்றின் தலையை பறந்து வந்த பந்து வேகமாகத் தாக்க....

காகம் நிலை தடுமாறிக் கீழே விழுந்தது. இறக்கைகளைப் படபடத்தவாறு பக்கத்துக்குப் பக்கம் அசைந்ததுடன் தொண்டை கிழியக் கத்தியது. வேறொரு பையன் கல்லொன்றை எடுத்து ஒற்றைக் கண்ணை மூடிக் குறி பார்த்து காகத்தை நோக்கி எறிந்தான். எறிபட்ட வேதனையால் அது சலனத்தை நிறுத்திக் கொண்டது.

சடுதியாக நான்கைந்து காகங்கள் பறந்து வந்தன. மரக்கிளைகளில் குந்தி பக்கத்துக்குப் பக்கம் பார்த்து சப்தமிட்டு ஓசை எழுப்பின.

பத்து, இருபது, நாற்பது, அறுபது என எங்கெங்கெல்லாமோ இருந்து காகத் தொகுதிகள் பறந்து வந்தன. கீழே துடித்துக்கொண்டிருந்த காகத்தைச் சுற்றிச் சுற்றிப் பறந்தன. அடித்தொண்டையால் அலறின. இறகுகளை வேகவேகமாக அசைத்தன. எந்த நோக்கமுமின்றி மேலெழுவதும், கீழே பணிவதும், பக்கவாட்டில் மிதப்பதும், கதறுவதும், எச்சம் பீச்சுவதுமாக.........

கிரிகட் விளையாடிய வாண்டுகள் விளையாட்டை நிறுத்திவிட்டுக் கீழே குனிந்து, கற்களை எடுத்து காகங்களுக்கு எறிந்தனர். எறிவது அவர்கள் தாமென அடையாளம் கண்ட காகங்கள் வேகவேகமாக அவர்களை நோக்கி மூர்க்கத்தனமாக முன்னேறி வந்து .... அங்குமிங்குமாகக் கலைந்தோடியவர்களைத் துரத்தி, சிலரின் தலைகளில் கொத்தி....வேறு சிலருக்குக் கூரிய நகங்களால் முகங்கள், அங்கங்கள் என பாகுபடுத்தாது கீறி......

காகங்களிலிருந்து விடுபடுவதற்காக பையன்கள் பெரிய கற்களைப் பொறுக்கி சாரமாரியாக எறிய...எறிபட்ட சில காகங்கள் துடிதுடித்துக் கீழே விழ... சற்று வயதான ஒரு பையன் தூரக் கிடந்த நீண்டதொரு தடியைப் பற்றி, அனுங்கியவாறு துடிதுடித்தவற்றுக்கு பலமாக அடிக்க...பொசுக் என சில உயிர் நீத்தன.

நேரம் ஆக ஆக காகங்கள் மேகக் கூட்டங்களாகப் படை எடுத்தன. சுற்றிச் சுற்றிப் பறந்து பையன்களைப் பலி எடுக்க முயன்றன.

தூரத்தில் நின்று நீண்ட நேரமாக அவதானித்த இரண்டு பெரியவர்கள் அங்கே வந்தனர். நிலைமையைச் சீர்செய்வதற்கான வழியை நொடிக்குள் தீர்மானித்தனர். பக்கத்து வீடொன்றுக்குச் சென்று மண்வெட்டி பெற்று வந்து சரசரவென மடு வெட்டினர். காகங்களின் பலத்த தாக்குதல் முயற்சிக்கு மத்தியில் செத்துக் கிடந்த நான்கையும் உயிரோடு துடித்த இரண்டையுமாக எல்லாமாக ஆறு காகங்களையும் மடுவுக்குள் ஒன்றாகப் போட்டு மண்ணை மூடினர்.

சில் நிமிடங்களில் காகப்படை கலைந்தது. அமைதி கொலுவோச்சியது.

"முட்டாள் காகங்கள்! பந்தடி பட்டு விழுந்ததென்னமோ ஒன்றுதான். ஆனால், இவைகளின் பகுத்தறிவற்ற தனத்தால் மண்ணில் புதையுண்டவை ஏழு" என்றான் கையில் மண்வெட்டியுடன் நின்றவன் மற்றவனைப் பார்த்து.

"சரியாச் சொன்னே. பகுத்தறிவில்லாததாலே கூடிக்கூடிக் கூக்குரலிட்டு தன் இனத்தினரின் மேலும் ஆறு உயிர்களைக் காவு கொடுத்துவிட்டு பறந்து போயிட்டுகள்" என்றான் மற்றவன். அவனது குரல் பரிதாபத்துடன் ஒலித்தது.

சில நாட்களின் பின் மீண்டும் ஒரு காலைப் பொழுது.......

சூரியக் கதிர்கள் உலகப் பெண்ணை முத்தமிடத் தொடங்கிவிட்டன. அவளின் மேல் படர்ந்திருந்த பனிப் போர்வையை இங்கிதமாக அகற்றும் முயற்சியில் ஈடுபட்டன. பறவைகள் இரை தேடி அங்குமிங்குமாகத் தங்குவதும் பறப்பதுமாகச் செயற்பட....மனிதர்கள் காலைக் கடன்களை முடித்துவிட்டு வீடுகளிலிருந்தும் வெளியேகி பாதைக்கு வந்தனர். அவர்களுக்கும் இரை தேடும் பொறுப்பு. தொழிலாளர்கள், வர்த்தகர்கள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், மாணவ மாணவிகள் என கதம்பமாக...பிரதான பாதையில் பார்க்குமிடமெங்கும் மனித உருவங்கள்.

வாகனங்கள் பெருந்தொகையில் சர் சர் என ஒன்றன் பின் மற்றொன்றாகவும், ஒன்றையொன்று வலமும் இடமுமாக முந்துவதாகவும், சமாந்திரமாகவும் சீறிப் பாய்ந்துகொண்டிருந்தன.

வரிக்குதிரை கடக்கும் கோடுகளுக்கு அருகில் பொலிஸார் நின்று விசில் ஊதி உதடுகளைத் தடிக்க வைத்தனர். சில சாரதிகள் வீதி விதிகளைப் பேணினாலும், பலர் பேணாமல் மீறி தன்னிச்சையாக வாகனங்களைச் செலுத்தினர்.

காலையிலேயே மதுபானம் அருந்தி சற்று தள்ளாட்டத்துடன் வந்த வயதான ஒருவன் கடக்கக் கூடாத ஓர் இடத்தில் பாதையைக் கடக்க முயன்றபோது மெதுவாக வந்த வாகனமொன்று பிரேக் அடித்து நிற்க, அவன் அதையும் கடந்து தொடர்ந்து நடக்க....வேகமாக வந்த கடுகதி பஸ்ஸொன்று நின்றிருந்த வாகனத்தை முந்திச் செல்ல முற்பட.... கிழவன் தூக்கிவீசப்பட்டதுடன் சடுதியாகப் போடப்பட்ட பிரேக்கால் பஸ் இழுத்துச் செல்லப்பட்டு பாதையின் ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த லாரியில் மோதியது.

கிழவன் மதுபோதையிலேயே துடித்து கண்மூடினான்.

பஸ்ஸிலிருந்தும் இறங்கிய சாரதி என்ன நினைத்தானோ தலை தெறிக்க ஒரு பக்கமாக ஓடத் தொடங்கினான். கண்டக்டர் இன்னொரு பக்கமாக நழுவினான். இருவருமே தப்பித்துக் கொண்டனர்.

பாதையின் இரு பக்கங்களிலும் வேகமாக வந்துகொண்டிருந்த வாகனங்கள் வழியில் அப்படியப்படியே நின்றன.

பஸ்ஸிலிருந்தவர்கள் வேகவேகமாக இறங்க முயன்று, நைந்து கூக்குரலிட்டனர். சிலரின் தலை, கை, கால்களில் இரத்தக் காயங்கள்.

செத்து இரத்த வெள்ளத்தில் கிடந்தவனைச் சுற்றி அங்குமிங்குமாக நின்றவர்கள் ஈக்களாக மொய்த்தனர். தூர நின்ற பலர் ஓடோடி வந்தனர்.

இறந்தவன் உள்ளூர் அரசியல்வாதியொருவனின் தகப்பனார் என அறிந்ததும், அவனுக்குச் செய்தி பறந்தது. அவனுடைய அடிவருடிகளில் பலர் முன் பின் என எதையும் யோசியாமல் பெருங் கற்களால் பஸ்ஸுக்கு எறிந்ததுடன் நெருப்பும் வைத்தனர். வேறு சிலர் பக்கத்தில் நின்றிருந்த சில பல வாகனங்களின் கண்ணாடிகளுக்கு கல் எறிந்து துவம்சம் செய்யத் தொடங்கினர்.

"தம்பிமாரே வாணாடா. இவங்களெல்லாம் அப்பாவிகள். இவங்கட வாகனங்களுக்கு அநியாயம் செய்யாதீங்க" கூறியவாறு கூட்டத்தில் நின்ற சில பெரியவர்கள் வெகுண்டெழுந்த இளைஞர்களைத் தடுக்க முயன்றனர்.

"அடிங்கடா இவனுகளுக்கு. மசிரு. புத்தி சொல்ல வாறாக"

தொடர்ந்தும் நின்றால் ஆபத்து என்பதை உணர்ந்த பெரியவர்கள் மெல்ல நழுவி, துண்டைக் காணோம் துணியைக் காணோம் என திசைக்கொருவராக ஓடத் தொடங்கினர்.

கூட்டம் மேலும் அதிகரித்தது. ஒவ்வொருவரும் வாய்க்கு வந்த மாதிரிக்கு அரசாங்கத்துக்கும், பொலிஸாருக்கும் ஏசினர்.

நீண்ட நாக்குகளுடன் எரிந்துகொண்டிருந்த நெருப்பு பஸ்ஸிலிருந்தும் உணவுத் தானியங்களுடன் நின்றிருந்த லாரிக்கும் பரவி, இரண்டுமே எரியத் தொடங்கின.

செய்தியறிந்த பொலிஸார் சம்பவம் நடந்த இடத்தை நோக்கி விரைந்தனர். கூட்டத்தினர் பேயாட்டத்துடன் தங்களுக்கு எதிராக கோசம் எழுப்புவதை அறிந்து சமீபமாகச் செல்வதற்குச் சற்றுப் பின் வாங்கினர். அவர்கள் பார்த்துக்கொண்டு, செயலிழந்து நிற்கும்போதே, வேறும் சில வாகனங்கள் உடைக்கப்பட்டன. சிறுவனொருவன் எறிந்த கல்லொன்று சற்று வயதான பொலிஸ்காரன் ஒருவனின் தலையைப் பதம் பார்த்தது. இரத்தம் வழிந்த தலையைக் கையால் பொத்தியவாறே அவன் பெரிதாகச் சப்தமிட்டான்.

இறந்தவனின் மகனான முரட்டுத் தோற்றமுடைய ஒருவன் அவனைப் போன்ற தோற்றமான சிலருடன் ஜீப் வண்டியொன்றில் வேகமாக வந்து, சடுதியாக பிரேக் போட்டு நொடிக்குள் இறங்கினான். தகப்பனருகில் சென்று பார்வையிட்டான். சிலிர்த்தவாறே திரும்பினான்.

“எங்கடா றைவர்?” பற்களை நறநறத்தவாறே கேட்டான்.

“ஓடிட்டான் மச்சான்”

“தேடிப் புடிங்கடா”

“அவன் பொலிஸிக்குப் போயிருப்பான்”

”ஸ்டேசனுக்குப் போய் அந்த வேஸ மகன புடிச்சி இழுத்துக்கிட்டு வந்து இந்த நெருப்பில போடுங்கடா”

அவனுடைய கட்டளையைச் சிரமேற் தாங்கி பலர் பொலிஸ் நிலையத்தை நோக்கி ஓடத் தொடங்கினர்.

பொலிஸ்காரனுக்குக் கல்லெறி பட்ட சம்பவம் இதுவரை பொலீஸ் நிலையத்துக்குத் தெரியவர.... வேறு சில நிலையங்களுக்கும் செய்தியைத் தெரிவித்து விட்டு, பெரியதொரு பட்டாளம் வேனொன்றில் கிளம்பியது.

கூட்டம் எக்கச்சக்கமாகக் கூடிவிட்டது. பாதையின் இரு பக்கங்களிலும் கியூ வரிசையில் நின்றிருந்த வாகனங்கள் ஹார்ன் ஒலிகளை தொடர்ச்சியாக அலறின.

“என்னடா பாத்துக்கிட்டு நிக்கிறீங்க? கடைகளையெல்லாம் இழுத்து மூடச் சொல்லுங்கடா” என்றான் பெருங் குரலில் இறந்தவனின் மகனான உள்ளூர் அரசியல்வாதி.

“ஓ....ஓ... ஹர்த்தால்! இவங்களுக்கெல்லாம் ஒரு பாடம் கட்டணும். வாங்கடா ஆர்ப்பாட்டம் பண்ணுவம்.” சிலர் கூறியவாறு திறந்திருந்த கடைகளை நோக்கி ஓடினர்.

“பூட்டுங்கடா கடையை!” நாய்களாகக் கத்திய சிலரின் அதட்டல்களுக்குப் பணிந்த பல வர்த்தகர்கள் சடசடவென பலகைகளைப் போடத் தொடங்கினர்.

“ஏன்டா தம்பிமாரே எங்கட வயித்திலயும் அடிக்கப் போறீங்க? கடைகளைப் பூட்டி யாவாரத்தை முடக்குவதாலே என்ன பலன் ஏற்படப் போகுது? இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேறு வழிகள் இருக்கு. அவைகளைப் பத்தி யோசிக்காம ஹர்த்தால் போட்டு ஏன் எல்லாருக்கும் நட்டத்தை ஏற்படுத்தப் போறீங்க?” துணிச்சலான மிகச் சிலர் வினவினர்.

“வாயைப் பொத்திக்கிட்டு மூடுங்கடா கடைகளை! மூடல்ல, பெற்றோல் ஊத்திக் கொளுத்துவோம். என்ன ஓய் பாத்துக்கிட்டு நிக்கிறே? மூடு ஓய் கடையை!”

பருந்தைக் கண்ட கோழிச் குஞ்சுகளாக அவர்கள் ஒடுங்கி, பதுங்கி மூடிக்கொள்ளத் தொடங்கினர்.

முன் யோசனையுள்ள சில பொலிஸார் நின்றிருந்த வாகனங்களை வேறு திசைகளை, உள் பாதைகளை நோக்கிச் செலுத்துவதற்கு வழியமைத்துக் கொடுத்தனர். சில சாரதிகள் மிகச் சிரமத்தின் மத்தியில் தமது வாகனங்களை பின்னோக்கிச் செலுத்தினர்.

இறந்தவனின் சொந்தக் கிராமத்திலிருந்து பெருந்தொகையானோர் லாரியொன்றில் வந்து இறங்கினர்.

சம்பவம் நடந்த இடத்தில் இப்போது கட்டுக்கடங்காத சன வெள்ளம்.

பொலிஸ் பட்டாளமொன்று அங்கு சென்று கூட்டத்தைக் கலைக்க முயன்றபோது, சில காவாலிகள் அவர்களை நோக்கிக் கல் எறிந்தனர். பலரின் தலை, உடல்களை கற்கள் பதம் பார்க்க, தடியடிப் பிரயோகத்தை பொலிஸார் தொடங்கினர். கைகளிலிருந்த பொல்லுகளாலும் , துவக்குப் பிடிகளாலும் சகட்டுமேனிக்கு பொதுமக்களுக்கு அடித்தனர்.

மூர்க்கங்கொண்ட இளைஞர்கள் பலர் பெரிய கருங்கற்களை பொலிஸாரை நோக்கி வீச.....

"சூட் தெம்...." தலையிலிருந்து இரத்தம் வழிந்த பொலிஸ் உயர் அதிகாரியொருவரிடமிருந்து கட்டளை வெடித்தது.

பொலிஸாரின் துவக்குகளிலிருந்து சீறிப் பாய்ந்த ரவைகள் பட்டு சிலர் கீழே சுருண்டனர். பலர் காயங்களுடன் ஓடித் தப்பினர். கால்களில் காயம் கொண்டவர்கள் முடகினர்.

நகர் வெறிச்சோடியது. பஸ்ஸும் லாரியும் இன்னும் எரிந்தன. இறந்தவன் அகற்றப்படாமல் அங்கேயே கிடந்தான். பொலிஸாரின் வெடில் பட்ட நால்வர் உயிரற்றுக் கிடந்தனர்.

அன்றைய நிகழ்வு காரணமாக அந்தப் பட்டினத்தில் உள்ள அத்தனை கடைகளிலும் வியாபாரம் நடைபெறவில்லை. அரச செயலகங்களில் பணிகள் நடைபெறவில்லை. அரச மற்றும் தனியார் வங்கிகள் செயற்படவில்லை. நாளாந்தம் பட்டினத்துக்கு வந்து பிழைப்பவர்களினதும் அவர் தம் குடும்பத்தவர்களினதும் வயிறுகள் காய்ந்தன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வித நட்டம். காயம் பட்ட பொதுமக்களும் பொலிஸாரும் ஆதார வைத்தியசாலையில் அருகருகே கட்டில்களில் படுத்து சிகிச்சை பெற்றனர்.

அன்று இரவு அரச, தனியார் இலத்திரனியல் ஊடகங்களில் ஹர்த்தால் தொடர்பான ஒருசில படங்கள் காட்டப்பட்டதுடன், சில வரிச் செய்திகள் வாசிக்கப்பட்டன. இரவு முழுக்க பொலிஸ் நிலையத்தை பல பொலிஸார் காவல் காத்தனர்.

அடுத்த நாள். பொழுது புலர்ந்தது. அந்தப் பட்டினத்தை ஊடறுக்கும் பெருந்தெருவில் வழமைப் பிரகாரம் வாகனங்கள் வேகவேகமாகச் சென்றுகொண்டிருந்தன.

★ ★ ★

# வேதியல் மாற்றம்

பள்ளிவாசலில் ஜும்ஆ பிரசங்கம் நிகழ்த்திக்கொண்டிருந்த ஹஸரத்தின் வார்த்தைகள் எனது மனதில் சாட்டையடிகளாக வீழ்ந்தன. முன்னரெல்லாம் செவிடன் காதில் ஊதும் சங்கொலிகளாக, ஒரு துவாரத்தால் உள் நுழைந்து மற்றதால் வெளியேறும் அத்தகைய வசனங்கள் ஏனோ தெரியாது இப்போதெல்லாம் மனதில் உதைக்கின்றன.

படிப்படியாக மனதால் வளர்ச்சியடைந்து கொண்டிருப்பதாக சமீப காலங்களில் எனக்கு நானே உணர்கிறேன். இருண்டு கரி அப்பிக் கிடந்த எனது உள்ளத்தில் அத்தகைய வார்த்தைகள் ஒளிக்கீற்றுகளாகப் பாய்ச்சப்படும்போது, மெது மெதுவான வேதியல் மாற்றமொன்று என்னையறியாமல் ஏற்படுவதை எனக்கு நன்றாகவே புரிந்துகொள்ள முடிகிறது.

“பிறரொருவருக்குச் சொந்தமானவற்றை அவரின் அங்கீகாரமின்றி நாம் அனுபவிப்பது இஸ்லாத்தில் முற்றாகவே தடைசெய்யப்பட்டுள்ளது. அது நிலமாக, பணமாக அல்லது வேறு எந்த வஸ்துவாக இருந்தாலும் சரி. புனித குர்ஆனின் திரு வசனங்கள் அவை எல்லாவற்றுக்கும் ஏற்புடையவைகளாக உள்ளன....”.

வெள்ளை நிறத்திலான சாரம் உடுத்து அதே நிறத்தில் ஷேர்ட் அணிந்து, தலையில் தொப்பியுடன் ஹஸரத்தின் அருள் ஒழுகும் முகத்தைப் பார்த்தவாறு கால் மடித்து புற் பாய்களில் உட்கார்ந்திருக்கும் ரக்ஷபான ஆண்களில் நானும் ஒருவன். பரிசுத்தத்தை வெளிக்காட்டும் வெள்ளை ஆடைகளை அணிந்திருந்தாலும் உள்ளே என் மனம் இருள் அப்பியதாகவல்லவா உள்ளது.

“பணம், பொருள் போன்றவற்றை ஒரு பக்கத்துக்கு ஒதுக்கி வைத்து விட்டு, இப்போதெல்லாம் பரவலாக நமது சமூகத்தில் இடம் பெறும் பரிதாபகரமானதொரு செயலை இங்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்....”

அவர் எதைப்பற்றிச் சொல்ல விழைகிறார் என என் மனம் ஆதங்கப்படுகிறது. எனது வக்கிரமான உந்தலால் மொம்மசாலி நாநாவுக்கு நான் ஏற்படுத்திய இக்கட்டுகளைப் போன்று எதையாவது கூறப் போகிறாரோ?

“எத்தனையோ சாக்குப் போக்குகளைச் சொல்லி, குடியிருப்பதற்கோ, வர்த்தகம் செய்வதற்கோ பிறருக்குச் சொந்தமான கட்டிடங்களை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு நாம்

பெற்றுக்கொள்கிறோம் அவ்வாறு பெற்றுக்கொள்ளும்போது நம்மை விட வாய்மையாளன், நேர்மையாளன் வேறு யாருமே இல்லையென்றும், உண்மையானதோர் இஸ்லாமியனாகவும் காட்டிக்கொள்கிறோம். நாம் பசுத்தோல் போர்த்திய ஒரு புலியென அப்போதெல்லாம் நம்மை யாரும் சந்தேகிப்பதே இல்லை....''

ஹஸரத்தின் வார்த்தைகள் கூரிய ஆணிகளாக என் நெற்றியில் ஏறின. எதைக் கூறுவாரோவென நான் சந்தேகப் பட்டேனோ, அதையே தனது அழகு மொழியில் உரையாற்றிக்கொண்டிருக்கிறாரே.

கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் கிராமமொன்றில் மனைவி, பிள்ளைகளுடன் வசித்துக்கொண்டிருந்த நான், சடுதியாக வெடித்த இனக் கலவரமொன்றின் காரணமாக உடைமைகளை இழந்து சொந்த ஊரான மல்வானைக்குத் திரும்பினேன். சற்று நலிந்த நிலையிலிருந்த எனது சகோதரியோடு தற்காலிகமாகத் தங்கி, குடியிருப்பதற்காக வாடகை வீடொன்றைத் தேடத் தொடங்கினேன்.

''மொம்மசாலி நாநாட ஒரு ஊடு கூலிக்குக் கொடுக்க ஈக்கியாம். கேட்டுப் பாருங்கோ'' என்றாள் என் சகோதரி.

''மொம்மசாலியென்டா தாரன்?''

''அதான். அந்த பீத்தங்கையர்ர மகன்''

''தெரீம். தெரீம். தல கொஞ்சம் வழுக்கல் மனிசன்''

''அவருதான்''

''அவர்ர ஊட்டுக்கு பெயித்துதான் சந்திக்கோணும். எதுக்கும் ஆத்துக்கு பெயித்து குளிச்சிட்டு வாரன்''

''ஆம்புளத் தொறைக்குப் போனன்டா ஒரு நேரம் அவர் அம்புட்டாலும் அம்புடேலும்''

மடித்த சாரன், துவாய் ஆகியவை ஒரு கையிலும், பற்பசையுடன் கூடிய தூரிகை மறு கையிலுமாக ஜும்ஆ பள்ளிவாசலுக்கு நேர் எதிரே ஆண்கள் குளிப்பதற்காகவுள்ள துறைக்குச் சென்றேன்.

வடித்தெடுத்த பெண் சிற்பமொன்றின் அங்க லாவண்யங்களுக்கொப்பதான வளைவு, நெளிவுகளுடன் சதா ஓடிக்கொண்டிருக்கும் களனி கங்கைத் துறையில் குளிப்பதற்காகப் பலர் கூடி நின்றனர். கங்கையின் மேற்கே உயர்ந்த மரங்களுடனும் செடி கொடிகளுடனும் தெரிந்த போமரிய பகுதியை ஊடறுத்த காற்று, நீரில் குளித்தெழுந்து குளிர் தென்றலாக வெற்று மேனிகளை ஆலிங்கனம் செய்தது.

சலசலத்து ஓடிய கங்கைக்குள் கரையோரமாக நின்ற சில வாலிபர்கள் சிரித்த முகங்களுடன் நீந்தினர். ஆண்களின் முகங்களைக் குறிவைத்து உள்ளங்கைகளினால் நீரை எறிந்தனர். நடுத்தர, வயதான பலர் இரு கைகளாலும் நீரில் அடித்தவாறு உள்ளே மூழ்குவதும், எழுவதுமாக குளித்தனர். சவர்க்கார வாசனை பாதையிலும் மணத்தது.

உயர்ந்து துருத்திய கற்பாறையொன்றில் எனது கையிலிருந்த துணிகளை வைத்துவிட்டுத் திரும்பும்போது, உடுத்துக் குளித்த சாரனை முறுக்கியவாறு நீரினுள்ளிருந்து மொம்மசாலி நாநா வெளியேறுவதைக் கண்டேன்.

''சாலி நானோ...''பெயர் சொல்லி அழைத்தேன்.

''தாரு நீங்க...? எங்கியோ பாத்த மாதிரி ஈக்கிய..?''

''யாதில்லயோ என்ன? நான்தான் ரமீஸ்''

''ரமீஸெண்டா?''

''மொம்மத் தாஹிர்ட மகன்''

''இன்னும் வெளப்பல்ல. எந்த மொம்மத் தாஹிரன்?''

''அ'.தான் கானாமூனாட மகன்'' என் தகப்பனாரை ஊரார் அழைக்கும் பட்டப் பெயரைச் சொன்னதுமே என்னை இனங் கண்டுகொண்டார்.

''அடடே! நீங்களோ? எப்பவன் வந்த?''

''ரெண்டு நாளாகுது''

''உங்களுக்கு நடந்த எல்லாம் நான் கேள்விப்பட்ட. எனக்கு சரியான மன வருத்தம். எல்லாத்தையும் எழந்திட்டாமே''

''ஓ நாநா.வெறும் கையோடதான் ஊருக்கு வந்தீக்கிய''

''இப்ப எங்கேன் நீங்க ஈக்கிய?''

''எங்கட தாத்தாட ஊட்டுல''

''எத்தின புள்ளகள்?''

''ரெண்டு பேரு''

''தொடர்ந்தும் அங்கேயே ஈக்க ஏலுமோ''

''ஏலாதான். அதைப் பத்தித்தான் ஒங்களோட கதைக்கோணுமெண்டு நெனச்சிக்கொண்டு ஈக்கிய.''

மொம்மசாலி நாநா என்னை உற்றுப் பார்த்தார். அவரது பார்வை என்மீது இரக்கம் காட்டுவதை உணர்த்திற்று.

''எதப்பத்தி என்னோட கதைக்கோணும்?''

''வாங்க கொஞ்சம் அங்கால பெயித்து கதைப்போம்.''

மொம்மசாலி நாநாவும், நானும் சற்றுத் தூரத்தில் உயர்ந்து நின்ற மரத்தின் நிழலில் நின்று கதைத்தோம்.

இனக் கலவரம் காரணமாக நான் இழந்தவைகளை, எனது அப்போதைய வறிய நிலைமையை, அவர் என் மீது பரிதாபப் படக் கூடியவாறு எடுத்துரைத்தேன். ஒரு வருட காலத்துக்கு மட்டும் அவரது வீட்டில் வாடகைக்குக் குடியிருக்க அனுமதிக்குமாறு காலைப் பிடிக்காத அளவுக்குக் கெஞ்சினேன். அவர் சம்மதித்தார்.

இது நிகழ்ந்து இப்போது பத்து வருடங்களுக்கும் மேலாகி விட்டது.

“வாடகைக்காகப் பெறும் கட்டிடங்களை, நிலத்தை, வர்த்தகத் தலங்களை சொந்தக்காரர்கள் திரும்பக் கேட்கும்போது, நாம் போர்த்திக்கொண்டிருக்கும் பொய்த் தோற்றத்தைக் கழற்றி எறிந்துவிட்டு, சட்டங்களின் சந்து பொந்துகளில் உள்ள பலவீனங்களை நமக்குச் சாதமாகப் பயன்படுத்தி, அல்லது காடையர் கூட்டத்தினரையோ அடாவடித்தனங்களையோ பாவித்து தொடர்ந்தும் அவைகளை நமது உடைமைகளாக ஆக்கிக்கொள்ள முயற்சிக்கிறோம். இது முற்றிலுமே இஸ்லாமிய வாழ்க்கை நெறிக்கு எதிரான செயல். இத்தகைய நமது செய்கைகளுக்காக அல்லா∴. நம்மை இம்மையிலும் மறுமையிலும் தண்டிப்பான்....”

ஹஸரத்தின் சாட்டையடிகள் என் மனதில் தொடர்ச்சியாக வீழ்ந்தன. நான் துடிக்கத் தொடங்கினேன்.

மொம்மசாலி நாநா தனது வீட்டைத் திருப்பித் தருமாறு கேட்டபோது, என் சுய ரூபத்தைக் காட்டத் தொடங்கினேன். அவரது வீட்டில் பலாத்காரமாக குடியிருப்பதைத் தொடர்ந்தேன். சமாதானமாகப் பேசி வீட்டிலிருந்தும் என்னை வெளியேற்ற முயன்றவர்களுடன் குதர்க்க வாதம் புரிந்தேன். அவர் சட்டத்தின் துணையை நாடியபோது, அதே சட்டத்திலுள்ள நெளிவு, சுளிவு, ஓட்டை உடைசல்களைப் பாவித்து வழக்கின் தீர்ப்பை எனக்குச் சாதகமாகப் பெற்றேன். தீர்ப்புக்கெதிராக மேன் முறையீடு செய்யப்போவதை அறிந்து, இனந் தெரியாத குண்டர்களால் அவர் தாக்கப்படுவதற்குக் காரணஸ்தனானேன்.

எனது நிலைமைக்கு இரக்கப்பட்டதற்காக அவர் சொந்த வீட்டை மீளப் பெற முடியாத நிலைக்கு ஆளாகியதுடன், வழக்குக்காக பெரும் தொகைப் பணத்தையும் செலவழித்து, சில நாட்கள் ஆஸ்பத்திரியொன்றில் படுக்க வேண்டிய தேவைக்கும் ஆளானார்.

அவரது வயதான மகளொருத்தி சொந்த வீடு மீண்டும் கிடைத்துவிடுமென்ற நப்பாசையால் நீண்ட நாட்கள் திருமணமாகாமல் காத்திருந்து, வயதான ஒருவருக்கு இரண்டாந் தாரமானாள்.

ஜும்ஆ பிரசங்கம் முடிவுறும் தருணத்தில் எனது மனம் கொல்லன் உலையானது.

தொழுகை முடிந்து உயரத்திலுள்ள பள்ளிவாசலிலிருந்து நான் இறங்கி வரும்போது, அது நேரம் வரை செயற்பட்ட எனது ஆணவம் கீழ் நோக்கிச் சரிவதாக உணர்ந்தேன்.

★★★

பிரதான வீதியிலுள்ள எனது பிடவைக் கடையை மூடி, பின்னால் காலியாகக் கிடந்த அறைகளில் எரிந்து கொண்டிருந்த மின் வெளிச்சங்களை அணைத்து விட்டு, இஷாத் தொழுகைக்காகப் பள்ளிவாசலுக்குச் சென்றேன். கடந்த பத்து வருடங்களினுள்ளும் உழைத்து நிலம் வாங்கி, கடைக் கட்டிடத்தை அமைத்திருந்தேன்.

தொழுகை முடிந்த கையுடன் பள்ளிவாசல் மோதிமினாருடன் அகஸ்மாத்தாகக் கதைக்க நேர்ந்தது.

"மகன் செய்தி தெரீமோ?" வயதான மோதிமினார் என்னைப் பார்த்துக் கேட்டார்.

"என்தியன்?"

"மொம்மசாலி நாநா ஒரு பெரிய பிரச்சினையிலே மாட்டிக்கொண்டு வழி தெரியாம தவிச்சியாரு"

"என்ன பிரச்சினையாமன்?"

"அவர்ட மகளுக்கு நாளண்டைக்கு ஒரு பெரிய ஒப்பரேசன் ஈக்கியாம். மூணு பைந்து ரெத்தம் வேணுமாம். தாருட்ட இருந்து இரத்தம் எடுக்கவெண்டு தவிச்சுக்கொண்டு ஈக்கிய."

"அவர்ர தாய் புள்ளைகளுக்கிட்ட கேட்டா குடுப்பாங்களே"

"குடுப்பாங்கதான். ஆனா, செக் பண்ணின நேரத்திலே ஒத்தரிடேன் பொருந்தல்லயாம்"

"எந்துக்காமன்?"

"அவட ரெத்தம் எந்தியோ வித்தியாசமான குரூப்பாம்"

"என்ன குரூப்போ தெரியா"

மோதிமினார் கூறிய வகையைச் சேர்ந்ததுதான் என் இரத்தமும்.

★★★

அடுத்த நாள் காலை பொலபொலவென விடிந்தது. கடந்த இரவு நீண்ட நேரம் நித்திரையில்லாமல் புரண்ட நான் அசதி நிலையிலிருந்தும் எழுந்தேன். என்னுடைய அகம்பாவமும், சுய நலமும் மொம்மசாலி நாநாவுக்குக் கொடுத்த உபத்திரவங்களுக்காக ஆயிரக்கணக்கான தடவைகள் என்னை நானே வைதிருந்தேன். குளிர் நீரில் முகத்தை அலம்பிக்கொண்டு, அவரின் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

கேட்டைத் திறந்து என்னைக் கண்டதும் மொம்மசாலி முகத்தில் வெறுப்பைக் காட்டினார்.

“ஒங்களோட கொஞ்சம் கதைச்சோணும். உள்ளுக்கு வர ஏலுமோ?” அவரது முகத்தை எதிரெதிராகப் பார்க்கத் திராணியற்ற நிலையில் தலை கவிழ்ந்தவனாகக் கேட்டேன்.

“எது கதைச்சியென்டாலும் வெளியீந்து கதைங்கோ. என்ன விசயமென்?”

"இந்தாங்கோ” கூறியவாறு கையிலிருந்த அவரது வீட்டின் திறப்பைக் கொடுத்தேன்.

நான் நீட்டியதைப் பெற்றுக்கொள்ள அவர் தயங்கினார்.

“என்ட சாமான் சட்டியெல்லாம் வேற இடத்துக்கு இண்டைக்கு கொண்டு போய்ப் போட்டுடுவன். இது ஒங்கட ஊட்டுத் தொறப்பு”

அவர் பெற்றுக்கொண்டார்.

“ஒங்கட மகள்ட ஒப்பரேசனுக்கு ரெத்தம் தேவயெண்டு கேள்விப்பட்ட. ஏன்ட ரெத்தம் ஒங்களுக்குத் தேவையான குரூப்தான். நான் ரெத்தம் தாறன். சுருக்கா ரெடியாகுங்க. வாட்டுக்குப் போவம்.”

எனது சுயநலம் காரணமாக வயதானவருக்கு வாழ்க்கைப்பட்ட மொம்மசாலி நாநாவின் மகள் பிழைத்தெழுவதற்கு நான் உதவியதை நினைக்கும்போதெல்லாம் மனம் சுகமான இராகத்தில் மிதக்கிறது.

★ ★ ★

# கண்கள் திறந்தன

ஹிஜ்ரி வருடமொன்றில் வரும் ரஜப் மாதம் முழுவதும் புனித புஹாரி கிரந்தம் வாசிப்பது எனது கிராமத்தைப் பொறுத்தவரை ஒரு மகத்தான நிகழ்ச்சி. மார்க்க ஞானம் பெற்ற பல மௌலவிகள், ஆலிம்கள் ஒன்று கூடி பெரிய ஜும்மா பள்ளிவாசலில் மாதத்தின் முதலாவது நாளன்று பிற்பகல் வேளையில் ஓதலைத் தொடங்கி வைப்பர்.

விசாலமான வளவில் பள்ளிவாசல் கட்டப்பட்டிருந்ததால், ரஜப் மாத முதலாம் தினத்துக்கு முந்திய சில தினங்களில் அக்கம் பக்கங்களிலுள்ள வீடுகளில் வசிக்கும் பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து சிரமதான அடிப்படையில் வளவு முழுவதையும் பெருக்கி துப்பரவு செய்வார்கள். இளைஞர்கள் பள்ளிவாசலின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஒட்டடை நீக்கி தரையைக் கழுவி சுத்தம் செய்வர். வுளூ செய்யும் நீர்த்தடாகத்தின் தண்ணீர் முழுவதையும் இறைத்து புதிய தண்ணீரால் நிரப்பி வைப்பர்.

பள்ளிவாசலின் உட்புறம் தொழுகைக்காக மட்டும் ஒதுக்கப்பட்டுவிடும். புறப்பள்ளியில் அகன்ற இடமொன்றைத் தெரிவு செய்து, மேலே மரத்தடிகளைக் கொண்டு சற் சதுர வடிவத்தில் பந்தலொன்றை அமைத்து, வண்ணச் சீலைகளால் போர்த்தி, ஓர் அடி உயரமான சுருங்கிய திரைச் சீலைகளைத் தொங்கவிட்டு, கீழே தரையில் விலைமதிப்புள்ள ஈரானிய பட்டுக் கம்பளம் விரித்து, நாற்புறமும் கிதாபுகளை (புத்தகங்களை) வைத்து வாசிக்கக் கூடிய உயரத்தில் நிறச் சீலைகளால் போர்த்தப்பட்ட மரப்பலகைகளை வைத்திருப்பர். பந்தலுக்குள் மின் குமிழ்கள் பொருத்தப்பட்ட, வேலைப்பாடுகளுடன் கூடிய கண்ணாடி லாந்தர்கள் பல தொங்கிக்கொண்டிருக்கும்.

பிற்பகல் தொழுகை முடிவடைந்ததும் மௌலவிகளும், அரபு மொழியை வேகமாக வாசிக்கக்கூடியவர்களும் புறப்பள்ளிக்குள் வந்து தங்களுக்கான இடங்களில் அமர்ந்து கொள்வர். ஆரம்ப நாளைத் தவிர்ந்த ஏனைய நாட்களில் பிற்பகல் வேளையில் கிரந்தம் வாசிக்கும்போது மிகச் சில பொதுமக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மார்க்க அறிஞர்களுக்கு சமீபமாகவும், தூரத்தேயும் அமர்த்திருப்பர். நீண்ட நேரம் நிமிர்ந்து இருக்கமுடியாமல் இடுப்பு, முதுகு வலி ஏற்படும் எனக் கருதும் பலர் சுவர்களில் சாய்ந்தவாறு அரபு மொழியில் கிரந்தம் வாசிப்பதை செவியுற்றவாறு இருப்பர்.

ஆரம்பத்தில் வயதான ஒருவர் வாசிப்பதைத் தொடங்கிவைத்து, சில நிமிட நேரம் தொடர்ந்து வாசித்து நிறுத்த, அவருக்கு அண்மையில் வீற்றிருப்பவர் முன்னையவர் விட்ட இடத்திலிருந்தும் வாசிக்கத் தொடங்குவார்.

இவ்வாறு ஆள் மாறி ஆள் சுமார் ஒரு மணி நேரமளவில் வாசித்து விட்டு இடை வேளைக்காக கலைந்து செல்வர்.

மஹ்ரிப் தொழுகை (சூரிய மறைவைத் தொடர்ந்து வருவது) முடிந்த கையுடன் ஜகஜோதியாக மின் விளக்குகள் ஒளி உமிழ... கிரந்த வாசிப்பு நிறுத்திய இடத்திலிருந்து மீண்டும் தொடங்கப்படும். வாசிப்பதற்காக வருகை தந்திருக்கும் அறிஞர்களுக்கும், கேட்பதற்காக வந்தவர்களுக்கும் இடைக்கொரு தடவை கற்கண்டு, கொடிமுந்திரி வற்றல், பேரீச்சம்பழம் போன்றவை வாய்க்குள் சுவைப்பதற்காக விநியோகிப்பர். இனாமல் வார்த்த சிறிய கோப்பைகளில் தரப்படும் காவாத் தேனீரும், நன்னாரி சேர்பத்தும் நினைக்கும் தோறும் நாவில் இனிக்கும்.

இரவு தொழுகையின் பின்னர் சபை களைகட்டும், பெரியவர்களும், சிறுவர்களுமாக வெள்ளைச்சாரனும், சேர்ட்டும் அணிந்து, தலையில் தொப்பிகளுடன் வீற்றிருப்பர்.

அன்றைய தினம் வாசிக்க வேண்டிய ஹதீஸ் தொகுப்பு அரபு மொழியில் வாசித்து முடிவடைந்ததும், வாசித்தவைகளில் உள்ள முக்கிய சில ஹதீஸ்களைத் தமிழில் தொகுத்து வழங்குவர். எல்லாமே நபி பெருமானாரின் நீதி உபதேசங்கள் அல்லது அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள், அவர்கள் எவ்வாறெல்லாம் மனித நேயமுடன் மக்களை நேசித்தார்கள், நீதியும் உண்மையும் வழுவாது நடந்தார்கள் என்பன பற்றியெல்லாம் அழகு தமிழில் உரையாற்றுவர்.

வைபவ முடிவில் கலந்துகொண்ட அத்தனை பேருக்கும் நெய்ச் சோறு வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட சோறு பற்றாக்குறையாகி விடுவதுமுண்டு. அவ்வேளைகளில் சின்னஞ் சிறு சிறுவர்களை ஒதுக்கி விட்டு, இருப்பதைப் பெரியவர்களுக்குக் கொடுத்து முடிப்பர். பள்ளிக்குள்ளிருந்து சோற்று முடிச்சுக்களுடன் ஆட்கள் வருவதை சோறு கிடைக்காத சில சிறிசுகள் ஏக்க விழிகளால் பார்த்துக்கொண்டு நிற்பது பரிதாபக் காட்சி.

என்னுடைய சிறுவயதில் இரவு வேளைகளில் வீட்டுப் பாடங்கள் படிக்க வேண்டி ஏற்படாத போது, இருந்திருந்து விட்டு நானும் ஹதீஸ் மஜ்லிஸுக்குப் போவேன். சில தடவைகளில் எனது தாயாரிடம் சொல்லி அனுமதி பெறாமலும் போய்விடுவதுண்டு.

இரவு தொழுகைக்காக பள்ளிவாசலுக்குப் போனால், நண்பர்களுடன் சேர்ந்து மஜ்லிஸில் உட்கார்ந்து விடுவேன், வைபவம் முடிந்து வெளியே வரும்போது, சோறு கொடுக்கப்படாததால் ஏக்கத்துடன் நிற்கும் யாராவது ஏழைச்சிறுவனொருவனிடம் எனது கையிலிருக்கும் சோற்று முடிச்சைக் கொடுத்துவிட்டு வீட்டுக்குச் செல்வேன். சோற்று முடிச்சுடன் வீட்டுக்குச் சென்றால் புஹாரி மஜ்லிஸில் கலந்து கொண்டதை உறுதிப்படுத்துவதாக அமையும். அவ்வாறு இல்லாமல் வெறுங்கையுடன் நேரம் பிந்திச் சென்றால் தாயாரின் கேள்விகளுக்கு ஆளாக வேண்டி ஏற்படும்.

சில நாட்களில் உம்மா கேட்பார் "இவ்வளவு பிந்தி ஊட்டுக்கு வர்றியே. எங்கே போனே?" என்று.

"பள்ளிக்குத்தான்"

"ஹதீஸ் மஜ்லிஸிலே இருந்தியா?"

"அதிலே இருந்ததாலேதான் பிந்தி வர்றேன்."

"சோறு பகிர்ந்திருப்பாங்களே, சும்மா வர்றியே?"

"தந்தாங்கதான்"

"அப்போ... அது எங்கே?"

ஏக்கப் பார்வையுடன் நின்ற ஏழைச் சிறுவனொருவனுக்கு கொடுத்துவிட்டதைக் கூறுவேன். தாயார் என் அருகில் வந்து, தோளில் கை வைத்து அணைத்து, கன்னங்களில் இதமாக முத்தமிடுவார்கள்.

"உன்னை அல்லா நல்லா வைப்பான் மகனே. இந்தக் குணம்தான் நபிமார்களின் குணம். ஏழைகளுக்கு உதவி செய்வதும், இரக்கப்படுவதும்தான் மனித நேயம்"

நான் பூரித்துப் போவேன். இப்படிப் பல தடவைகள் நடந்த சம்பவங்களை நான் வளர்ந்து பெரியவனாகி, திருமணம் செய்து, பிள்ளைகள் பிறந்த பின் அவர்களிடம் கூறியுள்ளேன். அவர்களும் அவ்வாறெல்லாம் வாழ வேண்டும் என உபதேசித்துமுள்ளேன்.

★ ★ ★

பல வருடங்களின் பின்னர் ஒரு நாள், பெரிய பள்ளிவாசலில் ரஜப் மாதம் முழுவதும் புஹாரி கிரந்தம் வாசிக்கப்பட்டு நிறைவுறுவதை முன்னிட்டு பெரிய கந்தூரி கொடுப்பதற்கான ஏற்பாடுகள் தடபுடலாக நடந்து கொண்டிருந்தன. முதல் நாள் இரவு விடிய, விடிய பாரிய கடாரங்களில் நெய்ச்சோறு சமைத்தார்கள், கிணற்றைச் சுற்றி பெண்கள் உட்கார்ந்து அரிசி அரிக்க...அரைத்த உள்ளி இஞ்சி, கருவேப்பிலை

வகையறாக்களை நெய் ஊற்றித் தாளித்து..... தேங்காய் பாலுக்குள் அரித்த அரிசியைக் கொட்டி அவிய விடத் தொடங்கும்போது, பக்கத்தில் நட்டி வைத்திருந்த பீரங்கி குழாயினுள் பழைய புடவைகளைத் திணித்து இறுக்கி, அடியிலுள்ள துவாரத்தினுள் வெடிமருந்து கொட்டி...வெடிக்க வைத்தனர்.

பெரிய கந்தூரியன்று கிராமம் முழுவதும் வீடுகளில் இறைச்சிக்கறி சமைப்பர். நெய்ச் சோற்றுக்கு இறைச்சிக்கறி பாணுக்கு பட்டரை போல என்பதை கிராமத்தவர்கள் அறிந்து வைத்திருந்தனர்.

நான் காலையிலேயே வீட்டுக்குப் பக்கத்திலுள்ள தைக்கியாவின் முஅத்தீனிடம் கொடுத்து கோழியொன்றை தக்பீர் செய்து எடுத்து வந்தேன். மனைவிக்கு சிரமம் ஏற்படத்தக்கூடாதென்ற நல் எண்ணத்தினால் அதை இறக்கை களைந்தும் கொடுத்தேன்.

என் பிள்ளைகளில் ஒருவனிடம் பள்ளிவாசலுக்கு நேரத்துக்குச் சென்று கந்தூரி நார்சா (சோறு) வாங்கி வருமாறு கூறி வைத்திருந்தேன்.

“நீங்க பள்ளிக்குப் போகல்லையா?” கிணற்றில் குளித்துக் கொண்டு நின்ற என்னைப் பார்த்து தேங்காய் உரிப்பதற்காக அலவாங்கும் கையுமாக அங்கு வந்த மனைவி கேட்டார்.

“தேவல்லையே, ஒரு ஆள் வாங்கி வார நார்சா நம்ம முழுக் குடும்பத்துக்கும் மதிய உணவுக்குப் போதுமே” என்றேன்.

நேரம் பதினொன்றைத் தாண்டிவிட்டது. குசினிக்குள் இறைச்சிக் கறியின் வாசனை வயிற்றினுள் பசியைத் தூண்டியது. பள்ளிவாசல் அமைந்துள்ள திசையில் திடீரென பெரும் சப்தம் கேட்டது.

“இப்போதுதான் நார்ஸா பகிர்ந்து முடிந்து ஆக்களெல்லாம் வெளியே வாராங்க போல. அதான் சப்தமா கேக்குது”என்றேன் குசினிக்குள் கிடந்த ஊஞ்சலில் இருந்து அசைந்தவாறு மனைவியைப் பார்த்து.

சிறிது நேரம் சென்றதும் பள்ளிவாசலுக்குச் சென்றிருந்த மகன் திரும்பி வந்தான். கையில் சோற்றுப் பார்சலைக் காணவில்லை.

“ஏன் உனக்கு நார்ஸா தரல்லையா?” மனைவி கேட்டார்.

“தந்தாங்களே”

“காணல்லையே?”

இமைகளைக் கொட்டியவாறு உதடுகள் விரியாமல் சிரித்தான்.

“அதான் கேக்கிறாவே. சொல்லேன்” என்றேன் நான்.

“ஆக்கிய சோறு வந்தவங்க எல்லோருக்கும் கொடுக்க போதாம போயிடுச்சி. நான் சோத்து முடிச்சோட வாறப்போ ஒரு ஏழைப் பையன்

தனக்கு நார்சா கிடைக்கல்லேன்னு அழுதுகொண்டு நின்றான். அவனுக்குக் கொடுத்துட்டேன்.''

எனக்கு சரேலென இரத்தம் சூடாகியது.

''அடப்பாவி. இங்கே நான், உன் உம்மா, மற்றப் பிள்ளைகள் எல்லோரும் கந்தூரி நார்சா சாப்பிடோணும்னு காத்துக்கொண்டிருக்கோம். உன் உம்மா கறி கூட சமைச்சுட்டா. என்னைப் போகச் சொல்லியிருந்தா நான் போய் வாங்கி வந்திருப்பேனே. நீ போய் இப்படி செய்துட்டு வந்து நிக்கிறியே. இப்ப எங்க போய் நார்ஸா வாங்கிறது? பிள்ளைகள்ளாம் ஏமாந்து போயிடுவாங்க, உன்னை... என்னத்தாலே அறையணும்'' என்றேன் உரத்த குரலில்.

மகனுடைய முகம் சரேலெனக் கறுத்தது. என்ன நினைத்தானோ, தாய்க்குப் பின்னால் நடந்து சென்று குசினிக் கதவடியில் நின்றான்.

''அவர் சின்னப் பிள்ளையா இருந்தப்போ இப்படி செய்துட்டு வந்ததுக்கு அவருட உம்மா தோளைத் தட்டிக் கொடுத்து முத்தமும் கொடுத்திருக்காங்க. அதே வேலையை நான் செய்தா... அதுக்கு ஏசுறாரு. கொஞ்சத்தான் இல்லையென்றாலும் தோள்ளயாவது தட்டிக்கொடுக்க ஏலாதா?'' தாயைப்பார்த்து முணுமுணுத்தான்.

என் கண்கள் திறந்தன.

★ ★ ★

# தெரு நாய்

அது பனி படர்ந்ததோர் இனிய காலைப் பொழுது. விடிந்தும் விடியாத நேரம். இருள் விலகியும் விலகாத கலங்கலான நிலை.

பெரியதொரு கொட்டாவியை விட்டவாறு இரவெல்லாம் உடலைப் போர்த்தியிருந்த போர்வையால் மூடிக்கொண்டு கைகளைக் கட்டியவாறே ஹாலுக்குள் வந்தேன். மனைவி அமிர்தம் ஸ்வெட்டருடன் குசினுக்குள் தேனீர் தயாரித்துக்கொண்டு நின்றாள்.

“சரியான பனி” என்றேன் வெடவெடத்த குரலில்.

“ஓம்பா. மழை தொடங்கினா பனி நின்னுடும். சீனி ஒரு கரண்டியா ஒன்னரையா?”அமிர்தம் கேட்டாள்.

“ஒன்றே போதும். பிரபு எழுந்துட்டானா?” நான் கேட்கும்போதே கலைந்த தலையுடன், வாயில் வெண் கோடுகளுடன் நடுநடுங்கியவாறே என் மகன் பிரபு படுக்கையறைக்குள் இருந்து மெதுவாக எட்டிப் பார்த்தான்.

“எழும்பிட்டு வா. டியூசனுக்குப் போகணும்” அமிர்தம் அதட்டினாள்.

“இன்றைக்குப் பின்னேரம்தான் டியூசன். நேற்றே டீச்சர் சொல்லிட்டா. நல்லா படுத்து எழும்பப் போறேன்.” கூறியவாறு கட்டிலை நோக்கி அவன் செல்லும் போது....அந்தக் குரல்கள் கேட்டன.

வாயையும், மூக்கையும் இறுகப் பொத்திக்கொண்டு உள் தொண்டையால் உரக்கக் கத்திப் பாருங்கள். சரியாக அதே சப்தம் கேட்கும்.

“விட்டுவிட்டுக் கத்திக்கொண்டே இருக்குதுகள். போய்க் கொஞ்சம் பாருங்கப்பா.”

“என்ன கத்துது?”

“நாய்க்குட்டிகளாக்கும். ராவு கண் விழிக்கும் போதெல்லாம் கத்துற சத்தம் கேட்டுது. போய்ப் பார்த்து தூர எறிஞ்சிட்டு வாங்கோ.”

“தேத்தண்ணியைக் குடிச்சுட்டுப் போயிடுறேனே”

“என்ன அசிங்கமோ, போய்ப் பார்த்துட்டு வந்து குடிங்கோ”

“ஹய்யா....நானும் பார்க்கப் போறேன்.” துள்ளி எழுந்தவாறே வினாடிக்குள் பிரபு என்னருகில் நின்றான். அவனுக்குப் பத்து முடிந்து பதினொன்று தொடங்கியிருந்தது.

பிரபுவும், நானும் கதவைத் திறந்து, வெடவெடக்கவைத்த கூதலுக்குப் பயந்து இறுக்கிப் போர்த்தியவாறு வீட்டுக்குப் பின்புறமாகச் சென்றோம்.

கழுத்துக்கு மேல் கழுத்தைப் போட்டவாறு, சிவப்பும் வெள்ளையுமான நிறத்தில், பிறந்து இரண்டு மூன்று நாட்களான ஆணும், பெண்ணுமான இரண்டு நாய்க்குட்டிகள் கழிவு நீர்க் கானுக்குள் படுத்தவாறு இடைவெளி விட்டுவிட்டு அனுங்கின.

சில வினாடிகள் அவைகளையே பார்த்தவாறு நின்றேன்.

"ஹய்யா... நாய்க்குட்டீங்க. நான் வளர்க்கப் போறேன்."

பிரபுவைப் பார்த்தேன். அவனது கண்களில் தெரிந்த மகிழ்ச்சியைப் பார்த்தேன்.

"என்ன? வளர்க்கப் போறியா?"

"ஓம்பா. ரொம்ப வடிவுல்லே? வளர்க்கத்தான் போறேன்."

"அம்மா ஏசுவா."

"ஒன்றும் ஏசமாட்டா. நான் தூக்கிக்கொண்டு போய் கூடு கட்டி வளர்க்கப் போறேன்."

இப்படித்தான் அந்த இரண்டு நாய்க்குட்டிகளும் என் வீட்டில் வளரத் தொடங்கின.

ஆரம்பத்தில் அமிர்தம் பிரபுவுக்கு ஏசினாலும், அசிங்கத்தைக் கையால் தொட வேண்டாம் என அடிக்கடி வற்புறுத்தினாலும், அவன் அவைகள் எல்லாவற்றையும் மீறி ஜோன், ஜான் என நாமங்களும் சூட்டி, பழைய தடிகளாலும் கோணிகளாலும் கூடு அமைத்து, உணவும் தண்ணீரும் அளித்து வளர்த்துக்கொண்டிருந்தான்.

சுமார் இரண்டு கிழமைகள் சென்றிருக்கலாம்.

"அப்பா....அப்பா....வாங்கோவன்" என்றான் பதறியவாறு பிரபு.

"என்னப்பா? என்ன?" வாசித்துக்கொண்டிருந்த தினச்சுடர் பத்திரிகையை பக்கத்து ஸ்டூலில் வைத்துவிட்டு வெளியே சென்றேன்.

"ஜான் செத்துக்கிடக்கு!"

பெண் குட்டி கட்டையாகக் கிடந்தது. சோகமே உருவாக அதன் அருகில் படுத்தவாறு ஜோன் என் முகத்தைப் பார்த்தது.

"எப்படி செத்து இருக்கும்?"

"எல்லாமே இந்தப் பனிக்குத்தான். இந்தக் கூதலுக்கு நின்று பிடிக்க முடியாமச் செத்து இருக்கும்."

சோகம் மீறிய பிரபுவின் அழுகையால் ஈர்க்கப்பட்ட அமிர்தம் கூறியவாறே வந்து என்னருகில் நின்றாள்.

"பா...வம்மா. எவ்வளவு ஆசையா வளர்த்தேன்." பிரபு கண்களைக் கசக்கியவாறே மெலிதாக முணுமுணுத்தான்.

அமிர்தத்தின் முகத்திலும் நிறைய சோகம். பிரபுவைத் தன் அருகே அழைத்து, அணைத்து தலைமுடியைக் கோதிவிட்டாள்.

"பின்னுக்கு எடுத்துக்கொண்டு போய்ப் புதைச்சிடுங்கோ" கூறியவள் பிரபுவுடன் நடந்து சென்று மண்வெட்டியை எடுத்து வந்து என்னிடம் தந்தாள்.

நான் ஜானின் சடலத்தை மண்வெட்டியால் அள்ளும்போது ஜோனின் கண்கள் குளமாவதை உணர்ந்தேன்.

★ ★ ★

ஜோன் இப்போது சுமார் ஓர் அடி உயரம் வளர்ந்துவிட்டது. கூட்டுக்குள் படுக்காமல் போர்ட்டிகோவினுள் எனது கார் நிற்கும்போதெல்லாம் அதன் கீழ் பகல் வேளைகளில் படுத்துக்கொள்ளும். என்னைக் கண்டதுதான் தாமதம் எழுந்து நின்று வாலை ஆட்டியவாறு வளைய வரும். பிரபுவுடன் கூடவே விளையாடும். அமிர்தத்தைக் கண்டதும் சற்றுத் தள்ளி நின்று வாலை மெதுவாக அசைக்கும். வீட்டின் தலைவன் நான் என்பதும், பிரபு விளையாட்டுப்பிள்ளை என்பதும், அமிர்தம் சற்றுக் கண்டிப்பான பேர்வழி என்பதெல்லாமே அதற்குத் தெரிந்திருந்தது.

பொழுது போகாத வேளைகளில் முற்றத்தில் பிரம்புக்கூடை நாற்காலியைப் போட்டு அதில் இருந்தவாறே ஜோனின் விளையாட்டுக்களைப் பார்த்து மகிழ்வேன். சிறிய பந்தொன்று கிடைத்துவிட்டால் போதும், அதை வாயால் கௌவுவதும், கால்களால் எற்றுவதும், துள்ளிச் சென்று பற்றுவதுமாக....நாளெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம். ஒரு நாள் வாசலில் நின்ற கொய்யா மரத்திலிருந்து அணில்பிள்ளையொன்று தவறிக் கீழே மணலில் வீழ்ந்ததும், அதை ஜோன் துரத்தியதும், அது மறித்து மறித்து அங்குமிங்குமாகப் பாய்ந்ததும்..... பிரபு "கமோன் ஜோன்..." என உற்சாகப் படுத்தியதும் ... இனிமையான நிகழ்வுகள்.

சில மாதங்கள் சென்றதும் ஜோனின் குரலில் பெரிய மாற்றம் தொனித்தது. மிருதுவான குரல் வெண்கல நாதமாக ஒலிக்கத் தொடங்கியது. இரவு வேளைகளில் வீட்டைச் சுற்றி ஓடியவாறே வள், வள்க்கும் போதெல்லாம் இடியோசையெனக் கேட்கும். உறுமும் சப்தம் நிசப்தமான வேளைகளில் இதயத்தை உறையச் செய்யும்.

அடிக்கடி வீட்டுக்கு வந்து போகும் நெருங்கிய சொந்தக்காரர்களைத் தவிர்த்து வேறு யாரும் கேட்டுக்குள் காலெடுத்து வைக்க முடியாத நிலை இப்போது எழுந்தது. சொந்தக்காரர்கள் வரும்போது சற்று ஒதுங்கி நின்று தரையைப் பார்த்தவாறு மெதுவாக அடித் தொண்டைக்குள் முணுமுணுக்கும்.

அவர்கள் வீட்டுக்குள்ளிருந்து வெளியே சென்றதும் துள்ளிச் சென்று கேட்டை முகத்தால் தள்ளி அடைத்து விடும்.

புதியவர்கள் யாராவது தப்பித் தவறி கேட்டுக்குள்ளால் வாசலுக்கு வந்து விட்டால் தூர நின்று உற்றுப் பார்த்து விட்டு சரேலென மிகப் பெரிய சப்தத்தில் இரண்டு தரம் குரைக்கும். வந்தவர் வினாடிக்குள் கேட்டுக்கு வெளியே சென்று சப்தமிட்டுக் கூப்பிடுவதைத் தவிர வேறு வழியே இருக்காது.

"என்ன ஸார் இப்பிடிக் குலைக்குது? பார்வையைப் பார்த்தாலே ஈரல் குலை நடுங்குது" என்றார் என்னைப் பார்க்க வந்த என் கீழ் கடமையாற்றும் அதிகாரி ஒருவர்.

அவர் வீட்டை விட்டுச் சென்றதும் அமிர்தத்தை அழைத்தேன்.

"கேட்டியா என்ன சொன்னார்னு?"

"என்ன சொன்னார்?"

"எல்லாம் உன் ரெண்டாவது மகனைப் பற்றித்தான். பார்வையைப் பார்த்தாலே ஈரல் நடுங்குதாம். வேளாவேளைக்குக் குளிப்பாட்டி, உணவு கொடுத்ததுக்கு உனக்கு ஒரு நன்றியுள்ள நல்ல காவல்காரன் கிடைச்சிருக்கான்."

அமிர்தம் சிரித்தாள். நானும் கலந்து கொண்டேன்.

★ ★ ★

"எழும்புங்கப்பா. வந்து பாருங்களேன் முசுப்பாத்தியை!" என்றாள் காலைப் பொழுதொன்றில் அமிர்தம்.

நுளம்பு வலைக்குள் படுத்ததால் அந்தக் காலை வேளையிலும் உடல் வெயர்த்தது.

"படுக்க விடவே மாட்டே... என்னதான் அப்படி?"

கொட்டாவியுடன் அவளைப் பின் தொடர்ந்தேன்.

வாசல் கேட்டின் கம்பிகளுக்குள்ளால் முகத்தை வெளியே நீட்டியவாறு ஜோன் நிற்க... வெளியே கரிய நிறமான இளம் பெட்டை நாயொன்று இதனுடைய முகத்துடன் முகத்தை முகர்ந்தவாறு....

"பின் என்ன? உன் மகன் காதல் பண்ணத் தொடங்கிட்டானாக்கும்" என்றேன் அமிர்தத்தின் பளிங்குக் கன்னங்களை கண்களால் வருடியவாறு.

அமிர்தம் அடக்கத்துடன் பற்கள் தெரியாமல் முறுவல் பூத்தாள்.

"போயும் போயும் இந்தக் கறுப்புத்தானா கிடைத்தது?"

“காதலுக்குக் கண் இல்லை அமிர்தம்”. சொல்லியவாறு நான் சிரிக்க… என் சப்தத்தைக் கேட்டதும் ஜோன் சடுதியாகத் திரும்ப…கறுப்புக் காதலி தலையைத் தொங்கப் போட்டவாறு ஒரே ஓட்டமாக ஓடியது.

★ ★ ★

பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்த பிரபு கனவு கண்டிருப்பான் போலும் மெதுவாக வாய் பிதற்றினான். வெயர்வைக் கசிவால் நித்திரையில்லாமல் புரண்டுகொண்டிருந்த நான் எழுந்து, அவன் அருகில் சென்று, கலைந்து கிடந்த சாரனை ஒழுங்கு செய்து, இரவு விளக்கு வெளிச்சத்தில் நேரத்தைப் பார்த்தேன். அதிகாலை ஐந்தரை காட்டியது. வெளியே ஹாலுக்குள் வந்து ஈஸி செயாரில் உட்கார்ந்து பக்கத்து ஜன்னலை மெதுவாகத் திறந்தேன். போர்ட்டிகோவும், காரும், குரோட்டன் செடிகளும், இளம் தென்னங்கன்றுகளும், கொய்யாமரமும், மல்லிகை மலர்களுமாக…. எல்லாமே அழகாகக் காட்சி தந்தன. சில வினாடிகள் இவைகளையே பார்த்துக்கொண்டிருந்து விட்டு, காலைப் பத்திரிகை வாங்கி வரலாம் என கேட் திறப்பதற்கான சாவியை கையில் எடுத்தவாறு, கதவைத் திறந்து போர்ட்டிகோவுக்குள் வந்தேன்.

அதுநாள் வரை நான் கேட்டிராத ஜோனின் மெல்லிய முனகல் சப்தம் என்னைக் காரின் கீழ் உற்று நோக்க வைத்தது. திகைத்தேன். நான் விரும்பாத ஒன்றைச் செய்து விட்ட குற்ற உணர்வுடன் ஓரக் கண்ணால் என்னைப் பார்த்தவாறு ஜோன் நிற்க… அருகில் அந்தக் கறுப்புப் பெட்டை நாய் படுத்துக்கொண்டிருந்தது. என்னை ஆச்சரியம் கௌவியது. நாற்புறமும் மதிற்சுவர் கொண்ட எனது வளவினுள் இது எப்படி நுளைந்தது? சரேலென எதையோ நினைத்து நான் திரும்ப முயன்றபோது ஜோன் காட்டிய சாடையைப் புரிந்து கொண்ட பெட்டை நாய் ஒரே துள்ளாகத் துள்ளி வீட்டின் பின் பக்கத்தை நோக்கி ஓடியது. நான் வேகமாக அதைப் பின் தொடர….அவசரத்துக்குப் பாவிப்பதற்காக பின் சுவரில் பொருத்தப்பட்டுள்ள தகரக் கேட்டின் இற்றுப்போனதோர் இடத்தில் ஏற்பட்டிருந்த ஓட்டையொன்றினூடாக அது ஓடிச் செல்வதைக் கண்டேன். இவ் வழியால்தான் ஜானும், ஜோனும் ஆரம்பத்தில் உட்புகுந்து இருக்க வேண்டுமென எண்ணிக்கொண்டேன்.

★ ★ ★

ரீ.வி.யை அணைத்துவிட்டு படுப்பதற்காகச் செல்லும்போதுதான் அந்தக் குரல் என்னைத் தாக்கியது.

“அமிர்தம். நம்ம ஜோனின் குரலைப் போலல்லவா கேக்குது. ரொம்பத் தூரத்திலிருந்து கேட்க்றாப்ல இருக்கே” என்றேன்.

“ஓம்பா. அது இப்ப ரா வேளையிலே வீட்ல நிப்பதே இல்ல. பொழுது பட்டதும் வெளியே போய், காலையிலே வந்து வீட்டுக்குப் பின்னாலே படுத்துக் கொள்ளுது. சாப்பாட்டுக்கு மட்டும் வெளியே வருது.”

“ஏன் அமிர்தம். அது பெட்டைகளைத் தேடித்தானே வெளியே போகுது. நாமே ஒரு நல்ல பெட்டையைப் பார்த்து வீட்டுக்குக் கொண்டு வந்துட்டா?”

“அதாவது உங்க செல்லப் புத்திரனுக்கு பெண் பார்த்து திருமணம் செய்துவைப்பமான்னு கேக்கிறீங்க” கூறியவாறே அமிர்தம் சிரித்தாள்.

“அப்படிச் செய்யாம விட்டா கண்டதுகளோட சேர்ந்து தெரு நாயாப் போயிடும். பெட்டையொன்றைக் கொண்டு வரு மட்டும் இதைக் கட்டிப் போட்டா என்ன? ”

“ஏதோ செய்ங்க. தெரு நாய் தெரு நாய்தான். ”

ஜோனுக்கு ஏற்ற பெட்டையொன்றைத் தேடுவதில் ஈடுபடத் தொடங்கினேன். சில நண்பர்களிடம் சொல்லி வைத்தேன். அடுத்த நாள் காலையில் ஜோன் வீட்டுக்கு வந்ததும் சங்கிலியொன்றைக் கழுத்தில் மாட்டி கழுவொன்றில் கட்டி வைத்தேன்.

வெய்யில் மெதுவாக மறைந்து இருள் கௌவத் தொடங்கும் போது..... பெருத்த முறுகலும், சங்கிலி அசைவும், முக்குவதும், முனகுவதுமாக ஜோன் சங்கிலியை அறுத்தெறிவதில் முயன்று கொண்டிருந்தது. நேரம் செல்லச் செல்ல..... தூரத்தே தெரு நாய்களின் குரைக்கும் சப்தம் கேட்கும் போதெல்லாம், இது பெரிதாகச் சப்தமிடத் தொடங்கியது. இரவு உணவை ஏறெடுத்தும் பாராமல் அடித் தொண்டையால் வீடு அதிரக் குரைத்தது. தொடர்ந்து குரைப்பதும், ஊளையிடுவதும், சங்கிலியைப் பலமாக இழுப்பதும், உறுமுவதும், கீச்சிடுவதுமாக.....

“பாவம்பா. நாளைக்குக் காலையிலேயே அவிழ்த்து விடுங்கோ. அது சாப்பிடக் கூட இல்ல. ”

அடுத்த நாள் காலை ஜோன் அயர்வு மிகுதியால் படுத்துக்கொண்டிருந்தது. சங்கிலியை அவிழ்ப்பதற்காக நான் அருகே சென்றேன். முகம் நிறைய கோபத்துடன் கலங்கிய கண்களால் என்னைப்

பார்த்தது. எழுந்து நின்று மரியாதை கூடச் செய்யாமல் வாலை மட்டும் மெதுவாக இரு தடவைகள் அசைத்து விட்டு அடங்கிக்கொண்டது.

கழுத்துச் சங்கிலியை அவிழ்த்தவாறே "வெளியே போனே பல்லை உடைப்பேன் " என்றேன்.

அதனது கண்கள் சிறிதாக மகிழ்ச்சியைக் காட்டின.

மத்தியானம் தட்டையில் உணவுடன் வீட்டின் பின் பக்கம் சென்ற அமிர்தம் அதிர்ச்சியுடன் ஓடி வந்தாள்.

"ஜோனைக் காணலேப்பா"

நாங்கள் வளவு முழுவதும் தேடினோம். அதைக் காணவில்லை.

* * *

இரண்டு நாட்களின் பின் இரவு உணவை முடித்துக்கொண்டு ஹாலில் அமர்ந்து நாங்கள் கதைத்துக்கொண்டிருந்தபோது வெளியே கேட் அருகில் மெலிதான உறுமல் கேட்டது.

"ஜோன் வந்து விட்டதாக்கும். பாவம்! ரெண்டு நாளா என்ன சாப்பிட்டதோ தெரியாது. கேட்டைத் திறந்து விடுங்கோ. உள்ளே வந்து சாப்பிடட்டும். "

நான் வெளியே சென்று கேட்டைத் திறந்தேன். குற்ற உணர்வுடன் ஜோன் ஓரக் கண்ணால் என்னைப் பார்த்து வாலசைத்தது. உள்ளே வருமாறு அழைத்தேன். மறுத்தது.

"ஜோன்! வா உள்ளே! " என்றாள் அமிர்தம் உணவுத் தட்டுடன் அழுத்தமாக.

அது உள்ளே வர, நான் கேட்டைத் தாளிட்டேன்.

அடுத்த நாள் நான் காரியாலயம் முடிந்து வீட்டுக்கு வந்தபோது அதிர்ச்சிச் செய்தி காத்திருந்தது.

கேட் திறந்திருந்த சமயமொன்றைப் பார்த்து ஜோன் வெளியே பாய்ந்து விட்டதாம்.

★ ★ ★

சில கிழமைகள் ஓடி மறைந்தன.

ஜோன் இப்போதெல்லாம் வீட்டுக்கு வருவதே இல்லை. என் நண்பர் ஒருவரிடமிருந்து அழகிய பெட்டை நாயொன்றைப் பெறக்கூடியதாயிருந்தாலும் ஜோனின் தற்போதைய பாங்கை நினைத்து அந்த எண்ணத்தைச் சற்றுத் தள்ளி வைத்தேன்.

"உங்களுக்குத் தெரியுமா ஜோனின் தற்போதைய சிநேகிதி யாரென்று? " அமிர்தம் கேட்டாள்.

"இல்லையே"

"பக்கத்துத் தெருவில் கிடந்ததே மயிரெல்லாம் உதிர்த்திய ஒரு சொறி நாய். அதானாம் "

"போச்சுடா! அந்த அசிங்கத்தோடயா? "

"ஓமாம். அது இனி வீட்டுக்கு வந்தா நான் பெல்ட்டால் அடிப்பேன் ". என்றான் பிரபு.

"பாவம் மகன். அது பட்டினி கிடக்கும். அப்பா போய் அதை எப்படியாவது வீட்டுக்குக் கூட்டி வரட்டும். "அமிர்தத்தின் தாய்மைப் பாங்கை நினைத்து வியந்தேன்.

அவள் கூறியது போல் நான் முயற்சி எடுத்தாலும் ஜோனை வீட்டுக்கு அழைத்து வருவதில் தோல்வியுற்றேன். அது நேரத்துக்குச் சாப்பிடாமல் பட்டினியாக அலைகிறது என்பது என்னவோ ஊர்ஜிதமாகியது.

ஜோன் தொடர்பாக அடுத்த இரண்டு நாட்களில் கிடைத்த செய்தி அதிர்ச்சியை ஊட்டியது.

"கேட்டீங்களா. ஜோனுக்கு வெறியாம். ரெண்டு பேரைக் கடிச்சிப் போட்டுதாம். அதைப் பிடிச்சிக் கொல்லுவதுக்காக ஆக்களெல்லாம் அலைகிறாங்களாம். "

நான் நிலைப்படியில் நின்றவாறு ஜோன் தொடர்பாக யோசித்துக்கொண்டிருக்கையில்.....

"சார்..சார்...உங்க நாயைப் போட்டு அடிச்சிக் கொல்றாங்க! " என்றான் கேட் அருகில் பதறியவாறு ஓடி வந்த ஒரு சிறுவன்.

"எங்கே? "

"பக்கத்துத் தெருவிலே"

உடுத்திருந்த சாரனுடன், காலில் செருப்புக்கூட இல்லாமல் பக்கத்துத் தெருவை நோக்கி ஓடினேன்.

சுமார் பதினைந்து பேர் கொண்ட ஒரு கூட்டத்தினர் நடுவே புழுவாகத் துடித்த ஜோனை கம்புகளாலும், பொல்லுகளாலும் அடித்துக்கொண்டிருந்தனர். சிறுவர்கள் சிலர் கற்களால் எறிந்தனர்.

"விடுங்கப்பா! விடுங்கப்பா! அடிக்காதீய்ங்கப்பா! அது என் நாய்! அது என் நாய் " பதறினேன்.

"அதுக்குப் பைத்தியம் சார். விட்டு வைத்தா பத்துப் பேரைக் கொண்ணுடும்."

கூட்டத்தை விலக்கியவாறு நான் உள்ளே சென்றேன்.

ஜோனின் அருகே குனிந்தேன்.

அது கண்கள் நிறைய கண்ணீருடன் என்னைப் பார்த்தது. ஓ...வென அழுவதற்காக வாயைத் திறந்தது. திறக்கமுடியாதென கண்களால் பாவனை காட்டியது. அந்த வேதனையின் மத்தியிலும் மெதுவாக, மிகமிக மெதுவாக வாலை அசைத்தது.

என் கண்கள் குளமாகின.

“ஜோன்! டேய் ஜோன்! என்ட மகனே ஜோன்! என்ட சொல்லைக் கேக்காம உன் மூப்புக்கு அலைஞ்சியே. இந்தக் கதியாடா உனக்கு!” என்றேன் நாத் தழதழக்க.

நான் கூறியது அதுக்குக் கேட்டதோ என்னவோ, அதன் தலை சரிந்தது.

★ ★ ★

# காட்டுத் தேங்கா

கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதியிலிருந்து மேற்கே சுமார் இருநூற்றைம்பது மீட்டர் தூரத்தில் விசாலமான பள்ளிவாசல் அமைந்திருந்தது. பள்ளிவாசலிலிருந்து பிரதான வீதி வரை அகன்ற மணல் பகுதி மையவாடி. காலங்காலமாக ஆண்களும், பெண்களுமான பல்லாயிரக்கணக்கான ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட புனித பூமி அது.

பிரதான வீதியிலிருந்து கிராமத்தின் மேற்குத் திசையை நோக்கி மையவாடியை வடக்குத் தெற்காகப் பிரித்தவாறு பள்ளிவாசலுக்குச் சமீபமாகப் பாதையொன்று ஓடியது. பாதைக்கு அண்மித்ததாகவும், பள்ளிவாசலுக்குச் சற்று சமீபமாகவும் பிரதான வீதிக்கு சிறிது தொலைவாகவும் ஓங்கி உயர்ந்து நின்றது அந்த காட்டுத்தேங்கா மரம். சுமார் முப்பதடி உயரம் இருக்கலாம். நீண்ட கைகளைக் கொண்ட இருவர் சேர்ந்து ஒருவரின் விரல்களுடன் மற்றவரினதைச் சேர்த்துக் கட்டிப்பிடிக்கக் கூடிய அளவுக்குப் பருப்பமுடையது. வடக்கும் தெற்குமாக நீண்ட ஆறேழு கிளைகளைக் கொண்டது. கிளைகள் நிறைய ஒன்றறை அங்குலத்திற்குச் சற்று கூடிய குறைந்த அளவிலதான இலைகள் செறிந்திருந்தன.

மரத்தின் வயது இருநூறுக்கும் அதிகமாக இருக்கலாம் என ஊரார் பேசிக்கொள்வர். கிராமத்தில் நூறு வயதுக்கு மேல் வாழ்ந்து சமீப காலங்களில் காலஞ்சென்றவர்கள் பலர் தங்களுக்குப் புத்தி தெரிந்த காலம் தொடக்கம் அம்மரம் நின்றிருப்பதாகக் கூறியுள்ளனர்.

மரம் எவ்வாறு முளைத்தது என்று யாருக்குமே தெரியாது. வெள்ளைத் தோலர்கள் நாட்டை ஆண்ட காலத்தில் எங்கிருந்தோ கன்றை அல்லது கொட்டையைக் கொண்டு வந்து யாராவது அவ்விடத்தில் நட்டிருக்கலாம் என்றும், பறவைகளால் காவி வரப்பட்ட விதை விழுந்து முளைத்திருக்கலாமெனவும் வரலாறு கூறுகிறது.

தொல் கிராமங்களுக்கான பெயர்கள் எவ்வாறு வைக்கப்பட்டன என்பதற்கு இன்றைய ஆராய்ச்சியாளர்கள் யதார்த்தமும் கற்பனையும் கலந்து செய்யும் முடிவுகளுக்கு ஒத்தவைதான் மரத்தின் வரலாறும் என ஊகித்துக் கொள்வது உசிதமானது.

அந்தக் காட்டுத்தேங்கா மரத்தை அறியாத கிராமத்தவர்களே இல்லையெனலாம். கடந்த பல தசாப்தங்களாக அல்லது தலைமுறைகளாக

அந்த மரத்தால் கிடைத்த அல்லது அதிலிருந்து பெற்றுக்கொண்ட பலன்கள் ஏராளம். சிறியவர், பெரியவர், ஆண், பெண், பணக்காரன், ஏழை என எந்தப் பாகுபாடும் காட்டாது அது தன்னாலான சகல பங்களிப்புகளையும் கிராமத்தவர்களுக்கு வாரி வாரி வழங்கிக்கொண்டிருந்தது.

மையவாடியில் பரவலாக அடர்ந்து முளைத்த காசான் செடிகள், வாகை மரங்கள் ஆகியவற்றுடன் சேர்ந்து கன்றாக, சிறு மரமாக அது தன்னைத்தானே வளர்த்துக்கொண்டு வரும்போது கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லைகளுக்கு முகம் கொடுத்தவாறு எதிர் நீச்சல் போட்டது. சிறுகச் சிறுக தனது உயரத்தை அதிகரித்த போதெல்லாம் மாடாடுகளின் அடங்காப் பசிக்கு ஆளாகி சாணேற முழம் சறுக்கும் கதையான தனது வாழ்க்கையை நினைத்து வெதும்பியது.

முயற்சியில் தளராமல் தனது உயரத்தை தானே அதிகரித்து பக்கவாட்டுக் கிளைகளைப் பரப்பியவாறு வளர்ந்துகொண்டிருக்கும்போது ஆடு வளர்ப்பவர்களின் ரூபத்தில் எதிரிகள் முளைத்தனர். கொளுக்கி பொருத்திய கம்புகளினால் மிருதுவாக முறியக்கூடிய கிளைகளை முறித்தனர். தமது ஒவ்வொரு விரல்களும் முறிபடும் போதெல்லாம் வேதனை பொறுக்க முடியாமல் காட்டுத்தேங்கா அழுதது யாருக்குமே கேட்கவில்லை. வம்பர்களால் தறிக்க முடியாத அளவுக்கு தன்னையும் உயர்த்தி தனது கிளைகளைக் கெட்டியாக ஆக்கிக்கொள்ளவும் வேண்டுமென திடசங்கற்பம் பூண்டு மெது மெதுவாக உயரத்தையும், பலத்தையும் அதிகரித்துக் கொண்டு உறுதியாக நின்றது.

அடர்த்தியான கிளைகள் பகலெல்லாம் நிழலைத் தந்தன. கிளைகள் பரப்பிய விசாலமான மரங்கள் சமீப தூரத்தினுள் இல்லாததால் இதன் நிழலுக்குக் கூடிய மவுசு ஏற்பட்டது.

சுட்டெரிக்கும் வேகா வெயிலில் நடந்து வருபவர்கள் இதன் கீழ் நின்று இளைப்பாறிச் சென்றனர். பகல் தொழுகைக்கான அதான் சொல்வதற்கு முன்னர் பள்ளிவாசலுக்கு வருபவர்கள் மரத்தின் நிழலில் நின்று கதையளப்பர். பாரமான பொருட்கள் ஏற்றப்பட்டு நடு மையத்தில் புதை மணலில் நகர்ந்து வரும் மாட்டு வண்டிகள் இதன் நிழலில் நிறுத்தப்பட்டு மாடுகளுக்கு ஓட்டிகள் ஓய்வு கொடுப்பர். கீழே தொங்கும் சாக்கினுள் கிடக்கும் வைக்கோலைத் தின்னக் கொடுப்பர்.

மாரிகாலம் தொடங்கும்போது ஈசல்களாக வரும் மரவள்ளி, சோளன் போன்றவற்றை காட்டுத் தேங்கா நிழலில் சாக்குகளில் குவித்து வைத்து வர்த்தகர்கள் விற்பர். கிழங்குகளிலிருந்து வெட்டி எறியப்படும் அடி, நுனி வேர் மற்றும் நெட்டியுடன் கூடிய சோள மடல்கள் போன்றவற்றைத் தின்ன கட்டாக்காலி மாடுகளும் ஆடுகளும் குவியும்.

"காட்டுத் தேங்காய்க்குக் கீழ் சோளங்குல விக்காங்களாம் தொழுதுட்டு வரேய்க்க வாங்கிட்டு வாங்க" என குடும்பப் பெண்கள் மாப்பிள்ளைமார்களிடம் அன்புக் கட்டளையிடுவர். கோடைகாலங்களில் முந்திரிப்பழம், ஈச்சம் பழம், நாவற்பழம், மாம்பழம், பலாப்பழம் என கிராம சந்தைச் சதுக்கத்தில் பார்க்குமிடமெங்கும் பழக் குவியல்கள் காணப்படும். மதியத்துடன் சந்தை முடிந்ததும் விற்றது போக மிகுதியானவை கிராமத்தில் ஆட்கூடும் இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விற்கப்படும். அத்தகையதோர் இடமாக காட்டுத் தேங்கா மரத்தடியும் இருந்தது. தான் கொடுக்கும் நிழலுக்குப் பதிலாக தனக்குக் கிடைக்கும் பழங்களின் சுகந்தத்தைக் கொண்டு மரம் திருப்திப்பட்டுக் கொள்ளும்.

காட்டுத் தேங்கா மரத்தின் கீழ் நடைபெற்ற சகல வியாபாரங்களும், கிராமத்தவர் மத்தியில் பரவிய வதந்தியொன்றைத் தொடர்ந்து படிப்படியாக முற்றுப்புள்ளி வைக்கப்படும் நிலைக்குள்ளாகின.

மரத்தில் பேய் உலாவுகிறதென யாரோ கட்டிவிட்ட கதையை ஊரார் நம்பினர்.

"காட்டுத் தேங்கா மரத்துக்குக் கீழ வித்த கிழங்கா? என்ட செல்ல நாயனே! நான் தின்னமாட்டன். அது பேய்ப் பார்வை பட்டது" என்றாள் அஸர் தொழுது விட்டு கையில் மரவள்ளிக் கிழங்குகளுடன் வந்து நின்ற தன் கணவனைப் பார்த்து ஒரு மனைவி.

"பேயும்! பிசாசும்! அதெல்லாம் சும்மா பொய்க் கதை! இது நல்ல மாக்கிழங்கு! அவி. திம்பம்" என்றான் கணவன்.

"நான் கையாலயும் தொடமாட்டேன். பேய்ப் பார்வை பட்டது. தின்டா என்ன செய்யுதோ? உங்களுக்கு வேணுமுன்டா நீங்களே அவிச்சித் தின்னுங்க"

கிழங்குகள் குப்பையினுள் வீசப்பட்டன. சில வீடுகளில் வாங்கி வந்த பழங்களுக்கும் இதே கதி ஏற்பட்டது. காட்டுத்தேங்கா மரத்தின் நிழலில் வியாபாரம் செய்வதை வர்த்தகர்கள் படிப்படியாக குறைத்துக் கொண்டனர்.

தன்மீது பேய்கள் உலாவுவதாக ஊரார் வாய்களில் அவலாக நொருக்கப்படும் வதந்தியின் பின்னணியைத் தெரிந்த ஒரேயோர் ஆத்மாவான தன்னால் அந்த உண்மையை வாய்விட்டுச் சொல்லமுடியாமல் உள்ளதே என நினைத்து பல நாட்களாக அது வெதும்பியது. அடிக்கடி தனக்குக் கிடைத்த சுகந்த வாசனை முற்றுப்பெற்றதையிட்டு அது வருந்தாத நாட்களில்லை.

உண்மை இதுதான்.

அப்போதெல்லாம் இப்போதையைப் போல வீடுகளில் மலசல கூடங்கள் இருக்கவில்லை. காலைக்கடன்களுக்காக ஆண்கள் கிராமத்தையண்டிய பற்றைக் காடுகளையும் பெண்கள் வீட்டின் பின்னால் உள்ள புழக்கடையையும் பயன்படுத்தினர்.

விடியாத கருக்கலிருளில் வெள்ளைப்பிடவையுடுத்த வயதான விதவையொருத்தி அவசரமாக ஏற்பட்ட வயிற்றின் உபாதையைப் போக்குவதற்காக காட்டுத் தேங்கா மரத்தையண்டிய பற்றைக்குள் குந்திக் கொண்டிருந்தாள். அதே நேரம் பள்ளி வாசலுக்கு தொழுகைக்காக மணலில் கால் புதைத்து ஒழுங்கையினூடாக நடந்து வந்த ஒருவனைக் கண்டதும்... இவள் சரேலென எழுந்து நிற்க... அவன் "பேய்! பேய்!!..." எனக் கூக்குரலிட்டவாறு வந்த வழியைப் பார்த்து ஓட்டம் பிடித்தான். காட்டுத் தேங்கா குலுங்கிச் சிரித்தது.

அந்தச் சிரிப்பு பின்னால் குமுறி அழவேண்டிய நிலைமையை ஏற்படுத்துமென அப்போது அதற்குத் தெரிந்திருக்கவில்லை. மரத்தடியில் தான் பேயைக் கண்டதாக அவன் வீட்டாரிடம் கூற அங்கிருந்து துணிச்சலான சிலர் தாங்களும் அதைப் பார்க்கவேண்டுமென விரும்பி மரத்தை நோக்கி நடந்து வரும் போது சடுதியாக வீசிய கடுங்காற்றினால் மரத்தின் கிளைகள் பேயாட்டம் ஆடியதைப்பார்த்து... "அந்தா... அந்தா... மரத்தில பேயாடுது!" கூறியவாறு பின் குதிகால்கள் பிடரியில் பட ஓடி ஒளிந்தனர்.

"என்னில பேயில்ல.. பிசாசில்ல... காற்றின் சங்கீதத்திற்கு நான் ஆட்டம் போடுறன். என்னை நம்புங்க.." காட்டுத்தேங்கா சிரித்தவாறே கரடியாகக் கத்தினாலும். ஓடியவர்களின் செவிகளில் விழவேயில்லை.

இருட்டிய பிறகான மனித நடமாட்டங்கள் அம்மரத்தினருகில் தேய்ந்தவாறு உள்ள போதுதான் அகஸ்மாத்தாக இன்னுமொரு சம்பவமும் இடம் பெற்றது.

ஜனாசாக்களைத் தூக்கிச் செல்லும் மரத்தினாலமைந்த சந்தூக்கு பள்ளிவாசலின் ஹவுளுப் பகுதியில் வைக்கப்பட்டிருந்தது. அது ஒரு குளிர்காலம். இஷாத்தொழுகை முடிந்த சிறிது நேரத்தில் ஹவுளில் எரிந்துகொண்டிருந்ததைத் தவிர்ந்த ஏனைய சகல விளக்குகளையும் அணைத்து விட்டு பள்ளிவாசல் கதவுகளைப் பூட்டி திறப்புக் கோர்வையை இடுப்புச் சாரனில் கொழுவியவாறு முஅத்தின் வீடு நோக்கிச் சென்றுவிட்டார். கிராமத்தில் வீடு வீடாகச் சென்று பிச்சையெடுத்த அயல் கிராமவாசியொருவன் பிரதான வீதியிலுள்ள கடையொன்றின் விறாந்தையில் அன்றிரவைக் கழிபதற்கு முயன்றான். தொடர்ச்சியாக அவனுடலில் எறியப்பட்ட குளிர்க்காற்று நித்திரையைத் தடுக்க...

பள்ளிவாசலுக்குள் சென்று படுக்கலாமென்ற எண்ணத்துடன் நள்ளிரவில் நடந்து வந்தான். ஹவுளுக்குள் மின்னியவாறிருந்த விளக்கு வெளிச்சத்தில் அங்கு கிடந்த பழைய பாயொன்றை விரித்து உடம்பைக் கிடத்தினான். அப்போதும் குளிர்காற்று அவனை விடவில்லை. `உய்ங்.. உய்ங்..' என வேகமாக வந்து மோதியது. என்ன நினைத்தானோ. படுத்திருந்த பாயைப் போர்வையாக மாற்றி சந்தூக்கின் மூடியைத் திறந்து அதனுள் படுத்து மூடிக் கொண்டான். சிறிது நேரத்தில் விளக்கும் அணைந்து கொண்டது.

இவை எல்லாவற்றையும் தனது நீண்ட கிளைகளிகளின் உதவியால் காட்டுத் தேங்கா பார்த்துக் கொண்டு நின்றது. ஊதல் காற்றுக்குப் போர்த்திக்கொள்ள தன்னிடம் எதுவும் இல்லையே என பிச்சைக்காரனைப் பார்த்து பொறாமை வேறு அதற்கு ஏற்பட்டது.

சுப்ஹு தொழுகைக்கான பாங்கொலிப்பதற்காக கையில் லாந்தருடன் பரக்கப்பரக்க நடந்துவந்த முஅத்தின் ஹவுளில் வுளுச்செய்து. பள்ளிவாசலின் உட்கதவொன்றைத் திறந்து, லாந்தரை உயர்த்திப் பிடித்து சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்து, பாங்கு சொல்லும் இடத்துக்கு வந்து நின்று செவித் துவாரங்களில் இரு கை சுட்டு விரல்களைப் புகுத்தி "அல்லாஹு அக்பர்....." என்றார் பலத்த தொனியில்.

சந்தூக்கினுள் படுத்திருந்தவன் பாங்குச் சப்தத்திற்கு சடுதியாக கண்விழித்து மெதுவாக அசைந்தெழுந்து...... பாங்கு சொல்லி முடியும் தருவாயில் ஹவுளில் வைக்கப்பட்டிருந்த சந்தூக்கின் மூடி தானாக உயர்வதை அகஸ்மாத்தாகக் கண்ட முஅத்தின் பார்வையைக் கூர்மையாக்கி அதனுள்ளிருந்து எழுந்து நின்ற வெள்ளை உடுப்பணிந்திருந்த உருவத்தைக் கண்டு கண்கள் பிதுங்க "பேய்.. பேய்..! காட்டுத் தேங்கா மரத்துப் பேய்!!!" எனக் கத்தியவாறு துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்ற வேகத்தில் பள்ளிவாசலை விட்டு ஓடத் தொடங்கினார்.

"மோதின்! ஏ மோதின்! ஓடாதீங்க. நான் பேயில்ல. நாள் பிச்சைக்காரன்..." கூறியவாறே இவன் அவர் பின்னால் ஓட.. "என்ட அல்லா! பே திரத்துது. ஆராச்சும் காப்பாத்துங்க..." கத்தியவாறே முஅத்தின் பறந்தார்.

அந்தக் காட்சியைக் கண்ட காட்டுத்தேங்கா வாய்விட்டுக் குலுங்கிக் குலுங்கி சிரிக்க முற்பட்டாலும், பல முறை முட்டுப்படுபவன் மடையன் எனத் தெரிந்து வைத்திருந்ததால் சென்ற முறை சிரித்ததால் அனுபவித்த வேதனையை நினைத்து தன்னைத்தானே அடக்கிக் கொண்டது.

காட்டுத் தேங்கா மரம் பூத்துத் காய்க்கும் காலங்கள் வரும் போதெல்லாம் உள்ளூர நடுங்கத் தொடங்கிவிடும் வாண்டுப் பயல்களால் ஏற்படப்போகும் தொல்லைகளை நினைத்து? அதனுடைய ஒரே தொடையுடனான உடல் உதறலெடுக்கும்.

ஏழாம் பிறை வடிவத்தில் உப்பிய கொழுக்கட்டை போன்று வயிறு பெருத்தும், நுனிகள் சிறுத்துமிருக்கும் அதனது காய், பழுத்துக் காய்த்து தானாக வெடிக்கும் போது, வெண் சாம்பல் நிறத்திலான கொட்டைகள் சிதறி கீழே விழும், கொட்டைகளைப் புறக்குவதற்காக விடிவதற்கு முன்பே சிறுவர்கள் படையெடுப்பர். முந்திரிக் கொட்டைகளை நெருப்புத் தணலில் சுட்டு உடைத்து பருப்பெடுப்பதைப் போன்று இதன் கொட்டைகளிலிருந்தும் பருப்புக்களை எடுத்துச் சப்பித் தின்பர்.

கூடுதலாக கொட்டைகளைப் பெற வேண்டுமென பேராசை கொண்டவர்கள் கல்லாலும், பொல்லாலும் காய்ந்த காய்களுக்குக் குறிபார்த்து எறிவர். யாராலும் நீரூற்றி வளர்க்காத தனக்கு தனது வளர்ச்சியில் எந்த விதப் பங்கும் கொள்ளாதவர்களெல்லாம் சகட்டுமேனிக்கு எறிந்து அங்கமெல்லாம் காயங்களை ஏற்படுத்துகிறார்களே என நினைத்து காட்டுத் தேங்கா வெதும்பி அழும்.

காய்க்கிற மரத்துக்கு கல்லடியும், பொல்லடியும் என்பது அது அனுபவத்தால் பெற்ற அறிவு.

காலங்காலமாக கிராமத்தில் ஏற்பட்ட மாற்றங்களையெல்லாம் அது தெரிந்து வைத்திருந்தது. தென்னோலை கட்டப்பட்ட செத்தைக் குடிசைகள் களிமண் சுவர்களால் ஆனவைகளாகி காலப் போக்கில் செங்கல் கட்டிடங்களாகி மாபிள் பதித்தவைகளாக மாறியமை... ஓலைக்கூரைகள் நாட்டோடுகளுக்கு மாறி பின்னர் கொளுக்கு ஓடுகளைக் கொண்டவைகளாக ஆகி.... சில வீட்டின் கூரைகள் தகடுகள் அல்லது அஸ்பஸ்டஸ் சீட்டுக்கள் என்பவற்றால் மூடப்பட்டு... ஒற்றை மாடி, இரட்டை மாடிகள் என கிராமத்தில் அங்குமிங்குமாக தனது உயரத்தையும் மிஞ்சும் அளவுக்கு வீடுகளின் உயரம் அதிகரித்ததை எல்லாமே அது நினைவில் வைத்திருந்தது.

கனமான படங்குத் துணிகளை அணிந்தவர்கள் படிப்படியாக காரிக்கனுக்கு மாறி, பின்னர் சாரன்களை உடுக்கத் தொடங்கியது..... மிதிவடிக்கட்டை போட்டுத் திரிந்தவர்கள் கால்சட்டையும் சப்பாத்தும் அணிந்தது போன்ற கலாச்சார, நாகரீக, பண்பாட்டு மாற்றங்களையெல்லாம் நீண்ட காலமாகக் கண்டுகொண்டிருக்கும் ஒரேயோர் உயிர் கிராமத்தில் காட்டுத் தேங்கா மட்டும்தான்.

மரத்தின் அருகிலான வீதி ஆரம்பத்தில் ஒற்றையடிப்பாதையாக விருந்து. காலப் போக்கில் மாட்டு வண்டிகளின் போக்குவரத்துக்கு ஏற்றதாக ஆகி. களியும் , கிறவலும் பரவிய பின்னர் வாகன நடமாட்டங்கள் ஏற்பட்டு தார்ப் பாதையாக மாறியிருந்தது.

காட்டுத் தேங்காவுக்கு சமீபமாகத்தான் அன்னாட்களில் நானாவித விளையாட்டுகள் இடம் பெற்றன. முந்திரிப் பழ சீஸனில் மரத்தினடியிலிருந்து கணிசமான தூரத்தில் முந்திரிக் கொட்டைகளைக் குவித்து வைப்பர். வாட்டசாட்டமான சிலர் ஏழு இறாத்தல் பாரமான படிக்கல்லை கையிலேந்தி மரத்தினடியில் கீறப்பட்ட கோட்டுக்குப் பின்னால் நின்று ஆள் மாறி ஆளாக கொட்டைக் குவியலுக்கு குறி பார்த்து வீசுவர். படிக்கல் பட்டதும் கொட்டைகள் சிதறிப் பறப்பதை பார்வையாளர்களோடு சேர்ந்து காட்டுத் தேங்காயும் பார்த்து மகிழும்.

நினைவு அறிந்த நாள் தொடக்கம் எண்ணிக்கையற்ற ஜனாஸாக்களின் நல்லடக்கங்களை அது கண்டுள்ளது. அதனது வட, தென் திசைகளில் காலை, மாலை, இரவு என நேர காலம் பாராது அடக்கப்பட்ட ஜனாஸாக்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் அதற்குத் தெரியும். ஆண், பெண், சிறுவர்கள், பெரியவர்கள் என ஒவ்வொரு ஜனாஸாவையும் பள்ளிவாசலில் தொழுகை முடிந்த கையுடன் தன்னைக் கடந்து அடக்கஸ்தலத்துக்குத் தூக்கிச் செல்லும் போதே அது இனம் கண்டுவிடும். ஆண் ஜனாஸா என்றால் வெள்ளைப் பிடவையாலும் பெண் ஜனாஸா என்றால் நிறப் பிடவையாலும் சந்தூக்கு மூடப்பட்டிருக்கும். மஞ்சு (மூடு பலகை) நீளம் குறைந்ததாயிருந்தால் ஜனாஸா சிறுவர்களுடையது என எண்ணிக்கொள்ளும்.

தாய். தகப்பன், மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் என அதீத பாசம் வைத்திருந்தவர்களின் மறைவால் தொடர் வேதனை அனுபவிப்பவர்கள் அடிக்கடி அத்தகையவர்களின் அடக்கஸ்தலங்களுக்கு வந்து நீண்ட நேரம் மானசீகமாக உரையாடி அவர்களுக்காகப் பிராத்தித்து விம்மி வெதும்பும் காட்சிகளைக் கண்ணுறும் போதெல்லாம் காட்டுத் தேங்காயும் சேர்ந்து அழும். அவர்களுக்காக தானும் பிராத்திக்கும். அத்தகையவர்கள் சிறிது நேரம் தன் நிழலில் தரித்து நின்று செல்லமாட்டார்களா என அங்கலாய்க்கும்.

காட்டுத் தேங்காவுக்குக் கோபம் ஏற்பட்ட நாட்களும் உள்ளன.

காலஞ் சென்ற மனைவியின் ஜனாஸாவை அடக்கி விட்டு "என்னைத் தனியே தவிக்க உட்டுட்டுப் போயிட்டியே.." என ஒப்பாரி வைத்தவர்கள்.... "உனக்கு பிறகு எனக்கு வாழ்க்கையே இல்ல. என்

வாழ்வு இனி இருண்ட பாலைவனம்தான்'' என்றவர்கள்.... ''உனக்கு முன்னால் நான் போயிருக்கப்படாதா? உன்னைப் பிரிந்து நான் எப்படி வாழ்வேன்.?'' என பிலாக்கணம் பாடியவர்கள்.... எனப் பலர், அவ்வாறு பிரலாபித்த சிறு சிறு நாட்களின் பின் கரம் பற்றிய புதிய மனைவிகளுடன் குசுகுசுத்தவாறு அதன் கீழால் அணைந்து நடந்து செல்லும் போது அவர்கள் மீது காரித் துப்பலாமா என காட்டுத் தேங்கா கோபத்துடன் நினைக்கும்.

திறந்த பொருளாதாரம் காரணமாக பாதைகளில் வாகனங்கள் எக்கச்சக்கமாக அதிகரித்தன. நகர அபிவிருத்தித் திட்டங்கள் பரவலாக அமுல்படுத்தப்பட்டன.

ஒரு நாள் காலையில் மரம் அரியும் இயந்திரம் கொண்ட வாகனமொன்று உறுமியவாறு வந்து மரத்தினடியில் நின்றது. கிங்கிரர்கள் சிலர் நீண்ட வாளுடன் அதிலிருந்தும் இறங்கினர். மரத்தை அரிய முற்பட்டனர்.

செய்தியறிந்து ஓடி வந்த பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள் அரியும் முயற்சியைத் தடுக்க முயன்று தோற்றனர். பொதுமக்கள் கூடினர். அவர்களின் நன்மை கருதியே திட்டம் செயற்படுத்தப்படுகிறது என அதிகாரிகள் கூறிய விளக்கத்தை ஏற்று பின்வாங்கினர்.

மரம் கழுத்து, மார்பு, வயிறு, தொடை கணுக்கால் என துண்டு துண்டாக அரியப்பட்டுக் கிடந்தது. இப்போது நிழல் இல்லை. எல்லாமே வெட்டவெளி. வேர்கள் பிடுங்கப்படாததால் காட்டுத் தேங்காயின் உயிர் ஊசலாடியது.

ஒவ்வொரு நாளும் செல்லச் செல்ல...

இருநூறு வருடங்களுக்கும் கூடுதலாக கிராமத்தவர்களுக்கு நன்மைகளை மட்டுமே செய்தவாறாக நின்றிருந்த அந்தக் காட்டுத் தேங்கா மரத்தின் அகால முடிவுக்காக அதன் காலடிக்கு வந்து யாருமே வேதனை தெரிவிக்கவில்லை. துக்கம் விசாரிக்கவில்லை. எங்களையெல்லாம் விட்டுட்டுப் போயிட்டியே என வாய்விட்டு ஒப்பாரி வைக்காது விட்டாலும், மனதால் நினைக்கவுமில்லை. மாறாக, வெட்டப்பட்டுக் கிடக்கும் அதனது அங்கங்களை சிறு துண்டுகளாக்கி விறகாகப் பயன்படுத்த கோடாரிகளுடன் சிலர் அதனை நோக்கி வருவதைப் பார்த்து எல்லையற்ற வேதனையும், கோபமும் கொண்டது.

மனிதர்களின் நன்றிகெட்ட சுபாவத்தை நினைத்து வேர் ஓவென சத்தமிட்டு அழுதது. கண்ணீரை சாறாக பீச்சியது.

★ ★ ★

# அவர்கள் மனிதர்கள்

காட்மண்டுவிலிருந்து பிற்பகல் வேளையொன்றில் புறப்பட்ட விமானம் சிங்கப்பூரை அடையும்போது இரவாகிவிட்டிருந்தது. தரையிறங்குவதற்கு முன்னர் இருக்கையிலிருந்தவாறே அந்நாட்டின் நாலா பக்கங்களிலும் சிதறிய ஒளி வெள்ளத்தை ரசித்தேன்.

பிரமாண்டமான விமான நிலையம் ஒளியில் மிதந்தது. கடவுச்சீட்டுக்களில் விசாவைப் பொறித்தெடுத்துக்கொண்டு தோற்பட்டிகளில் சுற்றுலாவிய பாரமான உடுப்புப் பைகளை தள்ளுகரத்தைகளில் தூக்கி வைத்துத் தள்ளியவாறு பெர்னாண்டோவும் நானும் பிறிதொரு மண்டபத்தினுள் வந்தோம். வெளியே கைகளில் விருந்தினர்களின் பெயர்களைத் தாங்கி நின்றோரிடையே பெர்னாண்டோ யாரையோ தேடினான். அவர்களுக்குச் சமீபமாகச் சென்று தனது பெயரைக் கொண்ட அட்டையை யாராவது வைத்திருக்கிறார்களா என மேய்ந்தான். முகபாவத்தை மாற்றினான். உதட்டைச் சுளித்தான்.

"யாருமே வரலடா மச்சான்" என்றான்

"நேபாளத்தில் வைத்து யாருக்கோ டெலிபோன் செய்து உன்னைச் சந்திக்க யாரையோ எயாபோர்ட்டுக்கு அனுப்பி வைக்குமாறு சொன்னியே" என்றேன்.

"சொன்னதுதான். வரலியே"

"இப்ப என்னதான் செய்றது?"

"திரும்பவும் டெலிபோன் செய்து பார்ப்போம்"

தினக்குறிப்பிலிருந்து இலக்கமொன்றைத் தேடியெடுத்து பூத்தொன்றுக்குச் சென்று இலக்கங்களை நசித்தான்.

"யாரும் தூக்கிறதாத் தெரியல்ல. வீட்டில் யாரும் இல்லைப் போலும்" என்றான்.

"விலாசம் தெரியுமா"

"அதுதான் இல்லியே"

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"முன் பின் தெரியாத இடத்துல எங்கப்பா போறது? தெரிஞ்ச ஆக்கள் இருக்கிறாங்கண்ணுதானே சிங்கப்பூர் போயிட்டு சிறிலங்கா திரும்புவோம்னு சொன்னே"

பெர்னாண்டோவும் நானும் நேபாளத்தில் ஒருமாத காலமாக பயிற்சிக் கல்விச் சுற்றுலாவொன்றை முடித்துவிட்டு நாடு திரும்பும் வழியில் சிங்கப்பூரில் சில நாட்களைக் கழித்துவிட்டுப் போகலாம் என்ற நோக்கில் வந்திருந்தோம்.

அவன் முகத்தைத் தொங்கப்போட்டான்

''சரி. சரி. வி வில் டேக் திஸ் அஸ் எ சலன்ஜ்'' என நான் சொல்லவும் கால் நீட்டிக்கொண்டிருந்தவன் சோம்பல் முறித்தவாறே சிகரெட் புகைக்க முயன்றான்

''அப்புறம் புகைக்கலாம். வா யாரிடமாவது விசாரிக்கலாம்''

சற்றுத் தூரத்தில் நின்றுகொண்டிருந்த இளைஞன் எங்களைப் பார்த்து சினேகமாகச் சிரிப்பது போல் எனக்குத் தெரிந்தது

''வா. அவனோட கதைக்கலாம்'' என்றேன். பொனாண்டோ குதித்தெழுந்து என்னைப் பின் தொடர்ந்தான்

''நாங்க சிறி லங்கா. இரவைக்குத் தங்குவதற்கு ஒரு இடம் சொல்லித் தருவீங்களா?''என்றேன். என் பெயரையும் நண்பனின் பெயரையும் கூறி அறிமுகம் செய்துகொண்டேன்.

''நான் கூட முஸ்லிம்தான். இங்க எயார்போட்டலதான் டியூடி. ஒரு அட்றஸ் தாரேன். டாக்ஸி பிடுச்சிக்கொண்டு போங்க. சாரதி சரியான இடத்திலே இறக்கி விடுவான்''

''ரொம்ப தாங்ஸ்ங்க''

''நான் கூட அந்தப் பக்கத்திலதான் இருக்கேன். முடிஞ்சா ஓவ் நேரத்திலே உங்களை வந்து சந்திக்கேன்''

இருவரும் தள்ளு கரத்தைகளுடன் வெளியே வந்தோம். மன உளைச்சலைத் தவிர்க்கவெனக் கூறி நண்பன் ஒரு சிகரட் புகைத்தான்.

எதிர்ப்பட்ட டாக்சியில் ஏறி உட்கார்ந்தோம். வளவளப்பான சாலையில் டாக்சி வழுக்கியவாறு போய்க்கொண்டிருந்தபோது சிங்கப்பூரின் இரவு நேர அழகுகளை தூரத்துக்கொன்றாக பாதை நீளத்துக்கும் மஞ்சள் ஒளி கக்கிய மின் விளக்குகளின் ஒளியில் பருகினோம்.

''நீங்க சரங்கன் றோட்தானே போகணும்?'' அமைதியாக வாகனத்தைச் செலுத்திக்கொண்டிருந்த சாரதி அரைகுறை ஆங்கிலத்தில் கேட்டான்.

''ஆமா''

"இலக்கத்தைச் சரியா சொல்லுங்க. அங்கதான் உங்க இந்தியாவைச் சேர்ந்த நிறையப் பேர் இருக்காங்க''

''நாங்க இந்தியா இல்ல. இலங்கை''

நாங்கள் கூறிய இலக்கத்தைச் சார்ந்த வீட்டை அடையும்போது அங்கும் எங்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. எந்த அறையும் காலியாக இருக்கவில்லை. வீட்டுக்காரருடன் கதைத்து சிறிது தூரத்திலிருந்த பிறிதொரு இடத்துக்குச் சென்றோம். நேரம் நள்ளிரவு பன்னிரண்டையும் தாண்டிவிட்டிருந்தது.

''எயாகண்டிசன் அறைதான் இருக்கு. வேணுமா?''

''தேவையே அதானே'' என்றோம் அந்த நேரத்திலும் வழிந்த வெயர்வையைத் துடைத்தவாறு.

எப்படியோ புறாக்கூண்டு போன்ற பெயருக்கு மட்டும் குளிரூட்டியொன்று இயங்கிக்கொண்டிருந்த தொடர்ச்சியாக வியர்த்துத் தள்ளிய அறைக்குள் பக்கத்து கட்டிலில் படுத்திருந்த பெர்னாண்டோவின் குறட்டைச் சப்தத்துக்கு மத்தியில் கோழித் தூக்கம் போட்டுவிட்டு அடுத்த நாள் அதிகாலையிலேயே எழுந்துவிட்டேன்.

"இன்றைக்கு என்ன புறோக்றாம்?" கேட்டேன்.

"முதல்ல போய் நம்ம நண்பரைச் சந்திப்போம்"

"ஷுவுக்கா?"

"ஆமா. அப்படியே மிருகக்காட்சிச்சாலையையும் சுற்றிப் பார்த்ததா போயிடும்."

இருவரும் குளித்து பக்கத்திலிருந்த ஹோட்டலொன்றில் காலை ஆகாரத்தை முடித்து விட்டு சரங்கூன் வீதிக்கு வந்தோம். காலையிலேயே வெயர்த்துக் கொட்டியது.

"விலாசம் தெரியுமா?"

"தெரியாதே."

"வா. யாரிடமாவது விசாரிக்கலாம்."

இருவரும் சற்றுத் தூரத்தே நாலா பக்கங்களிலும் தெரிந்த உயர்ந்த கட்டிடங்களைப் பார்த்தவாறு அழுக்குப் படியாத உடை உடுத்திய நேர்த்தியான வாலிபனைப் போன்ற நீண்டு அகன்ற பாதையில் நடந்தவாறு நமது நாட்டில் பொதுவாக தலை நகரில் குப்பை கூழங்களுடன் காட்சி தரும் பாதைகளின் தலையெழுத்தை நினைத்து மனதினுள் வேதனைப்பட்டவாறு...... நடந்துகொண்டிருக்கும் போது மெல்லிய தாடியுடனும், தலையில் குல்லாவுடனும் கூடிய அவரைக் கண்டேன்.

ஸலாம் கூறினேன். பதில் கூறியவாறே சிரித்தார்.

"நாங்க சிறி லங்கா. ஒரு சிறிய உதவி செய்ய முடியுமா?" கேட்டேன்.

"சொல்லுங்க"

சொன்னேன்

"மிருகக்காட்சிச்சாலை எங்கே இருக்குன்னு எனக்கும் தெரியாது. இங்கேயே நில்லுங்க. விசாரிச்சுக்கொண்டு வந்துட்றேன்"

"உங்களுக்கு எதுக்குங்க சிரமம். நாங்க வேறு யாரிடமாவது விசாரிச்சுப் போய்க்கொள்றோம்"

"நோ. நோ. நீங்க இடத்துக்குப் புதுசு. நானே விசாரிச்சுச் சொல்றேன்"

எனது பதிலுக்குக் காத்திராமல் பக்கத்திலுள்ள ஹோட்டலொன்றுக்குச் சென்றவர் சில நிமிடங்களில் திரும்பி வந்தார்.

"இங்கயிருந்து ரொம்பத் தூரம் போகணுமே. எப்படிப் போவீங்க?"

"எப்படிப் போகலாம்?"

"டாக்சி பிடித்துப் போனா ரொம்பச் செலவாகும். பஸ்ல போனா தொன்னூறு பைசாதான்"

"பஸ்லேயே போயிடுறோமே"

''பஸ் பிடிக்க ரொம்ப தூரம் நடந்து போகணும். கலக்ஸி தியேட்டர் கிட்டே போகணும்''

''ரொம்ப நன்றிங்க. சரியான விலாசத்தச் சொல்லுங்க. பஸ்லேயே போயிடுறோம்''

''விலாசமே தேவயில்ல. பஸ் றைவர் கிட்டே சொன்னா இறக்கிடுவாரு. ஷு பக்கத்தாலேதான் பஸ் போகுது. வாங்க பஸ் எடுக்க வேண்டிய இடத்துக்குக் கூட்டிக்கொண்டு போய் விடுறன்''

''ரொம்பத் தூரம்னீங்களே. நாங்களே போயிடுறோம். உங்களுக்கு எதுக்கு சிரமம்''

"இல்ல. நிறைய குறோசிங் இருக்கு. நீங்க பாதைய தவற விட்டிடுவீங்க'' கூறியவாறே முன்னே நடக்கத் தொடங்கினார்.

அவர் இந்தியாவைச் சேர்ந்தவராம். அடிக்கடி சிங்கப்பூர் வருவாராம். தனது கிராமத்தில் அரபு மதரஸா ஒன்றைப் பெரிதாக விஸ்தரித்துக் கட்டுவதற்கு நிதி சேகரிப்பதற்காக சன்மார்க்க அறிஞர் ஒருவருடன் சிங்கப்பூர் வந்துள்ளாராம். இலங்கையைப் பற்றி, உள்ளூர் பிரச்சினை பற்றி நிறையவே தெரிந்து வைத்திருந்தார்.

நான் வேண்டாம், வேண்டாம் என பலமுறை சொல்லியும் சுமார் அரை மைல் தூரத்துக்கும் மேலாக எங்களுடன் நடந்து உரிய பஸ் தரிப்புக்குக் கூட்டி வந்தார். குறிப்பிட்ட பஸ் வரும் வரை எங்களுடனேயே காத்து நின்றார். பஸ்ஸில் ஏறி நாங்கள் அமர்ந்ததும் கண்ணாடியூடாக எட்டிப் பார்த்து "இது ஏசி பஸ் அல்ல. அதனால தொன்னூறு பைசா மட்டும் கொடுங்க'' என்றும் கூறி விடை பெற்றார்.

சிங்கப்பூர் மிருகக்காட்சிச்சாலையில் உள்ள எங்களது நண்பர் இலங்கையைச் சேர்ந்தவர். கன்ஸல்டன்ட் ஆக கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

எங்களை இனிதாக வரவேற்றார். பேச்சோடு பேச்சாக நாங்கள் தங்கி நிற்கும் இடத்தைப் பற்றி விசாரித்தார்.

''நோ. எதற்காக அப்படியெல்லாம் லொட்ஜில் நிக்கணும். இங்கே ஷுவுக்கு சொந்தமான பங்களா இருக்கு. அகஸ்மாத்தாக அறையொன்றும் காலியாக இருக்கு. நான் அதை ஏற்பாடு செய்றேன். நீங்க இங்கே வந்து தங்குங்க'' என்றார்.

நாங்கள் முற்றிலுமே எதிர்பாராதது. பிகுபண்ணாமல் ஏற்றுக் கொண்டோம்.

அன்று பிற்பகலே எங்களின் உடுப்புப் பைகளுடன் அந்த பங்களாவுக்குச் சென்றோம். குளிரூட்டப்பட்ட ஐந்து அறைகள். கதவுகளில்லாத திறந்த விசாலமான சமையற்கூடம். சேர்ந்தாற் போல் உடற்பயிற்சி செய்வதற்கான உபகரணங்களைக் கொண்ட பெரிய வராந்தா.

விசாலமான அந்த வீட்டிலுள்ள ஏனைய அறைகள் தொடர்ச்சியாகவே பூட்டிக்கிடந்தன. யாராவது குடியிருக்கிறார்களா என்பதற்கு எந்தச் சான்றுமே தெரியவில்லை. எனினும் சமையற்கூடம் நிறைய அரிசி, பருப்பு போன்றவைகள் வைக்கப்பட்டிருந்தன.

“என்னபா இது. யாரையுமே ஆக்களைக் காணோம். சமையற்கட்டு நிறைய சாமான்கள்'' என்றேன் பெர்ணான்டோவைப் பார்த்து நான்.

“ஒருவேளை இப்படி இருக்குமோ?”

“எப்படி?”

“இங்கே வந்து தங்கி நிக்கிற நம்மைப் போன்றவங்க சமைத்துச் சாப்பிடுவதற்காக வாங்கி வைத்திருப்பாங்களோ?”

“சே. சே. அப்படியெல்லாம் இருக்காது. யாராவது வருவாங்க. பார்ப்போம்.”

அடுத்த இரண்டு நாட்களும் அந்த பங்களாவுக்கு யாருமே வரவில்லை. அங்கு நின்ற பூனையொன்று குசினிப் பக்கம் நான் செல்லும் போதெல்லாம் காலைச் சுற்றியது. பசியால் அனுங்கியது. மேசையின் மேல் டின் ஒன்றினுள் கிடந்த பூனை உணவில் சிறிதை எடுத்து தரையில் கொட்டினேன்.

மகர விடாயில் தண்ணீர் குடிப்பது என்பார்களே அந்த வேகத்தில் வாய்க்குள் தள்ளிவிட்டு மீண்டும் கேட்டது. கொடுத்தேன். சொந்தக்காரரிடம் கேட்காமல் தகரத்தில் இருந்த உணவைக் கொடுத்தது பற்றி மனதில் முள் குத்தினாலும் ஆபத்துக்குப் பாவமில்லை என நினைத்து என்னை நானே ஏமாற்றிக்கொண்டேன்.

சிங்கப்பூருக்குச் சென்ற மூன்றாவது நாள் பிற்பகல். முஸ்தபா சுப்பர் மார்க்கட்டுக்குச் சென்று பிரயாண காசோலையை மாற்றிக்கொண்டு, டக்கா மார்க்கட் நோக்கி வரும்போது பெர்னாண்டோ அந்த யோசனையைத் தெரிவித்தான்.

“லாஸ்ட் நைட் கூட ஒழுங்கா சாப்பிடல்ல. சமையல் சாமான்களெல்லாம் வாங்கிக்கொண்டு போனா நாமே இரவைக்கு சமைக்கலாமே'' என்றான்.

“சமையலுக்குப் பாத்திரங்கள்?”

“அவைகள் தான் அங்கே இருக்கே”

“யாருடையதோ.”

“யாருடையதென்றாலும் ஒண்ணும் சொல்லமாட்டாங்க. சமைச்சுட்டு சுத்தமா கழுவி வைச்சிடுவோம்.”

“கழுவுற வேலையை வேணும்னா நான் செய்றேன். நீதான் சமைக்கணும். எனக்கு எதுவுமே தெரியாது'' என்றேன்.

“சமைச்சுத் தாரேன் சாப்பிட்டுப் பாரேன். என்றான்.

நான் உதவி செய்து கொடுக்க அவன் சமைத்தான். சோறு சமைத்து, பருப்பு, கருவாடு போன்றவை கறி வைத்துக்கொண்டோம்.

நீண்ட நேரமாக கதைத்துக் கொண்டிருந்து விட்டு சாப்பிட்டோம். அடிப்பிடிருந்த சில பாத்திரங்கள் நிறைய தண்ணீர் ஊற்றி ஒட்டிக் கொண்டிருந்தவைகள் கரைந்து அடுத்த நாள் காலையில் கழுவுவதற்கு இலேசாக இருக்கக் கூடியவாறு வைத்து விட்டுப் படுத்தோம்.

காலையில் நான் நேரத்தோடேயே எழுந்து விட்டேன். தேனீர் குடிக்க வேண்டும் போலிருந்தது. குசினிக்குச் சென்ற கையுடன் பதறியவாறு அறைக்குள் மீண்டும் வந்தேன்.

"எழும்புப்பா. பெரிய அதிசயமே நடந்திருக்கு" என்றேன் நண்பனை உலுப்பிவாறு.

"என்ன? என்ன?" அவன் வாய் குழறினான்.

"லாஸ்ட் நைட் தண்ணீர் ஊற்றி வைக்கப்பட்டிருந்த பாத்திரங்களை எல்லாம் கழுவி சுத்தப்படுத்தி வைத்திருக்கிறாங்கப்பா. வந்து பாரேன்"

அவன் என்னுடன் சமையல் கூடத்துக்கு வந்தான்

"யார் செய்திருப்பா? நாம படுக்கப் போகும்போதே பன்னிரெண்டு அளவிலே இருக்குமே"

"அதான் ஆச்சரியமா இருக்கு. சமைப்பதற்கான உணவுப் பொருட்களெல்லாம் நிறைய வச்சிருக்கு. பாத்திரங்களையெல்லாம் கழுவி வச்சிருக்கு ஒருவேளை......"

"என்ன"

என் மனதில் வித்தியாசமான பேய்க் கற்பனைகள் எழுந்தாலும் வெளியிடவில்லை

இது தொடர்பான கேள்விக்குறி தொடர்ந்து மனதில் இருக்க தேனீர் தயாரித்துக் குடித்துவிட்டு அறைக்குள் சென்றோம்

எனது காலைக்கடன்களை முடித்துவிட்டு அறைக்குள்ளிருந்து வெளியே வந்தபோது அகஸ்மாத்தாக குசினியைப் பார்த்தேன்

மீண்டும் ஆச்சரியம்

உயரமான, முழங்காலுக்குச் சற்று மேலே வரை விரிந்து நீண்டு படர்ந்து கிடந்த கூந்தலுடன் கூடிய மா நிறமான ஒரு பெண் நின்று கொண்டிருந்தார் அவருடைய பின் புறமே எனக்குத் தெரிந்தது.

நான் திடுமென அறைக்குள் சென்று "ஏய் வாப்பா. தெயா இஸ் எ லேடி இன் த கிச்சன்" என்றேன்

நாங்கள் மீண்டும் வெளியே வந்தோம்

எங்களுடைய கனைப்பினால் ஈர்க்கப்பட்ட அநதப் பெண் திரும்பிப் பார்த்தாள். சிரித்தாள். சிரித்தோம். "குட் மோர்னிங்" என்றாள். பதில் சொன்னோம். சற்று அருகே சென்றோம்

"நீங்க...?" என்றேன்

"நான் உமா. ஷுவிலதான் வேர்க் பண்றேன் இந்த றூமிலதான் இருக்கேன்"

''கடந்த மூன்று நாட்களாக நாங்க உங்களை காணவே இல்லயே''

''எப்படிக் காண்பீங்க. லாஸ்ட் நைட் ஒரு மணி போல தானே நான் இங்கு வந்தேன்''

உமா மலேசியாவைச் சேர்ந்தவர். திருமணமாகாதவர். மிருகக்காட்சிச்சாலையிலுல்ல பிரிவொன்றில் உத்தியோகம். கிறிஸ்தவர். விடுமுறையில் மலேசியா சென்றுவிட்டு கடந்த இரவு ஒரு மணியளவில் தனியாக டாக்சி பிடித்து வந்துள்ளார். குசினிக்குள் பாத்திரங்களையெல்லாம் அவர்தான் கழுவி வைத்துள்ளார்.

"இதெல்லாம் உங்க பாத்திரங்களா? உங்களிடம் கேட்காம இவைகளை பாவிச்சிட்டோம். உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்துட்டோம்'' என்றேன் அசடு வழிய.

''எந்த சிரமமும் இல்ல. இந்தப் பக்கத்திலே ஹோட்டல் இல்லாததாலே இங்க விருந்தினரா வாறவங்க இவைகளைத்தான் பாவிப்பாங்க. ஆமா. எதுக்காக அரிசி, பருப்பெல்லாம் வாங்கி வந்திருக்கீங்க? உப்பு கூட வாங்கியிருக்கீங்களே. என்னுடையதை பாவிச்சிருக்கலாமே''

''நான் நவாஸ். இவர் பெர்னாண்டோ.''

நாங்கள் எங்களைப் பற்றிக் கூறினோம்.

''நாளைக்குப் பிற்பகல் இலங்கை திரும்பவிருக்கிறோம்'' என்றோம்.

அன்றைய எங்களது நிகழ்ச்சி நிரலின்படி, நானும் பெர்னாண்டோவும் வெவ்வேறாகப் பிரிந்து வேறுவேறு தெருக்களுக்குச் சென்று தனியாக ஷாப்பிங் செய்வதாகும்.

இருவரும் ஒரே பஸ்ஸில் டவுணை நோக்கி வந்தாலும் பெர்னாண்டோ இடைநடுவில் இறங்கிக் கொண்டான். அந்த பஸ் போகும் பாதைக்கு சற்றுத் தூரத்தில்தான் நான் போக வேண்டிய பாதை உள்ளது என்பதை ஏற்கனவேயே தெரிந்து வைத்திருந்தேன்.

நடு இரவில் விமான நிலையத்திலிருந்து மிக நீண்ட தூரம் தனியாக ஒரு பெண் டாக்ஸியில் பிரயாணம் செய்யக்கூடிய நிலைமை, பாதைகளின் சுத்தம், பணம் உழைப்பதை மட்டுமே கருத்தில் கொண்டு மனம் போன போக்கில் வேகத்தை அதிகரிக்காமல் பஸ்களைச் செலுத்திச் செல்லும் சாரதிகள், மந்தைகளாக மக்களை அடைக்காத பஸ்கள், சைகை வரும் வரை பாதையைக் கடப்பதற்காகப் பொறுமையுடன் காத்து நிற்கும் பாதசாரிகள்.....

சிங்கப்பூருடன் நமது நாட்டை மனதினுள் ஒப்பிட்டவாறு போய்க்கொண்டிருக்கையில்.....

நான் இறங்க வேண்டிய இடத்தை அறிந்து கொள்ள முயன்றேன். பக்கத்திலிருந்த பெண்ணிடம் மெதுவாக விசாரித்தேன். அவருக்கு ஆங்கிலம் தெரிந்திருக்கவில்லை. இன்னுமொருவரிடம் கேட்டேன். அவருக்கு நான் கூறியது

விளங்கவில்லைப் போலும். நான் சிறிதாக கலவரப்பட்டதை சற்றுத் தூர நின்ற வயதாக ஒருவர் பார்த்து என்னருகில் வந்தார்.

“மே ஐ ஹெல்ப் யூ?” என்றார்.

நான் இறங்க வேண்டிய இடத்தைக் குறித்து விசாரித்தேன்.

“டோன்ட் வொரி. ஐ வில் ஷோ யூ”

நன்றியுடன் முகம் மலர அவரைப் பார்த்துச் சிரித்தேன்.

சில நிமிட பிரயாணத்தின் பின் “கம். யு வில் ஹேவ் டு கெட் டௌன்” என்றார் அவர்.

நான் எழுந்து அவரருகில் செல்லவும் பஸ் நிற்கவும் சரியாக இருந்தது. அவரும் என்னுடன் இறங்கினார்.

நாங்கள் ஆளையால் அறிமுகம் செய்து கொண்டோம்.

“நீங்கள் இந்தப் பக்கத்தில் தான் வசிக்கிறீர்களா?” நான் கேட்டேன்.

“நோ.நோ. நான் இன்னும் ரொம்ப தூரம் போகணும்”

“அப்போ... இங்கே இறங்கி இருக்கீங்களே?”

“உங்களுக்காகத்தான்”

“எனக்காகவா?”

“எஸ். உங்களுக்குப் போக வேண்டிய பாதையை சரியாக காட்டித் தருவதற்கு. நீங்கள் எங்களது நாட்டின் விருந்தாளியல்லவா?”

அவர் சிங்கப்பூர் நாட்டின் சாதாரன மனிதர்களில் ஒருவராக எனக்குத் தெரியவில்லை. இமயமாக உயர்ந்து காட்சி தந்தார். தொடர்ந்து என்னோடு நடந்து வந்து நான் போக வேண்டிய பாதையைக் காட்டித் தந்தார்.

அன்று இரவு நானும், பெர்னாண்டோவும் பங்களாவை அடையும் போது ஏழு மணியைத் தாண்டி விட்டிருந்தது. முதல் நாள் வாங்கி வந்த பொருட்களில் மிகுதி இருந்ததால் இரவு உணவைச் சமைத்து எடுக்கலாம் என்ற எண்ணத்தில் இருந்தோம். எங்களது அறைக்குள் உள்ளாகும் போது சமையற் கூடத்தினுள் எட்டிப் பார்த்தோம். உமா சமைத்துக்கொண்டு நின்றார். நாங்கள் வந்ததை அறிந்ததும், திரும்பிப் பார்த்துச் சிரித்தார்.

“அந்தப் பெண் சமைத்துக் கொண்டு நிக்குது. இன்றைக்கு ஏதாவது ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிடுவோம்” என்றேன் நான்.

“ஹோட்டலுக்கு ரொம்பத் தூரம் போகணும் . அவ முடியட்டும். நாம சமைப்போம்”

சுமார் அரை மணி நேரம் அறைக்குள்ளேயே இருந்தோம். பகலெல்லாம் நடந்து திரிந்ததால் எனக்கு வயிற்றைக் கிள்ளியது. உமா சமையற் கட்டிலிருந்து சென்று விட்டாரா எனப் பார்ப்பதற்காக வெளியே வந்தேன். அவர் தொடர்ந்தும் சமைத்துக்கொண்டு நின்றது மட்டுமல்ல, திறந்திருந்த அவருடைய அறைக்குள்ளிருந்து சில பெண்கள் கதைத்துக் கொண்டிருப்பது வேறு கேட்டது.

"உமாவின் பிரன்ட்ஸ் யாரோ வந்திருக்காங்க போல் தெரியுது. சமையற் கட்டினுள் நாம போவது நாகரிகரிகமா தெரியல்ல. வா. வெளியே எங்கேயாவது போகலாம். எனக்குப் பசிக்குது" என்றேன்.

இருவரும் உடுத்து, வெளியே வந்து அறைக் கதவைப் பூட்டினோம்.

"எங்கே போறீங்க?" உமா எங்களை நோக்கி இரண்டடி முன்னால் வந்து கேட்டார்.

"வெளியே....."

"வெளியேன்னா.....?"

"ஏதாவது ஹோட்டலுக்குப் போய் சாப்டுட்டு வரலாம்னு......"

"சாப்பிடப் போறீங்களா? உங்களுக்கும் சேர்த்துத் தானே நான் சமைக்கேன்."

நாங்கள் ஆளையாள் பார்த்துக் கொண்டோம்.

"எங்களுக்கும் சேர்த்தா?"

"ஆமா. இந்தப் பக்கத்திலே ஹோட்டலே இல்ல. அதனால நீங்க என்கூட சாப்பிடுவீங்கன்னு, உங்களுக்கும் சேர்த்துச் சமைக்கேன். வெளியே போகாதீங்க. மூவருமா சாப்பிடலாம்."

"உங்க பிரண்ட்ஸ் யாரோ வந்திருக்காங்க போல. எதுக்கு உங்களுக்குச் சிரமம்" என்றேன்.

"பிரண்ட்ஸா? அப்படி யாரும் வரலையே"

"உங்க அறைக்குள்ள பெண்கள் கதைச்ச குரல்கள் கேட்டதே"

உமா வாய் விட்டுச் சிரித்தார்.

"அறைக்குள்ளே யாரும் இல்ல. அது ரீ.வி ல கதைச்சது. அதுலே தான் ஒரு புறோக்கிறாம் போயிச்சு."

நாங்கள் அறைக்குள் சென்று உடுப்பை மாற்றிக் கொண்டு சமையற்கட்டுக்குள் வந்தோம்.

"நான் இலங்கை முறைப்படி பருப்புக் கறி சமைச்சுத் தர்றேன். விருப்பமா?" என்றார் பெர்னாண்டோ.

"உங்க இஷ்டம். எதையாவது சமைங்க. சாப்பிடுவோம்."

முதல் நாள் வாங்கி வந்த பருப்பில் மிகுதி இருந்தது. பெர்னாண்டோ சமைத்தார்.

உமா எங்களுடன் கதைத்தவாறு. தொடர்ந்து சமைத்துக் கொண்டு நின்றார். நான் சில சில்லறை வேலைகளைச் செய்து கொடுத்தேன்.

கிறிஸ்தவரான உமாவும், சிங்களவரான பெர்னாண்டோவும், முஸ்லீமான நானும் ஒரே மேசையில் அருகருகே அமர்ந்து இரவு உணவை உண்டோம். மலேசியா முறையில் உமா சமைத்த கறிகளும், இலங்கை முறைப்படி பெர்னாண்டோ சமைத்ததுமாக நீண்ட நேரம் கதைப்பதும், சாப்பிடுவதும், சிரிப்பதுமாக.....

இரவு வந்தனம் கூறியவாறு பிரிந்தோம். அடுத்த நாள் நாங்கள் படுக்கையை விட்டும் எழ நீண்ட தாமதமாகி விட்டது. வெளியே வந்து உமாவின் அறைக் கதவைத் தட்டி அழைத்தோம். பதிலில்லை. அவர் நேரத்தோடயே கடமைக்காகச் சென்று விட்டிருந்தார்.

பதினொரு மணி சுமாருக்கு எங்களுடைய கனத்த தோல் பைகளுடன் அறையை விட்டும் வெளியே வந்தோம். அதுவரை உமா திரும்பியிருக்க வில்லை. அவரிடம் கூறிவிட்டு, விமான நிலையத்தை நோக்கி பிரயாணத்தைத் தொடங்கலாமென்றால், அவரைக் கண்டு பிடிப்பது சிரமமாக இருந்தது. மிருகக்காட்சிச்சாலைக்குச் சென்று விசாரித்தோம். வெளிக்கள கடமைக்கு அதிகாலையிலேயே சென்று விட்டதாக அறிய வந்தோம்.

`சகோதரி உமா. தங்களிடம் சொல்லிக் கொள்ளாமல் தங்களின் நாட்டை விட்டும் விடை பெறுகிறோம். முடிந்தால் எப்போதாவது சந்திப்போம். விருந்தோம்பலுக்கு நன்றி' என ஆங்கிலத்தில் எழுதி கதவிடுக்கினுள் சொருகி விட்டுப் புறப்பட்டோம்.

சிங்கப்பூரிலிருந்து மேலெழுந்த எயாலங்கா விமானம் பருந்தாகப் பறந்துகொண்டிருக்கையில்....

ஒரு நாள் மட்டும் சந்தித்த எங்களுடன் எந்தவித பிரதி உபகாரமும் எதிர்பாராமல் உமா வழங்கிய விருந்துபசாரம்....பஸ் நிலையத்தைக் காட்டுவதற்காக எங்களோடு அரை மைலுக்கும் கூடுதலாக நடந்து வந்த முஸ்லீம் பெரியார்..... பாதையைக் காண்பிப்பதற்காக தான் செய்துகொண்டிருந்த பிரயாணத்தை இடைநடுவில் நிறுத்தி என்னோடு கூடவே வந்த பெருமகனது மனித நேயம்.... எல்லாமே என் மனதில் தட்டாமாலைகளாக வலம் வந்தன.

மனதிலிருந்து அகல முடியாத மனிதர்கள் அவர்கள்.

★★★



எழுத்தாளரின் இதயம் வாசகர்களின் இதயங்களோடு பேசுகிறது. கலாசாரப் பெறுமானம், அந்தரங்கசுத்தியான நேர்மை, சமாதான சகவாழ்வு, யுத்தக்கொடுமையற்ற தேசம் ஆகியவைதான் ஜுனைதா ஷெரீபின் ஆன்மாவின் இராகங்கள். சமூகம் என்ற பந்தரிலே அவர் பொழியும் செய்திகளும் அவைதான்.

இலங்கை முஸ்லீம் எழுத்தாளர்களில் மிகக்கூடுதலான நாவல்களை எழுதியுள்ள ஷெரீப் தனது படைப்புகளுக்காக இதுவரை நான்கு சாகித்திய விருதுகளைப் பெற்றவர். பல வைபவங்களில் பொன்னாடை போற்றிக் கௌரவிக்கப்பட்டவர்.அவரால் வெளியிடப்படும் இந்தச் சிறுகதைத் தொகுப்பு பெருவெள்ளத்தின் ஒரு சிறு துளி.

இந்த சிறுகதைத் தொகுப்பு காலத்தைக் கடந்து இலக்கிய உலகில் சாசுவாதமானதோர் இலக்கியப் பெட்டகமாக விளங்கும் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமே இல்லை.

ISBN: 978-955-95096-8-0

PRINTED & DIG BY: A.J. PRINTS, STATION RD., DEHIWALA.T.P:2723205